162

சாகைவித்திகள்

XXII

110·2/

JL
51.22.20-21
139179.

OFFICE OF THE ... MADRAS
8 JUL 1951





# சுதேசமித்திரன் வாரப்பதிப்பு
## பொருளடக்கம்

★


| | | பக்கம் |
|---|---|---|
| தெய்வ தரிசனம் | வை சுப்பிரமணியம் | 5 |
| பொய்ப் படுதா | குங்குமம் | 8 |
| அணையா விளக்கு (தொடர்கதை) | ஆர்வி | 11 |
| பெண் உள்ளம் | (ப ஈ,) | 15 |
| கலாமண்டபம் | | 20 |
| ஏக்கத்திற்கு மாற்று | 'மகரம்' | 22 |
| கதாரஸமணிகள் | கனல் | 24 |
| பிக்கல் பிடுங்கல் | லட்சுமி கிருஷ்ணமூர்த்தி | 27 |
| ஹிந்தி பாடங்கள் | பண்டிட்ஜீ | 29 |
| தேர்த்தட்டு வார்த்தை | வாரன் | 31 |
| நேற்றும் நாளையும் | கே பி. கேசவமேனன் | 33 |
| சிறுவர் பகுதி | எஸ். ரங்கராஜன் | 35 |
| சந்திப்பு | | 39 |
| சதுரங்க ஆட்டம் | கணபதி | 42 |
| அநுபவ ரேகாசாஸ்திரம்—ரோமேஷ் கே சாஸ்திரி | | 44 |
| நடைப்பிணம் | தேரூர் கணேசன் | 46 |


"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன அனைத்தும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.


வாழிய செந்தமிழ் — சுதேசமித்திரன் வாரப்பதிப்பு — வாழ்க நற்றமிழர்

Vol XXII] கர ஆனி 10உ. ★ 1951-ஞு ஜூன் 24உ. No. 21


# உறுதிமொழிக்கு மதிப்பு

இலங்கையில் தற்போது அதிகாரத்திலுள்ள சிங்களவர் கோஷ்டிக்கு இந்தியர் மீதுள்ள துவேஷம் அனைவரும் அறிந்ததுதான். எனினும் அத்துவேஷத்தை பட்டவர்த்தனமாக்குவதில் அக்கோஷ்டிக்கு இது வரை சிறிது கூச்சம் இருந்ததுண்டு. ஆனால், இப்போது அவர்கள் இக்கூச்சத்தை அடியோடு உதறி விட்டதாகக் காண்கிறது. அங்கு ரயில்வேயிலும் வேறு பல சர்க்கார் இலாகாக்களிலும் நெடு நாளாக வேலை செய்து வரும் பல இந்தியருக்கு அவர்கள் இப்போது திடீரென நோட்டீஸ் கொடுத்திருப்பதைத் தவிர இதற்கு வேறு என்ன ருசு வேண்டும்? பிரஜா உரிமைச் சட்டப்படி இலங்கைப் பிரஜையாகப் பதிவு பெற்றதற்கு அவ்விந்தியர்கள் ஆகஸ்ட் மாதம் 1-ந் தேதிக்குள் பத்திரப் பூர்வமான அத்தாட்சிகளை சமர்ப்பிக்கவேண்டும், இல்லா விட்டால் அவர்கள் வேலையிலிருந்து நீக்கப்படுவர் என்பதுதான் அந்த நோட்டீஸின் சாரம். பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ள எண்ணும் இந்தியர் ஆகஸ்ட் 1-ம் தேதி வரை மனுச் செய்து கொள்ளலாமென்று ஏற்கனவே சர்க்கார் அறிவித்திருக்கின்றனர். அந்த மனுக்கள் பற்றி அதிகாரிகள் முடிவு செய்ய அந்தத் தேதிக்குப் பிறகு எவ்வளவு காலமாகுமோ யாருக்கும் தெரியாது. எப்படியும் அந்த முடிவுக்குப் பின்தான் பிரஜா உரிமை பெறக்கூடியவர்களுக்கு அது பற்றிய பத்திரபூர்வமான அத்தாட்சி கிடைக்கக்கூடும். எனினும் அந்த அத்தாட்சியை ஆகஸ்ட் மாதம் முதல் தேதிக்குள் அனுப்பும் இந்தியருக்கே மேற்கொண்டு பிழைப்புண்டு, மற்றவர் வெளியேறவேண்டியது தான் என்று இலங்கை அதிகாரிகள் பேசுவதின் பொருளென்ன? இது அவர்களுக்கு இந்தியர் விஷயத்தில் சிறிதும் யோக்கியமான எண்ணமிருப்பதாக குறிப்பதாகுமா? அவ்விந்தியர் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு பெறுவதற்கு ஒரு சந்தர்ப்பம் பெறுமுன்பே அவர்களை உத்தியோகத்திலிருந்து விரட்டிவிடுவதுதான் அதிகாரிகளின் கருத்தெனத் தெரிகிறது.

இலங்கை இந்தியரில் அங்கு தலைமுறை தலைமுறையாக வசித்து வருவோரும் பிரஜைகளாகப் பதிவு பெறுவதில் உள்ள சங்கடங்கள் சாதாரணமல்லவென்பதை ஏற்கனவே எடுத்துக் காட்டப்பட்ட விஷயமே. இதற்கு அதிகாரிகள் கேட்கும் ருசுக்களைத் திரட்டுவதோ, மிகச்சிக்கலான கேள்விகளடங்கிய நமூனாக்களை அதிகாரிகளுக்குத் திருப்தி ஏற்படும் வகையில் பூர்த்தி செய்வதோ பெரும்பாலான இந்தியத் தொழிலாளர் சம்பந்தப்பட்டவரை மிகவும் சிரம சாத்தியமானவேலை. இவ்வளவு சிரமத்துக்குப் பின் சமர்க்கிப்படும் மனுக்களையும் முறைப்படி பரிசீலித்து முடிவு செய்வதில் அதிகாரிகள் சிறிதும் சுறு சுறுப்புக் காட்டுவதில்லை. அடுத்து வரும் பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை கூடிய வரை இந்தியருக்கில்லாமல் செய்வதே அதிகாரிகளின் கருத்தோ என்ற சந்தேகம் ஏற்கனவே வெளியானது தான். பிரஜா உரிமை கிடைக்காததால் வாக்குரிமையை இழப்பது மட்டுமின்றி இப்போது பிழைப்பே பறி போய் விடுமோ என்று இலங்கை இந்தியர் பீதியுற நேர்ந்திருக்கிறது.

பிரஜா உரிமைக்கு மனு அனுப்பியதற்கான ருசுவை சமர்ப்பிக்கும் இந்திய (சர்க்கார்) சிப்பந்திகள் அம் மனுக்களைப் பற்றி முடிவாகும் வரை, வேலையிலிருந்து நீக்கப்பட மாட்டார்கள் என்று மந்திரி குணசிங்கா கூறியிருக்கிறார். ஆனால் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள நோட்டீஸின் வாசகம், கருத்து இரண்டும் வேறு. அம்மந்திரியின் கூற்று சரியெனவே வைத்துக் கொண்டாலும் மனுச் செய்து கொண்டதற்கான சாட்சியம் அதிகாரிகளிடமிருந்தே கிடைக்க வேண்டும். ஏற்கனவே உள்ள அனுபவத்தைக் கொண்டு பார்க்கையில் அது கிடைப்பது எளிதென்று யாரும் சொல்ல முடியாது. உத்தியோகங்களை இலங்கையர் மயமாக்க வேண்டுமென்று அங்குள்ள சர்க்கார் கோருவதை யாரும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இந்த நியாயமான விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வதிலும் அனுசரிக்க வேண்டிய சில அடிப்படையான தர்மங்களுண்டு. குறிப்பாக ஏற்கனவே வேலையில் அமர்ந்த இந்தியர் விஷயத்தில் குறுக்கிடுவது சரியல்லவென்பதை இலங்கை சர்க்காரே இரண்டு வருஷங்களுக்கு முன் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். அதற்கு முற்றிலும் மாறானது அவர்கள் தற்போது எடுத்துக் கொண்டுள்ள நடவடிக்கை. இப் பிரச்னையிலுள்ள நியாயா நியாயங்கள் ஒருபுற மிருக்க தங்கள் வாயிலிருந்து வந்த உறுதிமொழிக்காவது தாங்கள் மதிப்புக் கொடுக்க வேண்டியது அவசியமென்பதை இலங்கை சர்க்கார் உணர வேண்டாமா?

139179



கேம்பிரிட்ஜ், மெஸாசுசெட்ஸ் தொழிற் கல்விக் கழகத்தில் தற்போது 37 நாடுகளிலிருந்து 81 என்ஜினீயர்கள் பயிற்சி பெறுகின்றனர். இந்திய என்ஜினீயரும் இதில் பயிற்சி பெறுகிறார். அக்கழகத்தின் தோற்றம். பல்வேறு பகுதிகள் இதிலுள்ளன.

(கீழ்)

கோடை காலத்தில் விடுமுறையின்போது அமெரிக்காவில் சிறுவர்கள் ஒன்று கூடி "காம்ப்பயர்" அருகே உட்கார்ந்து பாடுகையில் எடுத்த படம்.





# தெய்வதரிசனம்

வை. சுப்ரமணியன்

அந்த டிஸ்பென்ஸரி வாசலில் நின்று இருந்த கார் புறப்படுவதற்கடையாளமாக ஒரு முறை 'கர்' ரென்று கர்ஜித்தது. அந்தச் சப்தத்தைக் கேட்டதும், தூக்கி வாரிப் போட்டது போல் எழுந்து ஓடி வந்தாள் அந்தப் பெண். இத்தனை நேரமும் அவள் அந்த டாக்டரின் வரவை எதிர் பார்த்து டிஸ்பென்ஸரியின் வெளிப் புறத்தில் கிடந்ததொரு பெஞ்சின் மீது அமர்ந்திருந்தாள். அசதி மேலீட்டினால் அவள் தன்னை மறந்திருந்த சமயத்தில் டாக்டர் தன் டிஸ்பென்ஸரியைப் பூட்டிக் கொண்டு வெளியே வந்திருக்கிறார். அவர் காரில் போய் ஏறிக் கொண்ட பிறகாவது தான் தன்னிலை பெற்றதைப் பற்றி திருப்திபட்டுக் கொண்டே ஓடி வந்த அந்தப் பெண் காரின் மற்றொரு புறத்தில் நின்று கொண்டு "டாக்டர், ஸார். உங்கள் வரவை எதிர் பார்த்துத் தான் நான் இங்கே ஒரு மணி நேரமாய்உட்கார்ந்திருந்தேன்..." என்று சொல்லிவிட்டுத் தயங்கியபடியே அவர் முகத்தைப் பார்த்தாள்.

டாக்டர் அவள் தயக்கத்தை அறிந்து கொண்டு பேசினார்:—

"ஏன்? என்ன? யாருக்காவது உடம்பு சரியில்லையா அல்லது உனக்குத் தான் ஏதாவது அசௌகரியமா?"

அவரும் அவள் முகத்தை ஒரு முறை கூர்ந்து நோக்கினார். அவளுடைய விழிகளின் தீட்சண்யம் அவர்முகத்தை லேசாகத் திருப்பியது. அவள் முகத்தில் ஒளிர்ந்த அழகின் சக்தியை வியந்தவாறு அவள் பதிலையும் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்.

"டாக்டர் ஸார். எனக்கு உடம்பு ஒன்றுமில்லை. என் தகப்பனார் மூனு மாச காலமாகவே படுத்த படுக்கையாக இருந்தார். நேற்று இரவு முதல் அவர் நிலைமை மோசமாக இருக்கிறது...... அவரை நீங்கள் கொஞ்சம் வந்து பார்த்தால்...."—

மடமட வென்று சரளமாகப் பேசத் தொடங்கிய அவள் குரல் இறுதியில் மெதுவாக விட்டுவிட்டு, ஒலிக்கத் தொடங்கியது.

"சரி. இதோ வருகிறேன். பின்னால் ஏறிக் கொள்."

மறுபடியும் தயங்கினாள் அவள். இப்போது அவள் கண்களின் ஓரங்களில் இரண்டு துளிக் கண்ணீர் அரும்பியிருந்தது. அவள் மௌனமாய் நின்றிருந்தாள். "ஸார் தயவு செய்து மன்னிக்க வேண்டும். உங்களுக்குப்பீஸ் தருவதற்கு எங்களிடம் பணமில்லை. மருந்து வாங்குவதற்கே .... என்று அவள் பேசிக் கொண்டிருக்கையில் டாக்டர் சுந்தரேசன், "அதையெல்லாம் பற்றிக்கவலையே பட வேண்டாம். நீ முதலில் வண்டியில் ஏறிக் கொள். உன் அப்பாவைப் போய்ப் பார்க்க வேண்டியதுதான் இப்போது மிகவும் முக்கியமான காரியம். மற்றதையெல்லாம் பற்றிச் சாவகாசமாகப் பேசிக் கொள்ளலாம். என்று சொன்னார். பிறகு பின் ஸீட்டில் கதவை எட்டித் திறந்தார். அடுத்த கணம் உள்ளே பாய்ந்து கதவைச் சாத்திக் கொண்டாள் அந்த யுவதி. அவள் காண்பித்த வழியில் வாயு வேகமாகப் பறந்து கொண்டிருந்தது கார்.

சுந்தரேசன் அந்தக் கிழவரின் உடம்பைப் பரிசோதித்து, ஒரு இஞ்செக்ஷன் கொடுத்து உள்ளுக்குஏதோ ஒருமிக்ஸ்சரும் கொடுத்த பின்னர் சற்று நிதானமாக அந்த வீட்டைச் சுற்றி ஒரு முறை கண்ணோட்டம் விடத்தொடங்கினார். அவர் முகத்தில் பீதியும், வருத்தமும் பரிதாபமும்இப்படியாகஉணர்ச்சி ரேகைகள் மாறி மாறிப் படர்ந்து மறைந்து கொண்டிருந்தன. அவர் மனம் தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்து விட்டது. களை யிழந்து, ஏழ்மையின் பூரணத்வமும் நிறைந்து காணப்பட்ட அந்த வீட்டில் ஒரு அரவமும் இருப்பதாக அவர் உணர வில்லை. ஏதோ ஒருமகத்தான நஷ்டம் ஏற்பட்டு அதனால் வெறிச்சோடிப் போனதொரு தன்மையே அங்கு நிலைத் திருந்ததாக உணர முடிந்தது அவரால்.

அவர் சிந்தனையைக் கலைத்ததுஅந்தப் பெண்ணின் குரல்:—

"டாக்டர் ஸார் எங்கப்பாவின் உடம்பு சீக்கிரத்தில் குணமடையுமா? அல்லது... என்னைப் பரிதவிக்க விட்டு அவர்..." என்று சொல்லிக் கொண்டே விசிக்கத் தொடங்கினாள் அவள்.

"இப்போது ஒன்றும் சொல்ல முடியாது. அதி ஜாக்கிரதையாய் பார்த்துக் கொண்டால் ஒரு வேளை அவர் புனர் ஜன்மம் அடையலாம். வெகு நாட்களுக்கு முன்னமேயே கவனித்திருக்க வேண்டும்.... அதிருக்கட்டும். உனக்கு வேறு யார் துணையாக இங்கிருக்கிறார்கள்? உன் அம்மா...."

சற்று முன் விசிக்கத் தொடங்கிய அவள் இப்போது பிழியப் பிழிய அழவே தொடங்கி விட்டாள். சுந்தரேசன் அவளைத் தேற்றினார். அதன் பிறகு ஒரு பதினைந்து நிமிஷ நேரம் தெளிவாகப் பேசினாள் அவள். அவளுடைய குடும்பத்தைப் பற்றிய கதையும் அதிலே ஒருவாறு அடங்கிப் போய் விட்டது. இதே மாதிரியான வியாதியில் தான் இரண்டு வருஷங்களுக்கு முன் அவள் தாயார் இறந்து போனாள். அப்போது அந்தப் பெண் ஹைஸ்கூலில் நாலாவது பாரம் வாசித்துக் கொண்டிருந்தாள். அவள் தகப்பனார் சர்க்கார் உத்தியோகம் ஒன்றை வெகு காலம் வகித்த பின்னர் சமீபத்தில் தான் ரிடையரானார். அவருடைய பென்ஷன் தொகையான இருபத்தைந்து ரூபாய் தான் தகப்பனாருக்கும் பெண்ணுக்கும் காலட்சேபத்திற்குப் போதும் போதாததுமாகவிருந்தது. தன் எதிர் காலத்தை உத்தேசித்து இப்போது உபாத்தியாயினி வேலைக்காக ட்ரெயினிங் ஸ்கூலில் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தாள். அந்த நிலையில் அவள் படிப்புக்கே மிகவும் சிரமப் படத் தான் செய்தாள். தனது தகப்பனார் வியாதிப் படுக்கையில் விழுந்த பிறகு அதையும் தாற்காலிகமாக நிறுத்திக் கொண்டு விட்டாள். அந்தக் குடும்பத்தில் அந்த இரண்டு ஜீவன்களையும் தவிர வேறு யாரும் கிடையாது. வேறு ஆதரவான பந்துக்களும் கிடையாது.

சீரழிந்து போன அந்தக் குடும்பத்தின் கதை சுந்தரேசனின் மனத்தை மாவாய்க் கரைக்கத் தொடங்கியது. படுத்த படுக்கையாய்க் கிடந்த பெரியவரைப் பற்றிய நம்பிக்கை அவருக்குப் போயே போய் விட்டது. இன்றோ, நாளையோ என்ற நிலைமையில்தான் இருந்தார் அவர். அதை அந்த இளம் பெண்ணிடம் சொல்லி அவள் உள்ளத்தைப் பிழிந்தெடுக்க வேண்டாமென்றுதான் அவர் உண்மையான நிலைமையை உணர்த்த வில்லை.

தன்னாலான உதவியைப் பூரணமாகச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டார் சுந்தரேசன். உடனே ஏதோ மருந்துக்குச் சீட்டு எழுதி, அவளிடம் கொடுத்துவிட்டு, பத்து ரூபாய் பணமும் கொடுத்து விட்டு "இதை வாங்கிக் கொடு அப்பாவுக்கு—ஒரு வேளை மட்டும். நான் நாளைக்கு இதே நேரத்தில் வருகிறேன்" என்று



சொல்லி விட்டுக் கிளம்பினார் சுந்தரேசன்.

வெளியில் சென்ற அவர் மீண்டும் உள்ளே வந்து, "உன் பெயர் என்ன?" என்று கேட்டார்.

"பவானி." என்று பதில் வந்தது. சுந்தரேசனின் வாலிப உள்ளத்தில் இப்போது தான் முதன் முதலாக ஏதோ ஒரு கிளுகிளுப்பு உண்டாயிற்று. பவானியை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்து விட்டு மின்னல் போல் மறைந்தார் அவர். பவானியின் கண்கள் அவர் சென்ற திசையிலேயே பொருந்திக் கிடந்தன. அவள் இதயம் தேனில் தோய்வது போன்றதொரு இன்ப உணர்வையடைந்தது. சிலை பிடித்து வைத்தாற் போல் அந்த இடத்திலேயே நிமிஷங்கள் கணக்கில் நின்றுவிட்டான் அவள்.

## 2

சுந்தரேசன் சிகிச்சை, ஒரு வார காலம் தான். அந்தக் கிழவரின்வியாதியின் முன்னால் பேர் சொல்லிற்று. எட்டாம் நாள் நடுநிசியில்விதிகுறுக்கிட்டு அவர் வியாதியையும் போக்கி அவரையும் கொண்டு போய் விட்டது.

அன்று காலை சுந்தரேசன் பவானியின் வீட்டுக்கு வந்த போது அவளுடைய கதறல்தான் அவரை வரவேற்றது அவள் கதறியது அவள் தகப்பனாரின் பிரிவை நினைத்து மாத்திரமல்ல. தன் எதிர் காலம் தன் முன் பயங்கரப் பிசாசாய் உருவெடுத்து நிற்பதைக் கண்டு பயந்தும் நடுநடுங்கியும் தான் அவள் அப்படிக் கதறினாள்.

நல்ல வேளையாக டாக்டர் சுந்தரேசன் அந்த சமயத்தில் வந்ததனால் அவள் வெகு நேரத்திற்குப் பின் ஆறுதலடைந்தாள். அவள் எதிர் காலத்திற்குத் தானே பொறுப்பாளியாய் நின்று எல்லாவற்றையும் கவனிப்பதாக வாக்குறுதியளித்தார் சுந்தரேசன். அந்த நிமிஷம் முதலே அவள் மனதில் உருவான ஒரு அமைதி அதன் பிறகு ஒரு மாத காலம் வரை அவளைச் சுமுகமாக ஈடுபடுத்தச் சென்றது.

ஆனால் மீண்டும் அவள் பழைய நிலையை அடைந்தாள். அவள் தகப்பனாருக்கு வந்து கொண்டிருந்த பென்ஷன் வரும்படி நின்றுபோய் விட்டது. வீட்டு வாடகைப் பாக்கியும் மற்றும் பல நெருக்கடிகளும் அவளைப் பூத கணங்களாகச் சூழ்ந்து கொண்டுவிட்டன. இதையெல்லாம் சுந்தரேசன் யூகித் தறிந்து பணம் கொடுத்து எல்லாவற்றையும் தீர்க்கச் செய்தார். அப்போதைக்கு அவர் உதவியை வரவேற்ற பவானி அப்புறம் ஏதேதோ சிந்தித்துப் பார்த்தாள். சுந்தரேசன் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருந்ததும், தட்டினதற்கெல்லாம் அவர் பண உதவி செய்ததும் அவளுக்கு என்னவோ போலிருந்தன. அவள்மனோ நிலையைச் சுந்தரேசனும் தெரிந்து தான் வைத்திருந்தான். நல்ல வேளையாக அவரே அதைப் பற்றி ஒரு நாள் பேசத் தொடங்கினார்.

"பவானி! என்னைப் பற்றிக் கொஞ்சம் நீ வேறு விதமாக நினைப்பதற்கு இப்போது இடம் ஏற்பட்டிருக்கிறது. அதற்குத் தான்மாற்றுத்தேடிக்கொண்டிருக்கிறேன். விரைவில் எல்லாம் சரியாகலாம்......

பவானி ஒரு புன்னகை புரிந்தாள்.. "சினிமா முறையிலே சம்பாஷணையைத்தொடங்கி விட்டீர்கள். வேறு விதமாக உங்களைப்பற்றி நினைக்க எனக்கு என்ன நேர்ந்து விட்டது இப்போது? என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

"எனக்குத் தெரியும், பவானி. தனிமையில் வாழும் ஒரு யுவதியின்வாழ்க்கையில் ஒருவன் தலையிட்டால் அவள் உள்ளம் எப்படி இருக்கு மென்று....."

"நீங்கள் கொஞ்சம் விளக்கமாகவே தான் சொல்லுங்களேன்."

"நீயே சொல், பவானி. இப்படியே எத்தனை நாட்களைக் கடத்த முடியும்? உன்னை மறைமுகமான முறையில் நான் ஆதரிப்பதும், இங்கே வந்து போவதும்......"

"வாஸ்தவம்: நான் இதைப் பற்றித் தான் முடிவு கட்டி வைத்திருக்கிறேன். ஒருகால் உங்கள் ஆதரவு இன்னும் கொஞ்சநாள் நீடித்தாலும் நீங்கள் இங்கே வந்துபோவது விரைவில் நின்றுபோகலாம்...... அப்புறம் நீங்கள் யாரோ—நான் யாரோ..... நாம் கனவு காண்கிறபடி எதுவுமே நடக்காமல் தற்கால ரீதிப்படி எல்லாம் நடந்துவிடும்......"

"அப்படி ஒருபோதும் நடவாது, பவானி. இது உறுதி:"

சுந்தரேசனின் மனதில் அந்த ஒரே வாக்கியம் அடிக்கடிச் சுழன்று கொண்டேயிருந்தது. அன்று நடந்த அந்தச் சம்பாஷணையின் எதிரொலி இன்னும் அவர் காதுகளில் கேட்டுக் கொண்டுதானிருந்தது. சிந்தனை அவர் மனத்தை மூடியிருக்க, அவர் கையிலிருந்த ஒரு பொருள் அவர் கண்களை அகலத் திறக்கச் செய்திருந்தது. பவானியின் புகைப்படந்தான் அவர் கைகளில் இருந்த அந்த மகத்தான பொருள். அன்றைய தினம் சம்பாஷணை முடிந்த பிறகு அவளிடமிருந்து வற்புறுத்தி வாங்கிக் கொண்டு வந்திருந்தார் அதை. அதில் காணப்பட்ட பவானியின் கவர்ச்சிகரமான தோற்றம் வேறு எதிலும் அவர் சிந்தனையைத் திருப்ப வில்லை.

## 3

சுந்தரேசன் தன் தாயாரிடம் எத்தனையோ இதமாகத் தன் அபிலாஷையைத் தெரிவித்துக் கொண்டிருந்தார். ஆனால் சங்கரியம்மாள் ஒரேயடியாகப் பிடிவாதமாகத் தன் கட்சியையே எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தாள். தன் பிள்ளைக்குக் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்தாள் அவள். கல்யாண ஏற்பாடு என்றாலே அவளுக்குப் 'பக'ரென்றிருக்கும். காரணம், சுந்தரேசனுக்கு



மூன்று தடவைகள் கல்யாணம் நிச்சயமாகித் தடைபட்டுப் போயிருந்தது. மூன்று தடவைகளிலும் ஏதேதோ முக்கியமான காரணங்கள். அதன்பிறகு ஜோஸியர், மாந்திரீகர் எல்லாரிடமும் சென்று அவர் ஜாதகத்தைக் காண்பித்துக் கேட்டதில் பல தோஷபரிகாரங்களுக்கு அவசியம் ஏற்பட்டது. அதெல்லாம் நிறைவேறி இப்போது நான்காவது முறையாக—அவருடைய முப்பத்திரண்டாம் வயதில் கல்யாணம் நிச்சயமாகியிருந்தது. அப்போதுதான் டாக்டர் சுந்தரேசன் தன் உள்ளக் கோயிலில் குடிகொண்டுவிட்ட பவானியைப் பற்றி "அரசல்புரச"லாகப் பிரஸ்தாபித்தார்.

சங்கரியம்மாள் முதல் கேள்வியாக, "சொத்து என்ன இருக்கிறதாம் சீர் என்ன செய்வார்களாம்? வரதட்சிணை எத்தனை கொடுப்பார்களாம்?" என்று கேட்டாள்.

சுந்தரேசன் அலுக்காமல் சளைக்காமல் கூறினார்:"சொத்து, நம்முடைய சொத்தெல்லாம் அவர்களுடையதுதான்: சீர் அவர்கள் சார்பில் நாமாக எத்தனைக்குச் செய்து கொண்டாலும் அவர்களுக்கு ஆட்சேபனை யில்லை. வரதட்சிணை விஷயம்— ஒரு ஐயாயிர ரூபாய் நாம் அவர்களுக்குக் கொடுக்க—"

"சுந்தரேசா: போதும் நிறுத்து. இந்த விஷயத்திலே விளையாடாதே. இந்தத் தடவை யாரோ ஒரு ரிடையர்ட் ஜட்ஜ் ஜாதகம் அனுப்பியிருக்கார். ஜாதகமெல்லாம் பொருந்தியிருக்கிறது. நாளைக்குப் போய்ப் பெண்ணைப் பார்க்க வேண்டும். தயாராயிரு...." என்று கட்டளையிடும் பாணியிலேயே சொல்லிவிட்டுப் போனாள்.

சுந்தரேசன் யோசனையில் ஆழ்ந்தார். பவானியைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளும் விஷயத்தில் அம்மா பிடி கொடுத்தே பேசாதது அவருக்குப் பெரும் ஏமாற்றமாகவே யிருந்தது.

மறுநாள் சங்கரியம்மாளும் சுந்தரேசனும் ஜட்ஜ் வீட்டுப் பெண்ணைப் போய்ப் பார்த்து வந்தனர். இம்முறையும் தோல்வி தான். சங்கரியம்மாளுக்கே பெண் பிடிக்கவில்லை. பெண் ஒரே கறுப்பு. தவிரவும்ஐந்துநிமிஷம்பேச்சுக் கொடுத்துப் பார்த்ததில் வெறும் அசடு என்பது வேறு புரிந்து விட்டது. சங்கரியம்மாளே இம்முறை இந்தப் பெண்ணை நிராகரித்து விட்டாள்.

இரண்டு நாட்களுக்குப் பின் சங்கரியம்மாளின் கணவன் பேருக்கு ஒரு கடிதமும் ஒரு புகைப்படமும் வந்தன. சுந்தரேசனின் சிநேகிதன் ஒருவன் எழுதியிருந்தான். சுந்தரேசனுக்காக அந்தப் பெண்ணைப் பார்த்திருப்பதாகவும், பெண்ணின் புகைப்படம் அனுப்பியிருப்பதாயும், பெண் பிடித்திருந்தால் மேல் காரியங்களைத் தான் கவனித்துக் கொள்வதாயும் எழுதியிருந்தான் அந்த நண்பன்.

புகைப் படத்தைப் பார்த்ததும் மகிழ்ந்து போனாள் சங்கரியம்மாள்.

"கிளின்னா இதுதான் கிளி: இந்தப் பெண் எனக்கு மாட்டுப்பெண்ணாக வர இருக்கும்போது கண்ட கரிக் கட்டையையும் எப்படி ஏற்றுக்கொண்டுவிட முடியும்?" என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு, "சுந்தரேசா" என்று கூப்பிட்டுக் கொண்டே அந்தப் புகைப் படத்துடன் சுந்தரேசன் இருந்த விடத்தற்கு வந்தாள்.

"இதோ பாரு: இந்தப் பெண்ணைப் பிடிக்கிறதா உனக்கு?" என்று கேட்டாள்.

புகைப் படத்தை வாங்கிப் பார்த்தார் சுந்தரேசன். அவர் அகக் கண்கள் மட்டும் மலர்போல் மலர்ந்தன. காரணம் அவர் கையிலிருந்தது பவானியின் புகைப் படம்தான்.

"எதுவாயிருந்தாலும் நீ பார்த்துச் செய்தால் சரிதானம்மா. இதோடு ஐந்தாவது தடவைகள் ஆகி விட்டது. எனக்கு அலுத்துப்போய் விட்டது." என்று சிரத்தை குன்றியவர்போல் சொன்னார் சுந்தரேசன்.

சுந்தரேசனின் நண்பனுக்குக் கடிதம் பறந்தது. அவனே நேரில் வந்தான்.

"என்ன? நிச்சயம்பண்ணிவிடலாமா?" என்று கேட்டான்.

"ஆஹா தாராளமாய்:" என்று பதிலைக்கேட்ட அந்த நண்பர் "ஆனால் ஒரு விஷயம் சீர், வரதட்சிணை என்று ஒருதம்பிடிகூட எதிர்பார்க்க முடியாது. ஏனென்று கேளுங்கள், சொல்கிறேன். இந்தப் பெண்ணுடைய அண்ணா ஒருவன்— சம்பாதிக்கவென்று சிங்கப்பூர் சென்றவன் இறந்து போய் விட்டான். அந்தச் செய்தி கொண்ட தந்தி வந்த மறுநிமிஷமே இந்தப் பெண்ணின் தகப்பனாரும் மாரடைப்பால் இறந்துவிட்டார். கல்யாணத்துக்குக் காலணாயில்லாமல் நிர்க்கதியாய் இருக்கிறது இந்தப் பெண். ஏதோ உங்களிடம் இதைச் சொன்னால் உங்கள் மனசு இளகி உங்கள் பிள்ளையாண்டானுக்கு இந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக் கொள்வீர்கள் என்று தான் நான் முன்னின்று ஏற்பாடு செய்யத் துணிந்தேன். அந்தக் குடும்பத்தில் மிகவும் அக்கறையுள்ளவன் நான்..." என்று பேசிக் கொண்டே போனான் அந்த நண்பன்.

"மூர்த்தி. சற்று இரு. என் உடம்பை என்னமோ செய்கிறது. என் அண்ணாவின் நினைவும், என் தகப்பனாரின் ஞாபகமும் என்னை வாட்டுகின்றன. இதே கதை தான் அவர்களுடையதும். இந்தப் பெண்ணின் இப்போதைய நிலையில் தான் நானும் அன்று இருந்தேன்..." என்றுசொல்லிவிட்டுத்தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ளத் தலைப்பட்டாள் சங்கரியம்மாள். அதன் பிறகு சுலபமாய் அவளுடைய அனுமதி கிடைத்தது அந்தப் பெண்ணை நிச்சயம் செய்வதற்கு. மூர்த்தியின் ஒத்தாசையின் பேரில் நிச்சயதார்த்தம் நடந்தது. சுந்தரேசன் பூரணமான திருப்தியுடன் பவானியின் கரங்களைப் பற்றினார்.

## 4

பவானியிடம் தன் தந்திரத்தைச் சொல்லிக் கொண்டிருந்தார் சுந்தரேசன். தன் நண்பன் மூர்த்தியின் மூலம் பவானியின் புகைப் படத்தை அனுப்பச் செய்ததையும், கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்வதற்கு ஒரு கதையைச் சிருஷ்டி செய்து அதைத் தன் தாயாரிடம் சொல்லச் செய்ததையும் பற்றிப் பெருமையுடன் சொல்லிக் கொண்டிருந்தார்.

"ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணத்தைப் பண்ணச் சொல்லி இருக்கிறார்கள் பெரியவர்கள். நீங்கள் ஒரே ஒரு பொய் தானே சொன்னீர்கள்" என்றாள் பவானி.

"அது கூடப் பொய்யில்லை., பவானி. என் அம்மாவின் வாழ்க்கையில் நடந்தது துயரத்தின் உச்ச நிலையில் அவளை ஒரு கணம் ஏற்றி வைக்க வேண்டியிருந்தது. தன் நிலைமையை உணர்ந்ததும் தான் இந்தக் கல்யாணத்திற்கு இணங்கினாள்." என்றார் சுந்தரேசன்.

"எது எப்படியிருந்தாலும், அன்று டிஸ்பென்ஸரி வாசலில் காரில் அமர்ந்திருந்த உங்கள் தோற்றத்தை என்னால் மறக்க முடியாது. என் தகப்பனாருக்கு சிகிச்சை செய்ய வருவதற்கு ஒப்புக் கொண்ட உங்களைத் தெய்வமாகத் தான் கருதினேன். அன்றைய தெய்வ தரிசனம் வீண் போகவில்லை. என் வாழ்க்கையே அதன் மூலம் மறு மலர்ச்சி பெற்று விட்டது." என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினாள் பவானி.


சினிமாப் படத்திற்கு தேவை

★

ஏப்ரல் மாதம் 10-ம் தேதி முதல் உயர்த்தப்பட்ட திட்டத்தின்படி ரூ 400/- மொத்தமாகவோ, நான்கு தவணைகளிலோ டெபாஸிட் செய்து, சினிமாப்படத்தில் நடிக்க விருப்பமுள்ள ஆண். பெண் அனைவரும் அனுபவம் இல்லாவிட்டாலும் ஸ்டாம்புடன் விண்ணப்பித்துக் கொள்ளவும் தவணைகளில் டெபாஸிட் செய்பவர்களுக்கு படத்தில் நடித்து எம்மிடமிருந்து கிடைக்கக் கூடிய ஊதியத்திலிருந்தும் டெபாஸிட் தொகையை பூர்த்தி செய்ய வசதியளிக்கிறோம்.

C. C. ப்ரொடக்ஷன்ஸ்,
ராமநாதபுரம் — கோயமுத்தூர்.

# பொய்ப் பக்தா

'குங்குமம்'

## 8

என்னையறியாமலே ஓர் பயம் உண்டாகி கைகால்களெல்லாம் வெடவெடவென்று நடுங்க ஆரம்பித்து விட்டது. உண்மையில் நான் ஒரு தவறும் செய்யவில்லை. ஏதோசெய்யக்கூடாததவறைச் செய்து விட்ட மாதிரியும் அதைப் பிறர் கண்டு பிடித்துக் கையும் களவுமாக அகப்பட்டுக் கொண்டு விட்ட மாதிரியும் எதற்காக இந்த மனது இப்படி பயத்தால் நடுங்கவேண்டும் என்பது தெரியவில்லை.

'எல்லாம் தனக்கு வந்தால் தெரியும்' என்று சொல்கிற மாதிரி நமக்கு வரும் பொழுது தானே அதன் உண்மை சொரூபம் விளங்குகிறது.

ஐந்து வருஷங்களுக்கு முன் நடைபெற்ற சம்பவம். இப்பொழுது அது என் கண்முன் அப்படியே வந்து நின்றது. சிதம்பரத்தில் எங்கள் எதிர்வீட்டில் கோபாலன் என்று ஓர் பையன் இருந்தான். அவன் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். விடு முறைக்காக ஊருக்கு வந்திருந்தான். தங்கமான பையன். அதட்டி ஏதாவது பேசினால் பயந்து விடுவான். மூன்றாவது வீட்டில் சங்கீத வித்வான் ஒருவர் இருந்தார். கோபாலனுக்கும் சங்கீதத்தில் கொஞ்சம் ஞானம் உண்டு அத்துடன் அந்த சங்கீத வித்வான் வீட்டுக்குப் பத்திரிகைகள் வரும். இதையெல்லாம் உத்தேசித்து கோபாலன் சங்கீத வித்வான் வீட்டுக்குச் செல்வது வழக்கம்.

இந்த சங்கீத வித்வானுக்கு கற்பகம் என்று ஓர் பெண் இருந்தாள். நல்ல அழகு. நன்றாகப் பாடுவாள். அவளை நல்ல இடத்தில்தான் கலியாணம் செய்து கொடுத்தார்.

சம்பந்திகளுக்குள் ஏதாவது தகராறோ அல்லது தம்பதிகளுக்குள் ஏதாவது மனஸ்தாபமோ புக்ககத்திலிருந்து வந்த கற்பகம் ரொம்ப நாள் வரை புக்ககம் போகவில்லை. அதது அங்கங்கே இருக்க வேண்டிய காலத்தில்ஏன்இந்தப் பெண் இப்படிப் பிறந்தகத்தில் வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் 'புதிராகவே' இருந்தது.

தங்கள் சொந்த ஜோலி எக்கேடாவது கெட்டுப் போகட்டும். இப்படிப்பட்ட விஷயங்களில் தானே அக்கம் பக்கத்து ஜனங்களுக்கு சொல்லமுடியாத 'கவலை' ஏற்பட்டு விடுகிறது. பெரிய பெரிய ராஜதந்திரிகள் கூட மனதுக்கு சிறிது ஓய்வு கொடுப்பார்கள். இந்த அக்கம் பக்கத்துஜனங்களுக்குஇருபத்துநான்கு மணி நேரமும் இது பற்றிய யோசனை தான். அவரவர்கள் எண்ணத்திலிருந்து தோன்றியவைகளைக் கொண்டு பல விதமான 'கதைகளை'க் கட்டி விட ஆரம்பித்து விட்டார்கள்.

இவர்களுடையகற்பனைக்குஊர்ஜிதம் அளிக்கிற மாதிரி அந்த சமயத்தில் தான் ஓர் சம்பவம் நடை பெற்றது.

கோபாலன் சங்கீத வித்வான் வீட்டு தெருத் திண்ணையில் உட்கார்ந்துபத்திரிகை படித்துக் கொண்டிருந்தான். அவனுடைய நண்பன் ஒருவன் அவனைத் தேடிக் கொண்டு வருவதைப் பார்த்து விட்டான். கோபாலன் அந்த நண்பனுக்கு ஏதோ கொஞ்சம் சில்லரை கொடுக்க வேண்டுமாம். அந்த சமயம் கோபாலன் கையில் சில்லரை இல்லையாம். அதனால் அந்த சமயம் அவன் கண்ணில் படாமல் தப்பித்துக் கொள்வதற்காகத் தான் உட்கார்ந்திருந்த வீட்டின் ரேழியில் கதவிடுக்கில் வந்து ஒளிந்து கொண்டானாம். சொல்லி வைத்தமாதிரி இந்த சமயத்தில்தான் கற்பகத்தின் கணவர், பெற்றோர்களுக்குள் சீர் வரிசைகள் விஷயமான தகராறுக்காக நம் யௌவனத்தைப் பாழ் படுத்தி விடுவதா? நாளைக்கே பணம் வரும் யௌவனம் மீண்டும் வருமா? சே, சே, என்ன முட்டாள்தனம் செய்கிறோம், போய் கற்பகத்தை அழைத்து வந்து விட வேண்டியதுதான் என்று திடீரென்று ஞானோதயம் வரப்பெற்றவராக, கற்பகத்தை அழைத்துக் கொண்டு போக வந்து விட்டார்.

அந்த சமயம் கற்பகம் தெருப் பக்கத்து அறையில் உட்கார்ந்து கொண்டு ஏதோ நாவல் படித்துக் கொண்டிருக்கிறாள். அதன் பக்கத்தில் ரேழிப் பக்கம் தெருக்கதவின் இடுக்கில் கோபாலன் தன் நண்பனின் கண்ணில் படாமல் இருப்பதற்காக ஒளிந்து கொண்டிருக்கிறான். கற்பகத்தின் கணவர் வருவது அவனுக்குத் தெரியாது. கதவின் இடுக்கில் கோபாலன் ஒளிந்து கொண்டிருக்கும் விஷயம் கற்பகத்துக்கும் தெரியாது.

கற்பகத்தின் கணவர் தெருப்படியேறி உள்ளே வந்து கொண்டிருக்கிறார். காலடி ஓசையைக் கேட்டுத் தன்நண்பன் தான் தன்னைத் தேடிக்கொண்டு வருகிறான் என்று கோபாலன் மேலும் ஜாக்கிரதையாய் ஒளிந்து கொள்கிறான்.

கற்பகத்தின் கணவர் தெருப் பக்கத்தின் அறையின் உள்ளே நுழைந்தார். அதே சமயம் கதவின் இடுக்கில் கோபாலன் ஒளிந்து கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டார்.

'சரிதான், கற்பகத்துக்கும் கோபாலனுக்கும் தொடர்பு உண்டு போலிருக்கிறது. அதனால்தான் நம்மைப் பார்த்து ஒளிந்து கொள்கிறான்' என்று தீர்மானித்து விட்டார்.

கற்பகமும் கதையில் மனதைப் பறி கொடுத்திருந்ததால் தன் கணவர் வந்ததைக் கவனிக்கவில்லை.

'சுவாரஸ்யமான கதை போலிருக்கிறது', என்றார் கற்பகத்தை நோக்கி.

'நீங்களா, நான் கவனிக்கவே இல்லையே. வரும் தகவலுக்கு ஒரு கடிதம் போட்டிருந்தால் அப்பாவை ஸ்டேஷனுக்கு வரச் சொல்லியிருப்பேனே' என்றாள் கற்பகம்.

"ஆமாம், கடிதம் போடாதது என்னுடைய தவறுதான். கடிதம் போட்டிருந்தால் முன் ஜாக்கிரதையாக இருந்திருப்பாயல்லவா? இந்த மாதிரியான அசந்தர்ப்பங்களெல்லாம் நேர்ந்திருக்க வேண்டியதில்லையல்லவா?' என்றார், 'தமிட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டே

அப்பொழுது அவர் கண்களில் தீப்பொறி பறந்து கொண்டிருந்தது. முகம் குபீரென்று சிவந்து விட்டது.

திடீரென்று பிரளய கால ருத்திரன் மாதிரி மாறிக்கொண்டு வரும் அவருடைய முகத்தின் தோற்றத்தைக் கண்டு ஒன்றும் புரியாதவளாய், 'ஏன், என்ன





சமாசாரம்? என்ன நேர்ந்து விட்டது?' என்றாள் கற்பகம்.

"அடடா, இது பூலோகமா? கைலாசமா? இந்தப் பூனையும் பால் குடிக்குமோ? பெற்றோர்களுக்குள் உள்ள தகராறினால் தான் நீ வரவில்லை யென்றல்லவோ நான் நம்பி மோசம் போய் விட்டேன். இதுதான் சமாசாரமா, இங்கே உனக்குக் காதலர்கள் நிறைய இருக்கும் போது நீ அங்கே எதற்கு வரப் போகிறாய்?' என்று சொல்லி விட்டுப் பரபரவென்று வந்த வழியே திரும்பிப் போய்விட்டாராம்.

'நான் நிரபராதி. ஒருபாவமும் அறியாதவள்' என்று கற்பகம் கதறினாளாம். அவர் திரும்பிக் கூடப் பார்க்கவில்லையாம்.

வெகு நேரம் வரையில்காரணம்இன்னதென்றே அவளுக்குத் தெரியவில்லையாம். பிறகுதான் கோபாலன் அப்பொழுது ரேழியில்கதவிடுக்கில்ஒளிந்து கொண்டிருந்ததும் அதன் காரணமாக அனாவசியமான சந்தேகம் அவருக்கு ஏற்பட்ட விட்டதென்ற விஷயமும் அவளுக்குத் தெரிய வந்ததாம்.

உண்மையில் தாங்கள் ஒரு பாவமும் அறியாதவர்கள், நிரபராதிகள், என்பது கற்பகத்திற்கும் கோபாலனுக்கும் தெரியும். ஆனால் அக்கம் பக்கத்திலுள்ளவர்களும் கற்பகத்தின் கணவரும் வேறு விதமாக நினைத்து விட்டார்கள். சூழ்நிலை அந்த மாதிரி அமைந்து விட்டது. நான் கூட, அக்கம் பக்கத்து ஜனங்கள், அதற்கு கண் மூக்கு காதெல்லாம் வைத்துச் சொன்னதைக் கேட்டு, ஒரு வேளை உண்மைதானோ என்னவோ வென்று நினைத்து விட்டேன்.

ஆனால் இப்பொழுது என்னுடைய நிலைமையைப் பார்த்த பிறகல்லவோ பாவம், கற்பகத்தின் சம்பவமும் இப்படிப் பட்டதாகத்தான் இருந்திருக்க வேண்டும் என்று தோன்றியது.

அப்பொழுது என் கணவர் என் பீதியைக் கண்டு 'உம்' விழுந்து விடப் பேசுகிறாய் என்று ஒரு ஏளனச் சிரிப்பு சிரித்து விட்டு எதிர் வீட்டு மாடியை நோக்கினார்.

அவருடைய அந்த ஏளனச் சிரிப்பின் அர்த்தம்எனக்கு விளங்கிவிட்டது. 'இது கற்பகம் கதைதான். நம்மீது சந்தேகப் பட்டுத்தான் இந்தச் சிரிப்பு சிரிக்கிறார்' என்பது எனக்குப் புரிந்து விட்டது.

நான் நிரபராதி. அனாவசியமாக என் மீது சந்தேகப் படும் படியான நிலைமை ஏற்பட்டு விட்டதே என்ற கஷ்டம் எனக்கு.

'உம். எதற்காக இப்படி மிரளுகிறாய்?' என்று மீண்டும் ஏளனமாகச் சிரித்தார்.

அப்பொழுது அவருடைய அந்த ஏளனச் சிரிப்பைக் கண்டு என்னால்சகிக்க முடியவில்லை. எனது பரம்பரை எப்படிப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியாது. எங்கள் தாத்தா பாடசாலை உபாத்தியாயராக இருந்தாராம். பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர் வந்தாராம். கேட்ட கேள்விகளுக்குப் பிள்ளைகள் சரியாகப் பதில் சொல்ல வில்லையாம். பிள்ளைகள் சரியான பதில் சொல்லாத சமயமெல்லாம் எங்கள் தாத்தாவைப் பார்த்து இன்ஸ்பெக்டர் ஓர் ஏளனச் சிரிப்பு சிரித்துக் கொண்டிருந்தாராம் எங்கள் தாத்தா மிகவும் ரோஷக்காரர். வெட்டு ஒன்று, துண்டு இரண்டு என்கிற கதையாக அவருக்கு எதுவும் சுற்றி வளைக்காமல் 'சட் புட்' என்று தீர்ந்து விட வேண்டுமாம். இந்த மாதிரி அசட்டுத்தன மெல்லாம் அவருக்குப் பிடிக்காது. இரண்டு மூன்று தரம்பொறுத்துப் பார்த்தாராம், நான்காவது முறையும் அந்த இன்ஸ்பெக்டர் ஏளனமாகச் சிரித்தாராம். "எதற்கு இந்த வீண்வம்பெல்லாம். விஷயத்தை நேராகக் கேளுங்கள் சொல்லுகிறேன். நீங்கள் எந்தப் பிள்ளைகளைக் கேட்கிறீர்களோ அவர்கள், வகுப்பில் சுத்த மக்குகள், அவர்களைக் கொண்டு என்திறமையைத் தீர்மானித்து விடக்கூடாது. அது தெரியாமல் ஏளனச் சிரிப்பு சிரிக் கிறீர்கள். இனி இந்தமாதிரி அசட்டுத் தனமெல்லாம் வைத்துக் கொள்ளாதீர்கள். ஜாக்கிரதை" என்று ஒரு கர்ஜனை செய்தாராம். இன்ஸ்பெக்டர் நடு நடுங்கி விட்டாராம். இதே மாதிரிதான் என் தகப்பனார் உத்தியோகம் பார்த்த இடத்தில் அவருடைய மேலதிகாரி, ஏதோ சந்தேகம் வந்து அதைத் தீரத் தெளிந்து கொள்ளாமல் எக்கச் செக்கமாக ஏதோ பேசி விட்டு "நீங்கள் கூட இப்படியெல்லாம் ஆரம்பித்து விட்டீர்களா" என்று ஓர் ஏளனச் சிரிப்பு சிரித்தாராம். "நீங்கள் என்னை அடித்து விடுங்கள். பட்டுக் கொள்கிறேன். வேலையினின்றும் டிஸ்மிஸ் செய்து விடுங்கள். சந்தோஷமாக விடை பெற்றுக் கொள்கிறேன். ஆனால் இந்தமாதிரியான சிரிப்பு மாத்திரம் சிரிக்காதீர்கள். தவறு செய்யாத ஒருவனுடைய மனதை அது எவ்வளவு புண் படுத்தும் என்பது உங்களுக்குத் தெரியவில்லை. கௌரவமானவர்கள் வேலை செய்வதற்கு இது இடமே இல்லை. என்று சொல்லி விட்டு விறு விறுவென்று வந்து விட்டாராம் அப்பா! அப்படிப்பட்ட வம்சத்தில் வந்தவள்



"முப்பது வயசு ஆறதுங்கிறேளே? நீங்க ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்கல்லே?"
"என் அண்ணாவுக்கு இன்னும் கல்யாணம் ஆகல்லே"
'ஏன்?"
"அவனோடே அண்ணாவுக்கு இன்னும் கல்யாணம் ஆகல்லே!'

நான், என்று சொல்லி விடலாம் போலிருந்தது.

இருந்தாலும் சற்று பொறுப்போம். அவசரம் கூடாது என்று நினைத்துக் கொண்டேன்.

அவர் அத்துடன் நிற்கவில்லை. வரும் பொழுதே எதிர் வீட்டு மாடியில் அந்த 'பேர்வழி' இருப்பதைக் கவனித்திருக்கிறார். கையும் களவுமாக என்னைப் பிடித்து விட்டதாக எண்ணம். அதனால் தான் அந்த ஏளனச் சிரிப்பு சிரித்திருக்கிறார். இருந்தாலும் தாம் ஒன்றையும் கவனிக்காதவர் போலவும், என் பீதியைப் பார்த்துவிட்டுத் தான் சுற்று முற்றும் கவனிக்கிறவர் போலவும் நாலா பக்கமும் தன் பார்வையைச் செலுத்துகிற மாதிரி பாசாங்கு செய்துவிட்டு "ஓகோ, இருக்கிறானா அங்கே. எதற்காக என்னைப் பார்த்தவுடனே இப்படி நடுங்குகிறாய் என்று பார்த்தேன்.' என்று சொல்லிவிட்டு ஓர் அசட்டுச் சிரிப்பு சிரித்தார்.

அதற்கு மேல் என்னால் பொறுக்க முடியவில்லை.

'என்ன சொல்லுகிறீர்கள்? சொல்லுவதை விளங்கும்படியாகச் சொல்லுங்கள்.' என்றேன்

'நான் ஒன்றும் சொல்லவில்லை. அதோ எதிரே இருப்பது அவன் தானே? என்று கேட்டேன்' என்றார்.

'அவன் தான்' என்றேன்.

'அதான் கேட்டேன். வேறொன்றும் இல்லை.' என்றார்.

'அப்படியென்றால்?....' என்றேன்.

'அப்படியென்றால்,'என்று இழுத்தவாறு சொல்லிவிட்டு, 'ஒன்றுமில்லை.' என்றார்.

ஏன் அப்படி? மனதிலிருப்பதை நன்றாகத் தான் சொல்லிவிடுங்களேன். நான் அவனைப் பார்த்துக் கொண்டு இங்கே நின்று கொண்டிருக்கிறேன். இல்லையா? நீங்கள் சொல்ல வந்தது அதானே?' என்றேன்.

இதைக் கேட்டவுடனே அவர் பயந்து விட்டார் என்பதை அவர் முக பாவம் நன்கு தெரிவித்தது.

'பார்த்தாயா? நான் அப்படியா சொன்னேன். எதற்காக நீயாயக் கற்பனை செய்து சொல்லுகிறாய்? நான் சொல்ல வந்தது அது இல்லை. நீ கெட்ட எண்ணத்துடன் அவனைப் பார்க்கவில்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால், இதைக் கவனிக்கும் உலகம் என்ன செய்யும் தெரியுமா? இல்லாத கற்பனைக் கதைகளையெல்லாம் கட்டி விட்டு விட்டு, மனிதனை வெளியில் தலை காட்ட முடியாதபடிச் செய்து விடும். இதில் தான் ஜாக்கிரதை வேண்டும். இதைத் தான் அன்று கடற்கரையில் சொன்னேன்' என்றார்.

'நான் ஏதாவது எண்ணிக் கொண்டு விடப் போகிறேனேயென்று என் மனது நோகாத வகையில் பதில் சொல்வதாக அவருடைய அபிப்ராயம்.'

இங்கு வந்தவுடனே நான் கண்ட சொப்பனம் அப்படியே பலித்து விட்டதைக் கண்டு பிரமித்துப் போய் விட்டேன்.

இதற்கு என்ன பதில் சொல்வது? சிறிது நேரம் மௌனமாய் நின்றேன்.

'சரி. இதைப் பற்றி என்ன, அப்புறம் சாவகாசமாகப் பேசிக் கொள்ளலாம். நேரமாகிவிட்டது. சங்கீதக் கச்சேரிக்குப் போகலாம் வா.' என்றார்.

எனக்கு மனது சரியாகவேயில்லை.

'நான் வரவில்லை. நீங்கள் வேண்டுமானால் போங்கள்.' என்றேன்.

'ஏன்' என்றார்.

'ஒன்றுமில்லாமல்' என்றேன்.

'இதற்காகவா? நான் என்ன சொல்லி விட்டேன் இப்பொழுது?' என்றார்.

'இதற்காக இல்லை. எனக்கு என்னவோ மனது சரியாக இல்லை.' என்றேன்.

'அதற்குத் தான் சொல்கிறேன். போனால் சரியாகிவிடும்.' என்றார்.

'விணிற்காவது தொந்தரவு செய்யாதீர்கள். எனக்கு மனது சரியாக இல்லை. அந்த மட்டோடு விட்டுவிடுங்கள்' என்றேன்.

(தொடரும்)

சேலம்
மூன்று தாமரை
பீடிகளை உபயோகிக்கும்
சந்தோஷமடையுங்கள்
Estd 1920
Rgd. No. 2221.
Prop: S அஹமத் உசேன்
கோட்டை சேலம் S. I. R.

Coffee
ours for quality

RAW ROAST OR GROUND
GANESH & CO
(MADRAS) LTD T'NAGAR
RETAIL BRANCHES:
285, CHINA BAZAAR, G.T., MADRAS
71, PONDY BAZAAR, T'NAGAR



# இணையா விளக்கு



## 3

"டேய், வண்டியை அவிழ்த்து விடு!" என்று உத்தரவிட்டான் சந்தானம்.

பிரயாணம் நின்று விட்டது.

சந்தானத்தின் மனசு ஒரு நிலையிலில்லை. இதுவரையில் அவன் பாப்பாவின் வீட்டு வாசல் பக்கம்கூடப் போனதில்லை. ஆயினும் அந்த வீடு காற்றோட்டமில்லாமலும்ஒரே இருட்டாகவும் வசிப்பதற்கு லாயக்கற்றதாகவும் இருக்கும் என்பதைத் தெரிந்து கொள்ள கற்பனா சக்தியே வேண்டியதில்லை. வெளித்தோற்றத்திலிருந்தே தெரிந்துகொண்டுவிடலாம். எனவே அவன் கல்யாணியை வரவழைத்து, "அவளுக்கு என்ன உடம்பு என்று பார்த்து விட்டு வா" என்றான்.

உடம்பு நெருப்பாய்த் தகிப்பதாகவும் குளிரும் நடுக்கலும் இருப்பதாகவும் கல்யாணி வந்து தெரிவித்த போது சந்தானத்துக்குத் திகிலாக இருந்தது. அதோடு அவளைத் தன் வீட்டிலேயே கொண்டு வந்து இருக்கும்படிச் செய்தால் தான் வசதியாகவும் வியாதி சீக்கிரத்தில் குணமாகும் என்றும் அவனுக்குத் தோன்றியது. பாப்பாவிடம் அவனுக்குக் கோபம் கோபமாயும் வந்தது. என்ன சொன்னாலும் அவள் தன் உடம்பைப் பற்றி அதிகம் கவலைப்படுவதில்லை. சிவக்கிராமத்தில் சமையலுக்கு ஒரு பரிசாரகன் இருந்தான். மற்ற வீட்டுவேலைகளைச்செய்யவும்வெந்நீர்போட்டுத் தரவும் துணிமணிகளைத் தோய்த்துப் போடவும் இரண்டு வேலைக்காரிகள் இருந்தனர். அவளுக்கு ஒருவேலையுமில்லை ஆனால் பாப்பாவோ ஒரு வேலையும் செய்யாமல் இருந்து பழகியவளல்ல. ஒருவிதத்தில் அந்த வாழ்க்கை கட்டுப்பாட்டுடன் இருந்தது. அவளுடைய சாந்தமான மன உணர்வு அந்தக் கட்டுப்பாடுகளை சிறை வாழ்க்கையைப்போல உணர்ந்தது எவ்வளவு நேரம் தான் புஸ்தகங்களைப் படிப்பது? எவ்வளவு நேரம்தான் வெளியிலேயே தலை காட்டாமல் உள்ளேயே முடங்கிக்கிடப்பது?

சிற்சில சமயங்களில் அவளுக்குச் சிவன்கோவில் பக்கத்திலுள்ள அல்லிக்குளத்திற்குப்போய் அலற முழுகிவிட்டு வரவேண்டும்போல ஆசையாக இருக்கும். எதிரே, பங்களாவின் மேல்மாடியில் நின்று பார்த்தால் கரைவழிய ஜலம் ஓடிக்கொண்டிருக்கும் ராஜன் வாய்க்கால் தெரியும். அதன் கரையிலிருந்த ஆல மரத்தின் குளுகுளு என்ற நிழலும் அங்கு கிராமத்துப் பெண்கள் காலையிலும் அந்தி வேளைகளிலும் வந்து நீராடிவிட்டுச் செல்வதும் தெரியும். இவற்றைப் பார்க்கும்போது எல்லாம் அவளுடைய நெஞ்சம் கங்குகரையின்றி ஏக்கத்தால் நிரம்பி வழியும். அவளுடைய புது அந்தஸ்தைக் கண்டு அவளுக்கே வெட்கமாயும் வருத்தமாகவும் இருக்கும். கண்ணால் திட்டவட்டமாக பார்த்தறிய முடியாத சமூகத்தின் கண்டிப்பும் அதற்குப் பயந்து நடந்து கொள்ளவேண்டிய பொறுப்பும் அவளுக்கு ஒரு வெறுப்பையே தந்தன. அந்தச் சமூகத்தின் கட்டுத்திட்டம் ஒப்புக் கொண்டதோ இல்லையோ அவள் அந்தக் கிராமத்திலுள்ள சந்தானத்தின் பண்ணையைச சேர்ந்தவர்களுக்குப் புது எஜமானி. அவர்கள் ஜாதி, சமயம், குலம் முதலியவற்றைக் கருதாமல் அந்தஸ்து ஒன்றை மட்டுமே பார்ப்பவர்கள். ஆசார நதியில் எதிர் நீச்சுப்போட்டு வந்தவர்கள் எஜமானனும் எஜமானியும் என்பது அவர்களுடைய தீங்கற்ற வம்புப் பேச்சு.ஆனால், அழகும் தோற்றமும் நிறைந்த எஜமானியிடம், கண்ணியமும் மதிப்பும் பொருந்தியிருந்தன என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். மிருதுவாகவும் இனிமையாகவும் அந்த எஜமானி பேசுகிறாள் என்பதை அவர்கள் கொண்டாடினார்கள். சந்தானம் அவளிடம் காட்டும் அன்பு தகுதியானது என்பதை அவர்கள் லவலேசமும்தயக்கமில்லாமல் ஏற்றுக் கொண்டார்கள். கிராமத்திலேயேமற்றப் பெண்கள் கண்டு அஞ்சும் ஆறுமுக வேளாளனுடைய தமகைகூட பாப்பாவை, "ஐயர் வீட்டு அம்மாள்" என்று பேசவாரம்பித்தும் தர்க்கம், விவாதம் எதுவுமின்றி மற்றவர்களும் அவள் கொடுத்த அடைமொழியை அப்படியே உபயோகிக்கத்தொடங்கி விட்டார்கள். சிலர் மட்டும் அவசரத்தினாலோ அறியாமையினாலோ, 'பாப்பாத்தி அம்மா' என்று குறிப்பிட்டார்கள். அவர்களுடைய எண்ணத்திலே குறும்புத்தனம் இல்லை: மனசிலே கீழ்த்தரமான உணர்ச்சியில்லை. வெகுளித்தனமும் மதிப்புமே நிறைந்திருந்தன அவர்கள் உள்ளத்தில்.

பாப்பா தன் நிலையில் ஏற்பட்டுள்ள இந்த மாறுதலைத் தன் புத்தி வன்மையால் அறிந்தேயிருந்தாள். கிராமத்துப் பெண்களிடம் இரண்டறக் கலந்து வேற்றுமை பாராட்டாது பழகவேண்டும் என்பதே அவளுடைய ஆசை. ஆனால் அவள் என்ன தான் முயன்றாலும் அவளுடைய அந்தஸ்து அவர்களை அருகில் நெருங்க விடவில்லை.

புதுப் பங்களாவில் அவள் ஆனந்தமாகப் பொழுதைக் கழிக்க அவளுக்கு எவ்வளவோ வசதிகள் இருந்தன. அவளுடைய சொந்தக் குடிசையிலும் அவள் வெளியில் தலை காட்டாமல் அடைபட்டுத்தானே கிடந்தாள்? இங்கு அதைவிடச் சௌகரியமாகக்கூட இருக்கலாமே என்று சந்தானம் சொல்வதுண்டு. ஆயினும் பாப்பாவுக்கு இது கட்டிப்போட்டது போலிருந்தது. சதா தன் அருகில் சந்தானம் இருந்தால் தேவலை போலிருந்தது. அவனுடைய வெளி விவகாரங்களைக் கேட்டுத் தெரிந்துகொண்டு அவனுக்கு உபயோகமாக இருக்கமாட்டோமா என்று இருந்தது. சந்தானம் வெளியில் கிளம்புகிறான் என்றால், அவள் அடம் பிடிக்கும் பச்சைக் குழந்தையைப்போல, "ஊஹூம். அதற்குள் அவசரமென்ன? கொஞ்ச நேரம் கழித்துத்தான் போங்களேன்" என்று வழியை மறித்தாள்.

சந்தானம் சிரித்துக்கொண்டே, "சிவநகரத்தில் அந்த இருட்டுக் குடிசையின் வெளியில் தலைகாட்டாமல் இருந்தாலும் இருப்பாய். இங்கு இருப்பதுமட்டும் உனக்குத் தனிமை



யாகத் தோன்றுகிறதாக்கும். அப்படித்தானே?" என்று சொல்வான்.

"அங்கே சாயங்காலம் எப்பொழுது ஆகும்? உங்களை எப்பொழுது பார்ப்பேன் என்று எண்ணிக்கொண்டிருப்பதிலேயே எனக்குப் பொழுது போய்விடும். அந்தத் துடிப்பில் ஓர் இன்பமும் நிறைந்திருக்கும். மேலும் அங்கே ஏதாவது என் கையில் அகப்பட்ட வீட்டுவேலைகளை, அல்லது பனியன் துண்டு போடும் வேலைகளைச் செய்வேன். இங்கே நான் அப்படி இருக்க முடிகிறதா? மேஜைமேல் தூசி படிந்திருக்கிறதே என்று நான் தட்டப் போனால் அஞ்சலை வந்து கையைப் பிடித்துக்கொண்டு; "நீ போ அம்மா அந்தண்டே: என்று என்னை விரட்டிவிட்டுத் தான் தட்ட வந்துவிடுவாள். குளிக்கும்போது துணிகளைப் பிழிய நினைத்தால் செல்லா அதைப் பிடுங்கிக்கொண்டு விடுகிறாள். இது என்ன பிழைப்பு?" என்பாள் பாப்பா.

அவளுடைய மனநிலையைப் புரிந்துகொண்டு சந்தானம் ஊர் அக்கப்போர்களையெல்லாம் அவளிடம் பேசிக் கொண்டிருப்பான். ஒவ்வொன்றையும் கொஞ்சம் கொஞ்சமாக அவளுக்குப் புரியும்படிச் சொல்லிக் கொடுப்பேன். அவனோடு பேசும் வரையில் எல்லாம் அவளுக்குப் புரிந்ததுபோலிருக்கும். ஆனால் அவன் வெளியில் சென்றுவிட்டாலோ எல்லாம் அவனுடனேயே மறந்து போய் விடும். அவன் திரும்பி வந்து, "முன்பு சொன்னேனே ஞாபகமிருக்கிறதா?" என்று ஆரம்பித்தால் அவள் திணறிப்போய் விடுவாள். வெட்கம் அவளைச் சூழ்ந்து கொள்ளும். சந்தானத்தினுடைய வேகத்தோடு தன்னால் எந்தக் காலத்திலும் செல்லமுடியாது என்றசிறுமை அவளைக் கவ்விக்கொள்ளும். அதே வேதனை– சந்தானம் மறுபடியும் தன்னைத் தனியே விட்டுவிட்டுப் போய்விடப் போகிறானே என்ற வேதனை– அவளை அச்சுறுத்தும். "அது சரி இனி மேல் வெளியில் இன்றைக்குப் போக வேண்டாமே:" என்று ஆசையோடு கேட்பாள்.

"போகவேண்டாம். ஆனால் ஆட்கள் கூலி வாங்கும்போது தகராறு செய்தால் நானே போகும்படி இருக்கும்" என்பான் சந்தானம்.

அப்பொழுது பாப்பாவுக்கு வரும் கோபம் அந்த ஆட்கள் மீது செல்கிறதா அல்லது சந்தானத்தின் மீது செல்கிறதா என்பதே தெரியாது. அந்தக் கோபம் கடைசியில் அவளுக்குத் தன் மீதே ஏற்பட்டாலும் ஏற்படும்–

இந்த ஜுரம் அவளுடைய சிறு பிள்ளைத் தனத்தினால் ஏற்பட்டதென்றே சந்தானம் கருதினான். இங்கே வருவதற்கு முதல் நாள் நடந்தது அந்தச் சிறு பிள்ளைத்தனம் வெளிப்பட்ட சம்பவம்.

பாப்பா புதிதாக வந்திருந்த நாய்க் குட்டி ஒன்றைத் தூக்கி வைத்துக் கொண்டு மேல் மாடியில் நின்று கொண்டிருந்தாள். அந்தி மயங்கும் நேரம். காற்று ஜிலு ஜிலுவென்று வீசிக்கொண்டிருந்தது. எதிரே ராஜன் வாய்க்காலில் வயலில் வேலை செய்து விட்டு வந்த பெண்களும், கிராமத்து குடியானவப் பெண்களும் சிரிப்பும்கொம்மாளமுமாய் அட்டகாஸத்துடன் நீராடிக் கொண்டிருந்த காட்சி அவள் கண்களில் தென்பட்டது. ஒருத்தி புடவையைப்பக்கத்து நொச்சுப் புதரிலுள்ள செடியில் கட்டி விட்டு மறு தலைப்பை உடம்புடன் சுற்றிக் கொண்டு நின்றிருந்தாள்.

பாப்பாவுக்கு சிவ நகரத்துக் குளத்திலும், முள்ளி யாற்றிலும் கல்யாணியின் துணையுடன் போய் ஆனந்தமாய் நீராடிவிட்டு வரும் இனிய ஞாபகங்கள் வந்துவிட்டன. தண்ணீரை ஒருத்தியின் முகத்தில் மற்றவள் வாரியடிப்பதும், தலையை நனைத்துக் கொள்ளாமல் இருப்பதற்கு ஒருத்தி தவியாகத் தவிப்பதும், உடலோடுஒட்டிக்கொள்ளும்புடவைத் தலைப்பைப் பார்த்துவிட்டுக் கல்யாணி சிரிப்பதும்,"இதற்கு சிரிப்பு என்னடியம்மா?" என்று பாப்பாஅதற்குகோபித்துக் கொள்வதும், கல்யாணி விழிகளை உருட்டி,"அதோ பாரடி. திரும்பி. என்னைக் கோபித்துக் கொள்கிறாய் ரொம்ப இவள் மாதிரி:" என்பதும், அங்கே தற்செயலாக அல்லது வேண்டும் என்றே வந்த சந்தானம் நிற்பதும், அதைக் கண்டும் பாப்பா வெட்கத்தினால் உடலை ஒளித்துக் கொள்ளத் துடிப்பதும்– ஆகா; அந்தக் காலம் இனி எங்கே வரப் போகிறது என்று தோன்றிற்று பாப்பாவுக்கு.

"அடி அஞ்சலை: நாம் போய் இந்த நாய்க் குட்டியை ராஜன் வாய்க்காலில் குளிப்பாட்டி இது தண்ணீரில் நீந்துகிறதா, பார்க்கலாமா?" என்று கூவினாள் பாப்பா.

அஞ்சலைக்கு ஒரு பக்கம் பயம். மற்றொரு பக்கம் அவள் ஆசையைக் கெடுப்பானேன் என்ற பரிதாபம். இருந்தாலும்



அவள், "ஐயாவுக்குத் தெரிஞ்சு என்னைப் புடிச்சு ஏதாலும் சொன்னாங்கன்னா என்னம்மா செய்யறது? உங்களைத் தான் வெந்நீரைத் தவிர கண்ட தண்ணியிலே குளிக்கப்படாது ன்னு... .. ." என்று பேசிக்கொண்டே போனாள்

"நான் எங்கேடி குளிக்கப் போகிறேன்? நாய்க் குட்டியைத் தானே குளிப்பாட்டப் போகிறோம்.."

"அப்படியானா போயிட்டுச் சீக்கிரமா வந்துடுவோம்" என்று இணங்கினாள் அஞ்சலை.

அவ்வளவு தான் காலில் பட்டு போன்ற செருப்பும் கையில் சங்கிலியில் பிணித்த நாய்க் குட்டியும் துணைக்கு அஞ்சலையுமாகச் சென்ற பாப்பாவைக் கவனித்த மற்ற ஊர்ப் பெண்கள் முகத்தில் புன்னகையுடன் மரியாதையாக ஒதுங்கிக் கொண்டு வழி விட்டார்கள். ராஜ ஸ்திரீ ஒருத்தியின் ஒயிலுடன் அவள் மிடுக்காக நடந்து சென்ற காட்சியைச் சந்தானமே கண்டிருந்தால் அவனே அவளுக்கு முன் நிலை கலங்கி நின்று போயிருப்பான். வாய்க்காலில் ஒரு சிறிய ஆறு போல் இருந்தது. தெளிந்த ஓட்டமும், வெப்பம் நிறைந்த தன்மையும் கொண்ட நீரின் பெருக்கு பாப்பாவின் மனசைக் கவர்ந்தது. அங்கே கார் கோட்டகத்துக்குப் போக வேண்டிய சிவப்பி நின்று கொண்டிருந்தாள். "இந்தா இந்த சங்கிலியைப் பிடித்துக் கொண்டிரு. ஒரே நிமிஷம்" என்று சொல்லிவிட்டு பாப்பா செருப்பைக் கழற்றி ஆல மரத்தடியில் போட்டாள். உடையைச் சரியாக இறுகக் கட்டிக் கொண்டாள். அஞ்சலியும், சிவப்பியும் என்ன சொல்லியும் கேளாமல் பாப்பா தண்ணீரில் இறங்கித் துளைய ஆரம்பித்து விட்டாள்.

வெகு நேரம் கழித்து அவள் கரையை நிமிர்ந்து பார்த்த போது அங்கே சந்தானம் ஆல மரத்து வேர் மீது கையைக் கன்னத்தில் வைத்துக் கொண்டு, 'சிவனே' என்று உட்கார்ந்திருந்தான். பாப்பா கூச்சல் போட்டுக் கொண்டே ஈரம் சொட்டச் சொட்ட அவனருகே ஓடி வந்தாள்.

அலை புரள்வது போன்ற தலை மயிரிலிருந்து கார் மேகம் பொத்துக் கொண்டு மழை பொழிவது போல ஜலம் சொட்டிக் கொண்டிருந்தது. "தண்ணீர் வெந்நீர் மாதிரி இருக்கிறது. இங்கே யார் வரப் போகிறார்கள்? நீங்கள் குளிக்கிறீர்களா? அடடா, என்ன ஜோராக இருக்கிறது, தெரியுமா?" என்று தன் கையிலிருந்து சொட்டிய ஜலத்தை அவன் மீது தெளித்தாள். அஞ்சலையும் சிவப்பியும் அவ்வப்போது மறைவில் எங்கேயோ நின்று கொண்டிருந்தார்கள்.

சந்தானம் கோபத்தையடக்கிக் கொண்டு, தன் மடியில் கிடந்த துண்டு ஒன்றை அவள் மீது விட்டெறிந்து, "உம், ஆகட்டும். தலையைத் துவட்டிக் கொள்." என்றன்.

பாப்பா முகத்தைச் சுருக்கிக் கொண்டு சிறு குழந்தையின் பிடிவாதத்துடன் தலையைப் பிழிந்து கொண்டாள். "உம்மென்று உட்கார்ந்திருந்தீர்களே. கோபமா?" என்று கொஞ்சினாள். அவன் பதில் பேசாமல் தன்னையே பார்ப்பதைக் கண்டு, "எனக்கு மட்டும் கோபித்துக் கொள்ளத் தெரியாதோ? அதோ முகத்தில் சிரிப்பு வருகிறது, வருகிறது, வந்து விட்டது. ஆ..... அதோ சிரிப்பு, சிரிப்பு" என்று அந்த வாய்க்கால் கரையே எதிரொலிக்கும்படி குழந்தையைப் போல கடகடவென்று சிரித்தாள்.

சந்தானம் எழுந்து, "சரி. கிளம்பு. குளிர் கண்டு விட்டது." என்று புறப்பட்டான். அவளும் பின் தொடர்ந்தாள்.

## 4

இரவு பத்து மணி இருக்கும். சந்தானம் கட்டிலுக்குப் பக்கத்திலேயே மனசில் திகிலும், படபடப்பும் மிஞ்ச ஒரு நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். கல்யாணி மூலம் சொல்லியனுப்பி சிவு மூலம் அருணாசலத்தை வரவழைத்து, சாயங்காலம் ஏழு மணிக்கு மேல் பாப்பாவைத் தன் வீட்டுக்கே கொண்டு வரும்படி செய்துவிட்டான். பாப்பாவின் கண்களில் ஜுரத்தினால் நெருப்புப் பொறி பறந்தது. கீழே காவேரியம்மாளுக்கு எல்லா விஷயங்களும் தெரிந்தும் அவள் மேலே வந்து பார்க்கவில்லை. ஆனால் சந்தானம் எட்டு மணி சமயத்தில் சாப்பிடக் கீழே சென்ற போது காவேரியம்மாள் கல்யாணியிடம் அவளுடைய உடல் நிலையைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தாள். "குளிர் நடுக்கல் இருந்தால் மலேரியா ஜுரமாக இருக்கும். கண்ட தண்ணீர் அவளுக்கு உடம்புக்கு ஒத்துக் கொண்டிருக்காது. வெறும் பார்லி கஞ்சியும், கொயினா மாத்திரையும் கொடுத்தால் சரியாகப் போய் விடும். " என்று சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்ட சந்தானத்துக்கு வெகு ஆறுதலாக இருந்தது. இந்தத் தாயின் விசித்திரமான சுபாவத்தை அவனால் புரிந்து கொள்ளவே முடியவில்லை. அவன் மனத்தில் நிலவிய உணர்ச்சிகளை அவள் வயிற்றில் பிறந்தும் தன்னால் ஊகித்தறிய முடியவில்லையே என்று அவன் எண்ணிக் கலங்கினான். தாயின் உயர்ந்த போக்கு அவனால் எட்டிப் பிடிக்கவே முடியாத பிரமிப்பாக இருந்தது.

அவன் வெட்கத்தை விட்டு, தலையை வேறு புறம் திரும்பிக் கொண்டு, "அம்மா உன் கையால் கொஞ்சம் பார்லி கஞ்சி போட்டுக் கொடுப்பாயா?" என்று கேட்டான்.

காவேரியம்மாள் உணர்ச்சி மிகுதியினால் பேசவே முடியவில்லை. அவள் கல்யாணியைப் பார்த்து, "எங்கேயும் இன்று





ஒரு நாளைக்குப் போய்விடாதே. கொஞ்சம் எனக்கு ஒத்தாசையாக இரு. நான் உன் அம்மாவுக்குச் சொல்லியனுப்புகிறேன்." என்றாள்.

சந்தானத்துக்கு இந்தப் பேச்சின் கருத்து தெளிவாகப் புரிந்தது. கல்யாணி கூட இல்லாவிட்டால் அவளால் ஒரு காரியமும் ஆகாது. கண்ணால் ஜலம் பெருக அவன் தாயின் காலில் விழுந்து, "அம்மா, அம்மா." என்று சின்னம் சிறு குழந்தையைப் போல காரணம் புரியாமல் தேம்பினான்.

பாப்பாவின் உடல் நிலையைக் கண்டு அழாமல் தாயின் இந்த விலை மதிப்பற்ற வாத்சல்யத்தின் முன் அழுவது அவனுக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது. மனத்தின் சுமையும் அழுக்கும் அந்தக் கண்ணீரில் கரைந்து ஓடுவது போல இருந்தது.

அதற்குள் லேடி டாக்டர் மிஸஸ் மேனோன் வந்தாள். பாப்பாவைப் பரிசோதித்தாள். ஜுரம் நூற்று மூன்று டிகிரி இருப்பதாகவும், ஆனால், பயம் ஒன்றும் இல்லையென்றும், சந்தானத்துக்குத் தேறுதல் சொல்லிவிட்டுப் போனாள்.

மிஸஸ் மேனனுக்குச் சந்தானத்திடம் மதிப்பு உண்டு. டாக்டர் மேனனும், சந்தானமும் கிளப்பில் சீட்டாட்டச் சிநேகிதர்கள். சந்தானம் அவர்கள் வீட்டுக்குப் போய் ஒரு தாம் டீ குடித்திருக்கிறான். சந்தானத்துக்கும், பாப்பாவுக்கும் உள்ள நட்பைப் பற்றி அந்த மேனன் தம்பதிகள் என்றும் குறைவாக எண்ணிப் பேசியதில்லை. அதற்கு மாறாக அவர்கள் அவனைத் தட்டிக் கொடுத்து, "போல்டு சாப்" என்று சொல்வார்கள்.

மிஸஸ் மேனன் தனியாகச் சந்தானத்தை அழைத்துச் சொல்லிவிட்டுப் போன ஒரு வார்த்தை தான் அவனை இரவு பத்து மணியாகியும் கவலையோடு விழித்திருக்கச் செய்தது. வாய்க்காலில் துளைந்ததும், இங்கு வந்து உடலைக் கவனித்துக் கொள்ளாமல் இருந்ததும், அவளுக்கு அதிர்ச்சியைக் கொடுத்துவிட்டதென்றும், இரண்டு மாதமாக அவள் கர்ப்பிணியாக இருந்திருக்க வேண்டுமென்றும், இப்போது அது வீணாகி விட்டதென்று, மிஸஸ் மேனன் அபிப்பிராயப் பட்டதாகத் தெரிகிறது.

பாப்பா உடலை முனகிக் கொண்டு முறித்துக் கொண்டாள். சந்தானம் ஒரு முறை அவள் நெற்றியைத் தடவிக் கொடுத்து விட்டு, "பாப்பா, பாப்பா?" என்று மெல்ல எழுப்பினான்.

"ஏன் தூங்கப் போகவில்லை?" என்று பொருள் படும்படி பாப்பா முனகினாள்.

"என்னைப் பற்றி என்ன? நீ கொஞ்சம் கஞ்சி சாப்பிடுகிறாயா?" என்றான் சந்தானம்.

'வேண்டாம்.' என்று தலையை அசைத்துவிட்டாள் பாப்பா. கண்ணை மூடிக்கொண்டே அவள் படுக்கையில் புரள முடியாமல் புரண்டு தவித்தாள். முக்கினாள் முனகினாள். சந்தானத்துக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவளை எழுப்பி அவளிடம் பேச்சுக் கொடுக்கவும் பயமாக இருந்தது. அவளுக்கு உதவியாக இருப்பது போய் உபத்திரவமாக இருப்பதாக ஆகிவிடும் என்று தான் பயமாக இருந்தது.

எப்படியோ மெல்ல இரவு கழிந்துவிட்டால் தேவலை போல இருந்தது. அவனுக்குத் தூக்கம் கொள்ளவேயில்லை. சிவு மறுபடியும் வருவதாகச் சொல்லிவிட்டுப் போனபடி திரும்பி ஏன் வரவில்லையென்று தன்னையே ஒரு முறை கேட்டுக் கொண்டான். மெதுவாகக் கீழேயிறங்கி வந்தான். அங்கே விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. கல்யாணி பெஞ்சு மேல் தலையணையை வைத்துக் கொண்டு துயில் புரிந்தாள். ஆனால், அவளுக்குப் பக்கத்தில்—

காவேரியம்மாள் உட்கார்ந்து கொண்டு தான் இருந்தாள். அவனைப் போலவே அவளும் கண்ணை மூடவில்லை. எதிரேயிருந்த சந்தானத்தின் போட்டோவையும், அவன் தந்தையின் போட்டோவையும் அவள் மாறி மாறிப் பார்த்துக் கொண்டேயிருந்தாள். அந்தத் தாயின் பவித்திரமான உள்ளத்திலே புரண்ட எண்ணத்தின் சாயலைக் கூட அவனால் உணர முடியாது. அந்த எண்ணம் வியாபிக்கும் மண்டலத்தைக் கற்பனையால் கூட அவனால் எட்டிப் பிடிக்க முடியாது. அவன் துளியும் சந்தடி செய்யாமல் அவளுடைய சிந்தனைக்குச் சிறிதும் பங்கம் நேராதபடி வாசல் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தான். அவன் கால்கள் சிவுவின் வீட்டை நோக்கி நடந்தன.

"என்னடா சந்தானம்? என்ன நடந்தது?" என்று கவலையோடு விசாரித்தான் சிவு.

"ஒன்றுமில்லை ஆனால், எனக்குத் தூக்கமே வரவில்லை. அதனால் தான் சும்மா இப்படி வந்தேன்." என்றான் சந்தானம்.

"நான் வரட்டுமா?"

"சரி. வா." என்று சந்தானம் சிவுவைக் கூடவே துணைக்கு அழைத்துக் கொண்டு சென்றான்.

(தொடரும்)



# பெண் உள்ளம்

ப.ரா.

அந்தக் குழந்தையின் நோய் மிக முற்றிய நிலையிலிருந்தது. அது பிழைத்துக் கொள்ளுமென்ற நம்பிக்கை எனக்கேற்படவில்லை. உரிய காலத்திலேயே கவனித்துச் சிகிச்சை தொடங்கியிருக்க வேண்டும். எவ்வளவு திறமையும் அனுபவமும் வாய்ந்த வைத்தியனாலும், இம்மாதிரி கடைசி நிமிஷத்தில் செய்யக்கூடியதென்ன இருக்கிறது? ஆயினும், கவலை தோய்ந்த முகத்துடன் என் பதிலை எதிர்பார்த்து நின்ற குழந்தையின் தாயிடம் உண்மையை உரைக்க நான் தயங்கினேன்.

அவள் குடியானவர் வகுப்பைச் சேர்ந்தவளெனத் தோன்றியது. வயது சுமார் இருபத்தைந்து இருக்கலாம். அவளது ஆடைகள் வறுமை நிலையைக் காட்டின. அந்தக் குடிசையோ மனிதர் வாழ்வதற்குத் தகுதியற்ற இடம். பஞ்சமும் நோயும் துயரமும் அச் சூழ் நிலையிலே விரவிக் கிடந்தன. என் உள்ளம் நெகிழ்ந்து விட்டது. ஆனாலும் உணர்ச்சிகளை மறைக்க முயன்றேன்.

"சொல்லுங்க சாமி, குளந்தை பிளைச்சுக்கிடுமா?" என்று ஈனஸ்வரத்தில் கேட்டாள் மறுபடியும். இம்முறை என்னால் மௌனம் சாதிக்க முடியவில்லை. "இப்போது ஒன்றும் சொல்ல முடியாதம்மா. ஏதோ என்னாலானவரையில் முயற்சிக்கிறேன். மற்றப்படி ஆண்டவன் சித்தம். என்று சொல்லி விட்டு மருந்துப் பெட்டியைக் கையிலெடுத்துக் கொண்டேன். அவள் முகத்தைப் பார்க்க எனக்குத் தைரியமில்லை. வாயிலை நோக்கி நடந்த என்னை மௌனமாகப் பின் தொடர்ந்தாள்.

வாயிற்படி இறங்கும் தருணத்தில் எங்கிருந்தோ வந்து எதிரில் நின்றான் ஒரு முரடன். உருண்டு திரண்டு இரும்பில் வார்த்தது போன்ற உடலும் மீசை கிருதாவுமாக அவனளித்த பயங்கரத் தோற்றம் என்னை ஒரு கலக்குக் கலக்கி விட்டது. "யாரையா நீ" என்று இடி முழக்கம் தோற்கும்படியான குரலில் கேட்டான். எனக்கு ஒன்றும் பதில் சொல்லத் தோன்றவில்லை.

நல்ல காலமாக அந்தப் பெண் குறுக்கிட்டாள். "இந்தாங்க, ஏன் இப்படிச் சத்தம் போடறீங்க? கொஞ்சம் மெதுவாப் பேசக் கூடாதா? ... அவருதான் வைத்தியரு. நம்ம குளந்தையைப் பார்க்க நான் போயி அளைச்சுக்கிட்டு வந்தேன்" என்றாள். அது அவள் கணவனாயிருக்க வேண்டுமென ஊகித்தேன்.

அவளை அப்படியே எரித்து விடுவது போல் ஒரு பார்வை பார்த்தான் அவன். அந்தப் பார்வையிலேயே அச்சத்தால் அவள் உடல் சிலிர்ப்பது என் கவனத்துக்குத் தப்பவில்லை. "ஏண்டி களுதே உன் புள்ளைக்கு வைத்தியம் வேறே கேடா? மருந்திலே கொட்டக் காசும் பணமும் இங்கே இறைஞ்சு கிடக்குதுன்னு நெனச்சுக்கிட்டாயோ?" என்று அவள் மேல் பாய்ந்தான். எனக்கு என்னவோ போலிருந்தது.

"ஐயோ இன்னும் ஏன் அப்படிச் சொல்றீங்க காலத்துலே கவனிக்காமத் தானே குளந்தைக்கு ஒடம்பு இம்புட்டு மோசமாப் போச்சு, கண்ணுக்குக் கண்ணா வச்சு வளர்த்த ஒரே குழந்தையாச்சுதே ...." என்று கண்ணீர் பெருகக் கதறினாள் அவள். அவன் மனம் கரையவில்லை.

"ஆனா என்ன? செத்து ஒளியட்டுமே அந்தச் சனியன் ...." என்றான் வாய் கூசாமல். 'ஓர் தகப்பனது வார்த்தைகளா இவை? என்று நான் கொதித்தேன். ஆனால் அவனோ மூர்க்கன், அவனிடம் சண்டையிட்டுப் பயனிராது. நயமாகத் தான் போக வேண்டும். அவனை நோக்கிச் சொன்னேன். "இதோ பாரப்பா. நீ ஆத்திரப் படாதே. பணம் செலவழிக்க உனக்கு வசதியில்லாவிட்டால் நான் இலவசமாக வைத்தியம் செய்கிறேன். குழந்தையை இது வரை நீ கவனிக்காததே தவறு. பணமும் காசும் பெரிதல்ல. இப்போது அதற்கு நோய் முற்றியிருக்கிறது. அதன் தாயார் கலங்குவதைப் பார்க்கச் சகிக்கவில்லை. அவள் பொருட்டாகவாவது ஒரு கடைசி முயற்சி செய்து பார்ப்பதில் தவறொன்றுமிராது.

அவன் என்னைப் பார்த்த பார்வையில் வியப்பும் சந்தேகமும் நிரம்பியிருந்தன. 'எக்கேடாவது கெட்டுப் போங்கள்' என்பது போல் வெகு அலக்ஷியமாக வீட்டினுள் சென்றான். நான் மேலே நடந்தேன், பலவித உணர்ச்சிகளால் என் மனம் கொந்தளித்தது. அக் குழந்தையின் உடல் நிலை இவ்வளவு தூரம் முற்றிச் சீர்கேடுற அத் தந்தையின் அசிரத்தை தான் காரணம். அதன் தாயை மட்டும் குறை கூறுதல் பிசகு. எனினும் என்னாலானவரை அவர்களுக்கு உதவும் உறுதி குன்றவில்லை.

வீதி முனை திரும்பும் சமயத்தில் 'சாமி' என்று யாரோ அழைப்பது கேட்டது. திரும்பிப் பார்த்தேன். அந்தப் பெண் — அவள் பெயர் செல்லம்மா — என்னைப் பின் தொடர்ந்து வந்திருந்தாள்.

"ஒரே வார்த்தை பேசிட்டுப் போயிடறேன் சாமி. நீங்க என் புருசன் சொன்னது ஒண்ணையும் மனசுலே வெச்சுக்கிட வேண்டாம். இதோ — இதை வாங்கிக்குங்க. எப்படியாச்சும் குளந்தையைப் பிளைக்க வையுங்க. உங்களுக்குக் கோடிப் புண்ணியமுண்டு ...." என்று கம்மிய குரலில் கெஞ்சினாள். நீட்டிய அவள் உள்ளங்கையில் பளபளவென்று மின்னியது ஓர் தங்கச் சவரன்.

நான் அதிசயித்தேன். ஏழ்மையின் உருவமாகத் தோன்றிய அவளிடமிருந்து இதை நான் எதிர்பார்க்கவில்லை. தன் அருமைக் குழந்தையின் உயிரைக் காப்பதற்கென்று எங்கிருந்து, எப்படி அந்தத் தங்கக் காசைக் கொண்டு வந்தாளோ, ஆனால் அதைப் பெற்றுக் கொள்ளுதல் பாபம் என்பது மட்டும் என் மனம் அறிந்ததே. "எனக்கு இது தேவையில்லை அம்மா, நீயே வைத்துக்கொள். நான் சாயங்காலம் வந்து குழந்தையைப் பார்க்கிறேன். கவலைப்படாதே என்று சொல்லி அவளை விட்டுக்கனுப்பினேன்.

நான் கொடுத்த வாக்கில் பிறழவில்லை. அடுத்து வந்த சில தினங்கள் அரும் பாடு பட்டேன். பயனற்று விட்டது. விதியை என்னால் மாற்ற முடியுமா? எனது முயற்சிகளையெல்லாம் மீறி, நான்காம் நாள் காலை அக் குழந்தையின் ஜீவன் பிரிந்து விட்டது. அதன் தாய் நெஞ்சு வெடிக்கக் கதறியழுதாள். அவளுக்கு ஆறுதல் கூறித் தேற்றும் சக்தி எனக்கில்லை. அந்தக் கடமையையேனும் அவள் கணவன் மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால் ....? அதிகம் சொல்வானேன்? அன்பும் இரக்கமும் அவன் இரத்தத்திலில்லாத குணங்கள். உணர்ச்சியே

அற்றவனாக ஒரு மூலையில் உட்கொண்டிருந்தான்.

அதற்குப் பிறகு நெடுநாள் வரையில் அச் சதிபதிகளைச் சந்திக்க எனக்குச் சந்தர்ப்பம் ஏற்படாதிருந்தது.

* * *

அன்றொரு நாள் மாலை ஊருக்கு வெளியே சென்று உலாவிவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தேன். வானில் கருமேகங்கள் சூழ்ந்து பலத்த மழைபெய்வதற்கான அறிகுறிகள் தோன்றின. சில நிமிஷங்களுக்கெல்லாம் ஓரிரண்டு மழைத்துளிகளும் என் மீது விழுந்தன. மழை வலுக்கு முன்பு வீடு சேர்ந்துவிடலாமென்று, வழக்கமான வழியை விட்டு சந்து பொந்துகளில் நுழைந்து நடந்தேன்.

நானோ வயதானவன், வேகமாய் நெடுந்தூரம் நடக்கும் சக்தியை இழந்து விட்ட என் கால்கள் தளர்ச்சியுற்றன. இருள் வேறு கவிந்துகொண்டமையால் வழிகண்டு செல்லுதல் கடினமாயிற்று. மழைபெய்து ஓயும் வரை எங்காவது ஒதுங்கியிருந்து விட்டுப் பின் மெல்ல வீடு சேருதலே உசிதமெனப் பட்டது எனக்கு.

நகரின் ஏழை ஜனங்கள் வசிக்கும் பகுதி அது. நாற்புறமும் கூரை வேய்ந்த மண்குடிசைகள்—தெருவில் ஒரு ஒழுங்கின்றி அமைந்திருந்தன. அதற்கேற்றபடி அசுத்தமும் துர்நாற்றமும். வேறு சமயமாயிருந்தால் அம்மாதிரியான சூழ்நிலையில் ஒதுங்க என் மனம் இடங்கொடுத்திருக்காது. ஆனால் இப்போது வேறு வழியில்லை. சற்று விலகித் தனியாய் அமைந்திருந்த ஓர் குடிசையை நோக்கி நடந்தேன். மழையும் சோவென்று கொட்ட ஆரம்பித்தது.

அதனுள்ளிருந்து ஒரு சிறு விளக்கினொளி வந்து கொண்டிருந்தது. வெளியே யாரும் காணப்படவில்லை. திண்ணை மீதேறி ஒழுகாத ஓரமாய்ப் பார்த்து உட்கார்ந்து கொண்டேன். கூடிய வரையில் யாருடைய கவனத்திலும் படாமலிருந்து விட்டுச் சென்றுவிடலாம் என்பது என் அபிப்ராயம்.

உள்ளே யாரோ 'லொக் லொக்' கென்று இருமுவது கேட்டது. இருமலென்றால் சாதாரணமான ரகத்தைச் சேர்ந்ததல்ல அது. பழகிய என் காதுகளுக்கு அது ஏதோ ஒரு பயங்கர வியாதியின் சின்னமென்பது தெரிந்தது. போகுமிடமெல்லாம் வறுமையையும் பிணியையும் துன்பத்தையும்கண்டு பழகியிருந்தாலும் என் இதயம் இன்னும் கல்லாகி விடவில்லை. இக் குடிசையில் எந்த ஆத்மா நோயால் அல்லலுறுகின்றதோவெனப் பரிதபித்தேன்.

திடீரென ஒரு பெண் குரல் பேசியதும் என் செவியில் புகுந்தது. "ஐயோ இப்படி ஓயாமல் இருமி இருமி உயிரை விடுகிறீர்களே. வைத்தியமும் செய்து கொள்ள மறுக்கிறீர்கள். நீங்கள் கஷ்டப்படுவதைக் கண்ணால் பார்த்துக் கொண்டிருப்பதைவிட நான்இப்போதே செத்துத் தொலைந்து விட்டாலும் நல்லது..... "அக் குரலில் மிகுந்த துக்கம் தொனித்தது. ஒரு பெண்ணுள்ளத்தின் தவிப்பைப் பிரதிபலித்தது.

"இந்தாடி. தர்ம ஆஸ்பத்திரியில் வாங்கிக் குடிக்கும் மருந்துத் தண்ணீரே எனக்குப் போதும். பணம் வேறு கொடுத்து என்னால் வைத்தியம் பார்த்துக் கொள்ள முடியாது. என்னைச் சும்மா உபத்திரவம் செய்யாதே, போ" இது அவள் கணவனாக இருக்க வேண்டும். அவன் பேசி முடித்ததும் மீண்டும் அந்த இருமல் வந்து பிடித்துக் கொண்டது. அடுத்த ஒரு நிமிஷ காலத்திற்கு நெஞ்சு பிளந்து விடும்படி இருமித் தீர்த்தான். அவர்கள் சம்பாஷணை தொடரவில்லையெனினும் நிலைமையை நான் நன்கு புரிந்து கொண்டு விட்டேன். அந் நோயாளிக்கு உதவும் அவா இயல்பாகவே என் மனதிலெழுந்தது.

மழை நின்றிருக்கவில்லை.'யாரம்மா உள்ளே ...?' என்று கூப்பிட்டேன். மறு கணம் கையில் அச் சிறு மண்ணெண்ணெய் விளக்குடன் ஒரு பெண் வெளியே வந்தாள். அவள் முகம் சற்றுப் பரிச்சியமானது போல் தோன்றியது. எனக்கு நன்கு நினைவு வருமுன் அவள் என்னை அடையாளம் தெரிந்து கொண்டு விட்டாள். வியப்பினால் மலர்ந்த கண்களுடன், "வைத்தியர் சாமி, நீங்களா ....?" என்றாள்.

"ஓ. செல்லம்மாவா? இப்போது இந்த வீட்டிலா இருக்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"ஆமாம் சாமி. அந்தக் குழந்தை தவறிப் போன பிறகு இங்கே வந்து விட்டோம்.... நீங்கள் எப்படி....?"

"நானா? தற்செயலாய் மழைக்கு ஒதுங்கினேன். நீ இங்கு இருப்பாய் என்று நினைக்கவில்லை. அதிருக்கட்டும். உன் புருஷனுக்கு உடம்பு சரியில்லை என்று தோன்றுகிறதே. அவன் தானா இப்படி இருமிக் கொண்டிருக்கிறான்?"

"அவர் தான் சாமி..." என்று சிறிது தயங்கினாள். உண்மை நிலையை உரைப்பதற்கு அவள் கூசுவது தெரிந்தது. ஆனால், அவள் சொல்லத் துணிவு கொள்ளும் வரை நான் காத்திருக்கவில்லை. "செல்லம்மா. நீங்களிருவரும் சற்று முன் பேசிக் கொண்டிருந்ததெல்லாம் என் காதில் விழுந்தது. நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே. அவன் பணச் செலவு ஒன்றைத் தானே பார்க்கிறான்? அதற்குத் தேவை இல்லாதபடி நான் வைத்தியம் செய்கிறேன். நீ உள்ளே போய் இதில் அவனுக்கு இஷ்டமுண்டா என்று தெரிந்து கொண்டு வா." என்றேன்.

அவள் அதிசயித்து நின்றாள். உதவிதங்களைத் தேடிக் கொண்டு வருமென எதிர் பார்க்கவில்லை போலும். ஒரு நிமிஷ மௌனத்திற்குப் பின் சொன்னாள்:– "சாமி, அந்த ஆண்டவனாகப் பார்த்துத் தான் உங்களை இங்கே அனுப்பி இருக்கிறார். நீங்கள் மகாராசனாயிருக்க வேண்டும். அவள் குரலில் நன்றி உணர்ச்சி ததும்பி நின்றது. அவ்வேழை உள்ளத்தின் ஆசியொன்றே என்னை வாழ்விக்கப் போதும்.

உள்ளே கணவனை 'தாஜா' பண்ணிக் கொண்டிருந்தாள் செல்லம்மா. முதலில் அவன் மசிவதாயில்லை. "அவருக்கு என்ன நம்மிடத்தில் அவ்வளவு அக்கரை? அந்தக் குழந்தைக்கு வைத்தியம் செய்து அதை மேலுலகத்திற்கு அனுப்பிவிட்டார். இப்போது என்னைக் கவனித்துக் கொள்ள வந்திருக்கிறார் போலிருக்கிறது. சரி, போகட்டும். இப்போது பணம் வேண்டாமென்கிறார். பின்னால் ரூபாய் கேட்க மாட்டாரென்பது என்ன நிச்சயம்?" என்று சொல்லிக் கொண்டிருந்தான் அந்த முரடன். இவ்வார்த்தைகள் என் உள்ளத்தைப் புண்படுத்தின. ஆனாலும் தன் மூடக் கணவன் பால் பேரன்பு வைத்திருந்த செல்லம்மாவின் பொருட்டு அவற்றைப் பொறுத்துக் கொண்டேன்.

கால் மணி நேரங் கழித்து அவள் வெளியே வந்த போது, அம்முகத்தில் வெற்றியின் குறி காணப்பட்டது. அதற்காக எத்தனை வசை மொழிகளை ஏற்றுக் கொண்டிருப்பாள். எவ்வளவு கண்ணீர் சிந்தியிருப்பாள்.

அவளோடு உள்ளே சென்று முத்தையனின் உடல் நிலையைப் பரிசோதித்தேன். நான் எதிர் பார்த்தபடியே ஓரேயடியாய் இளைத்து எலும்புக் கூடாகியிருந்தான் அவன். முன்பிருந்த அச்சந்தரும் உடல் வலிவு எங்கோ மறைந்து விட்டிருந்தது. வெளித் தோற்றம் எவ்வளவு பரிதாபகரமாக மாறியிருந்தாலும், அவனது மூர்க்கத் தனம் நீங்கவில்லை. என் கேள்விகளுக்கெல்லாம் வெகு அசிரத்தையாய் பதிலளித்தான். அவனைப் பீடித்திருந்தது கடுமையான க்ஷய ரோகம். திறமை வாய்ந்த, நீடித்த சிகித்சையினால் தான் குணப்படுத்த முடியும்.

நான் கொடுத்த வாக்கில் தவறுவதில்லை. இம்முறையும் பெரு முயற்சி எடுத்துக் கொண்டேன். பணச் செலவை பொருட்படுத்தாது, விலையுயர்ந்த பொருள்களைக் கொண்டு சிறந்த முறையில் மருந்துகளைத் தயாரித்து வழங்கினேன். இறைவனதருளும், செல்லம்மாவின் ஆர்வம் மிக்க சிசுருஷைகளும் முத்தையனை நமன் வாயிலிருந்து காப்பாற்றின. அவன் நிலைமையில் நாளுக்கு நாள் அபிவிருத்தி ஏற்பட்டு வந்தது.





அவள் கல்வியறிவில்லாத ஏழைப் பெண். தன் உணர்ச்சிகளை வார்த்தைகளால் வர்ணிக்கும் திறமையில்லாவிடினும், நன்றி ததும்பும் பார்வையொன்றின் மூலமே தெரியப்படுத்தினாள். முன்பு அவள் குழந்தையின் உயிரை என்னால் காப்பாற்றித் தர முடியாது போயிற்று. இப்போது அவள் கணவனையாவது பிழைக்க வைத்தோமேயென்று நான்திருப்தி கொண்டேன்.

இரண்டு மூன்று மாதங்கள் கடந்தன. முத்தையன் கிட்டத்தட்டப் பழைய நிலையை எய்தி விட்டான். நான்செல்லம்மாவிடம் சொன்னேன்:– இனி உன் புருஷன் விஷயமாய்க் கவலைப்பட வேண்டியதொன்றுமில்லை. இன்னும் ஒரு மாதத்திற்கான மருந்து தருகிறேன். அதை ஒழுங்காகக் கொடுத்து வந்தாலே போதும். நான் இங்கே அடிக்கடி வந்து கொண்டிருக்கும் தேவை கிடையாது. ஏதாவது அவசரமாய் வேண்டுமானால் மட்டும் என்னை வந்து பார்க்க யோசனை செய்யாதே. மேலும் அவனுக்கு நோய் திரும்பி விடாமல் ஜாக்கிரதையாய்க் கவனித்துக் கொள். நான் போய் வருகிறேன்."

அவள் கண்களில் நீர் துளிர்த்தது. "சாமி. நீங்கள் எங்களுக்குக் குல தெய்வம் மாதிரி. எல்லா வைத்தியர்களும் உங்களைப் போல தங்கமான மனசு படைத்தவர்களாயிருந்து விட்டால் ஜனங்களெல்லாம் எவ்வளவோ சந்தோஷமாயிருப்பார்கள் சாமி." என்று உணர்ச்சியுடன் மொழிந்தாள்.

"செல்லம்மா. வைத்தியத் தொழில் புண்ணியமானது. விதியுடன் போட்டி போடுவதல்ல அதன் நோக்கம். வைத்தியனின் திறமையும், மருந்தின் சக்தியும் மட்டும் நோயை நீக்கி உயிரைக் காத்து விட முடியாது. எதற்கும் மேலாக நிற்பது இறைவன் ஆணை– அவன் அருள். அவனுக்குத் தான் நீ நன்றி செலுத்த வேண்டும். நான் செய்தது என்ன? ஒரு ஏழைக்கு உதவி என் கடமையைச் செலுத்தினேன். அவ்வளவு தானே! என்றேன், உணர்ச்சிவசமாகியிருந்த அவள் பதில் சொல்லவில்லை. இதைப் புரிந்து கொண்டிருப்பாளோ என்று கூட எனக்குச் சந்தேகமாய்த்தான் இருந்தது. . .

என் மனைவி குழந்தைகள் ஊருக்குப் போயிருந்தமையால் வீட்டில் நான் மட்டும் தனியாய் இருந்தேன். அன்று இரவு மணி பன்னிரண்டாகியும் எனக்குத்தூக்கம்பிடிக்கவில்லை படுக்கையில் புரண்டு கொண்டிருந்தேன். மனம் பல் வேறு திசைகளிலும் பாய்ந்தது. இடையிடையே செல்லம்மாவையும், அவள் கணவனையும் பற்றிய நினைவுகளும் எழுந்தன. அவர்களை நான் பார்த்து ஒரு வாரமாகிவிட்டது.

திடீரென்று வாசற் கதவை யாரோ தட்ட ஆரம்பித்தார்கள். "சாமி...... வைத்தியர் சாமி...." என்று இடையிடையே கூவியது ஒரு பெண் குரல். அதில் நடுக்கம் தோன்றியது. வைத்தியனானபடியால் இம்மாதிரி அகாலத்தில் அபயக் குரல் கிளம்புவது எனக்குச் சகஜமாகிவிட்டிருந்தது. தாமதியாமல் எழுந்து சென்று கதவைத் திறந்தேன். மங்கலான நிலவொளியில் அங்கு நின்ற செல்லம்மாவைக் கண்டதும் தான் எனக்குத் திகைப்பேற்பட்டது.

அதற்குள் அவள் கணவனுக்கு என்ன நேர்ந்துவிட்டது? இந்த நடுநிசியில் ஏன் இப்படி ஓடி வந்திருக்கிறாள்?

"சாமி, தயவு பண்ணுங்கள். அவர் மரணாவஸ்தையில் இருக்கிறார். நீங்கள் தான் காப்பாற்ற வேண்டும். வாருங்கள் சீக்கிரம்." என்று பதறினாள்.

"ஏன்? அது எப்படி நேர்ந்தது?"

"மேல் பூச்சுக்கென்று நீங்கள் கொடுத்திருந்த விஷ மருந்தைத் தவறுதலாகக் குடித்துவிட்டார் சாமி...."

இதற்கு மேல் விவரங்களைக் கேட்டுக் கொண்டு தாமதிப்பது மதியீனம். மருந்துப் பெட்டியைக் கையிலெடுத்துக் கொண்டேன். இருவரும் ஓட்டமும் நடையுமாக அவள் குடிசையையடைந்தோம்.

அங்கே நிலைமை மிஞ்சிப் போயிருந்தது. முத்தையன் கண்கள் மேலே சொருகிக் கொண்டு மல்லாந்து கிடந்தான். சுவாசமும், நாடித் துடிப்பும் அனேகமாக நின்றுவிட்டன. நீலம் பூத்துப் போன அவன் உடலைக் கண்டு செல்லம்மா கோவெனக் கதறினாள். மேல் பூச்சு மருந்து கடுமையான விஷம் என்று நான் பல முறை எச்சரித்திருந்தும் கூட. இத்தவறு எப்படி நேர்ந்தது என்று எனக்குப் புரியவில்லை. என்னாலான சிகித்சைகளையெல்லாம் செய்து பார்த்தேன். ஒன்றும் பலன் காணோம். பல காலம் பாடுபட்டுப் பல் வேறு மருந்துகள் காப்பாற்றிய அவன் உயிரை

ஒரே தினம் ஒரே வேளையில் பிரித்து விட்டது.

இப்படிப்பட்ட மரணத்திற்காகத் தான் இறைவன் அவளை முதன் முறை உயிர் பிழைக்க வைத்தானோ? விதி எனிப்படி விளையாடுகிறது?

செல்லம்மாவின் கதறலைக் கேட்டுக் கூட்டம் கூடியது. போலீஸும் வந்தது. நிலைமையை விவரித்து வாக்கு மூலம் கொடுத்தேன் நான். பின் அதிகாரிகளின் அனுமதி பெற்று முத்தையனின் பிரேதத்தை அடக்கம் செய்வித்தேன். அடுத்த சில நாட்கள் அப் பேதைப் பெண்ணுக்கு ஆறுதல் சொல்வதற்கே சரியாகிவிட்டன. இறகொடிந்த பக்ஷி போல் தவித்தாள் அவள். அவளது துயரத்தை ஆற்றுவது எளிதாயில்லை.

"செல்லம்மா. நான் உயிருடனிருக்கும் வரை நீ அனாதையல்ல. என் மனைவி குழந்தைகளுக்கு உதவியாக எங்கள் வீட்டில் வந்து இரு." என்று அழைத்தேன். அவள் இசைந்தாள். ஊரிலிருந்த குடும்பத்தை உடனே வரவழைத்தேன். செல்லம்மாவின் உழைப்பும், விஸ்வாச குணமும்என் மனைவியையும் வசீகரிக்கத் தவறவில்லை. ஆயினும் நாங்கள் எவ்வளவு முயற்சித்தும் அவள் உள்ளத்தில் குடி கொண்டிருந்த சோகத்தை அறவே நீக்க முடியவில்லை. அவளது உடலும் அதற்கேற்ப இளைத்துக் கொண்டே வந்தது.

மன நோய்க்கு மருந்துண்டா? அந் நோய் செல்லம்மாவை மரணப் படுக்கையில் கிடத்தியது. எங்கள் அன்பில் திளைத்துக் கஷ்டமின்றி வாழ்வதை விட, தன் முரட்டுக் கணவனின் கொடுமையிலேயே, காலம் தள்ளுவதை அவள் அதிகம் விரும்பினாள் போலும்.

ஆனால், மரணத்தை எதிர் பார்த்துக் கிடந்த அவள் தன் அந்தரங்கத்தை வெளியிட்ட போது, அன்பின் தெய்வீகத் தன்மை இத்தகையதென்று என்னால் சிறிது அறிய முடிந்தது. அவள் கணவன் முத்தையன் உண்மையில் யாரென்றறிந்ததும் திடுக்கிட்டோம். அன்று அவன் விஷ மருந்தைக் குடித்து இறக்கு முன்பு தான் தன் கைகளாலேயே மனைவியைக் கொல்ல முயற்சித்திருந்தான். அதையும் பொருட்படுத்தாமல் அவனுயிரைக் காக்க விரைந்தாள் அவ்வுத்தமி.

"சாமி, அவர் போய்விட்டார். சீக்கிரத்தில் நானும் இறந்துவிடுவேன். என் வாழ்க்கை ரகசியங்களை உங்களிடம் சொல்வதில் இனி மேல் தவறொன்றுமில்லை. அடுத்த ஜன்மத்திலாவது நீங்கள் காட்டிய அன்பிற்கு எங்கள் நன்றிக் கடனைச் செலுத்திவிடுகிறோம். இது வரை உண்மையை ஒளித்து வைத்ததற்காக என் மீது வெறுப்புக் கொள்ளாதீர்கள். என்னை மன்னியுங்கள்...." என்று கெஞ்சியவாறு தன் கதையை ஆரம்பித்தாள் அவள்.

செல்லம்மா கூறியதன் சாரம் இது தான்.

மூன்று வருஷங்களுக்கு முன்பு வரையில் பிரசித்தி பெற்றிருந்த சாமிக் கண்ணுவின் கொள்ளைக் கூட்டத்தினரைப் போலீஸார் பிடித்த பொழுது தலைவன் சாமிக் கண்ணு மட்டும் தப்பியோடிவிட்டான். அன்று தலை மறைந்தவன் இன்னும் அகப்படவில்லை. அவனைக் கண்டு பிடிக்கும் நம்பிக்கையைப் போலீஸார் துறந்து வெகு காலமாயிற்று. இது எனக்குத் தெரிந்த விவரம். ஆனால், அதே சாமிக் கண்ணு தான் செல்லம்மாவின் புருஷன் என்றறிந்து அதிர்ச்சியுற்றேன். ஆம். அவனே 'முத்தையன்' என்ற பெயருடன் இவ்வூரில் தங்கியிருந்தான்.

அவன் நிகழ்த்திய கொள்ளைகளும், செய்த கொலைகளும் கணக்கற்றவை. எமனைப் போலவே அட்டகாஸம் செய்து வந்தவன் திடீரென்று ஒடுங்கி விட்டான். தீய வழியில் சேர்த்த பொன்னையும், நகைகளையும் எடுத்துக் கொண்டு தன் மனைவியுடனும், ஒரே குழந்தையுடனும் இங்கே பதுங்கி விட்டான்.

ஆயிரமானாலும் கணவன்– செல்லம்மா அவனைக் கட்டிக் காத்தாள். சதா போலீஸ் பயத்திலேயே வாழ்க்கை நடந்து வந்தது. அவன் வீட்டை விட்டு வெளியே கிளம்ப வேண்டிய தேவையேயில்லாதவாறு எல்லா காரியங்களையும் தானே செய்தாள். சில மாதங்களுக்கெல்லாம் அவர்களது குழந்தைக்கு நோய் கண்டது.

'கொள்ளைத் தொழில்' நடத்தி வந்த காலத்திலெல்லாம் பணத்தைப் பணமென்று பாராது வாரியிறைத்து வந்த சாமிக் கண்ணுவிடம் இப்போது ஒரு பெரிய மாறுதல் தோன்றிவிட்டது. பாழும் கருமித் தனம் எப்படியோ அவனிடம் குடி புகுந்தது. குழந்தையின் வைத்தியத்துக்குக் கூடச் செலவழிக்க அவனுக்கு மனதில்லை. செல்லம்மா எவ்வளவோ மன்றாடியும் பயன் காணாமல் திகைத்தாள். குழந்தை நோய் முற்றிச் சாகும் நிலைக்கு வந்தது. அதற்கு மேலும் அவளால் பொறுக்கக் கூடவில்லை. எது வந்தாலும் சரியென்று என்னை அழைத்து வந்தாள். கணவனறியாமல் அப் 'பொக்கிஷத்தி'லிருந்து எடுத்துவிட்ட ஒரு தங்கச் சவரன் வைத்தியச் செலவுக்கு உதவுமென நம்பினாள். நான் அதைப் பெற்றுக் கொள்ளவில்லை. சவரன் மீண்டும் 'பொக்கிஷத்தி'லேயே போய்ச் சேர்ந்தது.

பின் சாமிக் கண்ணு நோயுற்றான். 'வைத்தியம் வேண்டாம்' என்ற பழைய பல்லவியைப் பாடினான். விதி என்னை மீண்டும் அங்கே கொண்டு சேர்த்தது. தக்க சிகிச்சையினால் குணமடைந்து வந்த அவன் மனதில் இன்னொரு திட்டம் உருவாகிக் கொண்டிருந்தது. கடைசி நாள் வரை அதைத் தன் மனைவியிடம் கூட வெளியிடவில்லை அவன்.

அன்றிரவு செல்லம்மாவை அருகில் அழைத்து, "இதா பார். எனக்கு உடம்பு அனேகமாகக் குணமாகிவிட்டது. நான் இரண்டு நாளில் சிங்கப்பூருக்குக் கப்பல் ஏறப் போகிறேன்." என்றான். அவள் திடுக்கிட்டாள்.

"ஏன் இப்பொழுது போக வேண்டும்? இன்னும் சில மாதங்கள் கழித்துப் போவோமே. போலீஸ்காரர்கள் சந்தேகித்து விட்டால் கஷ்டமாயிற்றே" என்றாள்.

"உனக்கென்ன தெரியும் நான் படும் அவஸ்தை? சிறையிலிருந்தால் கூட எவ்வளவோ சந்தோஷமாயிருக்கலாம். இங்கே சதா காலமும் நடுங்கிக் கொண்டு வீட்டினுள் அடைபட்டிருக்கும் வாழ்க்கை எனக்கு அலுத்து விட்டது. சிங்கப்பூர் போய்ச் சேர்ந்து விட்டேனானால் அப்புறம் எதையும் லட்சியம் செய்ய வேண்டியதில்லை. நான் போகத் தான் போகிறேன்." என்று சாமிக் கண்ணு பிடிவாதமாய்ச் சொன்னான்.

"சரி. அப்படியே செய்யலாம். ஆனால் 'போகிறேன், போகிறேன்'. என்கிறீர்களே. என்னையும் அழைத்துப் போவதில்லையா?" என்று கவலையுடன் கேட்டாள் அவள்.

"உன்னையா? எதற்கு? சனியனை மடியில் கட்டிக் கொண்டு போகிற மாதிரி போகுமிடத்துக்கெல்லாம் உன்னை வேறு இழுத்துக் கொண்டு போக வேண்டுமா? நீ வரக் கூடாது. இங்கேயே இரு." என்று இரைச்சல் போட்டான்.

அவள் ஒப்பவில்லை. "இத்தனை வருஷமாய் இன்பத்திலும், துன்பத்திலும் உங்களைப் பிரியாமல் இருந்த என்னை இப்படிக் கேட்பாரின்றி விட்டுச் செல்கிறீர்களே. இது நியாயமா? நான் பின்னே தங்க மாட்டேன். சாகும் வரையில் உங்களை விடவும் மாட்டேன்." என்று கண்ணீர் வடித்தாள்.


ஆபீஸ் ஸ்தாபிதம் : 1924.

பிரபல ஜோதிஷர்

★



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாதவாரி எழுத ரூ 5 ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ 2 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை

★

பண்டித காழியூர்

ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,

தபோ நிதி,

தியாகராய நகர், மதராஸ் 17.

தபால் பெட்டி 1417




அம்மூர்க்கனின் சினம் மூண்டது. தன் விருப்பத்திற்கு மாறாக எதுவும் நடக்கப் பொறுக்காதவன் அவன். "சாகும் வரை விட மாட்டேனென்றா சொன்னாய்? இதோ– செத்துத் தொலை உன்னை விட்டுச் சென்றால் ஒரு வேளை போலீஸுக்கு அறிவித்து எனக்கு உபத்திரவம் ஏற்படுத்தினாலும் ஏற்படுத்துவாய். எத்தனையோ பேரைக் கொன்ற இந்தக் கைகளால் இன்று உன்னையும் தீர்த்துவிடுகிறேன்." என்று உறுமிக் கொண்டே அவள் மீது பாய்ந்து, தன் இரும்புக் கரங்களால் அவள் குரல் வளையை நெறிக்கத் தொடங்கினான்.

செல்லம்மா திமிறிக் கொள்ளவில்லை. அப்படிச் செய்ய அவளால் முடிந்துமிருக்காது. ஏதோ பேச முயற்சித்தாள். அவன் பிடி குரல் கிளம்ப அனுமதிக்கவில்லை. இன்னும் இறுகியது. கால்கள் தள்ளாட, கண்கள் மேலே செருகிக் கொள்ள அவள் உணர்விழந்து தரையில் சாய்ந்தாள்

"சாகிறோம்" என்ற உணர்வோடு தான் விழுந்தாள். ஆனால், சிறிது நேரங் கழித்து, மூடியிருந்த அவளது கண்ணிமைகள் தாமாகத் திறந்து கொண்டன. பிரக்ஞை திரும்பியது. கண்டதெல்லாம் கனவோ என்றெண்ணினாள். ஆனால், கழுத்தில் தோன்றிய வலி கனவல்லவென்று நிரூபித்தது. ஒரு மூலையில் சாமிக் கண்ணு உட்கார்ந்து கொண்டு தன் பொக்கிஷத்தைச் சரி பார்த்துக் கொண்டிருந்தான். தன் இரகசியத்தை நன்கறிந்த ஒரே ஆத்மாவையும் மேலே அனுப்பிவிட்டதிருப்தி அவனுள்ளத்தில் நிலவியது போலும்.

எல்லாம் சரியாக இருக்கிறது. இந்தப் பாழும் பிணத்தை யாரும் பார்க்காதபடி எங்காவதொரு கிணற்றில் எறிந்து விட்டோமானால், வேலை தீர்ந்தது. அடுத்த கப்பலிலேயே. ... . என்று அவன் தனக்குள் பேசிக் கொள்வது அந்தப் பிணத்தின் காதில் விழுந்தது. அவ்வளவு முரட்டுத் தனமான பிடியிலிருந்து தன்னுயிரைக் காப்பிற்றிய ஈசுவர சக்தியை வியந்தாள் செல்லம்மா

சாமிக் கண்ணு எழுந்து வந்தான். பொக்கிஷத்தை மறுபடியும் அம்மிக்கடியில் புதைந்துவிட்டுத் தன் படுக்கையை நோக்கி நடந்தான். செல்லம்மாவைப் பிராண பயம் கௌவிக் கொண்டது. அவள் மரணத்தை ஏற்கெனவே ருசி பார்த்து விட்டாள். தான் இன்னும் உயிருடனிருப்பதைக் கண்டால் அவன் சும்மா விட மாட்டானென்று அவளுக்குத் தெரியும். கண்களை இறுக மூடிக் கொண்டு அசையாது படுத்து விட்டாள்.

அந்த ஒரே நிமிஷத்தில் தான் விதி விளையாடி விட்டது.

செல்லம்மா கண் விழித்துப் பார்த்த போது சாமிக் கண்ணு விஷ மருந்தைத் தன் வாயில் கடகடவென்று ஊற்றிக் கொண்டிருந்தான். அவனது பரபரப்பே அவனுக்கு எமனாகி விட்டது. அதற்கு மேல் தாமதியாமல் அலறியெழுந்தாள் செல்லம்மா. அவன் மலைத்துப் போனான். தான் அருந்தியது விஷமென்றறிந்ததும், அவனது சப்த நாடியும் ஒடுங்கி விட்டது. அவள் அந் நிலையிலும் கணவனைக் காக்கவே எண்ணி என்னிடம் ஓடி வந்தாள். ஆனால், நமன் காத்திருக்கவில்லை. சிங்கப்பூர் போகு முன்பே சாமிக் கண்ணுவைத் தன்னிடம் அழைத்துக் கொண்டான். அவன் தேடிய பொக்கிஷம் இன்னும் அங்கேயே புதையுண்டு கிடக்கிறது.

கதையைக் கேட்ட பின் எங்களால் கண்ணீர் விடாதிருக்க முடியவில்லை. ஓர் வன்மனக் கள்வனின் மனைவி இத்தகைய உத்தமியாயிருந்திருக்கிறாள். அந்த மேன்மை பெண்ணுள்ளத்திற்குத் தான் உண்டு போலும்.

செல்லம்மா மறைந்து பல வருஷங்களாகியும் எங்கள் உள்ளத்தில் அவளது நினைவுகள் மறையவில்லை.


தந்தி விலாசம் "கோகுல்" ஸ்தாபிதம் 1909 டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

மதராஸ் ஸோல் ஏஜெண்டுகள்:— (கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

சுராஜ் ஏஜன்ஸீஸ், B. Balapattabi Chettiyar,

157 லாயிட்ஸ் ரோட், 246, Vysyal St.

மதராஸ். COIMBATORE.




# நமது பம்பாய்க் கடிதம்

★

மத்திய சென்ஸார் போர்டின் தலைவர், ஸ்ரீ. கிளிப்போர்டு அகர்வாலா, சென்றவாரம் இவ்வூர் 'ரோடரி கிளப்'' பின் ஆதரவில் ''சினிமாவும், சென்ஸாரும்'' என்பதைப்பற்றி ஒரு அழகிய சொற்பொழிவைச் செய்தார். இச்சொற்பொழிவுக்கு, அநேக பத்திராதிபர்களும், பிரமுகர்களும் வந்திருந்தனர்.

சினிமா விசிறிகளும் சினிமாக்கலைத் தொண்டர்களும் மற்ற அறிஞர்களும் எல்லோரும் ஒன்று சேர்ந்து, அவரவர்கள் ஊரில் 'சினிமாவுக்குச் செல்பவர்களின் சங்கம்'' என்று ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தி, எல்லா சினிமாப்படங்களின் குற்றம் குறைகளையும் அவைகளின் உன்னத மதிப்புகளையும் அடிக்கடி அவர்கள் எடுத்துரைக்க வேண்டுமென்றும், இப்படிச் செய்தால் மத்திய தணிக்கை போர்டாருக்கும் சற்று உதவியாயிருக்குமென்றும் ஸ்ரீ அகர்வாலா சொன்னார் இப்பேர்ப்பட்ட சங்கங்கள் அமெரிக்காவிலும். இங்கிலாந்திலும் மிகவும் முக்கியமான சேவை செய்துகொண்டு வருகின்றனவென்றும் அவர் தெரிவித்தார்.

பம்பாயிலும், மேற்சொன்ன சங்கம் இருக்கிறதென்றும் ஆனால் அது சுறுசுறுப்பாக வேலை செய்துவரவில்லையென்றும் இச்சங்கத்தில் படமுதலாளிகளும், டைரக்டர்களும் மெம்பர்களாகச் சேரவேண்டுமென்றும்தன் அபிப்பிராயத்தைத்தெரிவித்தார் ஸ்ரீ அகர்வாலா. 'சினிமாவுக்குச் செல்பவர்களின் சங்கம்' அடிக்கடி ஜனங்களுக்கு எப்பேர்ப்பட்ட படங்கள் அதிகமாக பிடித்திருக்கின்றன வென்று டைரக்டர்களுக்கு தெரிவிக்க வேண்டுமென்றும் ஆலோசனை கூறினார்.



'பாதாள பைரவியில்' ஒரு வசீகர நடனம்





'அவாஸ்' என்ற ஹிந்திப்படத்தில் அழகி ரஜ்னி கதாநாயகியாகத் தோன்றுகிறார்.

கடைசியாக ஸ்ரீ அகர்வாலா சொன்னார்: ''மத்திய தணிக்கை போர்டாரைப்பற்றி. மற்ற அனேக ஜனங்கள். ஓரே புகார் செய்துவருகிறார்கள் நாங்கள் செய்யும் காரியங்களை நன்ருக சிலர் கவனிப்பதேயில்லை மேற்சொல்லியபடி 'சினிமாவுக்குச் செல்பவர்களின் சங்கம்'' என்று ஒன்று இருந்தால். இச்சங்கத்தின் மூலம். தணிக்கை போர்டாருக்கும், படங்களின் நிலைமை, விருத்தியடைவதற்கும் உபகாரமாயிக்குமென்று அறிவித்தார்

முதன் முதலாக. ஸ்ரீ அகர்வாலா, பம்பாயிலும், கல்கத்தாவிலும், சென்னையிலும் நடந்து வரும் சென்ஸார் போர்டின் நடவடிக்கைகளைப் பற்றிச் சொன்னார்.

கல்கத்தாவிலிருந்துஇப்பொழுதெல்லாம் எல்லா நக்ஷத்திரங்களும், டைரக்டர்களும் பம்பாய்க்கு வர ஆரம்பித்துவிட்டார்கள். டைரக்டர்களில், ஸ்ரீ. பிபூதிமித்ரா ஹெமன்குப்தா, பனி முஜூம்தார் ஹிரேன் போஸ் முதலியவர்கள் ஏற்கனவேயே இங்கு வந்துவிட்டார்கள் இப்பொழுது. ஸ்ரீ ஹேம் சந்திரர் கூடிய சீக்கிரத்தில் எம் அண்டு டி. ஸ்டுடியோவுக்கு ஒரு படத்தை டைரக்ட் செய்ய ஒப்புக்கொண்டிருக்கிறார், சங்கீத டைரக்டர்களில் ஸ்ரீ ஹெமந்த குமார் முகர்ஜியும், பங்கஜமல்லிக்கும் கூடிய சீக்கிரத்தில் இங்கு வரப்போகிறார்கள், கல்கத்தாவிலிருந்து ஏற்கனவேயே இங்கு வந்திருக்கும் நக்ஷத்திரங்களில், சுமித்ரா மீராமிஸ்ரா பால்மொஹேந்திரா, முதலியவர்களைச் சொல்ல வேண்டும். நியு தியேட்டர்ஸாரின் சோடாபாய் என்னும் படத்தில் வெகு வெற்றிகரமாக நடித்த மாஸ்டர் ஷகூர் என்னும் ஒரு சிறுவன் இப்பொழுதுதான் இங்கு வந்து. மூன்ஷி புரொடக்ஷன்ஸாரின் ''காப்ளா'' என்னும் படத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிருன்.

—ஸ்ரீ மா. ராமச்சந்திரன்,

## காதல்

பிரபல சினிமா நடிகை பானுமதியின் சொந்தப்படமான காதல்'' ஷூட்டிங் வாஹினி ஸ்டுடியோவில் ஆரம்பமாகியிருக்கிறது இந்தப் படத்தை பானுமதியின் கணவர் ராமகிருஷ்ணா டைரக்ட் செய்கிறார் கமால் கோஷ் இப்படத்தின் ஒளிப்பதிவிலும், சுப்பராமன் சங்கீத டைரக்ஷனிலும் ஈடுபட்டிருக்கிறார்கள்.

## அம்மா

எர்ணாகுளம் அஸோஸியேடட் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பான ''அம்மா'' என்ற படத்தின் ஷூட்டிங் இப்பொழுது வாஹினி ஸ்டுடியோவில் நடந்து வருகிறது. இரண்டு ஸெட்டுகள் ஷூட்டிங் ஆகி முடிந்துவிட்டன. இந்தப்படம் மலையாளம். தமிழ் ஆகிய இரு பாஷைகளில் தயாரிக்கப்படுகிறது. இதில் திக்குரிஸி சுகுமாரன் நாயர், பி. எஸ் சரோஜா லலிதா, சாந்தகுமாரி, முதலிய பிரபல நக்ஷத்திரங்கள் தோன்றுகிறார்கள் இப்படத்தின் மலையாள வசனத்தை ஆலப்புழை காலேஜ் புரொபஸர் ஆர் எஸ். குருப் அவர்களும் தமிழ் வசனத்தை சாண்டில்யனும் எழுதியிருக்கிறார்கள்.



ஆயிஞ பிக்சர்ஸ் ''குமாஸ்தா''வில்ஹஸன் பானு

# ஏக்கத்திற்கு மாற்று

மகரம்

"ராமு. நீ இன்னமும் இப்படிப் பிடிவாதம் பிடிப்பது நன்றாக இல்லை. 'சரி' என்று ஒரு வார்த்தை சொல்லிவிடு. பேஷான பெண்ணாகப் பார்த்துக் கொண்டு வருகிறேன்" என்றார் ராமுவின் தகப்பனார் ரங்கஸ்வாமி.

ராமு பதிலே பேசவில்லை, "உனக்கு இருக்கிற துக்கம் எங்களுக்கு இல்லையா? 'உம்' என்று ஒரு முறை தலையை ஆட்டேன். வைதேகியைவிட என்று சொன்னால் உன்மனசு கஷ்டப் படும், வைதேகிக்குச்சமமான வேறு ஒரு பெண்ணைக் கண்டு பிடிக்கிறேன்" என்றாள் ராமுவின் தாயார் அம்புஜம்மாள்.

"ஊஹூம்" என்று தீர்மானமாகத் தலையை அசைத்து விட்டான் ராமு. அண்ணா "வைதேகி மன்னியைப் போல் இன்னொருத்தி கிடைப்பது அருமைதான். அதற்காக இன்னொரு பெண்ணுக்கு வைதேகியைப்போல் நடந்து கொள்ளும் சந்தர்ப்பத்தை அளிக்காமல் இருக்கலாமா?" என்று கேட்டாள் ராமுவின் தங்கை வனஜா.

இத்தனைபேர்களுடைய கேள்விகளுக்கும் அந்த ஒரே பல்லவியைப் பாடி ஒரே பதில் சொல்லி விட்டான் ராமு. "இதோ பாருங்கள். 'வைதேகி' என்று அழைத்த இந்த வாயால் வேறொரு பெயரைச் சொல்லி நான் அழைக்க மாட்டேன். இது நிச்சயம்," என்றான் அவன். அவனுடைய தொண்டை கரகரத்தது. கண்களிலும் கரகரவென்று நீர் சொரிந்தது.

அந்த துக்க சம்பவம் நடந்து மூன்று வருஷங்கள் ஆகின்றன. அந்த மகத்தான பேரிடி ராமுவின் இன்ப மயமான மாளிகையைத் தாக்கி அதைத் தவிடு பொடியாக்கி மூன்று வருஷங்களாகின்றன. அழகுக்கும், அன்புக்கும், அறிவுக்கும், அரவணைப்புக்கும் நிலைக்களமாய் விளங்கி வந்த அவன் மனைவி வைதேகி திடீரென்று ஒரு நாள் மார்பு அடைப்பினால் மாண்டு போய் மூன்று வருஷங்களாகின்றன. ராமு ஏக்கமே வடிவாய், விசனமே உருவாய், துயரமே சொரூபமாய் நின்று போய், மனம் ஒடிந்து, உணர்வு உட்கார்ந்து, உற்சாகம் படுத்துப் போய் மூன்று வருஷங்களாகின்றன. யார் எப்பொழுது அவனைப் பார்த்து, "நீ மறுபடியும் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாதா? எத்தனையோ பேர்கள் முதல் மனைவியை இழந்த மறு மாதமே மறு மணம் செய்துகொண்டுமறுவருஷத்திற்குள்ஒரு குழந்தைக்குத் தகப்பனார் ஆவதில்லையா?" என்று கேட்டால், "வேண்டாம் ஸார். வைதேகியை வாய் குளிர "வைதேகி." என்று அழைத்த வாயால் வேறொரு பெயரை, வேறொரு பெண்ணின் பெயரை நான் எப்படி மனம் ஒப்பி, அழைப்பேன்? என் மனதுக்கு உவப்பில்லாத விஷயம் அது. விட்டுத் தள்ளுங்கள்," என்பான்.

நான் கூடக் கேட்பேன் அவனை, நண்பன்என்ற ஹோதாவில். "ராமு. வீட்டில் அரிக்கேன் விளக்கு அணைந்துவிட்டால் குத்து விளக்கை ஏற்றிக் குறையைத் தீர்த்துக் கொள்ளுவது இல்லையா? மின்சார விளக்கின் ஒரு பல்ப் அவிந்து விட்டால் உடனே புது பல்ப் ஒன்றை மாட்டி வீட்டில் பிரகாசத்தைப் பரப்புவது இல்லையா?" என்று.

"எனக்கு இனி வெளிச்சம், ஒளி, பிரகாசம் ஒன்றுமே கிடையாதுடா. என்னைச் சுற்றி நீண்ட ஆழ்ந்த கனத்த அந்தகாரம் தான், மீளாத இருள், மாளாத இருள் தான் எனக்கு லபித்திருப்பது" என்று சொல்லி விட்டு, அவனுடைய காபிரைட்டான "வைதேகி" என்று அழைத்த வாயால் வேறொரு பெண்ணின் பெயரை நான் எப்படி அழைப்பேன்" என்ற முத்திரை முத்தாய்ப்புடன் தன்னுடைய பிடிவாதத்தை நிலை நாட்டுவான்.

எப்பொழுதுமே இந்த ராமுவின் பிடிவாத குணம் எங்களுக்கெல்லாம்பெரிய தீராத பிரச்னையாக இருந்து வந்திருக்கிறது.ராமு அடிக்கடி எல்லோருக்கும் தனது பிடிவாத குணத்தினால் கவலையை அளித்து வந்திருக்கிறான். தனது இருபத்தைந்தாவது வயது வரையில் 'கல்யாணம் வேண்டாம்' என்ற பல்லவியைப் பாடிக் கொண்டிருந்தான். பெற்றோர்கள் பார்த்து சிபாரிசு செய்த பெண்களையும் வேண்டாம் என்று தட்டிக் கழித்தான். தானே சுயமாக ஒரு பெண்ணைக் காதலித்து 'கட்டினால் இவள் கழுத்தில் தான் கட்டுவேன்,' என்று ஒற்றைக் காலால் நின்றானா என்றால் அதுவும் இல்லை. தனக்காகவும் தெரியாமல் பிறர் சொல்லையும் கேளாத பிரகிருதிகள் சிலர் உண்டே அவர்கள் கோஷ்டியில் அவன் சேர்ந்து கொண்டு தானும் காதலிக்காமல் மற்றவர்கள் தேடித் தந்த பெண்ணையும் மணம் புரியாமல் சிறிது காலம் கடத்தினான். கடைசியில் கதைகளில் வருமே அந்த மாதிரி அவனுடைய தாயார் மிகவும் நோய் வாய்ப்பட்டிருந்த ஒரு சமயம் அழுது "ஒரே பிள்ளையான உன்னை மணக் கோலத்தில் கண்டால் தான் என் நெஞ்சு வேகும்." என்று கெஞ்சி எப்படியோ ராமுவின் மனத்தை மாற்றிவிட்டாள். ராமுவின் மன மாற்றம் ஏற்பட்ட சமயமும், பெரிய சர்க்கார் ஆபீஸரான ஸ்ரீ கோவிந்த ராஜனுக்கு சென்னைக்கு உத்தியோக மாற்றம் ஆன சமயமும் ஒன்றாக அமைந்து போகவே, ராமுவின் உறவினர்களுக்கும், என் போன்ற நண்பர்களுக்கும் அது வரை இருந்தஏமாற்றம் நீங்க வழி பிறந்தது. இப்படி வழி பிறந்த மறு வாரமே தையும் பிறந்தது இரு குடும்பங்களுக்கும் கல்யாணப் பேச்சு வார்த்தை நடத்த சௌகரியமாகவிருந்தது. அதே மாதத்தில் ஸ்ரீ கோவிந்தராஜனின் ஒரே பெண் குமாரி வைதேகியானவள் ஸ்ரீமதி வைதேகி ராமஸ்வாமியாக மாறினாள்.

இதெல்லாம் பழைய கதை. ஆறு வருஷங்களுக்கு முன்பு நடந்தது. கல்யாணம் நடந்து மூன்று வருஷங்கள் ராமுவும், வைதேகியும் நகமும் சதையும் போலவும், மணியும் அதன் நாதமும் போலவும் ஆதர்ச தம்பதியாக இல்லறம் நடத்தி வந்தார்கள். வைதேகியின் அழகிலும், அன்பிலும் அவன் தன்னையே மறந்திருந்தான். "கல்யாணம் வேண்டாம்," என்று பிடிவாதம் பிடித்த அந்த மாஜி பிரும்மசாரியா இவன் என்று அவன் நண்பர்கள் ஆச்சரியப்படும் விதத்தில் இலட்சியக் கணவனாக மாறிப் போய்விட்டான் ராமு. பார்த்தவர்கள் எல்லாம், "ராமஸ்வாமிக்கேற்ற வைதேகி, வைதேகிக்கேற்ற ராமஸ்வாமி," என்று போற்றும்படி அவர்கள் நடந்து கொண்டார்கள். "இந்த ராமனுக்கென்று இந்த வைதேகி படைக்கப்பட்டிருக்கும் போது, முன்பு உங்களால் சிபாரிசு செய்யப்பட்ட வஸந்தாக்களையும், பிரேமாக்களையும், கோகிலாக்களையும்..... நான் எப்படி கல்யாணம் செய்து கொண்டிருக்க முடியும்? இந்த வைதேகியை வாய் குளிர மனம் குளிர அழைத்து இவளிடம் அன்பையோ அல்லது ஆகாரத்தையோ 'தேகி' என்று கேட்பதற்கிருக்க வேறு ஒரு பெண் எப்படி என்னை மணந்திருக்க முடியும்?" என்று வைதேகியின்





முன்னிலையில் தனனுடைய உறவினர்கள் நண்பர்களிடம் ஒரு உணர்ச்சி பிரசங்கம் புரிவான் ராமு. வைதேகிக்கோ பெருமை தாங்காது. "கதை எழுத வேண்டியவர் இவர். பாவம் ஒரு கம்பெனியில் போய் மாட்டிக் கொண்டிருக்கிறார்." என்பாள். திருஷ்டி பட்டு விடும் என்பார்களே அந்த மாதிரி குதூகலமான கோலாகலமான வாழ்க்கையை அவர்கள் நடத்தி வந்தார்கள்.

கடைசியில் திருஷ்டிதான் பட்டு விட்டதோ என்னமோ அந்தப் பேரிடி ராமுவின் தலையில் ஒருநாள் விழுந்தே விட்டது. வருஷக்கணக்கில் டி.பியாலோ, அல்லது மாதக்கணக்கில் மலேரியாவிலோ, அல்லது வாரக்கணக்கில் ஏதாவது விஷ ஜுரத்தாலோ அடிபட்டபின் முடிவு ஏற்பட்டிருந்தால் மனம் சிறிது சிறிதாக வரப் போவதை எதிர் பார்த்துச் சற்று திடப்பட்டிருக்கும். மேகமே இல்லாத நீல வானிலிருந்து மாயமாய் ஒரு இடி விழும் என்பார்களே அப்படித்தான் இருந்தது அந்தச் சம்பவம். பத்து நிமிஷங்களுக்கு முன் பேசிக்கொண்டும், சிரித்து விளையாடிக் கொண்டும் இருந்த வைதேகி திடீரென்று மயங்கிக் கீழே சாய்ந்தாள். சிலர் கோடையின் வெப்பம் தாங்காததால் நேர்ந்தது என்றார்கள். சிலர் மூளைக்கு அதிக ரத்தம் சென்றதால் ரத்தக் குழாய் வெடித்ததே காரணம் என்றார்கள். ராமுவின் துரதிர்ஷ்டம் தான் காரணம் என்பதுதான் உண்மை. சிரிப்பின் சுவடு கடைவாயின் கோணத்தில் பிரகாசித்துக் கொண்டே இருக்க வைதேகி கண்ணை மூடியவள் திறக்கவேயில்லை. மூன்று வருஷ காலக் பேரின்ப சாம்ராஜ்யத்தில் நிலைத்த ராமு இன்று அந்த நிலை மாறி, துயர சாம்ராஜ்யத்தின் எல்லையைக் கண்டு விட்டான்.

காலனுடைய அஜாக்கிரதையினால் (இயற்கைக்கும் தர்மத்திற்கும் விரோதமான அகால மரணங்களை வேறு எப்படித்தான் அழைப்பது?) மக்களிடையே ஏற்படும் மன வியாதிகளுக்குக் காலம் என்பதே சிறந்த மருந்து என்று அனுபவஸ்தர்கள் சொல்லக் கேட்டு இருக்கிறோம். காலம் செல்லச் செல்ல உடம்பில் ஏற்பட்ட தீ வடு கூட மாறாமல் இருக்க எத்தனையோ பேர்கள் விஷயத்தில், அவர்கள் மனத்தில் மரண தேவன் பதித்த சோகத்தின் வடுக்கள்மாத்திரம் மாயமாய் மறைந்து போய் இருப்பதை நாம் பார்த்து வந்திருக்கிறோம். அந்த விதிக்கு விலக்குபோலவே ராமு அமைந்திருந்ததுதான் ராமுவின் பெற்றோருக்கும் என்னைப் போன்ற நண்பர் களுக்கும் பெரும் புதிராக இருந்தது.

"Laodema died, Helen died, l eda, the wife of Jupiter went before'

என்று லாண்டார் எழுதி இருந்த வரிகளை நான் ஆறுதலாக அவனுக்கு எடுத்துக் காட்டுவேன். தாக்ஷாயணியை யாககுண்டத்தில் இழந்த பரமசிவன் பார்வதியை மணந்து கொள்ள வில்லையா என்றும் கேட்டேன். "கிட்டு நீ சொல்லுகிறவர்கள் எல்லாம் ராமன் இல்லையே, ராமனுக்குவைதேகியைவிட்டால் வேறுயார்? இனி இந்த வாயினால் வைதேகி என்று ஒரு பெண்ணை அழைத்துவிட்டு வேறு ஒரு பெண்ணை மனைவியின் ஸ்தானத்தில் வைத்து அவள் பெயரை நான் எப்படிக் கூப்பிடுவேன்," என்றான்.

அவனுடைய வார்த்தைகளில், ஒரு வேளை அவனே அறியாதபடி, அவனுடைய இருதய ஆழத்திலிருந்த ஒரு எண்ணத்தை, ஆசையை என்னால் ஊகிக்க முடிந்தது. வெளிப்படையாகச் சட்டென்று அவனால் அதை ஒப்புக் கொள்ள முடியாமல் இருக்கலாம். ஆனால் மனித சுபாவம், துக்கத்தைக் காலக்கிரமத்தில் மறந்து விட்டு 'இன்பம் எங்கே?' என்று தேடும் இயல்புடைய மனித சுபாவம் அந்த இன்பத்தை மீண்டும் ஏற்றுக் கொள்ள விரும்பத்தான் செய்யும். ஆனால் முதலில், எடுத்த எடுப்பிலேயே வரவேற்கும் துணிச்சல் அதற்கு இருக்குமா? இந்த தடுமாற்றத்தின் விளைவாக எழுந்ததுதான் ராமுவின் அந்தப் பல்லவி என்று ஏதோ ஒரு உள்ளுணர்வு எனக்கு எடுத்துச் சொல்லிற்று. அன்றே அவனுடைய பெற்றோர்களையும் சகோதரியையும் கலந்து பேசினேன். அவர்களுக்கும், நான் விவரமாக எடுத்துச்சொன்ன பிறகுதான், அப்படியும் இருக்கலாம், என்று தோன்றிற்று.

அதன் பிறகு ராமுவை அணுகி கேட்பது அப்படி ஒன்றும் கஷ்டமாக இல்லை. என் மனத்தில் பட்டதை, அவனுடைய கஷ்டத்துக்கு நான் வகுத்த மருந்தை, அவனுடைய சபதத்துக்கு பங்கம் நேராத வழியில், 'இந்த ஏக்கத்துக்கு மாற்று உண்டா' என்று அவன் உள் மனம் அவனையே அறியாமல் தவித்ததே அதற்கு சாந்தி ஏற்பட நான் கண்டு பிடித்த அந்த வழியைக் கேட்டு அவன் வெகு நேரம் திடுக்கிட்டு அசைவற்று உட்கார்ந்திருந்தான்.

பிறகு, பிறகு என்ன, நாங்கள் எதிர் பார்த்த முடிவுக்கே அவனும் வந்து விட்டான். எனக்கு இந்த மகத்தான வெற்றியைப் பெற்றதில் பெரிய சந்தோஷம்.

மீண்டும் ராமுவின் வீட்டில்குதூகலம் பொங்கிற்று. அவனுடைய பெற்றோர்கள் அவனுடைய தங்கை எல்லோருக்கும் மிகவும் திருப்தி. என் வாழ்க்கையில் இனி ஒளியே படாது என்ற ராமுவின் வாழ்க்கை இப்பொழுது மீண்டும் பிரகாசமாயிற்று. அவனும் அடிக்கொரு முறை தன்னுடைய இரண்டாவது மனைவியை "வைதேகி" என்று வாய் குளிர மனம் குளிர அழைத்து வருகிறான். ஆம். ராமுவின் இரண்டாவது மனைவியின் பெயரும் வைதேகி என்றால் நீங்கள் ஆச்சரியப் பட மாட்டீர்களே.

கனல்

## 26

## அழகின் களங்கம்

★

அழகுக்கு ஒரு களங்கம் நேரிட்டு விட்டது போல் அவளுடைய முகத்தில் ஒரு சோக ரேகை படர்ந்திருந்தது. சோகம் மட்டுமா? ஆத்திரமும் கூட மின்னிக் கொண்டிருந்தது. கண்கள் சிவப்பேறியிருந்தன. நெற்றியில் வியர்வை முத்துக்கள் அரும்பியிருந்தன. உதடுகள் துடித்தன.

அவள் தனியாகத்தான் அங்கிருந்தாள். அவளை நெருங்கி வந்து நாலு வார்த்தைகள் பேச அப்போது யாருக்குமே தைரியம் வரவில்லை. ஆயினும் அவளுடைய உற்ற தோழி நளினி அருகே மெல்ல வந்தாள்.

“கருணா.” என்று மெல்ல அழைத்தாள்.

கருணா அவள் அழைப்பைக் கேட்டதும் படமெடுத்துச் சீறினாள். “உன்னை யாரடி இங்கு வரச் சொன்னார்கள்” என்பது போல் ஒரு விதமாகப் பார்வையைப் பிரயோகித்தாள்.

“கருணா. பெயர் தான் கருணையாக இருக்கிறது. ஆனால், பொருத்தம் இல்லை செய்கைக்கும் அதற்கும்.” என்று கூறி மெல்லச் சிரித்தாள் நளினி. பலமாகச் சிரிக்க அவளுக்குப் பயமாக இருந்தது. கருணாவதியின் கோபம் எத்தகையது என்பது அவளுக்குத் தெரியும். மிகவும் ஜாக்ரதையாகவே அவள் தன் தலைவியிடம் பழகுவாள்.

கருணா அவளைக் கடுமையாக நோக்கினாள்.

“என்ன கூறினாய்? பெயருக்கும் செய்கைக்கும் பொருத்தமில்லை என்று தானே. இன்னொரு முறை சொல்லு. நன்றாகச் சொல்லு. நான் இன்று முதல் ‘கருணா’ அல்ல. இதை உலகம் அறியட்டும். பறை சாற்று. ஊர் அறியட்டும். கொட்டி முழக்கு. அவர் அறியட்டும். எடுத்துச் சொல்லு.”

“கருணா. ஏன் இவ்வளவு பதற்றம் அடைகிறாய்? உனக்கு என்ன குறை நேரிட்டுவிட்டது? உனக்கும் குறை என்றால் அப்புறம் வேறு எவர் தான் நம் பெண் குலத்திற்குத் தலைமை தாங்குவது? நன்றாக யோசித்துப் பார்.”

“யோசனைக்கு இடமில்லை. நளினி, நான் இனி இந்த மாதிரியே என் வாழ்வை நடத்தப் போகிறேன். ஊண் வேண்டாம். உறக்கம் வேண்டாம். இன்பம் தேவையில்லை. எவருடைய அன்பும் தேவையில்லை. இனி நான் தனிமையின் வளர்ப்புப் பெண். துயரத்தின் சுவீகாரக் குழந்தை. கோபத்தின் ஜ்வாலை. இதை நீ புரிந்து கொள்.”

தோழியின் மனம் நடுங்கியது. தலைவிக்கு எப்பொழுதுமே சாதாரணமான சிறு கோபங்கள் ஏற்படுவது சகஜம். தோழி நளினி இரண்டு வார்த்தைகள் சொல்லத் தொடங்கினால் அந்தச் சிறு கோபங்கள் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் பறந்தோடி விடுவது வழக்கம்.

ஆனால், கருணா அன்று அடைந்திருக்கும் நிலை விசித்திரமாயிருந்தது. நளினி மிகவும் சாதுரியமாகப் பழக வேண்டி வந்தது.

“கருணா. அப்படி என்ன விரக்தி வந்துவிட்டது உனக்கு? யார் என்ன செய்தார்கள்?” என்றாள்.

“யாரா? உனக்கு ஒன்றும் தெரியாதா? என்னைக் கலக்கமுறுத்தியவர் வேறு யாராக இருக்க முடியும் நளினி. அன்று ஒரு நாள் சோலையிலே உள்ளங் கவர்ந்து, உடலை உருக்கி, என்னையே இழுத்துக் கொண்டாரே அவர் தான். தாயையும் மீறிச் சுற்றத்தாரையும்



எதிர்த்து, அஞ்சாது எவர் பின் சென்றேனோ அவர் தான். கனவிலே கூடிக் காட்டிலே சுற்றிப் பின் என் கற்பு நெறியிலே கலந்தது எவரோ அவரே தான்.”

“அப்படி அவர் என்ன தான் செய்து விட்டார் கருணா.”

“அவர் என்ன செய்து விட்டார்என்று நீ கேட்காதே: என்ன செய்ய வில்லை என்று வேண்டுமானால் கேள்: பதில் சொல்ல அதிகக் கஷ்டம் இராமல் இருக்கும். தொட்டுத் தாலி கட்டிய மனைவியை இப்படியா அவர் நடத்துவது? இதற்குத் தானா அவர் என்னை மணந்து கொண்டார்?”

“கருணா: நீ விபரம் புரியாதபடி பேசுகிறாய்: சுருக்கமாக நாலே வரியில் நடந்ததைச் சொல்லு: நான் அதற்கு வழி சொல்லுகிறேன்.”

“வழி, வழிசொல்லப்போகிறாயோ நீ இந்த நேரம் அவர் எங்கிருக்கிறார் தெரியுமா? இதோ பார்: என் உள்ளம் எப்படித் துடிக்கிறது தெரியுமா நளினி:” கருணா கண்களில் நீர் சிந்த வெறுப்புடன் நோக்கினாள் நளினி அருகில் போய் நின்று, “இது சகஜம் தானே: இதற்கெல்லாமா வருந்துவது: வாழ்க்கை மேடும் பள்ளமும் கலந்தது தானே: வண்டிச் சக்கரம் சுழலும் போது மேலும் கீழுமாகத் தான் மாறி மாறிச் சுழலும். இது நியதியின் நிலைமை இதை யாரால் மாற்ற முடியும்: நீ கெட்டிக்காரி என்று நான் எண்ணியிருந்தேன்: உன் கண் வெட்டிலே அவர் அன்று மயங்கியவர்தானே: உன்னைப் பாணிக்ரஹணம் செய்துகொண்டு, உனக்காகத் தன் உடல், பொருள், ஆவி எல்லாம் தியாகம் செய்யத் துணிந்தவர் தானே அவர்? இன்று காலம் சிறிதே மாறியிருக்கிறது. நாளை திருந்தும். இதற்காகவா சினம் கொள்வது: வருந்துவது:”

“உன் வேதாந்தம் எல்லாம் கிடக்கட்டும்: நடப்பதென்னவோ விபரீதம்: அனுபவிப்பது என்னவோ நான்:” கருணா மேலே பேச முடியாமல் தவித்தாள்.

தோழி பேச்சைத் தொடர்ந்து பேச முனைந்தாள். ஆனால் அப்போதைய நிலையில் அவளுக்கும் மேற்கொண்டு பேச முடியவில்லை.





ஊருக்குப் புதியவர்:—“இதென்னடா கிரஹசாரம்! பத்தாம் நம்பர் பஸ், பதினொரும் நம்பர் வீடுன்னு சொன்னாரு, இல்லே, பதினொரும் நம்பர் பஸ், பத்தாம் நம்பர் வீடுன்னு சொன்னாரு?”

“நீ இங்கேயே இரு. நான் வருகிறேன்” என்று கூறியவளாய் ‘விர்’ என்று வேகமாக நடந்தாள்.

எவருக்குமே நளினியைப் போல்ஒரு தோழி கிடைப்பது எளிதில்லை. கருணா செய்த பாக்கியத்தால்தான் அவளுக்கு நளினி கிடைத்தாள்: மேலும் நளினி இல்லையென்றால் கருணாவின் காதல் என்றோ படுகுழியில் புதைந்து போயிருக்கும்.

கருணா அழகுக்கு ஒரு எடுத்துக் காட்டு. நளினி நட்புக்கு ஒரு சின்னம். கருணா அறிவிற்கு ஒரு திலகம்: நளினி அன்புக்கு ஒரு சிகரம்.

கருணாவின் நல்லொழுக்கம் என்ற பயிர் நளினியின் சாதுரிய மழையால் தான் வானோங்கி வளர்ந்து செழித்தது.

என்றோ ஒருநாள் கருணாவும் நளினியும் ஒரு சோலைக்குப் போயிருந்தார்கள். பச்சைப் பசேலென்ற பயிர்கள் இயற்கையின் எழிலுக்குச் சோபையைத் தந்து கொண்டிருந்தன. பூங்கொடிகளும், மலர்ச் செடிகளும் பூரித்துக் கொழித்திருந்தன.

அங்குதான் தொண்டைமான் வந்தான். அவன் ஒரு மகா வீரன் என்பது அவனைப் பார்த்தாலே நன்கு தெரியும். கருணாவின் கண்முன் தென்பட்டான் அவன். நளினி புதரிலே மறைந்து கெண்டாள். தொண்டைமான் கருணாவை நெருங்கி வந்தான்.

அவன் கையில் தளிர் மாலை இருந்தது. அதைக் கொடுத்தான் கருணாவிடம். கருணா வணக்கத்துடன் அதை ஏற்றுக் கொண்டாள்.

“அன்புப் பிச்சை கொடு.” என்று கேட்டான் அவன்.

“தாங்கள்தான் எனக்குக் கொடுக்க வேண்டும்’ என்றாள் அவள்.

“என் மனத்தில் நீ எப்பொழுதோ புகுந்துவிட்டாய்’ என்றான் அவன்.

“இல்லை. தாங்கள் என் மனமாகவே மாறி விட்டீர்கள்.’ என்றாள் கருணா.

“ஈருடல்கள்....’ என்று இழுத்தான் அவன்.

“ஓர் உயிரின் இரண்டு ஸ்தூல வடிவங்கள்.’ என்று முடித்தாள் அவள்.

அன்பும் அன்பும் கலந்தன. ஆத்மாவும் ஆத்மாவும் இரண்டறக் கலந்தன. இன்பம் உண்டாயிற்று. ஆனந்தம் பெருகியது.

அவன் அவளைப் பிரிந்தான். அவளும் அவனைப் பிரிந்தாள்.

நளினி புதரிலிருந்து வெளியே வந்தாள்.

“அதெல்லாம் சரி. அவன் யார் என்று விசாரித்தாயா?’ என்று கேட்டாள் நளினி.

“ஐயையோ. மறந்துவிட்டேனே.’ என்று துடித்தாள் கருணா.

“சரி. கவலைப்படாதே. நான் விசாரித்துவிடுகிறேன்.’ என்று கூறினாள் நளினி.

அன்று முதல் நாள் தவறினாலும் கருணா– தொண்டைமான் சந்திப்புத் தவறுவதில்லை. காரணம் நளினியின் முயற்சிதான்.

தொண்டைமான் பல்லவர்களின் நாட்டில் தலைசிறந்த ஒரு வீரன் என்று தெரிந்ததும், நளினி அவனை நழுவ விட்டு விட விரும்பவில்லை. கருணா எப்படியும் தொண்டைமானோடு இணைந்து இன்ப வாழ்க்கை நடத்த வேண்டும் என்று திட்ட மிட்டுக் கொண்டாள்.

முதலில் இருவருடைய சந்திப்பிற்கும் பங்கம் உண்டாகாதபடி விதை போட்டாள்.

பின்பு இருவருக்குமே விவாகம் நடப்பதற்கு வேண்டிய வகை முறைகளை வகுத்தாள்.

நன்றாய், செவிலித்தாய் ஆகியவர்களைத் தன்வழிக்கு மெல்ல மெல்லக் கொண்டு வந்தாள்.

கடைசியில் ஒரு நாள் தொண்டைமானுக்கும் கருணாவுக்கும் விவாகம் நடைபெற்றது.

அன்றிலிருந்து நளினிக்கும் தன் மீதிருந்த சுமை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்தது. இனிமேல்தான் ஓய்வு எடுத்துக் கொள்ள முடியும் என்று எண்ணினாள்.

ஆனால் அவளுக்கு ஓய்வு கிடைப்பதாக இல்லை. அவ்விருவருக்கும் கல்யாணம் ஆனபிறகுதான் நளினிக்கு இன்னும் அதிகப்பளு ஏற்பட்டது.

அடிக்கடி அவ்விருவருக்கும் பிணக்கு நேரிட்டு விடும். சில சமயங்களில் அவர்கள் தாங்களாகவே சமாதானம் அடைந்து விடுவார்கள் வேறு சில சமயங்களில் நளினியே அவர்களைச் சமாதானம் செய்து வைக்க நேரும்.

அவள் கருணாவின் தோழி. அவளுக்குத்தன் கடமையே இன்பமாக இருந்தது. தன்னுடைய இரண்டு நயனங்களாகப் பாவித்தாள்அவள் அவ்விருவரையும். அவர்களுடைய சுக துக்கங்கள் தாம் அவளுடைய சுக துக்கங்களாக இருந்தன.

இத்தகைய நிலையில் அந்த ஆனந்த வாழ்க்கை நடை பெற்றுக் கொண்டிருந்தபோது தான் எதிர்பாராத இடையூறு ஒன்று புகுந்தது.

மனிதன் நேரான கதியில் எப்போதும் சென்று கொண்டிருக்கக்கூடாது என்பது விதியின் சட்டம் போல் இருக்கிறது.

தொண்டைமான் தன் அன்பையெல்லாம் எந்தக் கருணாவிடமே செலுத்தியிருந்தானோ, அந்தக் கருணாவைச் சில நாட்களாக ஏறெடுத்தும் பாராமல் இருக்கலானான். அதற்குக் காரணம் இடையில் முளைத்த ஒரு விஷப்பூண்டு தான்.

அந்த விஷமூலிகை தன் மேனியை அழகு படுத்திக்கொண்டிருந்தது. பார்ப்பதற்குக் கவர்ச்சியாயிருந்தது. விட்டில் பூச்சிமாதிரி தொண்டைமான் அந்த விஷமூலிகையின் கவர்ச்சியில் சிக்கினான்.

நீடித்ததும் நிலைத்ததுமான கருணாவின் அன்பென்னும் தேனைப் பருகிய அவன், அந்தஇன்பத்தை வெறுத்து விட்டான். விஷ மூலிகையானபரத்தையின் நச்சு மோகக் காற்று அவன்மேனியில் பட்டதுதான் தாமதம், அவன் மனம் சிதைந்து விட்டது.

சில நாட்கள் வரைக்கும்இது கருணாவுக்குத் தெரியாமல் இருந்தது. ஒரு நாள் நள்ளிரவில் தொண்டைமான் வெளியே இருந்து மாளிகைக்குள் வந்தான். அவன் முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பியிருந்தன. கண்கள் கலங்கியிருந்தன.

டெர்மிஸ்

ஒரு சீனத் தயாரிப்பு (வெளிப் பிரயோகத்திற்கு). வெண் குஷ்டம் படை, தேமல் குழிப்புண்கள மற்றும் இதர சரும நோய்களையும் தீர்க்கும் முதல் பிரயோகத்திலேயே பலன் தெரியும் விலை ரு 3. தபாற் செலவு பிரத்யேகம். ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

டாக்டர் ரிஷி

(சீமையில் பயின்ற) சரும நிபுணர்
ஸத்நாராயண் பில்டிங், சந்த்னி சௌக்
டில்லி

Dr. RISHI,
(Foreign Trained Skin Specialist)
Sat Narain Building,
Chandni Chowk, DELHI.



மனைவி :—இந்த டிபனை நான் ரொம்ப சிரமப்பட்டு பண்ணியிருக்கேன் தெரியுமா?
கணவன் :—நான்கூடத்தான் ரொம்ப சிரமப்பட்டு சாப்பிட்டுக் கொண்டிருக்கேன், தெரியுமா?"

கருணா அவனைப் பார்த்துக் கேட்டாள். "என்ன இது, ஏன் இந்தக்கோலம்? எங்கிருந்து வருகிறீர்கள்?" என்றாள். அவன் பதில் பேசவில்லை. அவள் கெஞ்சிக் கேட்டாள். அவன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அவன் பாதங்களைத் தொட்டுக் கேட்டாள். ஆனால் அவன் அவளை உதறிவிட்டுத் தன் படுக்கையில் போய்ச் சாய்ந்து விட்டான்.

அதுமுதல் கருணாவின் முகம் சோபை இழந்தது. ஏக்கமும், துயரமும், கோபமுமாகச் சேர்ந்து கொண்டு மனத்தை அலைக்கவே, அவை அனலாக முகத்தில் தேங்கிக் கொண்டன.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் நளினி கருணாவிடம் வந்து பேச்சுக் கொடுத்தாள். பின்பு விர்ரென்று நடந்தாள்.

* * *

தொண்டைமான் தனியே உப்பரிகையில் உட்கார்ந்திருந்தான். நளினி அங்கே சென்றபோது வேறுயாருமில்லை.

"யார் நளினியா?" என்றான் தொண்டைமான்.

"ஆம், அந்த அபாக்கியவதி நளினிதான்" என்றாள்

அவர்கள் பேசிய இடம் உப்பரிகையின் நிலா முற்றமானபடியால் பூரண சந்திரன் பளிச்சென மின்னிக்கொண்டிருந்தது தெரிந்தது. திடீரென்று சந்திரன் மேகங்களுக்கிடையே மறைத்தான்.

சாதுரியமுள்ள தோழிக்குச் சட்டென்று ஒருயோசனை தோன்றியது. தொண்டைமானை நோக்கி கூறினாள்.

"உங்கள் செய்கையைக் கண்டுஒயாது பரிகசித்து இகழ்ந்தவன் வாய்வலி கண்டு மறைந்து விட்டான்: அந்தச் சந்திரனுக்கு உங்களைக் காணவே அவமானமாக இருக்கிறது போலும்: ஆடவர் குலத்திற்கு இப்படியும் ஒரு களங்கமாகத் தொண்டைமான் பிறந்தானே என்று அவன் அங்கம் குலுங்கி அழிந்து விட்டான்" என்றாள்.

தொண்டைமான் சற்றே தன் நிலையைப் புரிந்து கொண்டு தோழியை நோக்கினான்.

"நளினி: நளினி: நான்மகாபாபி:" என்றான்.

"தாங்கள் அல்ல: நாங்கள்தான் பாபாத்மாக்கள்: நாங்கள் பாபம் செய்ய வில்லை யென்றால், தங்கள் மனம் இப்படி மாறி இருக்குமா? கொண்ட மனைவி ஒருத்தி இருக்கப் பரத்தையை நாடித் தாங்கள் போயிருப்பீர்களா?"

"வேண்டாம்: இனியும் அப்படிச்சொல்லாதே: என்மனமே என்னைச் சுடுகிறது: சந்திரன் பழிப்பது எனக்கே புலப்படுகிறது. இனி நான் அவளை ஏறெடுத்தும் பார்க்கமாட்டேன். இது சத்தியம்: கருணாவையேகளிப்பிப்பேன் அவளையே என்அன்பில் நீந்தச் செய்வேன். ஆனால் அவள் கோபித்துக் கொண்டிருப்பாளே:"

"தாங்கள் சத்தியமாக இனிமேல் இவ்விதம் நடப்பதாகச் சொல்லுங்கள்: நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றாள் நளினி.

"சத்தியம்: சத்தியம்:" என்றான் தொண்டைமான்.

அடுத்த நொடி நேரத்தில் நளினி கருணாவின் அருகில் நின்றாள்.

"கருணா:" என்று கூப்பிட்டாள்.

ஏக்கத்தின் சமுத்திரத்திலே சற்றே தலையை நீட்டி நளினியைப் பார்த்தாள் கருணா.

"கருணா: உன் கவலை எனக்கு இல்லையா? உன் கோபம் எனக்கில்லையா? நீ ஏன் வீணாக உன் முகத்தின் எழிலைக் கெடுத்துக் கொள்ளுகிறாய்: ஒரு சமயம் தொண்டைமான் இப்பொழுது இங்கு வந்தால் என்ன செய்வது? இப்படியா அலங்கோலமாக இருப்பது?"

"அவர் எங்கே இனிமேல் வரப் போகிறார்? என் அழகுதான் அழிந்து விட்டதே:"

"ஊஹூம். அப்படிச் சொல்லாதே: உன் அழகு அழியவில்லை: அழியப் போவதுமில்லை. நான் இருக்க உனக்குப்பயமேன்? இதோபார்: என்னைப் பார்: சிரி. முகத்தை மலர்ச்சியாக வைத்துக்கொள்:"

"ஊஹூம்: எனக்கா இனிமேல் மலர்ச்சி:"

"இல்லை: உனக்குத்தான் இனிமேல் மலர்ச்சி: அதோபார் அந்தச் சந்திரனை: உன்னைப்பார்த்து அவன் ஏளனம் செய்கிறான்: இதற்கு முன் என்றாவது உன்னை ஏளனம் செய்ததுண்டா? உன்னைக்கண்டால் நடுங்குவானே அவன்: "கருணாவின் முகம்போல் நான் இல்லையே" என்று ஏங்கித் துடிப்பவன் அல்லவா அவன்: ஆனால் இன்று, நீ உன் அழகைக் கெடுத்துக் கொண்டு விட்டாய்: அதனால் அவன் உன்னைப் பரிகாஸம் செய்கிறான். பரிகாஸம் மட்டுமா? ஊரெங்கும் உலகெங்கும் சுற்றித் திரிந்து, "என்னைப்போல் அழகானவர்கள் எவருமே இல்லை" என்று பறை சாற்றி முழக்குகிறான். காரணம் உன்செய்கைதான்: வேண்டாம்: உன் முகத்தை மலர்ச்சியாக வைத்துக் கொள். ஒரு நொடியில் அந்தச் சந்திரன் உன் தாளின் கீழ் தலை வணங்குகிறானா, இல்லையா என்று பார்."

நளினி மிகவும் உருக்கமாகப் பேசினாள்.

கருணா ஒன்றும் புரியாமல் திகைத்தாள்.

அதேசமயம் அங்கு யாரோ ஓடிவரும் சத்தம் கேட்டது.

ஆம்: அவளுடைய அழகைக் கெடுத்த அந்தச் சந்திரன்தான் ஓடி வந்தான்: தொண்டைமான்தான் ஓடி வந்தான்.

"கருணா: கருணா: என்னை மன்னித்துவிடு:" என்றான்.

கருணா எல்லாவற்றையும் மறந்தாள். தொண்டைமானின் கைகளை அவளுடைய கரங்கள் தாமாகச் சென்று பற்றிக்கொண்டன. நளினி இப்பொழுதுதான் உண்மையிலேயே தன் கடமை முடிந்ததாக எண்ணினாள். அவள் கூறியதேபோல் கருணாவின் முகம் பூரண சந்திரனை விட அதிகமாகப் பிரகாசித்தது. அதே சமயம் அந்தப் பூரண சந்திரன் பொறாமையால் உள்ளமும் உடலும் கருகி மேகத்தோடு இரண்டறக் கலந்தான். சிறு மழைத் தூறல்கள் தூறின.

---

ஸ்ரீ சக்தி ஜோஸ்யம்

ஆருடம்
3 கேள்விகளுக்கு ரூ. 2.
குழந்தை ஜாதகம்
சுருக்க பலனுடன் கணிக்க ரூ. 2
ஒரு வருஷ பலன் எழுத ,, 6.
விவாகப் பொருத்தங்கள் பார்க்க
2 ஜாதகங்களுக்கு ரூ. 2.
1 தசாவிற்கு புக்திவாரிபலன் ,, 12.

ஜாதகம் அல்லது எழுதும் நேரம், பெயர், தொழில் அனுப்புக V.P.P. தனி.
N. B. வெளிநாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ். முன் பணமாய் அனுப்புக.

S. ராமச்சந்திரய்யர்,
ஸ்ரீ சக்தி ஜோஸ்யம், எரவாஞ்சேரி
திருவிளையாட்டம் P.O.
South India.



# 'பிக்கல் பிடுங்கல்'

லட்சுமி கிருஷ்ணமூர்த்தி

ராஜம், இரண்டில் ஒன்று தீர்மானித்து முடிவாகஇன்று சொல்லிவிடு, நாளைக்கு அவர்களுக்குப் பதில் எழுத வேண்டும்" என்று தன் மனைவியிடம் உத்தரவு போட்டுவிட்டு அவசரமாக ஆபீசுக்கு ஓடினார் சுந்தரமையர்.

அவள் தான் ஏற்கனவே முடிவுசெய்து விட்டாளே, இதில் சந்தேகம் வேறா?. அந்தத் தஞ்சாவூர் பையனுக்குப் பிக்கல் பிடுங்கல் ஒன்றுமே இல்லை, ஒத்தை கட்டை. பேசாமே கொடுத்துவிடுங்கள் உங்கள் ரமணியை. மாமியார், நாத்தனார் என்ற கொடுமைகளுக்கு இடமே யிராது," என்று சிபார்சு செய்தார் அவள் கணவரின் நண்பரொருவர். மாமியார், நாத்தனார் எல்லாம் பிக்கல்பிடுங்கலா, கொடுமையா? ஏனோ இந்த ஜனங்களுக்கு இப்படிப் போகிறது புத்தி? தன் பெண் ரமணியை அந்தத் திருமங்கலம் ...ரனுக்குத்தான் கொடுப்பதாக மனதில் ராஜம் நிச்சயித்து விட்டாள். பெரிய குடும்பம்— மாமியார், மாமனார், நாலு மைத்துனன்மார், மூன்று நாத்திகள், இதல்லவோ நிறைந்த செல்வம்? ஒரு நாத்தி இல்லாவிட்டால் இன்னொருத்திக்காவது ரமணிமீது பரிவும், ஆசையும் ஏற்படும்.

பிள்ளைகளெல்லாம் பள்ளிக்கூடம் சென்று விட்டனர். வீட்டில் ராஜத்தைத் தவிர வேறு யாருமில்லை. வாசல்கதவை தாளிட்டுவிட்டு ஊஞ்சலில் வந்துஉட்கார்ந்தாள். புத்தக விமர்சகரைப் போல் அவள் மனம் அவள் வாழ்க்கைப் புத்தகத்தின் முன் ஏடுகளைப் புரட்டிப் பார்க்க ஆரம்பித்தது.

இப்படித்தான் 'பிக்கல் பிடுங்கல்' இல்லாத இடமாகத் தங்கள் ஒரே செல்வ மகள் ராஜத்திற்கு, சுந்தரத்தை தேர்ந்தெடுத்தனர் அவளது பெற்றோர். அவளுக்கு மணமான மூன்று நான்கு ஆண்டுகளுக்குள் இருவரும் ஒருவர் பின் ஒருவராக இறந்துவிட்டனர். அதற்கு பின் அவள் மனுஷியர்கள் என்று சொல்லிக்கொள்ள ஒருவருமே இல்லை.

'அரிசி இறைத்தால் ஆயிரம் காக்கை, ஆளுக்குப் பஞ்சமா?' என்று கேட்பார்கள் சிலர். ஆனால் உண்டான பேர்க்குத்தான் உறமுறையோர் கோடானுகோடி, திண்டாடித் தெருவில் நிற்கும்போது மனுஷிய சகாயம் அதிகம் வேண்டிய சமயத்தில் —கண்டாலும் பேசாத சண்டாள உலகம் அல்லவா இது? ஒரு மாமி, மதனி என்றிருந்தால், அவர்களுக்கு அப்படித் தோன்றுமா? தான் ஆடா விட்டாலும் தன்தசை ஆடாதோ? திருமங்கலம் பிள்ளைக்கு சொத்து பூஜ்யம். நிலம் நன்னிலந்தான். நான் அறிவிக்கவில்லை என்று பிற்பாடு புகார் செய்யாதே என்று எச்சரித்திருந்தார் சுந்தரமையர்.

'ஏர் பிடித்தவன் என்ன செய்வான்? பானை பிடித்தவள் பாக்யசாலி' என்பர். என்னமோ ரமணிக்கு அதிர்ஷ்டம் இருந்தால் தானே பணம் அவளைத் தேடி வருகிறது. கொடுக்கும் தெய்வம் கூரையைப் பொத்துக் கொண்டும் கொடுக்கும். பணம் வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவையே தவிர அதுவே பிரதானமானது என்று முடிவு கட்டிவிட முடியுமா? லட்ச லட்சமாய் கொடுத்தாலும் ஒரு மாமி பாட்டி என்று கிடைப்பார்களா? என்று ராஜம் நினைத்தாள்

சந்தோஷம் பிறருடன் பகிர்ந்துகொள்ளும் போது இரட்டிக்கிறது. துக்கமோ பகுதியாகிவிடுகிறது என்ற உண்மையை ராஜம் நன்கு உணர்ந்திருந்தாள். மனிதக்கட்டில்லாமல் அடிநாளில் இவள் ஒவ்வொரு சமயம் திண்டாடினதும் இப்பொழுது நினைவுக்கு வந்தது. ஒரு நல்லது பொல்லாதது, சின்னக் காரியம், பெரிய காரியம் எந்த சமயத்திலும் அவள் தன் குறையை உணராமல் இருக்க முடியவில்லை.

அன்று அவள் சீமந்த புத்திரியின் முதல் ஆண்டு நிறைவு. வேண்டிய நண்பர்கள் விருந்துக்கு வந்திருந்தனர். எனினும் ராஜத்திற்கு அது பூரண திருப்தியளிக்க வில்லை. மேலும் குழந்தையை வைத்துக்கொண்டு விருந்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதும், சாமான் எடுத்துக்கொடுப்பதும், விருந்தினரை வரவேற்பதும், மணையில் இருப்பதுமாகத் திண்டாடிப் போய் விட்டாள். ஒண்டிக்காரி என்னதான் செய்வாள்? இதெல்லாம்கூட இல்லை, அன்று ஆசீர்வாதம் பெற பெரியவர்கள் என்று ஒருவருமே இல்லாததுதான் அவளுக்குப் பெருங் குறையாக இருந்தது.

தன் நாலு குழந்தைகளையும் வளர்த்து பெரியவர்களாக்க அவள் பட்டபாடு அந்தப் பகவானுக்குத் தெரியும். ஒரு ஜலதோஷம் என்றாலும் டாக்டரைத் தேடிக்கொண்டு ஓடுவாள். வீட்டில் என்ன பாட்டியா இருக்கிறாள், ஒரு கஷாயத்தை வைத்துப் போட்டு என்று சொல்லிக் கொடுப்பதற்கு? இல்லை அந்தக் குழந்தைகளை விளையாட்டுக் காட்டி வைத்துக்கொண்டு சீராடவாவது யாராவது இருந்தார்களா? அவள் குழந்தையாக இருந்த போது அவள் பாட்டி அவளுக்குப் பாகவதம், பாரதம், ராமாயணம், கிருஷ்ண லீலா, என்று எத்தனை சுவாரஸ்யமான கதைகளைச் சொல்லியிருக்கிறாள்? ராஜமும் திரும்பத் திரும்ப அலுக்காமல், சளைக்காமல், அவைகளைக் கேட்டபடியே, அம்மாவைப் படுத்தாமல் சாப்பிட்டு உறங்கிப் போயிருக்கிறாள். அவள் தாயாருக்கும் குழந்தையை நம்மைவிடக் கருத்தாகப் பார்த்துக்கொள்ள ஆள் இருக்கிறார்கள் என்ற மன நிம்மதியும், போதிய அவகாசமும் கிடைத்தது. கோவில் குளத்துக்குப் போவாள், தினம் தேவி தோத்திரங்களைப் பாடுவாள்.

ஆனால் ராஜத்திற்கோ மூச்சுவிடக் கூடப்பொழுது கிடையாது. ஓயாமல் சமையல் செய்வதும், வீட்டுக் காரியங்களைக் கவனிப்பதும், இடையில் குழந்தைகளையும் தானே கவனிப்பதுமாக பொழுது போய் விடும். அவளுக்கும் சுக மில்லை, அந்தக் குழந்தைகளுக்கும் சுகமில்லை. ஓய்ச்சலின்றி வேலை செய்வதால், குழந்தைகள் வந்து "கதை சொல்லு அம்மா" என்று கேட்கும் போது அறைந்து விடலாம் போல் ஆத்திரம் வரும். கணவன் மாலை வீடு வரும்போது, முகத்தை அலம்பி பளிச் சென்று பொட்டு இட்டுக் கொண்டு இருக்க வேண்டும் என்று நினைப்பான். ஆனால் அதென்னமோ கையே வராது வீட்டில் வேறு மனுஷியர்கள் இருந்தால் இப்படித் திண்டாட நேருமா? என்று தோன்றும்.

ராஜம் அப்பொழுது வேறு தெருவில் குடி இருந்தாள். அவர்கள் பக்கத்து வீட்டில் குடியிருந்த பாரு தன் மாமியாரிடம் குழந்தைகளை விட்டு விட்டு நிம்மதியாக வெளியே போவாள். கடை கண்ணி, சினிமா டிராமா ஒன்று விடமாட்டாள். "ஹூம் கொடுத்து வைத்த மகராஜா" என்று பெரு மூச்சு விடுவாள் ராஜம், பாருவைப் பார்த்து.

அவர்கள் அந்த வீட்டிற்குக் குடி போன புதிது. இப்பொழுது கல்யாணத்திற்கு நிற்கிறாளே இதே ரமணிதான் ஒரு நாள் அம்மாவுடன் வந்து "அம்மா நம்மாத்துலே மட்டும் ஏம்மா பாட்டியில்லே? பக்கத்தாத்து பங்கஜிக்கு

மாத்திரம் பாட்டியிருக்கா? எத்தனை ஜோரா கதை சொல்லி கையிலே சாதம் போடறா தெரியுமா? எனக்கும் ஒரு பாட்டி வேணும்" என்று நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள் அவள் அப்பாவிடமும் போய் தினமும் அழுவாள். ராஜமும், சுந்தரமும் அவளை சமாதானம் செய்வதற்குள் போதும் போதுமென்றாகிவிடும்.

பாட்டியென்ன பணம் கொடுத்து கடையில் வாங்கும் பண்டமா? கேட்டவுடன் கிடைப்பாளா? அப் பச்சிளங் குழந்தையிடம் உனக்குப் பாட்டியில்லை என்று சொல்லி அதன் பிஞ்சு நெஞ்சைப் புண்படுத்த யார்தான் விரும்புவர்? பக்கத்து வீட்டுப் பாட்டியே அவளுக்கும் பாட்டியாக இருப்பதாக ஒத்துக் கொண்ட பின்னர்தான் ரமணியும் அரைகுறையாகச் சமாதானம் அடைந்தாள். விவரம் அறியும் வரை எப்பொழுது கோவிலுக்குப் போனாலும் "ஒம்மாச்சி எனக்கும் ஒரு பாட்டியைத் தரமாட்டியா, நோக்கு நறைய அப்பிச்சி தரேன்," என்று பாவம் தெய்வத்துக்குக்கூட லஞ்சம் கொடுக்கத் தயாராக இருந்தது அக் குழந்தை உள்ளம். இதைப் பார்க்கும்போது ராஜத்துக்கு நெஞ்சை அடைத்துக் கொண்டு கண்ணில் நீர் முட்டும்.

பணத்தை விட்டெறிந்தால் மட்டும், ஆத்மார்த்தமாக, நம்மிடம் சிநேகத்துடன் சேவகம் செய்ய ஆட்கள் கிடைத்து விடுவார்களா? வேலைக்கென்று வீட்டிலேயே ஒரு ஆள் வைத்துக் கொண்டிருந்தாள். அவள் வந்த மூன்று மாதத்திற்கெல்லாம், ராஜம் பக்கத்துத் தெரு கல்யாணத்திற்குப் போய் வருவதற்குள் அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு ஓடிவிட்டாள். அப்பொழுதெல்லாம் ராஜம் எனக்கும் ஒரு மாமியார் இருந்தால் வீட்டிற்குக் காவலாகவாவது இருப்பாரல்லவா என்று ஏங்குவாள்.

இதெல்லாம்கூட பிரமாதமில்லை அவள் பையன் ராஜுவுக்கு மூன்று வயதில் டைபாயிட் ஜுரம் வந்துவிட்டது. ராஜமும், சுந்தரமும் மாறி, மாறிக் குழந்தையிடம் இருந்தார்கள். ஆனால் எத்தனை நாளைக்குத்தான் ஆபீஸில் லீவு கொடுப்பார்கள்? இரவும் பகலும் ஒண்டியாக ராஜமே குழந்தையைப் பார்த்துக் கொள்ளும்படி வந்து விட்டது. இப்படிப்பட்ட சமயத்தில் அவளுக்கு ஆறுதல் கூறி தைரிய மூட்ட யாராவது இருந்திருந்தால் அவள் பளு எவ்வளவோ குறைந்திருக்கும்.

அதற்குப் பிறகு அவளுடைய மூன்றாவது பிரசவத்தின் போது, சமையலுக்கு என்று ஒரு அம்மா வந்திருந்தாள். போதும், போதும் அவள் படுத்தி வைத்த பாடு. உலகத்தில் எந்த மாமியாரும், நாத்தனாரும் அவ்வளவு கொடுமை செய்யமாட்டார்கள். நல்ல வேளை பகவான் அவளுக்கு மேலும் குழந்தை




"சாயந்திரம் துணிக்கடைக்குப் போயிருந்தேன். ஒரு புடவை வாங்கினால் ஒரு ஜதை வேஷ்டி தருவதாகச் சொன்னான். பாவம், நீங்க கட்டிக்க வேஷ்டியே இல்லேன்னு சொல்லிண்டிருந்தேளேன்னு ஒரு ஜதை வேஷ்டி வாங்கிண்டு வந்தேன்......இந்தாருங்கோ...!!"

களைத் தந்து சோதிக்கவில்லை. எப்படாப்பா படுக்கையை விட்டு எழுந்து காரியம் செய்யப் போகிறோம், அந்த அம்மாவுக்குச் சீட்டுக் கிழிக்கப் போகிறோம் என்றாகிவிட்டது ராஜத்திற்கு. வாய்க்கு நல்ல சோறுதான் உண்டா, இல்லை அவள் கணவருக்கும், முதல் இரண்டுகுழந்தை களுக்கும் வேளைக்குத்தான் ஆகாரம்உண்டா? அவள் படுக்கையிலிருந்த அந்தப் பத்துப் பதினைந்து நாட்களும் வீடு திமிலோகப் பட்டது. மனதுக்குக் கஷ்டம். பொருளுக்கும் சேதம்.

சரி ஏதோ அப்பொழுதுதான் காசுக்கென்று காரியம் செய்ய ஒரு ஆள் கிடைத்துவிட்டாள். நவராத்திரி வந்தது. கொலு வைக்க வேண்டுமென்று ராஜத்திற்கு ரொம்ப ஆசை, கொலுவும் வைத்து விட்டாள். யார் போய் ஊரழைப்பது? இவ்வளவு பெரியவள் அவளாபோவது? ஓர்ப்படி குழந்தைகள் நாத்தனார் குழந்தைகள் என்று அப்படி யாராவது இருந்தால் அனுப்பலாமல்லவா? இவள் அழைக்கப் போகும் சமயத்தில் வீட்டிற்கு யாராவது வருவதும், மஞ்சள் குங்குமம் கூடக் கொடுக்க ஒருத்தருமில்லாமல் அவர்கள் போவதும், யாராவது வருவார்களேயென்று இவள் அழைத்த அநேக இடங்களுக்குச் செல்ல முடியாமல் போவதும் திண்டாட்டமாயிருந்தது அந்த வருஷம். அதற்குப் பிறகு கொலுவைக்கும் ஆசையே போய்விட்டது ராஜத்திற்கு.

நாளைக்கே ரமணிக்குக் கல்யாணம் என்றால் இவளுக்கென்ன தெரியும். கல்யாணத்தைப் பண்ணிப்பார், வீட்டைக் கட்டிப்பார், என்று பழமொழியே இருக்கிறது. சம்பந்திகளைத் திருப்தி செய்து, சம்பிரதாயங்களை விடாமல் காரியத்தை நிறைவேற்ற வேண்டாமா? நினைத்தாலே மலைப்பாக இருக்கிறது. ஒரு நல்லது, பொல்லாததென்றால் அவனவன் மனுஷியர்களில்லாமல் காலந்தள்ள முடியுமோ? பிறந்தகத்தவர் மாத்திரம் போதாது, புக்ககத்தில் மனுஷியக் கட்டு இருந்தால்தான் ரமணி சுக வாழ்வு அடைய முடியும். தான் இத்தனை திண்டாடின பிறகும் இன்னும் யோசனை என்ன?

சாயங்காலம் அவர் ஆபீஸிலிருந்து வந்ததும், "மத்தியான மெல்லாம் இப்படி நாத்தனார், மாமியார் என்ற பிக்கல் பிடுங்கல் இல்லாமே நான் திண்டாடினதை நெனச்சுப் பார்த்தேன். போதும், போதும் நான் பட்ட சுகம். ரமணிக்கு அந்தத் திருமங்கலத்துப் பையனையே நிச்சயம் பண்ணிப்பிடுங்கோ, அவளாவது ஓர்படி, நாத்தனார் என்று நாலுஉறவினருடன் குடித்தனம் நடத்தி சுகப்படட்டும்", என்று தன் முடிவைத் தெரிவித்து விடவேண்டும் என்று ராஜம் தீர்மானிப்பதற்கும் அவள் எண்ணத்தை ஆமோதிப்பதே போல் கடிகாரம் மணி அடிப்பதற்கும் சரியாக இருந்தது.

---


பாத்ருடுவின் "பால சஞ்சீவினி" (Regd.)

**Phone: 84254.**

குழந்தைகளின் சுரம், குலை ஜுரக்கட்டி வியாதிகளைச் சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான் அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறுதீர்கள்

**Dr. பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,**

19, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:— 7. சாரங்கபாணி கோவில் கீழ வீதி.

திருச்சி கிளை:— 15. புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்ட்.







தனியான அர்த்தம் எதுவுமில்லாத ஒரு சில எழுத்துக்களாலான அடைமொழிகளை வார்த்தைகளுக்கு முன்பு சேர்ப்பதன் மூலம் அந்த வார்த்தைகளின் அர்த்தம் வேறுபட்டு வழங்கும் என்றும், அத்தகைய அடைமொழிகளை முன் அடை மொழிகள் (Prefixes) என்று கூறுவதுண்டு என்றும் சென்ற பாடத்தில் விளக்கப்பட்டது.

இந்த முன் அடைமொழிகளைப் போன்ற வேறு சில அடைமொழிகள் வார்த்தைகளுக்குப் பின்பும் சேர்க்கப்பட்டு வழங்கும். இவற்றைப் பின் அடைமொழிகள் (Suffixes) என்று கூறுவதுண்டு முன் அடைமொழிகளைப்போலவே பின் அடைமொழிகளும் முக்ய வார்த்தையின் அர்த்தத்தை வேறுபடுத்திக் கூற உதவும்.

(உ—ம்)

ज़िम्मा—பொறுப்பு.

ज़िम्मेदार—பொறுப்புள்ள; பொறுப்புள்ளவன் (+दार)

ज़िम्मेदारी—பொறுப்புள்ள தன்மை (+दारी)

सुंदर—அழகுள்ள

सुंदरी—அழகுள்ளவள் (+ई)

सुंदरता—அழகு (+ता)

பின் அடைமொழிகளின் ஆக்கத்தைப்பற்றியோ, அளவைப்பற்றியோ திட்டவட்டமான விதி முறைகள் கிடையா. எனவே அதிகமாக வழக்கத்திலிருக்கும் சில முக்யமான ப்ரயோகங்கள் மட்டும் கீழே விளக்கப்பட்டுள்ளன கவனித்துக் கொள்ளவும் :—

### வினைச்சொற்களுக்குப் பின் சேரும் அடைமொழிகள்

1. ई அல்லது आई என்ற பின் அடைமொழிகள் ஒரு வினைச் சொல்லுடன் சேர்ந்தால் வினைச்சொல் பண்புப்பெயராக மாறித்தொழிலின்'கூலி'

## பாடம்-पाठ 81

### (अ) व्याकरण

### பின் அடைமொழிகள் (Suffixes)

★

'செலவு' அல்லது 'செய்கை'யைக் குறிக்கும்

(உ—ம்)

बुनाई—நெசவு நெசவுகூலி (बुना+ई)

धुलाई—சலவை சலவைக் கூலி (धुला+ई)

लड़ाई—சண்டை, யுத்தம் (लड़+आई)

2. अन அல்லது आन என்ற பின் அடைமொழிகள் சேரும் போதும் வினைச்சொல் பண்புப் பெயராக மாறும்

(உ—ம்)

चलन—நடத்தை (चल+अन)

मिलन—கூடல், சேர்க்கை (मिल+अन)

उड़ान—பறப்பு (उड़+आन)

3. त அல்லது अत, ती ஆகிய பின் அடை மொழிகள் சேரும் போதும் வினைச்சொல் பண்புப் பெயராக மாறும்:

(உ—ம்)

बचत—மிச்சம், சேமிப்பு (बच+अत)

बढ़ती—அதிகரிப்பு, உயர்வு (बढ़+ती)

4. वट, हट ஆகிய பின் அடைமொழிகள் சேரும்போதுகூட வினைச்சொல் பண்புப் பெயராக மாறும்:

(உ—ம்)

बनावट—ஆக்கம். செயற்கை बना

रुकावट—தடை, தடுப்பு............रोक

घबड़ाहट—கலக்கம்...............घबड़ा

5. 'आव' என்ற பின் அடைமொழி சேரும்போதும் இதே மாதிரி வினைச்சொல் பண்புப் பெயராக மாறும்:

(உ—ம்)

बचाव—பாதுகாப்பு..................बच

चढ़ाव—ஏற்றம், (Ascent).........चढ़

बहाव—நீரோட்டம் (Flow).........बह

6. अक्कड़ என்ற பின் அடைமொழியை வினைச் சொல்லுடன் சேர்த்து தொழிலைச் செய்பவனைக் குறிப்பதுண்டு:

(உ—ம்)

पियक्कड़—குடிகாரன்...................पी

घुमक्कड़—திரிபவன் நாடோடி घूम

### பெயர்ச் சொற்களுக்குப் பின்பும் பெயர் உரிச்சொற்களுக்குப் பின்பும் சேரும் அடைமொழிகள்

1. ई, ती, पा, पन, हट, अक, आस, ता முதலிய பின் அடைமொழிகள் பெயர்ச்சொற்களுடனோ பெயர் உரிச்சொற்களுடனோ சேரும் போது அந்தச் சொற்கள் பண்புப் பெயர்களாக மாறும்.

(உ—ம்)

बुराई—கெடுதி.........................बुरा

गरमी—சூடு.............................गरम

कमती—குறைவு........................कम

बुढ़ापा—கிழத்தனம்...................बूढ़ा

लड़कपन—பிள்ளைப்பருவம்......लड़का

चिकनाहट—வழவழப்பு.........चिकना

ठंडक—குளிர்ச்சி........................ठंडा

मिठास—இனிமை........................मीठा

सुंदरता—அழகு........................सुंदर

वीरता—வீரத்தனம்........................वीर

2. गर என்ற பின் அடைமொழி சேரும்போது, தொழிலைச் செய்பவனைக் குறிக்கும்:

(உ—ம்)

कारीगर—கைத்தொழிலாளி कार

जादूगर—ஜாலவித்தைக்காரன்...जादू

3. आबाद என்ற பின் அடைமொழி சேரும்போது குடியேற்றப்பட்ட இடத்தைக் குறிக்கும்:

(உ—ம்)

हैदराबाद—ஹைதரால் குடியேற்றப்பட்ட இடம்

सिकंदराबाद—ஸிக்கந்தரால் குடியேற்றப்பட்ட இடம்

4. दार என்ற பின் அடைமொழி சேரும்போது உடையவனைக் குறிக்கும்:

ज़मीनदार—பூமிக்குடையவன் ज़मीन

तालुकदार—தாலுகாவுக்குடையவன் तालुक

हक़दार—உரிமையாளன் हक़

இன்னும் இம்மாதிரி எத்தனையோ பின் அடைமொழிகள் ஹிந்தியில் வழங்கி வருகின்றன. அவற்றையெல்லாம் கணக்கிட்டு இத்தனைதாம் என்று திட்டமாகச் சொல்லிவிட முடியாது மேன்மேலும் படிக்கப் படிக்க அவைகளை நாளடைவில் கவனித்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.

## (आ) भाषण

# विनोबा जी के उपदेश

## दुखी गाँव

हैदराबाद के किसी गाँव के लोगों की एक प्रार्थना-सभा में भाषण करते हुए, आचार्य विनोबा भावे ने कहा:-

"आपका यह गाँव बड़ा दुखी है लेकिन दुख क्या है, यह हमने समझ लिया है। आपका दुख यह है कि आप कौरव-पांडव बनकर आपस में लड़ने लगे हैं। एक ही गाँव में रहनेवाले एक ही हवा लेते हैं, एक ही अन्न खाते हैं, एक ही पानी पीते हैं और आखिर एक ही श्मशान में जानेवाले हैं; और वहाँ जो खाक बनेगी, उसमें कोई पहचान नहीं रहेगी कि यह ब्राह्मण की ख़ाक है या हरिजन की। फिर भी ताज्जुब यह है कि आप लोग आपस में झगड़ते हैं!

"आज हम जिस घर में रहते हैं, वहाँ के लोग डर के मारे हैदराबाद भाग गए हैं और चूँकि हम यहाँ आज आए हैं, इसलिए हमसे मिलने केलिए वे भी यहाँ आए हैं। हमने पूछा कि आपको डर किन लोगों से है? आप हैदराबाद क्यों भागते हैं? उन्होंने कहा कि उनके एक सगे भाई हैं और दोनों के बीच झगड़ा है। ग़रीब लोग कहते हैं कि ये दोनों बड़े भाई आपस में लड़ते हैं और हम ग़रीब लोग बीच में पीसे जाते हैं फिर दोनों भाई हमसे मिले हमने पूछा, 'क्या, आपके बीच झगड़ा है?' वे बोले— 'है, तो सही' फिर हमने कहा कि दोनों कुश्ती लड़ो। ग़रीब लोगों का सवाल नहीं है जैसे भीम और जरासंध में कुश्ती हुई थी, वैसी कुश्ती होने दो। यह कुश्ती देखने के लिए गाँव के सब लोगों को बुलाना उस कुश्ती में जो हार जाएगा, वह हार गया; और जो जीत जाएगा, वह जीत गया। आख़िर उन दोनों ने क़बूल किया कि हम कोई पंच मुक़र्रर करेंगे और वह जो कहेगा, मानेंगे।

"यही सच्चा रास्ता है जहाँ दस लोग इकट्ठे रहते हैं, वहाँ कुछ-न-कुछ झगड़े पैदा होंगे ही लेकिन जहाँ झगड़े होते हैं, वहाँ गाँव में कुछ अक्लवाले भी होते हैं, उनके सामने झगड़े रखना और वे जो फ़ैसला देंगे, वह मानना। हम ऐसा करेंगे, तो हमारे सारे झगड़े मिट जाएँगे। नहीं, तो आपस में झगड़े चलते हैं और सारा गाँव दुखी हो जाता है।"

## (इ) शब्द-भंडार

श्मशान—(ஆ.பா.) ச்மசானம், சுடுகாடு

ख़ाक—(பெ. பா.) மண் தூசி.

पहचान—(பெ பா.) அடையாளம்

[ஒருவர் தன்மையே பற்றிக் குறிப்பிடும்போதும் मैं (நான்) என்ற சொல்லுக்குப் பதிலாக हम (நாம் நாங்கள்) என்ற சொல்லையும் ஹிந்தியில் உபயோகிப்பதுண்டு]

के मारे—के कारण—காரணமாக

सगा भाई—(ஆ. பா.) சொந்த ஸஹோதரன் ஓர்தாயின் வயிற்றில் உடன் பிறந்தவன்

पीसना—அரைத்தல், நெரித்தல்.

कुश्ती—(பெ. பா) குஸ்தி

क़बूल करना—ஒப்புக்கொள்தல்

पंच—(ஆ பா.) பஞ்சாயத்

मुक़र्रर—நியமிக்கப்பட்ட, ஏற்படுத்தப்பட்ட

इकट्ठा—சேர்ந்த,

अक़्ल-(பெ. பா.) புத்தி अक़्लवाला புத்தியுள்ள, அறிவுள்ள, புத்தியுள்ளவன், அறிவாளி

फ़ैसला—(ஆ. பா.) தீர்ப்பு

मिटना—அழிதல்.

जय हिंद! जय हिंदी!






## 133

# ஞானமும் ஞேயமும்

முன்னே அர்ஜுனனின் 'க்ஷேத்திரம் யாது?' என்ற கேள்விக்கு விடை அளித்தார் அடுத்தபடியாக 'ஞானம் எது?' என்ற கேள்விக்கு விடை அளிக்கிறார். ஞானமாவது 'தன்னைப் புகழ்ந்துகொள்ளாமை, டம்பமின்மை பரஹிம்ஸை செய்யாமை, பொறுமை, கபடமின்மை, சத்குரு சேவை, மனச்சுத்தி, சரீர சுத்தி சன்மார்க்கத்தில் விடா முயற்சி, தேக சுவாதீனம், இந்திரிய விஷயங்களில் வெறுப்படைதல் தான் என்னும் அஹங்காரமின்மை, பிறப்பிறப்பு மூப்பு நோய் என்பனவற்றில் துக்கத்தையும் தோஷத்தையும் அறிதல். புத்திர களத்திர கிருக முதலியவற்றில் பிரியமற்றிருத்தல். இஷ்டா நிஷ்டங்கள் நேரிட்ட காலங்களில் எப்பொழுதும் ஒரே விதமான மனத்தோடிருத்தல் பகவானிடத்தில் (அவரைத் தவிர உத்தமமானவர் வேறில்லை என்னும்) அசஞ்சி யோகத்தாலே நிலையான பக்தி செய்தல், ஜனங்களில்லாத தனியிடத்தில் வாசம் செய்தல் ஜனக் கூட்டத்தில் விருப்பமற்றிருத்தல், ஆத்தும தத்துவ ஞானத்தில் எப்பொழுது மிருத்தல் தத்துவ ஞானத்திற்கு உத்தம பலன் மோட்சம் என்றறிதல், தத்துவ ஞானார்த்த தரிசனம்'' இந்த இருபதும் ஆகும். இவற்றிற்குப் புறம்பானவை (எதிர்மறையாயுள்ளவை) அக்ஞானமாகும்.

பின்னர் ஞேயமென்பது (அறிய வேண்டியதென்பது) யாதெனச் சொல்லப்படுகிறது.

இவ்வறிவால் எய்தும் உயிர்தன்னை
  ஈங்குரைக்கேன்
எவ்வறிவான் நல்லமுதம் எய்தலாம்—
  செவ்வையது
ஆதியில தெற்பரமாய்
  ஆன்ற பிரமமாய்
ஈதிலதுண் டென்றுரைப்ப தில்.

(இ-ள்) இ அறிவால் எய்தும் உயிர் தன்னை ஈங்கு உரைக்கேன்—ஞான சாதனத்தால் அடையவேண்டுவதான ஆத்மசொரூபத்தை இப்போது சொல்லுகிறேன். எ அறிவால்—எந்த அறிவைக் கொண்டு, நல் அமுதம் எய்தலாம்—சிறந்த மோட்சமாகிய ஆத்மநிஷ்டையை அடையலாமோ, செவ்வை அது—சிறந்ததான அது, ஆதி இலது—ஆதியில்லாதது எற்பரமாய்—என்னதீனத்ததாய், ஆன்ற பிரமமாய்—சிறந்த பிரமம் என்று சொல்லப்படுவதாய், இது இலது உண்டு என்று உரைப்பது இல்—இது இல்லாத அசத்தாகவோ உள்ளதாகிய சத்தாகவோ சொல்லப்படுவதில்லை.

ஜ்ஞேயம் யந்தத்ப்ரவக்ஷ்யாமி
யத்ஜ்ஞாத்வாம்ருதமச்நுதே
அநாதி மத்பரம்ப்ரஹ்ம
நஸத்தந்நாஸ துச்யதே.

(இ—ள்) க்ஞேயம்—அறிய வேண்டுவது யத்—எதுவோ, தத்—அதை ப்ரவக்ஷ்யாமி—சொல்லுகிறேன் யத்—எனது க்ஞாத்வா—அறிந்து அம்ருதம்—மோக்ஷத்தை, அச்நுதே—அடைவானோ. அநாதி—அநாதியாய் மத்பரம்—என்பரமான தத்—அது, ப்ரம்ம-ப்ருமம் (எனப்படும் ஆத்மா) தத்—அது, ஸத்-ஸத்து என்றுவது அஸத்-அஸத்து என்றுவது, நவச்யதே-சொல்லப்படுவதில்லை.

இதற்குச் சங்கரர் கூறும் உரையின் சாரமாவது:—அறிந்து கொள்ள வேண்டிய பிரும்மம் சத்துமன்று அசத்துமன்று சத் என்றால் இருப்பது. அசத் என்றால் இல்லாதது ஆகையால் பிரமம் இருப்பதுமன்று இல்லாததுமன்று என்று கொள்ள வேண்டியதாகிறது இவ்விதம் சொல்லலாமோ எனில். சில சுருதி (வேத) வாக்கியங்களைக் கொண்டு சொல்லலாம். எந்த வஸ்து இருக்கின்றதோ அது இருக்கிறதென்று சொல்லப்படுகிறது இருக்கின்றதாக எது சொல்லப்படுதல் இல்லையோ அது எப்பொழுதும் இல்லை. ஆதலால் எல்லாப் பொருள்களும் இருக்கின்றதென்பதையாவது இல்லை என்பதையாவது அனுசரித்தே யிருக்கின்றன, ஆகவே பிரும்மம் இருக்கின்றதென்னும் புத்திக்கு விஷயமா? இல்லை என்னும் புத்திக்கு விஷயமானதா? என்றால். எப்பொழுது இந்திரியங்களுக்கு விஷயமாதலில்லையோ அப்பொழுது இரண்டு புத்திக்கும் விஷயமாவதன்று. அறிந்து கொள்ள வேண்டிய பிரும்மம் இந்திரியங்களுக்கு விஷயமல்லாதபடியால் அது சப்தத்தாலே (வேதத்தாலே) அறியத்தகுந்தது அதனாலே சத்துமன்று அசத்து மன்று என்று சொல்லப்பட்டது

கேனோபநிஷத்து வாக்கியத்தில் பிரும்மம் தெரிந்த பொருளுக்கும் தெரியாத பொருளுக்கும் அந்நியமானது என்று கூறப்பட்டது. ஒரு வஸ்துவைக் குறித்துக் கூற வேண்டுமாயின், மாடு குதிரை பாடகன், பாகஞ்செய்கிறவன் வெளுப்பு, கறுப்பு. அதிகச் செல்வமுடையவன், அதிக மாடுகளையுடையவன் எனச் சாதி கிரியை குணம் சம்பந்தம் ஆகியவற்றை யொட்டிக் கூற வேண்டும், பிரும்மமோ ஜாதி முதலியவற்றால் சொல்லப்படத்தக்கது அன்று. இரண்டு வஸ்துக்கள் இருந்தாலன்றோ ஒன்றுடன் மற்றொன்றுக்குச் சம்பந்தம் சொல்லக்கூடும் என்ற பொருளில் வரும் சுருதி வாக்கியப்படி பிரும்மம் ஒன்றே யன்றி இரண்டாவதாகிய வஸ்து இல்லையாதலால் பிரும்மத்திற்கு வேறொன்றோடு சம்பந்தம் சொல்லக் கூடாது.

ஆதலால் பிரமத்தை 'சத்' என்றுவது 'அசத்' என்றுவது சொல்லக் கூடாது எதற்கு லக்ஷணம் சொல்ல மாட்டாமல் வாக்கு, மனம் முதலியன பின்னடைகின்றனவோ அந்தப்பிரும்மம் தனது ஆத்மாவாதலால் அதையொரு பிரமாணமும் குறிக்க மாட்டாது

ராமானுஜ வியாக்கியானச் சுருக்கம்:—எந்தப் பிரத்தியகாத்ம சொரு




பத்தை (ஜீவ சொரூபத்தை) அறிந்தால் பிறப்பு இறப்பு முதலிய பிரகிருதி சம்பந்தத்திலிருந்து நீங்கிச் சுத்தாத்ம சொரூபத்தை அடைவானே அந்த அறிய வேண்டியதான முக்தாத்ம சொரூபம் ஆதியற்றது. இதனாலே அந்தம் (முடிவு) அற்றது என்று கொள்ளவேண்டும் என்ற சுருதி வாக்கியத்தோடு அத்தியாயம் 2. சுலோகம் 20-யும் பார்க்க ஜீவ சொரூபம்வேறென்றும்அதுஎன்னைப்பரமாத்மாகவுடையது என்றும் அருளிய அத் சுலோகம்5-யும் பார்க்க ஆத்மாவும் (ஜீவாத்மா) ஜட வஸ்துக்களும் பரமாத்மாவுக்குச் சரீரம் என்றும், பரமாத்மா ஜீவாதிகளுக்குச் சுவாமி என்றும்—இந்தச் சுருதி வாக்கியங்களாலே சொல்லப்பட்டிருக்கின்றன. ஆத்மா பூரணத்வம் அல்லது மகத்துவம் உடைமையாலே அதற்குப் பிரமம் என்னும் பதம் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றது. சத் காரியம் அசத் காரணம்; ஜீவன் தனது பிரகிருதி விமுக்தாத்ம (பிரகிருதியினின்று விடுபட்ட) சொரூபத்தை அடைந்தால் அப்போது அவனைக் காரியம் என்ருவது காரணம் என்ருவது சொல்லக் கூடாது. இந்தக் காரிய காரணவஸ்தை, கரும சொரூபமான அவித்தையின் சம்பந்தத்தாலே உண்டானபடியால், ஸத், அஸத், சப்தங்களாலே ஆத்ம சொருபம் சொல்லப்படுதலில்லை.

மேலும் அதன் சொரூபமாவது .

எங்குங் கரம்பாத
மெங்குங்கண் சென்னிமுகம்
எங்குஞ் செவியா மியல்புடைத்தாய்—
இங்குலகில்
எப்பொருளுந் தன் தகவால்
ஏய்ந்து பரந்து நிற்கும்
அப்பொருளின் தன்மை அது

(இ-ள்) அ பொருளின் தன்மை-- அந்தப்பரிசுத்தாத்ம சொரூபமானது எங்கும் கரம்பாதம்—எல்லாப் பக்கங்களிலும் கை கால்களையுடையது; எங்கும்கண்சென்னிமுகம்-எல்லாப்பக்கங்களிலும் கண் தலை முகங்களையுடையது; எங்கும் செவியாம் இயல்புடைத்தாய்—எல்லாப்பக்கங்களிலும் செவிகள் வாய்ந்ததாய், இங்கு உலகில்—இந்தப் பிரபஞ்சத்தில் அதுள பொருளும் தன் தகவால் ஏய்ந்து பரந்து நிற்கும் — அப்பிரமம் எல்லாப் பொருள்களிலும் தன் தன்மையால் வியாபித்து நிற்கும்.

3
ஸர்வதப்பாணிபாதந்தத்
2
ஸர்வதோக்ஷிசிரோமுகம்
ஸர்வ: ச்ருதிமல்லோகே 1
2
ஸர்வ மாவ்ருத்ய திஷ்டதி

(இ-ள்) தத்—அந்தப் பிரும்மமானது, ஸர்வத: பாணிபாதம்—எவ்விடத்திலும் கைகளையும் கால்களையுமுடையது, ஸர்வதோக்ஷிசிரோமுகம்—எவ்விடத்திலேயும் கண்களையும் தலைகளையும் முகங்களையுமுடையது, ஸர்வத: ச்ருதிமத்—எவ்விடத்திலேயும் காதுகளையுமுடையது; லோகே உலகத்தில் ஸர்வம்—எல்லாவற்றையும், ஆவ்ருத்ய — வியாபித்துக் கொண்டு திஷ்டதி—இருக்கிறது.

இதற்கு ராமாநுஜர் கூறும் உரையின் சாரம் உற்று நோக்கத் தக்கது:—கர்மம் போய் பரிசுத்தமான ஜீவ சொரூபம் பிரகிருதி பரிணாமமான கை கால்கள் போனாலும் எல்லா இடங்களிலும் கை கால்களின் வேலைகளைச்செய்யச் சக்தியுள்ளது. அப்படியே கண் தலை வாய் காதுஇவைகளில்லாத போனாலும் எல்லா இடங்களிலும் அவற்றின் வேலையைச் செய்யச் சக்தியுள்ளது

பகவானுடைய சொரூபத்துக்குக் கை கால்கள் முதலியவைகள் இல்லை. ஆனாலும்அது எங்கும் அவயவங்களின் வேலைகளைச் செய்கிறது என்றுவேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, அடியோடு கர்மம் போகப்பெற்றவன் முக்தன் பகவானைப் போலாகிறான் என்று சொல்லியிருக்கிறபடியால். அவனும் அவ்வாறே செய்கிறான் முக்தனுடைய அறிவு கட்டுப்பாடில்லாமல் எப்பொழுதும் எங்கும் நிலையாய்ப் பரவியிருக்கிறது இதனால் பகவத்ஸாயுஜ்யத்தை அடைந்த ஜீவாத்மாவின் சொரூபம் சொல்லப்பட்டது

ஞேயம் என்பது பிரும்மம் என்றும் முக்தியடைந்த ஜீவாத்மா என்றும் வெவ்வேறாக உரையாசிரியர்கள் பொருள் கூறுவது உற்று நோக்கத் தக்கது.

---

ஆரூடம்! ஜாதக பலன்!!

ஜனன கால விவரம் அல்லது முழுப் பெயர், சுமார் வயது, செய்யும் தொழில். கடிதம் எழுதும் நேரம் தேவை. 1 முதல் 5 எதிர்காலக் கேள்விகளுக்குப் பதில் எழுத ரூ 2. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் ரூபா 6. முக்கிய



யோகாம்சங்களும் சுருக்கமான பலனும் உள்ள ஒரு ஜாதக குறிப்புக்கு ரூ. 5. ஒரு தசைக்கு புக்திவாரி பலன் எழுத ரூ 10 கிரஹசார தோஷம் நீங்கி, சகல நன்மைகளும் உண்டாவதற்கு "விஜய ரக்ஷணி" கவசம் 1-க்கு ரூ 7-8-0 பிரத்யேக ரக்ஷை ரூ 12-8. வி பி செலவு தனி

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,
Astrologer & Journalist,
Triplicane :. Madras 5.

எல்லோரும் விரும்புவது

N°1506 அசோகா MILD SCENTED ASOKA நெ.1506

எம். கே. கிருஷ்ண செட்டி
அசோகா பாக்டரி, கோயமுத்தூர்



# நேற்றும் நாளையும்

— கே. பி. கேசவமேனன் —

## 3

## இதுவா போர்?

ஜப்பானிய ஆக்கிரமிப்புத் துவங்கின காலத்தில் நான் சிங்கப்பூர் பட்டினத்திலிருந்து ஐந்து மைல் தூரத்திலுள்ள பயாலேபார் என்ற இடத்தில் வசித்துக் கொண்டிருந்தேன். பட்டினத்திலிருந்து தூர விலகியிருந்தால் அதிகப் பாதுகாப்பாகவிருக்குமென்று அப்பொழுது கருதியிருந்தேன். இதே எண்ணத்துடன் சில நண்பர்களும், அவர்களுடைய குடும்பங்களும் என் வீட்டில் வந்து தங்கியிருந்தார்கள். அக்காலத்தில் ஏறக் குறைய 53 பேர்கள் அங்கு இருந்தார்கள். தற்காப்பிற்கான முன் ஏற்பாடுகள் செய்வதில் நாங்கள் சோம்பவில்லை. ஒரு சுரங்கம் கட்டித் தயாராக்கி, அதைச் சுற்றி நாற்புறங்களிலும் மணல் மூட்டைகளை அடுக்கி வைத்தோம். உணவுப் பொருள்களைச் சேகரித்தோம். காயம் பட்டால் அதற்கவசியமான மருந்துகளை வாங்கி வைத்தோம். எங்கள் கூட்டத்தில் ஒன்றோ இரண்டோ வைத்தியர்கள் இருந்தது எங்களுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

போர் துவங்கும் முதலே ஜப்பானியருடைய விமானங்கள் அடிக்கடி சிங்கப்பூர் வந்து குண்டு வீசிக் கொண்டிருந்தன. ஜப்பானியர் சிங்கப்பூரை அடுத்து வரவர விமானங்களின் எண்ணிக்கையும், குண்டுகளால் உண்டாகும் நாசத்தின் அளவும் அதிகரிக்கத் தொடங்கின. முன்னேறுவதற்கு அனுகூலமாகத் தங்கள் விமான சக்தியைத் தான் ஜப்பானியர் அதிகம் உபயோகித்தார்கள். குளிக்கவும், உண்ணவும், உறங்கவும் கூட எங்களுக்குக் கஷ்டமாய்விட்டது. ஜப்பானியருடைய விமானங்களின் வரவையறிவிக்கும் சங்கின் சத்தம் நாங்கள் குளிக்கும் போதோ, உண்ணும் போதோ, உறங்கும் போதோ கேட்கலாயிற்று. அதைக் கேட்டவுடன் நாங்கள் விழுந்தடித்துக் கொண்டு சுரங்கத்திற்குள் ஓடி ஒளிந்து கொள்ளுவோம். சிறு குழந்தைகளும், நாய்களும் கூட அந்தச் சங்குச் சத்தம் கேட்டுச் சுரங்கத்திற்கு ஓடுவதைப் பார்க்கும் போது யாருக்குத் தான் பரிதாபமாக விருக்காது? விமானத் தளங்கள், துறைமுகத்தையடுத்த கிடங்குகள் கிட்டங்கிகள், அடுத்திருந்த கப்பல்கள், நகரத்தில் பல ஸ்தலங்கள், எண்ணெய்க் கிணறுகள், இவைகள் மீதெல்லாம் ஜப்பானியர் குண்டு வீசி நாசம் செய்தனர். அவர்களுடைய விமானங்களின் போக்கு வரத்துகளுக்கு யாதொரு தடையும் இல்லை என்ற கட்டம் வந்துவிட்டது. சிங்கப்பூர் கடற் படைத் தளத்தில் செய்திருந்த மகத்தான ஏற்பாடுகள் எல்லாம் வீணாயின. ஜப்பானிய ஆக்கிரமிப்பைத் தடுப்பதற்காகவே இருபதாண்டுகளாக இத்தளத்தைப் பலப்படுத்திக் கொண்டிருந்தனர். அதற்காக எத்தனையோ கோடி பவுன்கள் செலவு செய்தனர். இத்தளம் இருக்கும் வரை எந்தப் பகைவருக்கும் பயப்பட வேண்டியதில்லை என்ற நம்பிக்கை பொது மக்களிடையில் உண்டாகவும் செய்தது. இப்பொழுது அதெல்லாம் முற்றும் அழிந்தது. அதிகாரிகளும், படையினரும், தொழிலாளிகளும் அங்கிருந்து பின் வாங்கத் தொடங்கினர். என்னவென்று கூற முடியாத ஒரு பயம் எங்கும் வியாபித்தது.

இக்காலத்தில் சிங்கப்பூரை ஆக்கிரமிப்பதற்காகப் பெருத்த ஏற்பாடுகளை ஜப்பானியர் ஜோகூரில் செய்து கொண்டிருந்தனர். மூன்று வழிகளாகச் சிங்கப்பூரில் நுழைய அவர்கள் முயற்சித்தனர். அவர்களுடைய படைகள் பல பாகங்களிலிருந்தும் வந்து கூடின. பீரங்கிகளை நிறுத்தி வைத்தனர். ஜல சந்தியைக் கடப்பதற்கு ரப்பர் படகுகளைத் தயார் செய்தனர். பிப்ரவரி 7-ம் தேதிக்கு முன்பே இவையெல்லாம் தயாராயின. ஜோகூரில் புதிய கவர்ன்மெண்ட் ஆபீஸிலிருந்து, ஜப்பானியரின் சேனைத் தலைவனாகிய புகழ் பெற்ற யமஷிதா தன்னுடைய படைகளின் முற் போக்கை இடைவிடாமல் கண்காணித்து வந்தார்.

அடிக்கடி பீரங்கிச் சத்தம் தொலைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்ததல்லாது 8-ம் தேதி மாலை வரை வேறு முக்கிய சம்பவம் எதுவும் நிகழவில்லை. எந்தச் சமயத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற பயம் மனதை விட்டு அகலவில்லை. ஜப்பானியர் எந்த வழியாகப் பட்டணத்திற்குள் நுழையப் போகிறார்கள் என்று நிச்சயமாகத் தெரியவில்லை. வீட்டின் முன் கூடம், உணவு அருந்தும் பாகம், சமையலறை, வராந்தா, இவ்விடங்களிலெல்லாம் கூட்டம் கூடி, ஏதேதோ சம்பாஷித்துக் கொண்டு இருந்தோம். நேரம் ஏழு மணியாகிவிட்டது. சிறுவர் சாப்பிடும் நேரம். பளிச்சென்று ஒரு பிரகாசமும், அதைத் தொடர்ந்து காதையடைக்கும் ஒரு பயங்கரச் சப்தமும் கேட்டது. குண்டு வெடித்தது என் வீட்டின் முன் புறமாகத் தான் இருக்க வேண்டுமென்றே தோன்றிற்று. ஆனால், உண்மையில் அது வெடித்தது சிறிது தொலைவிலிருந்தது. அங்கிருந்து கூக் குரல் கேட்டது. ஆட்கள் ரோடின் வழியாக ஓடுவதைக் கண்டோம். எல்லோரும் பதறி எழுந்தோம். அதற்குள் மற்றொரு பீரங்கிக் குண்டு வெடித்தது. அதைத் தொடர்ந்து இன்னொரு குண்டின் சப்தமும் கேட்டது. அது முன்னதைவிடச் சமீபத்திலிருந்து கேட்டது. விளக்குகளை அணைத்தோம். குழந்தைகள் பயந்து கூக்குரலிட்டன. வயது வந்தவர் பதறி ஓடுகின்றனர். எல்லோரும் என்ன செய்வதென்றறியாமல் திகைக்கின்றனர். நோயால் வாடும் என் மகள் நினைவிழந்து கிடக்கின்றாள். எங்கும் காரிருள் படருகிறது. அங்கு தங்குவது ஆபத்தென்று தோன்றியது. வீட்டைப் பார்த்துக் கொள்வதற்கு மூன்று பேரை அங்கே நிறுத்தி விட்டு மற்றவர்கள் நகரத்திற்குப் போய்விட வேண்டுமென்று தீர்மானித்தோம். அதிர்ஷ்ட வசமாக அப்பொழுது அங்கே இரண்டு கார்கள் இருந்தன. சிலர் அதில் ஏறி உடனடியாக நகரத்திற்குப் புறப்பட்டுப் போயினர். இன்னும் சிலர் மறு நாட் காலையில் புறப்பட்டுப் போயினர். இரவு 12 மணியாகு முன் பீரங்கிகள் சப்தம் தாராளமாகக் கேட்கத் தொடங்கியது. அது ஒரு பக்கத்திலிருந்து மாத்திரமல்ல. பல திக்குகளிலிருந்தும் கேட்டது. இரவு ஒரு மணிக்கு சில வாணங்கள் வானத்தை ஊடுருவிப் போவது தூரத்தில் தெரிந்தது. தாங்கள் ஜல சந்தியைக் கடந்து கரையேறி விட்டார்கள் என்று ஜப்பானியர் அக்கரையிலிருந்த அவருடைய படையினருக்கு அறிவிக்கும் அடையாளக் குறிகள் அவையென நாங்கள் பின்னர் அறிந்தோம்.

மறு நாட் காலையில் நகரத்தில் நாங்கள் தங்கியிருந்த வீட்டின் முன் பக்கம் விமானங்களைத் தடுப்பதற்காக பெரிய துப்பாக்கிகள் வைத்திரு

பதைக் கண்டோம். அவைகளை அழிப்பதற்காக ஜப்பானியர் அங்கே குண்டு வீசாமலிருக்கப் போவதில்லை. பெரிய துப்பாக்கிகள் வைத்திருக்கும் இடத்திற்கு அருகில் தங்குவது ஆபத்தாக இருக்கும் என்று தோன்றியது. அன்று இரண்டு மூன்று தடவைகள் ஜப்பானியர் விமானங்கள் அந்தப் பிராந்தியத்தில் குண்டுகளை வீசின. 12-ம் தேதி அந்த வீட்டை விட்டு வேறு வீட்டிற்கு மாறினோம். உணவுப் பொருள்களையும், மாற்று உடைகளையும் கொண்டு போவதற்கு இயலவில்லை. வாகனங்களோ, கூலியாட்களோ கிடைப்பது கடினமாகிவிட்டது. இவ்விதமாக 13-ம் தேதிக்குள்ளாக நாங்கள் எமது வாச ஸ்தலங்களை மூன்று நான்கு தடவைகள் மாற்ற நேரிட்டது. உயிரை காத்துக் கொள்வதற்காக பாய்ந்தோடும் காட்டு விலங்குகளைப் போல ஓரிடம் விட்டு மற்றோரிடத்திற்கு ஓடிக் கொண்டிருந்தோம். உணவும், உறக்கமும் இல்லாததால் களைப்பும், குளிக்கவும் உடை மாற்றவும் இயலாத கஷ்டமும் அனுபவித்துக் கொண்டு நாட்களைக் கடத்தினோம். பிரிட்டிஷாரின் பீரங்கி குண்டுகளையும், போராட்டத்தையும் பொருட்படுத்தாமல் 1000 கெஜம் அகலமுள்ள ஜல சந்தியையும் கடந்து ஜப்பானியர் சிங்கப்பூர் தீவில் வந்து சேர்ந்தனர். அத்துடன் போரும் ஒரு பயங்கர கட்டத்தை அடைந்தது. விமானக் குண்டுகளும், பீரங்கிக் குண்டுகளும் இடைவிடாமல் விழத்துடங்கின. ரோடுகள் பழுதாகின்றன. பாலங்கள், உடைகின்றன. வீடுகள் விழுகின்றன. மரங்கள் முறிந்து சாய்கின்றன. காயப்பட்டவரின் கூக்குரல் நகரமெல்லாம் எதிரொலி செய்கிறது. புகையும், தூசியும் வானத்தை மூடுகிறது. ஆயிரமாயிரமாக மக்கள் மடிகின்றனர்.

பிரிட்டிஷ் படைக்கு நிற்க இடமில்லாது போய்விட்டது. மூன்று வழியாக பகைவர் நெருங்கத் தொடங்கினர். வெகு சீக்கிரத்தில் ஜப்பானியர் சிங்கப்பூர் நகரத்திற்குள் நுழையத்தான் போகிறார்கள். ரோட்டிலும், தெருவிலும் அடியும், பிடியும் எல்லாம் நடக்கப் போகின்றன. பகைவரைத் தடுத்து நிறுத்துவதற்குச் சக்தி இல்லாத போது போராடுவதால் என்ன பயன். பொது மக்களுக்கு அழிவை உண்டாக்குவதன்றி வேறு யாதொரு உபயோகமும் உண்டாகாதெனப் பிரிட்டிஷ் ராணுவ அதிகாரிகள் பலருக்கும் தோன்றியது அன்று காலையில் அவர்கள் கூட்டம் கூடி ஆலோசனை செய்தனர். சரணமடைவதல்லாது வேறு வழியில்லையெனத் தீர்மானித்தனர். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யத்தொடங்கினர். ஜப்பானியரின் முன்னேற்றத்தின் வேகம் கணத்திற்குக்கணம் அதிகரித்து வந்தது. சரணடையாவிடில் வரப்போகும் வருங்காலத்தைச் சுட்டிக் காண்பித்துக் கொண்டு பல துண்டுப் பிரசுரங்களை விமானங்களிலிருந்து வீசியெறிந்தனர். நகரம் முழுவதையும் குண்டு வீசி அழிக்கப் போகிறார்கள் என்றொரு செய்தி பரவியது. மக்கள் பதறினர். அங்குமிங்கும் ஓடத் தொடங்கினர். எங்கு ஓடுவது? கூண்டில் அகப்பட்ட எலிகளைப் போலாயினர். நாங்கள் எவ்விதமாவது பயா லேபாரில் எமது வீட்டிற்குத் திரும்பிப் போய் விட வேண்டுமென்று தீர்மானித்தோம்.

நேரம் மூன்று மணியாயிற்று. நகரத்திலிருந்து எங்களைப் பயாலேபருக்கு கொண்டு போவதற்கு பல தடவைகளாக அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருந்த கார் எல்லோரையும் எனது வீட்டிற்குக் கொண்டு சேர்த்தது. அது வரை உணவருந்த இயலாத சிலர் பசியினால் இளைத்துப் பொறுமையிழந்து சமையலறைக்குள் ஓடினர். ஆனால் உணவருந்தவும். சமயம் கிடைக்கவில்லை. அதற்குள் நிலைமை மாறிவிட்டது. ஜப்பானியப் படை சமீபத்தில் வரத் தொடங்கிவிட்டது. உறுமிக் கொண்டு வரும் பீரங்கி குண்டுகளின் சப்தம் கேட்டது. பாதுகாப்பை நாடிச் சிலர் சுரங்கத்திற்குள் ஓடினர். மற்றவர்க்கு ஓடுவதற்கும் நேரம் கிடைக்கவில்லை. குண்டுகளும், தோட்டாக்களும் நாலு பக்கமும் பொழியத் தொடங்கின. பீரங்கிக் குண்டு விழுந்து சமையலறையில் சுவர் இடிந்து விழுந்தது. அதற்குள் மற்றொன்று முற்றத்தில் வந்து விழுந்தது. மேற்கூரை இடிந்தது. வீட்டுச் சாமான்கள் சிதறடிக்கப்பட்டன. சிறியவரும், பெரியவரும் பீதியடைந்து ஏகோபித்துக் கூக்குரலிடுகின்றனர். பல குரல்கள் ஏக காலத்தில் பற்பல தெய்வங்களின் பெயரைக் கூறிப் பிரார்த்தனை செய்தன. ஒரு இடம் விட்டு மற்றொரு இடம் போக முடியாமல் ஒவ்வொருவரும் மற்றவருடைய பாதுகாவலைப் பற்றித் தனித் தனியாக கூப்பிட்டுக் கேட்டனர். பீரங்கிக் குண்டுகள் பட்டுக் காயமடைந்து நோய் பொறுக்க முடியாமல் உதவிக்கு ஆட்களைக் கூப்பிடும் அழுகைக் குரல்களின் பரிதாபகரமான சத்தம் தூரத்திலிருந்து கேட்டது. இந்நிலைமை மறு நாட் காலை வரை நீடித்தது. ஒருவராவது பிழைத்து இருப்போமா என்ற ஐயம் எங்களுக்குண்டாகியது. ஒவ்வொரு கணமும் மரணத்தை எதிர்பார்த்துக் கொண்டு அந்தப் பயங்கர இரவை ஒரு விதமாகக் கழித்தோம்.

விடிந்த பிறகு எங்களைச் சுற்றிப் பார்க்கும் போது கண்ட காட்சி மிகவும் பயங்கரமாக இருந்தது. வீடெல்லாம் இடிந்து விழுந்து விட்டது. அங்கு தங்குவதற்கு இயலாததாய் விட்டது. ஜப்பானியர் அவ்வழியில் போவதைக் கண்டோம். சிலர் எனது வீட்டின் வேலிக்குள் நுழைந்து சென்றனர். அன்று காலை நாங்கள் அங்கிருந்து மற்றோரிடத்திற்கு மாறிச் சென்றோம். வெளியில் நடமாடுவதற்கும் ஆபத்தான சமயம் அது. வெடி குண்டுகளையும், இடிந்து விழுந்த வீடுகளையும்குழிகள்விழுந்த வீடுகளையும், குழிகள் விழுந்த ரோடுகளையும், கண்டால் அருவருப்பைத் தரும் பிணங்களையும், காயமடைந்து கிடந்த நிர்ப்பாக்கியர்களையும், குரூர ஜப்பானியரின் மிருகத்தனமான நடவடிக்கைகளையும், கண்டவர் வீட்டை விட்டு வெளியில் செல்லத் துணிவார்களா? மக்களும், வாகனங்களும் நிறைந்திருந்த வீதிகள் வெறிச் சென்றிருந்தன. இத்தருணம் பார்த்து எத்தனையோ திருடர்கள் வீடுகளில் புகுந்து பொருள்களைக் கொள்ளையிட்டனர். வெடித்த குண்டுகளிலிருந்தும் ஷெல்களிலிருந்தும் வெளியான துர் நாற்றம் தாங்க முடியவில்லை. தந்தித் தூண்கள் ரோடின் மேல் குறுக்கும் நெடுக்குமாக விழுந்து கிடந்தன. லாரிகளும், கார்களும், பஸ்களும், வண்டிகளும் ஆங்காங்கே விழுந்து கிடந்தன கடைகள் இடிந்து அவைகளிலிருந்த பொருள்கள் உள்ளும் புறமும் தாறுமாறாய்ச் சிதறிக் கிடந்தன. இடிந்து விழுந்த வீட்டின் அடியிலும், சுவர்களின் அடியிலும் அகப்பட்டுக் கொண்டவரை வெளியிலெடுக்கச் சிலர் சலிப்பில்லாமல் முயன்று கொண்டிருந்தனர். கற்களையும், மண்ணையும் அப்புறப்படுத்தி அவைகளுக்கடியிலிருந்த பிணங்களை வெளியில் எடுத்தனர். "என் மனைவியும் குழந்தைகளும் எங்கே?" என்று ஒரு சீனன் கதறுகிறான். ஓடு, கல், மண், மரம் இவைகளை நீக்கி அடியில் இறந்து கிடந்த அவனுடைய மனைவியையும், குழந்தைகளையும் வெளியே இழுக்கிறார்கள். அந்த நிர்ப்பாக்கிய மனிதன் அவர்கள் மேல் விழுந்து அழுகின்றான். மூர்ச்சை அடைகின்றான். இதையெல்லாம் கண்ட மக்கள் பிரமித்துப் போய் "இதுவா போர்" என்று நினைத்து அதிசயிக்கின்றனர். எது என்னவானால் என்ன? யார் தோற்றாலும் சரி, யார் ஜயித்தாலும் சரி, எப்படியாவது இந்த யுத்தம் முடிந்தால் போதும் என்று நாங்களெல்லாம் கடவுளை வேண்டிக் கொண்டோம்.

---





# ரகசிய மாப்பிள்ளை!

விஸ்வாமித்திரன்

ரூமையல் காரன் கீழ் வரும் கதையை கூற ஆரம்பித்தான். சூரிய புரியில் சிவகேது என்ற ஒரு பிரபல வியாபாரி வசித்து வந்தான். அவனுக்கு ஏராளமான பணம் இருந்தது. அதோடு மோஹன் என்ற அழகிய பிள்ளையும் இருந்தான். அந் நகரிலிருந்த எல்லோருமே தங்கள் பெண்களை அவனுக்கே கலியாணம் செய்து கொடுக்க வேண்டும் என்று கோட்டை கட்டிக்கொண்டிருந்தனர். அந்த சமயத்தில் மோஹன் தந்தை திடீரென இறந்துவிட்டார். வியாபாரத்தை அன்று முதல் மோஹனே பார்க்க வேண்டியதாகி விட்டது. கவலையில்லாமல் ஊரைச் சுற்றிக் கொண்டிருந்த அவனுக்கு வேலை செய்வதென்றால் சிறிது கஷ்டமாகத்தான் இருந்தது. வியாபாரத்தில் அவன் அதிகம் ஊக்கம் காட்டாததால் அவனுடைய தகப்பனார் வைத்து விட்டுப்போன சொத்து க்ஷீணிக்க ஆரம்பித்தது. கடைசியில் வியாபாரம் மிகவும் இளைத்து விட்டது.

வியாபாரம் மிகவும் குறைந்திருந்த சமயத்தில் ஒருநாள் மாலையில் பெண் ஒருத்தி அவன் கடைக்கு வந்தாள். அவளுக்கு என்ன வேண்டுமென்று கேட்டான் மோஹன். ஆனால் மோஹன் அழகில் மோகித்துக் கிடந்த அவளுக்கு சிறிது நேரம் தான் எந்த இடத்திலிருக்கிறோம் என்று தெரிய வில்லை.

சில நிமிஷங்களுக்குப் பிறகு பூலோக நினைவு வரவே, "எனக்கு உயர்ந்த புடவை வேண்டும். என்ன விலையானாலும் கொடுங்கள்" என்றாள். மோஹன் அவன் கடையிலிருந்த புடவைகளில் மிகவும் அழகியது ஒன்றை எடுத்துக்கொடுத்துவிட்டு அதன் விலையையும் சொன்னான். புடவையை வாங்கிக்கொண்ட அப்பெண், முகத்தில் மூடியிருந்த திரையை விலக்கி புடவையைப் பார்த்தாள். மோஹன் மறுகணம் அவள் அழகில் மயங்கி நின்றான். அவள் அப்ஸரஸா, கின்னரியா அல்லது பூலோகத்தில் வாழும் மங்கையா என்று சிந்தித்து அவளிடம் பேச வாயெடுத்தான். அதற்குள் அவள் புடவையை எடுத்துக்கொண்டு, "நான் வருகிறேன்" என்று சொல்லி விட்டு புடவைக்கு வேண்டிய பணத்தையும் கொடுக்காமல் அங்கிருந்து அகன்றாள்.



அன்று முதல் அவள் அழகு அவன் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. தினமும் அவளையே எண்ணி ஏங்குவான். எப்படியாவது அவளை மணக்க வேண்டும் என்று வீண் சிந்தனை செய்தான். அங்கு அப்பெண் மோஹன் அழகில் உயிரையே கொடுத்து விட்டவள் போல் ஏங்கினாள். அவள் வகித்து வரும் உயர்ந்த ஸ்தானம் அவனை மணக்க முடியாமல் செய்தது. ஆனால் அந்தக் கட்டுப் பாடுகளுக்கு அவள் சிந்தனை உள் பட வில்லை. எப்பொழுது மற்றொரு சந்தர்ப்பம் கிடைக்கப் போகிறது, எப்பொழுது அவனைப் பார்க்கலாம் என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தாள். அவ்வழகி அந்த தெருப்பக்கமாவது என்றைக்காவது வரமாட்டாளா என்று அவள் வரவைப் பார்த்த வண்ணம் கடையின் வாயிலிலேயே உட்கார்ந்து கொண்டிருந்தான்.

வெகு நாட்கள் வரை அவளைக் காணாததால் ஏக்கங்கொண்ட மோஹன் களைப்புற்று ஒரு நாள் கடைவாயிலில் தலையில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அப்பொழுது இருட்டும் சமயம். அந்த சமயத்தில் முகமூடி அணிந்த பெண் ஒருத்தி வந்து கடையினுள் நுழைந்தாள். கவலையிலாழ்ந்திருந்த அவனுக்கு அவள் வந்தது தெரிய வில்லை. "கடைக்காரரே, நல்ல புடவையாக இருந்

39179

தால் எடுத்துக் காட்டும்" என்றாள் அப் பெண். பதிலே சொல்லாமல் உட்கார்ந்திருந்தான் மோஹன். "ஏன் ஐயா, வியாபாரம் செய்ய உத்தேசமா இல்லை நன்றாகத் தூங்கப் போகிறீரா? என்று கேட்டாள். குரல் கொஞ்சம் அதட்டலாக இருக்கவே விழித்துக் கொண்டான் மோஹன். பர பரப்புடன் எழுந்திருந்து "என்ன வேண்டும்" என்



று கேட்டான். "நல்ல புடவை இருந்தால் கொடுங்கள்" என்று கூறினாள் அவள். வெகு நேரம் தேடிய பின் மிகவும் அழகிய புடவை ஒன்றை எடுத்துக்கொடுத்தான் மோஹன், புடவையை எடுத்துக் கொண்டு பதிலே சொல்லாமல் உடனே வெளியேறினாள் அவள். பணமும் கொடுக்காமல், பதிலும் சொல்லாமல் பேசாமடந்தையாகச் சென்ற அப்பெண்ணிடம் கடுமையான கோபம் வந்தது மோஹனுக்கு. கண்டபடி திட்டினான். அவனுக்கேற்பட்ட அதிர்ச்சியால் கடையை மூடிக்கொண்டு போகக் கிளம்பினான். அப்படி மூடும் பொழுது வாயில் படியில் ஒரு மடித்துக் கிடந்த காகிதம் கிடந்தது. அதை எடுத்துக் கிழித்து விடப் போனான். ஆனால் மற்றோர் எண்ணம் அதைத் தடுக்கவே மெதுவாக அதைப் பிரித்தான். அதை முழுவதும் பார்த்த பிறகு அவன் அடைந்த சந்தோஷத்தற்கு அளவே இல்லை. அதில்

"என் அருமை மோஹன்,

நான் தங்களை பார்த்ததிலிருந்து உங்களையே மணக்க வேண்டும் என்று தீர்மானித்து விட்டேன். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் என்பதைப் பார்க்கத்தான் இன்று வந்தேன். நான் மணந்து கொள்வது என்பது அவ்வளவு லேசான காரியமல்ல. எனினும் தாங்கள் என்னை மணக்க விரும்பினால் இன்றிரவு பன்னிரண்டு மணிக்கு ஊருக்கு வெளியிலுள்ள பாழடைந்த காளி கோயிலுக்கு பின்னாலிருக்கும் புளிய மரத்தடியில் சந்தியுங்கள்.... இப்படிக்கு தங்கள் அன்புள்ள பெண் என்று எழுதியிருந்தது. கடிதம் வராதிருந்தால் கஷ்டப்பட்டாவது அவளைப் பார்த்து விடுவது என்று தீர்மானித்திருந்த அவன் கடிதத்தைப் பார்த்ததும் விடுவானா. "அடாடா,ஏமார்ந்து போய் விட்டேனே. இன்றும் அவ் வழகியேதான் வந்தாளா. அவளை வா என்றுகூட அழைக்கவில்லையே என்றெல்லாம் எண்ணி சங்கடப்பட்டுக் கொண்டே வீடு திரும்பினான்.

சுமார் பதினொரு மணிக்கு ஒருவருக்கும் தெரியாமல் வீட்டை விட்டுக் கிளம்பினான். பன்னிரண்டு மணி அடிக்க சில வினாடிகளுக்கு முன் காளிகோயிலுக்கு வந்தான். புளியமரத்தடியில் வந்து சேர்ந்தான். அங்கு மனித சஞ்சாரமே கிடையாது அங்கு மிங்கும் ஓடிக்கொண்டிருந்த நரிகளின் காலடிச் சப்தம் யாரோ வருவதுபோல் பயமுறுத்திக் கொண்டிருந்தது மோஹனை. சுவர்க்கோழிகளின் ரீங்காரம் தைரியமுள்ள மோஹனையே பயப்படச் செய்தது.

"நம்மைக் கொலை செய்யயாராவது ஏற்பாடு செய்திருக்கிறார்களா. நம் கடைக்கு வந்தது பெண் அல்ல யாரோ நம் விரோதி. இம்மாதிரி தந்திரம் செய்து நம்மைத் தொலைத்து விட ஏற்பாடு செய்திருக்கிறான்." என்று திகிலடைந்தான் மோஹன். வெகு தூரத்தில் மிகவும் வேகமாகவந்து கொண்டிருந்த வெளுப்பான உருவம் அவனுக்குப் பயத்தை அதிகரித்தது. பிசாசுதான் வருகிறது. புளிய மரத்துக்குத்தான் நேரே வருகிறது என்று எண்ணிய போது அவன் உடல்வியர்த்தது. நாக்கு உலர்ந்தது தலையையும் சுற்ற ஆரம்பித்தது அப்படியே கீழேவிழும் நிலைமைக்கு வந்து விட்ட ன்



"என்ன மோஹன் இது. இப்படிப் பயப் படுகிறீர்கள்" என்று அவனருகில் வந்த அந்த வெள்ளைத்திரை யணிந்திருந்த உருவம் கூறி அவன் கையையும் பிடித்துக் கொண்டது. அந்தக் குரல் அவனுக்கு பயத்தை தணித்தது. "நீயார்? என்று சந்தேகத்துடன் கேட்டான். முக மூடியை சிறிது விலக்கி "நான் யார் என்று தெரிகிறதா" என்று கேட்டாள் அவள். "அன்று கடையில் கண்ட அதே உருவம்" என்று வாய் விட்டுக் கூறினான் மோஹன்.

"நான் இவ்வூர் அரசனின் பெண். தேவ குமாரி என்று பெயர். என்னை மணப்பது என்பது இந்த ஜன்மத்தில் முடியாத காரியம். அப்படி முடியாத காரியத்தில் ஏன் பிரவேசித்தாய் என்று கேட்கிறீர்களா? சொல்கிறேன். அக்காரியத்தை முடியும்படி





செய்வதற்கு ஒரு யுக்தி இருக்கிறது. எங்கள் தகப்பனார் என்னைக் கலியாணம் செய்து கொடுக்க ஒரு நிபந்தனை போட்டிருக்கிறார். எந்த யுவன் ஒருவன் அரண்மனைக் கட்டுக் காவலைத் தாண்டி என் பெண்ணைச் சந்தித்து பேசுகிறானோ அவனே அவளைக் கலியாணம் செய்து கொள்ளலாம் என்ற நிபந்தனை அது. "என்று சொல்லி முடிப்பதற்குள்.

"பூ.... இவ்வளவுதானா நான் ஒரே நிமிஷத்தில் கலியாணம் செய்து கொண்டு விடுகிறேன்" என்றான் மோஹன்.

"அவசரப் படாதீர்கள்: நீங்கள் நினைப்பதுபோல் அது அவ்வளவு சுலபமல்ல. என்னுடைய அறையின் வாயிற் புறத்தில் அடியில் ஒரு பெரிய பளிங்குக் கல் போடப் பட்டிருக்கிறது. அதன் மூலமாகத்தான் எந்த ஆண் பிள்ளையும் வர முடியும். வேறு வழிகிடையாது. அப்படி வருகிற ஆண் பிள்ளையின் கால் அதில் பட்ட மாத்திரத்தில் அவன் கல்லாகி விடுவான். அம்மாதிரி கல்லான ஆண்பிள்ளைகளை நாற்றுக்கணக்கில் என் அறையில் தாங்கள் காணலாம்" என்றாள் அவள்.

"அப்படியானால் நான் கல்லாக விரும்பவில்லை" என்றான் மோஹன்.

"இல்லை அதற்கும்வழிசொல்லுகிறேன். ஒரு ஆண் அக்கல்லை மிதித்தால் தான் கல்லாவானே தவிர பெண்கள் கல்லாக மாட்டார்கள். அரண்மனையைத் தாண்டி என் அறைக்குள் வருவது என்பதும் முடியாதகாரியம். ஆகவே தாங்கள் நாளை இந்நேரத்திற்கு இங்குவந்தால் அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்கிறேன். நான் கூறுகிறபடி செய்யத் தயாராயிருங்கள்" என்று கூறிஅவன் மறுவார்த்தை கூறுமுன் மின்னல்வேகத்தில் மறைந்துவிட்டாள்.

மறுநாள் அவள் குறிப்பிட்ட நேரத்துக்கு காளி கோயிலை அடைந்தான் மோஹன். சிறிது நேரத்துக்கெல்லாம் அங்கு இரு



வேலையாட்களும், இரண்டு பெண்களும் தோன்றினர். அவர்கள் இரண்டு பெரிய பெட்டிகளும் கொண்டு வந்திருந்தனர். அங்கு வந்த பெண் ஒருவள்கடிதம் ஒன்றை மோஹனிடம் கொடுத்தாள். அதைப் படித்ததும் அவன் முகம் வியர்த்தது.சிறிதுதேற்றிக் கொண்டு ஒருபெரிய பெட்டிக்குள் அவன் உட்கார்ந்து கொண்டான். அவன் தலைமேல் இன்னும் சில உயர்ந்த சாமான்களை வைத்து மூடி விட்டு பெட்டிகளை எல்லோரும் எடுத்துக்கொண்டு எல்லோரும் அரண்மனையை நோக்கி கிளம்பினர்.

அரண்மனை வாயிற்படியில் நுழைந்ததும், "யாரப்பா: அது. பெட்டி எங்கே போகிறது" என்று கேட்டான் ஒருவன். எல்லோரும் திரும்பினர். அரசன் நின்று கொண்டிருப்பதைக் கண்டதும் பயந்து போய் விட்டனர். பயத்தினால் விழிக்கவே. "என்னடா: திருட்டுப் பயல்களா. அரண்மனையில் கொள்ளை போட வந்திருக்கிறீர்களா?" என்று அதட்டலாகக் கேட்டான். உடனே வந்திருந்த பெண்களில் ஒருத்தி "மகாராஜா: நாளைக்கு சின்ன எஜமானியம்மாவுக்கு பிறந்த நாளோல்லியோ. அதற்காக ஆடையாபரணங்கள் எல்லாம் பெட்டியில் கொண்டுபோகிறோம் நாளை அதிகாலையில் அம்மா தயாராகனுமாம்" என்றாள் "என்ன அப்படி அவசரம். எங்கே பெட்டியை எல்லாம் கீழே இறக்குங்கள் "என்று உத்தரவிட்டான்.

பெட்டியைக் கீழே இறக்கு என்றதும் பெட்டியினுள் இருந்த மோஹனுக்கு இருதயம் துடித்தது. வெடித்து விடும்போல் இருந்தது. யமராஜா தன்னைக் கூப்பிடுவதுபோல் பயப்பட்டான் மோஹன். ஒவ்வொரு பெட்டியாக சோதனை போட ஆரம்பித்தான் அந்த பிடிவாத குணமுள்ள அரசன். மோஹன் இருந்த பெட்டியை ஒரு ஆட்டு ஆட்டினான். அந்த ஆட்டத்தில் எலும்புக் கூடு நொறுங்கி விடும்போல் இருந்தது மோஹனுக்கு. அதனால் சிறிது பெரு மூச்சு விட்டான் மோஹன். மூச்சு விடும் சப்தம் மேலே கேட்கவே "மூட்டை மூச்சு



விடுமா?" என்று சந்தேகத்துடன் கேட்டான் அரசன்.

"இல்லை மகாராஜா: காற்றினால்தான் தங்களுக்கு அம் மாதிரி தங்களுக்கு கேட்கிறது. இதில் அம்மாவுக்கு வேண்டிய பட்டாடைகள் இருக்கின்றன" என்றாள் ஒருத்தி. "அவ்வளவு தானே. சரி" என்று சொல்லிக்கொண்டே தன்னுடைய கூர்மையான வாளை பெட்டிக்குள் செலுத்தினான். வாள் மோகன் காதை சிறிது துண்டித்து விட்டு திரும்பியது. அவன் திருட்டுத் தனத்துக்குஅவனைத் தண்டிக்க வேண்டாமா. வாள் மறுபடி துணிகளில் பட்டு வரவே ரத்தம் சிறிது கூட இல்லாமல் வெளியில் வந்தது. சந்தேகம் தீர்ந்தபின் அரசன் போகும்படி உத்தரவிட்டான். பெரிய பெட்டியை இரண்டு பெண்களும் பிடித்துக் கொண்டு தேவ குமாரியின் அறையில் உள்ளே கொண்டுவந்து வைத்தனர். பெட்டியை மிக ஆவலுடன் திறந்து பார்த்தாள். துணியைத் தள்ளிக் கொண்டு எழுந்திருந்தான் மோஹன். காதிலிருந்து ரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது.

"என்ன இது?" என்று கேட்டாள்.

"கலியாணம் என்றால் எப்படி இருக்கும் என்பதை உன் தகப்பனார். காட்டினார்" என்று கூறிவிட்டு நடந்ததைக் கூறினான். எல்லோரும் விழுந்தடித்து சிரித்தனர் அதற்குள் விடிந்து விட்டது. தேவகுமாரி அரசனுக்குச் சொல்லியனுப்பினாள். அரசன் மிகவும் கெட்டிக்காரனான ஒரு கணவன் கிடைத்து விட்டானே என்ற சந்தோஷத்தால் உடனே தேவகுமாரியின் அந்தப் புரத்துக்கு வந்தான். மோஹன் அழகைக்கண்டு வியந்தான். கெட்டிக்காரன் மாத்திரமல்ல. அழகாகவும் இருக்கிறான் என்று பெருமைப்பட்டான் அரசன். ஆனால் சிறிது துண்டிக்கப்பட்ட காதைக் கண்டதும் அவன் சந்தேகப் பட்டு "காதில் என்ன?" என்றான். தேவகுமாரி நடந்ததைக் கூறவே அரசனும் கட கட வென்று சிரித்து விட்டு, "ரகசிய மாப்பிள்ளையே! இன்றே என் பெண்ணைக் கலியாணம் செய்துகொள்ளலாம்" என்று கூறி விவாகமும் செய்து வைத்தான். மோஹனும், தேவகுமாரியும் இன்பமாக அன்புடன் வாழ்ந்து வந்தனர் என்று கூறி சமையல்காரன் கதையை முடித்து, "அரசே: இம்மாதிரி கதையை என்றாவது கேட்டிருக்கிறீர்களா? ரகசிய மாப்பிள்ளையின் கதை உலகம் முழுவதும் பரவி விட்டது." என்று கூறி முடிப்பதற்குள் வைத்தியர் குறுக்கிட்டு "இது ஒன்றும் பிரமாதமில்லை. நான் சொல்லப் போகும் கதை பிரமாதமாக இருக்கும்" என்றான். "எங்கே சொல்லுங்கள் பார்க்கலாம்" என்றான் அரசன்.

வைத்தியர் கதையை ஆரம்பித்தார். (கதையைக் கேட்டு அடுத்த வாரம் கூறுகிறேன்.)


சிறந்த கூந்தல் உணவு



உங்கள் சரீரத்துக்கு நல்ல உணவு அவசியமானது போல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும் உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்களுபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப்போக்கி கூந்தல் உதிர்வதை நிறுத்தும். ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயிலை உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர் இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள் எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது எப்பொழுதும்உபயோகியுங்கள்

ஆடோ டில்பஹார் (ரிஜிஸ்டர்ட்)

இணையற்றவாசனை நீடித்த நறுமணம். தபால் சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் பெறுங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO., 285, Jamma Musjid P. O. Box 2085, Bombay 2.



பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்க்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:—

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை

| | | |
|---|---|---|
| 1 | அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 82-க்கு | ரு 8 0 0 |
| 2. | திருப்பாவை 30 பாட்டுக்கு | ரு 7 8 0 |
| 3 | பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு | ரு 6 0 0 |
| 4 | ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு | ரு. 8 0 0 |

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாஸய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை

| | | |
|---|---|---|
| 1 | ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு | ரு. 3 12 0 |
| 2. | ஸ்வாதித் திருநாள் 80-க்கு | ரு 20 0 0 |

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபமாக இல்லை. தனித்தனி தாளாக உள்ளன. ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும். தபால் செலவு பிரத்யேகம்.

மானேஜர்,

சுதேசமித்திரன் புத்தகசாலை,

மவுண்ட்ரோடு. சென்னை




# சந்திப்பு

— ஆர். சுப்ரமணியன் —

சாப்பிட்டு விட்டு அரைக் கண் மூடியிருந்தான். தூக்கமும் இல்லை: விழிப்பும் இல்லை அப்படி ஒரு நிலை

'ஸார்! போஸ்ட்''

தூக்கிவாரிப் போட்டுக் கொண்டு எழுந்தேன். தவறாமல் வந்துவிடும் பத்திரிகை வரவில்லை. மணியார்டர் எதுவுமில்லை ஒரே ஒரு கவர். கையெழுத்தை எங்கேயோ பார்த்த மாதிரி ஞாபகம் சட்டென்று ஞாபகம் வந்தது அது ராமமூர்த்தியின் கையெழுத்து! கவரை அவசர அவசரமாகப் பிரித்தேன்.

''......நீ என்ன பண்ணிக்கொண்டிருக்கிறாய்? எனக்கு இங்கே ஒன்றும் ஓய்வில்லை வடக்கே ஒரிஸ்ஸாவில் ஒரு உத்தியோகம் கிடைத்திருக்கிறது நாளைக்குப் புறப்படுகிறேன். மறுபடி எப்போது சந்திப் போமோ தெரியாது. அதனால் உன்னைப் பார்த்து விட்டு அப்படியே போகலாமென்று நினைக்கிறேன். உன் விலாசம் எனக்குத் தெரியாது. ஸ்டேஷனுக்கு வந்து அழைத்துக்கொண்டு போ......''

கடிதம் நழுவிக் கொண்டிருந்தது. என்மனம் பின்னோக்கி ஓடியது.

இன்ஜினீயரிங் காலேஜில் கடைசி வருஷப் படிப்பு படித்துக்கொண்டிருந்தேன். ராமமூர்த்தியும் என்னுடன் படித்துக்கொண்டிருந்தான்.

ராமமூர்த்திக்கு சென்னையில் ஒரு மாமா இருந்தார் அவருக்குக்கல்யாணி என்று ஒரு பெண் உண்டு. லீவு நாள் வந்தால் ஆளைக்காண முடியாது. மாமா வீட்டில் ஆஜராகி இருப்பான். புஸ்தகங்களில் சில இடங்களில் 'கல்யாணி' என்று கிறுக்கி வைத்திருப்பான். 'இது என்ன பைத்தியம்? கிணற்று நீரை வெள்ளமா கொண்டு போய்விடும்? என்று நான் கேட்பதுண்டு.

ஒருநாள் சாயங்காலம் ஹோட்டலுக்குக் கிளம்பிக் கொண்டிருந்தேன். ரூம் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது கதவைத் திறந்தேன். ராமமூர்த்தி நின்று கொண்டிருந்தான்.

"எங்கே கிளம்புகிறாய்?''

''ஹோட்டலுக்கு''

பேசாமல் அவனுடன் போனேன். பக்ஷணங்கள் எடுத்துக் கொடுத்தான் 'ஏது என்று கேட்கும் பாவனையில் அவன் முகத்தைப் பார்த்தேன். அவன் எப்படியோ சமாளித்துக் கொண்டு சிரித்துக் கொண்டிருந்தான்

''எப்போது கொடுத்தாள்?'.

''போன தடவை அவள் வீட்டில் ஒரு கல்யாணம் நடந்தது. போன வாரம் அங்கே போயிருந்தபோது 'எனக்கு பக்ஷணம் இல்லையா? என்னை மறந்து விட்டாயே? என்று கேட்டேன். நேற்று ராத்திரி கிளம்பி வாசலுக்கு வரும்போது இருட்டில் யாரோ நின்று கொண்டிருந்தார்கள். 'ராமு; என்று கூப்பிடும் சப்தம் கேட்டது. ''என்ன? என்று கேட்டேன். என்கையில் இந்தப் பொட்டலத்தைக் கொடுத்தாள் நான் விளையாட்டுக்காகத் தானே கேட்டேன்? 'என்று கேட்டேன். 'பரவாயில்லை. எனக்காக வாங்கிக்கொள்ள மாட்டாயா? 'என்று கேட்டாள். நான் வாங்கிக் கொள்ளாமல் என்ன செய்வது?

நான் அவளைப் பார்த்ததில்லை. இருந்தாலும் என் மனதில் என்னை அறியாமல் ஒரு வகை பச்சாதாபம் குடி கொண்டது.

'அவள் எனக்காக' என்று சொன்ன போது எப்படி இருந்தது தெரியுமா?

''எப்படி இருந்தது?'

"உனக்கு வேறு வேலையில்லை, என்று அவன் அறையை விட்டு வெளியே போய்விட்டான்.

காலேஜிலிருந்து வந்து நான்கு வருஷங்கள் ஆகிவிட்டன. ராமமூர்த்தியைப் பார்த்து எவ்வளவோ நாளாயிற்று. காலேஜிலிருந்து வந்தபிறகு அவனைப் பார்க்க முடியவில்லை

படிப்பு முடிந்ததும் நான் சர்க்கார் உத்தியோகத்தில் சேர்ந்தேன். ராமமூர்த்தி ராணுவ எஞ்ஜினீயராகச் சேர்ந்தான். அங்கே நல்ல சம்பளம். ஆனால் ஐந்துவருஷங்களுக்கு எங்கேயும் அசையக்கூடாது. குடும்பத்தைப் பற்றியே நினைக்கக்கூடாது. அதனால் நான் அந்தப் பக்கமே எட்டிப்பார்க்கவில்லை.

இப்போது ராமமூர்த்தி மறுபடியும் என்னைப் பார்க்க வரப்போகிறான், நினைக்கும் போதே எனக்கு உடல் புல்லரித்தது.

"இன்று நல்ல சமையல் செய்துவை ராத்திரி என் சிநேகிதன் இங்கே வரப் போகிறான் என்றேன் என் மனைவியிடம்

"அவர் மட்டுமா வேறு யாராவது கூட வருகிறார்களா?

'தெரியவில்லை. கல்யாணம் செய்து கொண்டிருப்பான். ஒரு மாஸ்டர் இருந்தாலும் ஆச்சரியமில்லை.

''இந்த வகையெல்லாம் வேண்டாம் நிச்சயமாகத் தெரியாதென்று ஒப்புக் கொள்ளுங்களேன்"

"ஒப்புக்கொள்கிறேன்."

ஸ்டேஷனில் ராமமூர்த்தியைப் பார்த்தபோது அடையாளமே தெரியவில்லை. கறுத்து இளைத்துப் போயிருந்தான் முகத்தில் இருந்தகளையெல்லாம் பறந்தோடிப் போய்விட்டது முன்னே உற்சாகமாய் பரிகாசமும் கொம்மாளமுமாக எப்படி இருந்தான்? எப்படி ஆகி விட்டான்?

வெளியே வந்து காரில் உட்கார்ந்ததும் அவனை மெதுவாக விசாரித்தேன்.

'ராமமூர்த்தி! என்ன சங்கதி! ஏன் இப்படி ஆகிவிட்டாய்?"

''வழக்கம் போலத்தானே இருக்கிறேன்."

''என்னிடம் மறைக்கிறாயே? வீட்டில் ஏதாவது சரியாக இல்லையோ? இப்போதுதானே வடக்கே ஒன்றும் ஒத்துக்கொள்ளவில்லை என்று இங்கே வரப்போவதாக எழுதி இருந்தாய்? ஏன் மறுபடியும் ஒரிஸ்ஸாவுக்குப் போகிறாய்?"

"எங்கே போனால் என்னப்பா? ஏதோ காலத்தை கடத்த வேண்டியதுதான் அவ்வளவுதானே?"

பேச்சை சாதுரியமாக ஆரம்பித்தேன்.

"நீ இப்படியெல்லாம் பேசினால் அவள் என்ன ஆகிறது?

''யாரைச் செல்லுகிறாய்!

"அது தான் உன்மனைவி உன்மாமா பெண் அவள் பெயர் என்ன? கல்யாணி!

அதைச் சொன்னதும் அவன் முகம் சட்டென்று வாடியது. எனக்கும் ஏன் சொல்லேமென்று ஆகிவிட்டது.

"நான் அதற்குக் கொடுத்து வைக்கவில்லை 'ராஜு'! எவ்வளவோ ஆசைப் படுகிறோம்? எங்கே எல்லாம் நடக்கிறது? மரம் நிறையப் பூக்கிறது. எல்லாம் காய்த்து விடுகிறதா?

அவன் துயரம் பேச்சில் வெளிப்பட்டது. கண்ணில் நீர் பள பளத்தது. குரல் கரகரத்துப் போயிற்று.

''எதற்கோ ஆசைப்பட்டு எங்கோயெல்லாமோ போனேன். நான் வரும் வரை அவர்கள் காத்திருக்கவில்லை. ராணுவம் என்னை ஐந்து வருஷம் கட்டிப்போட்டு விட்டது நான் வரும் போது கல்யாணியின் சுதந்தரம் பறி போய்விட்டது. மறுபடி அவனைப்



".வாங்கோ! ஏது? ரொம்ப அபூர்வமாயிருக்கே. அதான் மழை கூட பெய்கிறது"

"அப்படின்னு தினமும் வந்துடறேனே!"

பார்க்க நான் விரும்பவில்லை. ஒருகாலத்தில் அவளைப் பார்க்க நான் ஏங்கியதுண்டு. இப்போது அவளைப்பார்க்கும் தைரியம் எனக்கு இல்லை."

எனக்கு என்னவோ போலிருந்தது. அவனைத் தேற்ற என்னால் முடியவில்லை. பேச்சை மாற்றத்தான் முடிந்தது.

வீட்டிற்கு வந்து கொஞ்சநேரத்தில் பழைய கலகலப்பு வந்து விட்டது. சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்தான்.

"உன்னுடைய மாஸ்டர் எங்கேடா? எனக்குக் கல்யாணம் ஆகி மூன்று வருஷம் ஆயிற்று ஆனால் இன்னும் நாங்கள் இரண்டுபேருமே தனியாக இருக்கிறோம். இதற்காக நாங்கள் எல்லோரிடமும் வாங்கும் வசவுகள் எத்தனையோ அவனும் அதைக் கேட்டபோது எனக்கு வெட்கமாக இருந்தது

என்னென்னவோ பேசிப்பரிகாசம் செய்து கொண்டிருந்தான்.

"இங்கே வருகிறீர்களா?' என்று உள்ளேயிருந்து மனைவி கூப்பிட்டாள். உள்ளே போனேன்,

"சாப்பிட அழைத்து வாருங்களேன்"

"எல்லாம் தயாராக இருக்கிறதா!".

"தயாராக இருக்கிறது"

"நீ தயாராக இருக்கிறாயா?"

"இது என்ன கேள்வி?"

"அப்படியானால் நாங்களும் தயார்" என்று வெளியே வந்தேன்

கால் அலம்பிக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தோம் சட்டென்று அவன் பேசுவதையே நிறுத்தி விட்டான். நான் மட்டும் பேசிக்கொண்டிருந்தேன் என் மனைவி மௌனமாகப் பரிமாறிக் கொண்டிருந்தாள் சாப்பிட்டு முடிக்கும்போது அவன் இலையைக் கவனித்தேன். அவன் ஒன்றுமே சரியாகச் சாப்பிடவில்லை.

"ராமு! ஏன்! என்ன சங்கதி?"

அவன் எழுந்து போய்க்கொண்டிருந்தான். "ஒன்றுமில்லை. ராஜு! சரியாகப் பசிக்கவில்லை."

நானும் எழுந்து கையலம்பினேன் அதற்குப் பிறகு அவன் ஒன்றும் சரியாகப் பேசவில்லை சீக்கிரம் படுத்துக் கொள்ளப் போய்விட்டான்

மணி பத்தடிக்கவில்லை. எனக்குத் தூக்கம் பிடிக்கவில்லை என் மனம் அவனைப் பற்றியே நினைத்துக்கொண்டிருந்தது. நிலா புறப்பட்டு சிறிது நேரம் ஆகியிருந்தது ஊரெல்லாம் அடங்கியிருந்தது கோவில் மணி அடிக்கும் சப்தம் கேட்டது.

எவ்வளவோ பேச வேண்டுமென்று நினைத்திருந்தேன். ஆனால் அவனைப் பார்த்த பிறகு என் உற்சாகமெல்லாம் விழுந்துவிட்டது. எனக்கு ஏமாற்றந்தான் ஆனால் அவனுடைய ஏமாற்றத்துக்கு முன்னால் என்னுடையது எம்மாத்திரம்? என் மனம் அல்லற்பட்டது. யாருடனாவது பேச விரும்பினேன்.

அவன் அறையில் விளக்கு எரியவில்லை. அவன் தூங்கி இருக்கவேண்டும் ரயிலில் வந்த அலுப்பாகஇருக்கலாம் சட்டென்று கீழே பார்த்தேன். சமையல் அறையில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது இன்னும் அவள் என்ன செய்துகொண்டிருக்கிறாள்?

கீழே இறங்கிப்போனேன். சப்தம் எதுவும் இல்லை சமையல் அறைப் படிக்கட்டில் காலைவைத்தேன். விம்மும் சப்தம் கேட்டது. அவள்தான் அழுதுகொண்டிருந்தாள். நான் வந்ததை கவனிக்கவில்லை. அவள் அருகே சென்றேன் தலையைத்தொட்டு "என்ன செய்கிறது?' என்று கேட்டேன்.

"பதில் இல்லை."

"சொல்லமாட்டாயா? உடம்பை என்னவாவது செய்கிறதா?" என்று அவள் கன்னத்தில் கை வைத்துப் பார்த்தேன்.

"ஒன்றுமில்லை. லேசாக மார்பை வலிக்கிறது."

'அசடு! என்னிடம் முன்னாடியே சொல்லியிருக்கக்கூடாதா? இன்றைக்கு சமையலுக்கு வேறு யாரையாவது ஏற்பாடு பண்ணி இருப்பேனே?'

அவள் பதிலே சொல்லவில்லை. விளக்கை அணைத்தேன் அவளை மெள்ள அணைத்தபடி படுக்கையில் கொண்டு போய் படுக்கவைத்தேன். ஒருவருக்கொருவர் துணையாக இல்லாவிட்டால் ஆறுதலுக்குவழி ஏது? அது இல்லாததனால் அல்லவா ராமுவின் வாழ்வு குறைவாக நிற்கிறது?

அவள் திரும்பிப் படுத்துக்கொண்டிருந்தாள். தலையில் சூடியிருந்த மல்லிகையின் மணம் அறைமுழுதும் கமிழ்ந்தது. என்னென்னவோ யோசித்துக் கொண்டிருந்தேன் எப்போது தூங்கினேனோ தெரியாது சட்டென்று நான் விழித்துக்கொண்டபோது மணி சுமார் இரண்டு இருக்கலாம். விக்கல் சப்தமும் கேட்டது.

விளக்கைப்போட்டேன். அவள் அழுதுகொண்டிருந்தாள். எனக்கு ஒன்றும் ஓடவில்லை. அவளை உட்கார வைத்துப் பிடித்துக்கொண்டேன்.

"என்னசெய்கிறது? சொல்லேன்."

"ஒன்றும்... ஒன்றுமில்லையே; நீங்கள் தூங்கமாட்டீர்கள்!

"சொல்லேன். நீ இப்படி அழுது கொண்டிருந்தால் நான் எப்படித் தூங்குவது?"



சட்டென்று அவள் அழுகையை நிறுத்தினாள். "அழமாட்டேன். இனிமேல் என்றைக்கும் அழவேமாட்டேன் இதுதான் கடைசித்தடவை." என்று என் மடியில் முகத்தைப் புதைத்துக்கொண்டாள்.

எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் முதுகை வருடிக்கொண்டு உட்கார்ந்திருந்தேன்.

மறுநாள் விடியற்காலையிலேயே நான் எழுந்து வெளியேவந்தேன். ராமு நின்று கொண்டிருந்தான்.

"ராஜு!"

'என்ன!'...

"நான் விடியற்கால மெயிலிலேயே போகலாமென்று பார்க்கிறேன். எனக்கு முக்கியமான வேலை இருக்கிறது. என்னை மன்னித்துக் கொள்,"

சாப்பிட்டு விட்டு மத்தியானம் பாஸஞ்சரில் போகலாமென்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். அவன் கேட்கவில்லை காப்பியாவது சாப்பிடச் சொல்லி வற்புறுத்தினேன்.

"வேண்டாம்! யாரையும் தொந்தரவு செய்யாதே! நான் ஸ்டேஷனில் சாப்பிட்டுக் கொள்கிறேன்"

அவனைத் தொந்தரவு செய்ய எனக்கும் விருப்பமில்லை அதனால் நான் அதற்குமேல் வற்புறுத்தவில்லை.

ஸ்டேஷனிலிருந்து திரும்பியபோது விடிந்து விட்டது நான் வந்த போது அவள் காப்பியை வைத்துக் கொண்டு காத்துக் கொண்டிருந்தாள்.

"எங்கே போயிருந்தீர்கள்!,'

"ஸ்டேஷனுக்கு!'

"எதற்கு?"

"ராமமூர்த்தியை ரயிலில் ஏற்றி விட்டு வரப்போயிருந்தேன்."

"அதற்குள் போய்விட்டாரா காப்பி கூட சாப்பிடவில்லையே!"

'ஆமாம் உன்னைத் தொந்தரவு செய்ய வேண்டாமென்று சொல்லி விட்டான். நான் வற்புறுத்தவில்லை.'

"என்னை எழுப்பி இருக்கக் கூடாதா எனக்கு என்ன தொந்தரவு?"

அவள் உள்ளே போய் விட்டாள். நான் என்வேலைகளைக் கவனிக்க ஆரம்பித்தேன்,

நான்கு நாட்களுக்குப் பிறகு ஒரு ஞாயிற்றுக்கிழமை என் மேஜையை ஒழுங்குப் படுத்திக் கொண்டிருந்தேன். பேப்பர் வெயிட்டிற்கு அடியில் ஒரு கவர்-எனக்கு வந்தது-வைக்கப்பட்டிருந்தது. உறையை அவள் கிழித்திருந்தாள்

கடிதம் முதல் நான் வந்தது ஏனோ என்னிடம் கொடுக்க மறந்து விட்டாள் உறையை கிழிக்க வேண்டிய அவசியம்? கவரைத் திருப்பினேன் ராமமூர்த்தியின் கையெழுத்து பரபரப்புடன் கடிதத்தைப் பிரித்துப் படித்தேன்.

"ராஜு!

உன்னோடு சரியாகப் பேசக்கூட முடியாமல் போய்விட்டது, என்னை மன்னித்துவிடு. என்மனம் இருந்த நிலையில் உன்னோடு பேசமுடியாமல் போய்விட்டது

உன்னை நான் ஸ்டேஷனில் மட்டும் பார்த்து விட்டு வந்திருக்க வேண்டும் உன்னோடு வீட்டுக்கு வந்து ஒரு கொந்தளிப்பை ஏற்படுத்தி விட்டேன். உனக்கே ஆச்சரியமாக இருக்கும். உன்மனைவிதான் என் மாமா பெண் கல்யாணி. உனக்கு என்னைமட்டும் தான் தெரியும். அதனால் நீ எதையும் தெரிந்து கொள்ளவில்லை,

இத்தனை நாளும் ஒருவிஷயம் என் மனதை உறுத்திக் கொண்டிருந்தது. நான் கல்யாணியை மணந்து கொள்ளக் கொடுத்து வைக்கவில்லை. ஆனால் அவள் எங்கேயாவது சந்தோஷமாக இருக்கவேண்டுமே என்று நினைத்துக் கொண்டிருந்தேன். இப்போது என் மனம் அமைதி நிரம்பி இருக்கிறது உனக்கு மனைவியாக வருபவள் என்றும் துயரப்பட முடியாது.

உங்கள் வாழ்க்கை என்றும் சந்தோஷம் நிரம்பியதாக இருக்கட்டும்.

உன்

ராமு"

கடிதம் என் கையை விட்டு நழுவிக் கொண்டிருந்தது.

---




பத்மா: மாமி. நான் வீட்டுக்குப் போக வேண்டும். அவர் வருகிற நேரமாயுடுத்து. நான் வீட்டிலிருக்கும் பொழுதே எள்ளும் கொள்ளும் வெடிக்கும். கதவு பூட்டியிருந்தால் பின் கேட்கவா வேண்டும். வந்ததும் ஈஸிச்சேரில் 'அப்பாடா' என்று உட்கார்ந்துவிடுவார். அவ்வளவு களைப்பு.

லீதா: இப்படித்தாண்டி உங்க மாமாவும் செய்துகொண்டிருந்தார்.

பத்மா: மாமாவுமா உங்களிடம் கோபித்துக்கொள்வார்?

லீதா: இப்போ இல்லையடி. அதெல்லாம் ரொம்பநாள் முந்தி. இப்பொழுது என்ன வென்றால் ஆபீஸிலிருந்து வந்ததும் ஒரு கப் நல்ல 'டீ' சாப்பிட்டு விட்டு என்னையும் அழைத்துக் கொண்டு காற்று வாங்க கிளம்பிவிடுவார்,

பத்மா: அவருக்கு ஆபீஸில் சுலபமான வேலைபோலிருக்கு.

லீதா: அப்படியில்லையடி. அவரே சொல்கிறாரே, அவருக்கு ஒரு கப் நல்ல 'டீ' சாப்பிட்டுவிட்டால் களைப்பு நீங்கி சுறுசுறுப்பு வந்துவிடுகிறதாம். நீயும்தான் உன் அகத்துக்காரருக்கு நல்லதா 'டீ' கொடுத்துப்பாரேன்.

'டீ' என்றால் என்ன? அதுதான் சிக்கனமானதும், களைப்படைந்த உடம்புக்கு ஊக்கத்தையும், தளர்ந்த மனதிற்கு உற்சாகத்தையும் மீட்டுக் கொடுக்க ஒப்பற்றதும், சுலபமாக தயாரிக்கக்கூடியதும், எங்கும் கிடைப்பதுமான தேசிய பானம். ஒரு கோப்பை 'டீ' சாப்பிட்டுப் பாருங்கள். அப்பொழுதே அதன் குண விசேஷங்களை உணர்வீர்கள்.

CTB 37

'ஸென்ட்ரல் டீ போர்டா'ரால் வெளியிடப்பட்டது




—கணபதி

கடை யாட்டத்தில், நமக்கு ராஜாவும் ஒரு ஆளுமிருந்து, எதிரிக்கு ராஜாமாத்திரமே இருப்பின், எல்லா விதமான. ஆட்ட நிலைகளிலும் நாம் ஜெயித்துவிட முடியாது சிற்சில நிலைகளில்தான் முடியும். சென்ற வாரம் கொடுக்கப்பட்ட கடை யாட்டம் உங்களுக்கு நினைவுள்ளதல்லவா? அங்கு ஆள் நேராக நகர்ந்து மந்திரியாக மாறுவதை கறுப்பு ராஜாவால் தடுக்க முடியவில்லை. ஆகவே, முடிவில் வெள்ளை ஜெயம் பெற்றது வெளிப்படை.

நம் ஆள் மந்திரியாக மாறும் கட்டத்திற்கு வரும்போதோ அல்லது வருவதற்கு முன்போ எதிரி ராஜா அதே கட்டத்துக்கு வந்துவிட முடியுமானால் ஆளைத் தனியே மேலே தள்ளிச் செல்வதில் அர்த்தமில்லை; தள்ளிச் சென்றால், எதிரியால் கைப்பற்றப்படும். எனவே இதுமாதிரியான ஆட்ட நிலைகளில். நாம் ஆளை நகர்த்தாமல், ராஜாவை ஆளுக்கு உதவியாக எடுத்துச் சென்று. பின்பு ராஜாவின் துணைகொண்டு ஆள் மாற்றல் செய்யப் பிரயாசிக்கவேண்டும். இதற்கு ஒரு உதாரணம் கொடுக்கபபடும். படம் 1-ன்படி காய்கள் அமைத்துக் கொள்ளவும்.

படம் 1

கறுப்பு

வெள்ளை

(வெள்ளை ஆடவும்)

ஆள் மாற்றல் செய்ய முடியுமா முடியாதா என்பதை அறிவதற்கு, ஆள் மந்திரியாவதற்கு எவ்வளவு நகர்த்தல்கள் வைக்கவேண்டு மென்பதையும் எதிரி ராஜாவுக்கு மந்திரியாகமண்டாகும் கட்டத்தையடைய எவ்வளவு நகர்த்தல்கள் தேவை என்பதையும் மனதிலேயே எண்ணிப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று முன்பு கூறப்பட்டதல்லவா? இங்கு, வெள்ளை ஆள் மந்திரியாக நான்கு நகர்த்தல்கள் தேவை (ஆ—கு5, கு6 கு7, கு8). இதே சமயத்தில், கறுப்புக்கு மந்திரியாகும் கட்டமாகிய

## கடையாட்ட உதாரணங்கள்

கு1—க்கு வர மூன்று நகர்த்தல்கள்தான் வேண்டும். (ரா—ம1, ச1, கு1) கறுப்பு ராஜா, ஆளைவிட குறைவு நகர்த்தல்களிலேயே கு1க்கு வரக்கூடுமாதலால் வெள்ளை ஆள் நகர்ந்து சென்று மந்திரியாக மாற முடியாது. இவ்விதம் யோசித்தபின். வெள்ளை ராஜாவை ஆளின் உதவிக்கு எடுத்துச்செல்லத்தீர்மானிப்பான். இனி ஆட்டத்தைக் கவனியுங்கள்.

| வெள்ளை | கறுப்பு |
|---|---|
| 1. ரா—ம2 | ரா—ம2 |

கறுப்பு ராஜா மந்திரியாகும் கட்டத்துக்கு அருகாமையில் இருக்கவேண்டியது மிக்க அவசியமாகும்.

2: ரா—ச3 ரா—ச3

கறுப்பு ராஜா கு1-க்கு அருகாமையில் இருப்பதுடன், எதிரிக்கு அதிக இடம் கொடுக்காமல் ச3-க்கு வருகிறது.

3 ரா—ச4

இப்பொழுது, கறுப்பு ராஜா தன் நகர்த்தலில் கு4, ச4-க்கு வரமுடியாது 3...ரா—ம3 என்று நகர்ந்தால் கறுப்பு கட்டாயம் தோல்வி பெறுவான். இது எங்ஙனம் என்பது பின் இதழில் வரும்.

3...... ரா—கு3

4. ஆ—கு5!

ராஜாவின் உதவி வந்துவிட்டதால், ஆள் நகர ஆரம்பிக்கிறது. மூல நகர்த்தலுக்குப் பதிலாக வெள்ளை 4. ரா—ம5 என்று வைப்பது தவறு அப்படி வைத்தால் கறுப்பு 4...ரா—கு4 என்று வைத்து அடுத்த நகர்த்தலில் ஆளைக் கைப்பற்றி விடுவான். மூல நகர்த்தல் சிறந்ததாகும்.

4...... ரா—கு2

இது கருப்புக்குச் சிறந்த நகர்த்தலாகும், இதற்குப் பதிலாக கறுப்பு 4...ரா—யா4 என்று நகர்த்தியிருந்தால் வெள்ளை ஜெயிப்பது நிச்சயம். இதைத் தெரிந்து கொள்ள இந்த தொடர்ச்சியையாடவும்.

[5 ரா—ச5 ரா—யா5

இது கட்டாயப்படுத்தப்பட்டது.

6 ஆ—கு6 ரா—யா4

7. ஆ—கு7

இனி ராஜாவின் உதவி தேவையில்லை.

7 ......... ரா—யா3

8. ஆ—கு8=ம ரா—யா4

9. ம—கு5 கட்டு]

நாம் மூல ஆட்டத்தை வெள்ளையின் 4-ம் நகர்த்தலுடன் விட்டு விட்டோமல்லவா? வெள்ளை 4 ஆ—கு5! வைத்தபின் உள்ள ஆட்ட நிலையைக் காண்பிக்கிறது கீழ்வரும் படம். (படம் 2) அதை அமைத்துக் கொள்ளவும்.

படம் 2

கறுப்பு

வெள்ளை

(வெள்ளையின் 4. ஆ—கு 5க்குப்பின்)

4 ......... ரா—கு2!

5. ரா—ச5

ஆளை கு6-க்குத்தள்ளினுல் கறுப்பு கைப்பற்றி விடுவான்.

5. .... ரா—ச2

கருப்பு ராஜா எதிர்த்தலுக்கு வருகிறான். எவன் ஒருவன் எதிர்த்தலுக்கு தன் ராஜாவை நகர்த்துகிறானோ அவனுக்கு அனுகூலம் (advantage) ஏற்படும்

6. ஆ—கு6 ஷா ரா—கு2

கறுபபு இயன்ற வரையிலும் எதிரிக்கு இடம் கொடுக்க மாட்டேன் என்கிறான்.

7 ரா—கு5

வெள்ளை ராஜாவை வேறு எங்கு எடுத்துச்சென்றாலும் ஆளை இழந்து விடுவான். இப்பொழுது கறுப்பு வைக்க வேண்டிய நகர்த்தல், அவனுக்கு மிக முக்கியமானது ராஜாவை கு 1-க்கு எடுத்துச் சென்றால்தான் சமம் செய்ய முடியும் யா 1-க்கோ, ச1-க்கோ சென்றால் ஆள் மந்திரியாக மாறிவிடும். அது இவ்விதம் தான்.



படம் 1.

கறுப்பு



வெள்ளை

[7...... ரா—யா 1

8 ரா—யா 6

எபபொழுதும் எதிர்த்தல் நலம்

8 . . . .ரா—கு1

9 ஆ—கு 7! ரா—ச2

10 ரா—யா 7!

கு8 கட்டாயமாகப் பிடிக்கப்பட்டது

10...... ரா—ச.3

11 ஆ—கு 8=ம]

இக்குறிப்பு-ஆட்டத்தில், 7-ம் நகர்த்தலில் கறுப்பு ராஜா வை ச 1-க்கு நகர்த்தியிருந்தால் வெள்ளை 8ரா—ச6 என்று எதிர்த்தல் செய்து ஜெயித்திருப்பான் எப்படி என்று நீங்களே பாருங்கள் பிறகு மூல ஆட்டத்துக்குச் செல்லவும். அந்த நிலை இங்கு உள்ளது.

படம் 3

கறுப்பு

வெள்ளை

7...... ரா—கு

8 ரா—ச 6 ரா—ச 1!

எதிர்த்தலுக்கு வருவதால்தான், கறுப்பு ஆட்டத்தை சமம் செய்ய முடிகிறது

9 ஆ—கு 7 ஷா ரா—கு 1

மந்திரியாகும் கட்டம் ராஜாவுக்குக் கிடைத்துவிட்டது இது 8-ம் நகர்த்தலில் கறுப்பு தன் ராஜாவை எதிர்த்தலுக்குக் கொண்டுவந்ததால்தான் ஏற்பட்டது.

10. ரா—கு6

வேறு எங்கு நகர்ந்தாலும் வெள்ளை ஆளை இழப்பான், வெள்ளையின் மூல நகர்த்தலுக்குப்பின் கறுப்புக்கு நகர்த்தல் ஒன்றுகூட இல்லை கறுப்பு ராஜாவிலும் இல்லை ஆக ஆட்ட நிறுத்தம் ஏற்பட்டுவிட்டது ஆட்டம் சமம் ஆய்விட்டது

இவ்வாட்டத்தில் கறுப்பு சில சிறந்த நகர்த்தல்கள் வைத்து சமம் செய்துவிட்டான். கறுப்பு சில தவறுகள் செய்திருந்தால் வெள்ளை ஜெயிப்பான் என்பது அங்கங்கு குறிப்புகளில் கொடுக்கப்பட்டது.

ஒரு ஆள் அதிகம் நிற்கும் இக்கடை ஆட்டத்தில் நாம் தெரிந்து கொண்டுள்ள விஷயங்களாவன:—

1) ஆள் நேராகநகர்ந்து மந்திரியாக மாறுவதை எதிரி ராஜாவால் தடுக்க முடியாவிட்டால். ஆள் மந்திரியாக மாறமுடியும் இதற்கு உதாரணம் சென்றவாரம் கொடுத்த கடையாட்டமே.

2) மேற்சொன்னபடி. ஆள் மந்திரியாக முடியாவிட்டால், ராஜா ஆளுக்கு துணைபுரியவேண்டும் ராஜா, ஆள் நிற்கும் வரிசைக்குப் பக்கத்து நேர் வரிசையில்தான் நின்று உதவி புரியமுடியும் என்றால், ஆள் மாற்றல் செய்துகொள்ள முடியாது இங்கு எதிரி ராஜா எதிர்த்தலுக்கு வந்துவிடுவான் இதற்கு உதாரணம் இவ்வாரம் விஸ்தரித்துள்ள ஆட்டமே

எப்பொழுது கட்டாயம் ஜெயிக்க முடியும் என்ற கேள்வி எழலாம் ராஜா உதவியின்றி ஆள் மந்திரியாகும் சமயம் தவிர மீதி நிலைகளில் ராஜா, ஆளுக்கு முன்னால் உள்ள கட்டத்துக்கு வந்தால்தான் ஜெயிக்க முடியும் அப்படி வந்தால்கூட சில நிலைகளில் சமம்தான் ஏற்படும் இவற்றை சீக்கிரத்தில் கவனிப்போம்

கடைசியாக ஒரு சிறு ஆட்டம் தருகிறோம், அட்டையில் எல்லா காய்களையும்அமைத்துக்கொண்டு வெள்ளை பக்கத்தில் உட்கார்ந்து ஆடவும்

ஆட்டம் 3

| வெள்ளை | கறுப்பு |
|---|---|
| 1. ஆ.—ரா 4 (அ) | ஆ—ரா 4 |
| 2. ச—ச 4 (ஆ) | ச—ச 4 |
| 3. ம—ச 3 (இ) | கு—ம ச 3 (ஈ) |
| 4. மXஆ கட்டு. | |

படம் 2.

கறுப்பு



வெள்ளை

ஆட்டக் குறிப்புகள்

(அ) இப்படி நகர்த்துவதால் சகடுக்கும் மந்திரிக்கும், வெளிவர வழி ஏற்படுகிறது. மேலும் ஆளை ரா 4-க்கு நகர்த்துவதால், அது

ரா. ச 5, ம 5 ஆகிய கட்டங்களைக் கவனிக்கின்றது இம்மாதிரி அட்டையிலுள்ள மத்திக் கட்டங்களை (அதாவது ம 4, ம 5, ரா 4, ரா 5 ஆகியவை) கவனித்தலும், அக்கட்டங்களில் ஆட்களையோ, சகடு குதிரை ஆகிய காய்களையோ உதவியுடன் நிறுத்தி வைத்தலும் முதல் ஆட்டத்தின் நுட்பங்களாகும் (Strategy) வெள்ளை தன் முதல் நகர்த்தலில் ஆ-ம 4 என்று கூட வைக்கலாம்.

மேற் கூறிய காரணங்களால்தான் கறுப்பும் 1...ஆ—ரா 4 என்று நகர்த்துகிறான்.

(ஆ) சதுரங்கத்தில், ஒருவருக்கு ஒரு சமயத்தில் ஒரு நகர்த்தல்தான் உள்ளதாகையால், நகர்த்தல்களை வீணுக்காமல். முதலாட்டத்தில் காய் வெளியேற்றலில் (Developement) உபயோகித்தல் நலம்.

இதற்கிணங்க வெள்ளை தன் ரா. சகடை வெளியேற்றுகிறான், இப்படி வெளியேற்றலில்கோட்டை துரிதமாக கட்டிகொள்ளலாம். மேலும்எதிரியின் ரா ச. ஆளை சகடு கவனிக்கிறது (இ) இந்தநகர்த்தலால்எதிரியின் ரா ச ஆளை வெள்ளை மற்றொரு முறை கவனிக்கிறான். கறுப்பின் சகடு ஆளுக்கோ ஒரு உதவிதான் (ராஜாவின் உதவி) இருக்கிறது மேல் பார்வைக்கு வெள்ளை நகர்த்தல் நல்ல நகர்த்தலாய் தோன்றினாலும் அவ்வளவு சிரேஷ்டமானதல்ல. ஆட்ட ஆரம்பத்தில் மந்திரி, யானை போன்ற பலத்த காய்களை வெளியேற்றல் நன்றன்று (ஈ) குதிரையை வெளியேற்றல் மிகவும் நல்லதுதான். ஆனால் ராஜாவுக்கு வரும் ஆபத்தைக் கவனிக்க வேண்டாமா? எப்பொழுதும் ராஜாவுக்கு ஷா ஏற்பட்டுவிடுமோ என்று பார்த்துவிட்டு நாம் காய்களை நகர்த்துவது நலம்.

படம் 3

கறுப்பு



வெள்ளை

# அனுபவ ரேகா சாஸ்திரம்

ரொமேஷ் கே. சாஸ்திரி

### 70 சிவ விருத்தா
அல்லது
சிவ வர்த்துனா

सम्मध्यपर्व सञ्जानात् फलमिद
मवाप्नुते ।
मात्र सन्धिः प्रकृष्टः स्यात् इति
चाप्यपरं मतम् ॥

என்றும்,

शिवृत्ताख्या कनिष्ठायाः मध्यपर्वणि
संस्थिता ।
वर्तुलेमय पार्श्वस्था रेखाद्वय
समन्वयात् ॥
प्रहृष्टार्थप्रदा सैषा स्कन्धरेखायुता यदि ।
फलस्यापि नपौष्कल्यं नाम्नाच प्रभु
सेवया ॥
हस्ताच जन्म भवति स्वामि भक्तिच
यच्छति ।



இடது சுண்டு விரலின் மத்திய பர்வத்தில் இரண்டு கிளைகளாகப் பிரிந்து சுருண்டு இருக்கும். இதன் பலன் போதும்போதும் என்று சொல்லும் அளவுக்கு செல்வத்தைக் கொடுத்தலாகும். சந்திரரேகைகளுடன் சம்பந்தப்பட்டாலோ, அல்லது வெட்டுப்பட்டாலோ பூராப்பலன் கிட்டாது பெயரிலிருந்து ஒரு பிரபுவின் சேவை

## இடது கை
## ரேகா விமர்சனம்

யால் ஜீவனம் நடக்கும் என்று ஏற்படுகிறது. பிறரை யண்டிப்பிழைத்தல் இன்னும் தன் எஜமானரிடத்தில் விசுவாசத்தையும் இந்த ரேகை கொடுக்கும்

### 71. லாமா

तदधो वर्तिनी लामा माल्यं लामेति
कीर्तयेत् ॥

என்றும்.

लामेति द्विशिखा रेखा कनिष्ठा मूल
पार्श्वगा ॥
वाचलत्वं फलं तद्वत् क्वचित्
अत्यन्तमूकता ।
लातिमामिति नामार्थः तस्मात्
श्रीहीनतोदिता ॥



இடது சுண்டு விரலின் அடிபர்வத்தில் இரண்டு கிளைகளுடன் தோன்றும் ரேகைக்கு லாமா என்று பெயர். இதன்பலன் ஒன்று அதிகமான பேச்சு வன்மையைக் கொடுப்பது அல்லது சிலசமயங்களில் ஊமையாக அடிப்பது. பெயரிலிருந்து லக்ஷ்மி கடாட்சம் மிகக்குறைவு என்று ஏற்படுகிறது.

### 72 மாதுலானி

तुलानी स्याद् धस्तिष्ठेत तस्या एव
स्वधः स्थिता ।

என்றும்.

मातुलानी तु लामायाः अधस्यात्
न्यूनताप्रदा ।
नामापि मातुल स्त्रीणां सदा प्रेष्यत्व
सूचनात् ॥

என்றும் காணுகிறது



இடது சுண்டுவிரலின் அடிப்பர்வத்தில் லாமாவிற்குக் கீழாகக்காணும். இந்த ரேகையுள்ளவர்கள் மேல் நிலைமைக்குப் போகாமல் கீழ் நிலையிலேயே இருப்பார்கள் எதிலும் குறைவைக் கொடுக்கும் பெயரிலிருந்து, சொந்தக்காரப்பெண்கள் இந்த ரேகையுள்ளவனை தாது அனுப்பிக் கொண்டிருக்கும் அளவுக்கு அசடு என்று பொருள் படுகிறது

### 73. மாதவி

कनिष्ठिका परिसरे मधुलाभः फलं
भवेत् ॥

என்றும்

माधवीस्यात् कनिष्ठायाः पार्श्वाधस्तात्
समीपतः



रेखा दक्षिण हस्तस्थ महीस्थानगता
कृशा ॥
सत्कर्मणां अनुष्ठाने समृद्धिश्चापि
तत्फलम्
माधवीतिच नामस्यात् वसन्ते मृति
सूचनात् ॥

என்று சொல்லப்பட்டிருக்கிறது.



இடது சுண்டு விரலுக்குக் கீழே, கரஸ்தானத்தில் வலது கையில் மஹீ என்ற ரேகையிருக்குமிடத்தில் (மித்திரன் வாரப்பதிப்பு 23-7-50 இதழைப்பார்க்க) மெல்லிசாகத்தோன்றும் ரேகைக்கு மாதவி என்று பெயர். இந்த ரேகையுள்ளவர்கள் நல்ல கர்மாக்களை சிரத்தையுடன் செய்வர் சிறந்த செல்வத்தைப் பெறுவர். இவர்களுக்கு வஸந்தருதுவில் மரணமேற்படும் முதலாசிரியர் மதுலாபம் ஏற்படும் என்று கூறுகிறார். இதனால் தேன் கூடுவளர்த்தல் போன்றவற்றைச் சொல்ல வேண்டுமேயொழிய, மது பானம் இவர்களுக்கு ஏராளமாய்க் கிடைக்கும் என்று கொள்ளல் உசிதமாகத் தெரியவில்லை, ஏனென்றால் இதர பலன்களுடன் முரண் ஏற்படுகிறது. அனுபவம் வழிகாட்ட வேண்டும்.

### 74. மஹிஷ்டா

महिष्ठोर्ध्वमुखीरेखा कनिष्ठामूलपर्वणि ।
राजप्रियत्वं सौशील्यं फलं नाम
महत्वतः ॥

என்றும்

तदधःस्या न संस्थानान्मध्यमायु
र्भवेन्नरः ॥

என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இடது சுண்டு விரலின் அடிபர்வத்தில் பெரிய பீடத்தில் உட்கார்ந்திருப்பது போல் எடுப்பாகவும் உயரே நோக்கிச் செல்லும் ரேகை மஹிஷ்டா எனப்படும் இதன் பலன் நல்ல நடத்தையையும் அரசரின் பிரியத்தையும் கொடுப்பது இன்னும் மத்திமாயுளும் பலன் என்று சொல்லப்படுகிறது.

### 75. ருக்மகர்ணிகா
அல்லது.
ருக்மகண்டிகா.

सा रुक्मकर्णिका रेखा माधव्यास्स्य
दधस्थिता ।
वाञ्छितार्थप्रदा नाम्ना स्वर्ण प्राप्ति
प्रसूचनी ॥

என்றும்

ऐमादैहिक भोगानां भुक्तिः स्यात
तदधः स्थया ।

என்றும் கூறப்படுகிறது.



இந்த ரேகை இடது கையில் மாதவி என்ற ரேகைக்குக் கீழேகாணும். இதன் பலன் இந்தப்பிறவியில் சகல போக போக்கியங்களையும் அளிப்பது. தங்கப்புதையல் கிடைக்குமென்றும் பெயர் காட்டும்.

### 76. ரோஹிஷ்டா

रोहिष्ठा धननिष्ठा स्यात् तदधःस्थान
सङ्गता ।

என்றும்

रोहिष्ठा तदधस्थास्यात् धनधान्य प्रदा
सदात् ।

என்றும் காணுகிறது.



ருக்மகர்ணிகாவுக்குக் கீழேகாணப்படுவது ரோஹிஷ்டா என்ற ரேகை. இந்த ரேகையுள்ளவர்கள் பணம் சம்பாதிப்பதில் சமர்த்தர்களாயிருப்பர். தனதானியச் செழிப்பு எப்போதும் இருந்து கொண்டிருக்கும்

(தொடரும்)


நவசக்தி மாத்திரை

ரத்த விருத்தி சதை வளர்ச்சி.
யௌவன புஷ்டி
ஆரோக்யம் தரும் அமிருதம்

50 மாத்திரை விலை ரூ. 1-12-0
100 „ „ ரூ. 3-0-0

☆

தி ஆர்யா பார்மஸி
114, யானைக்கல், மதுரை.

குறிப்பு:—முன்பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கப்பட மாட்டாது



"ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"
1 மண்டலம் (48) பூஜை செய்தும், ஆயுள் பூராவும் பலன் தரும் வெள்ளி ரக்ஷை ரூ. 43—12—0.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள் தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ 5-12-0 மணியார்டர் செய்யவும் மீதி தொகை வெள்ளி விளம்பரம் தபால்செலவிற்குமாக நவைமீதி ரூ 38-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N. B: (1) ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும் (2) வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். (3) V.P கிடையாது (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்

கோட்டமருதூர் ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்
அரகண்டநல்லூர் P. O. (S. A. Dt)

# நடைப்பிணம்

தேவூர்கணேசன்

அது ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம். கோயில்கள் எல்லாம் கல்விச் சாலைகள் ஆகவேண்டும். கல்வியும் கடவுளும் ஒன்றாய்ப் பிணைபட வேண்டும்' என்றெல்லாம் தற்கால கல்வியாளர்கள் கூறுவதைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே அந்த ஊர் மக்கள் அந்த இடத்தைத் தாமே பள்ளிக்கூடமாக நிர்ணயித்திருந்தனர். அவர்களுக்கு அவ்வளவு தூரம் சுய புத்தி இல்லையா என்ன?

அந்த ஊரின் பெயர் 'ஆள் சீண்டான்'. பெயருக்கு ஏற்றபடி அந்த ஊரை நாடி வருபவர்களும் இல்லை. அவ்வளவு தூரம் அது எல்லாத்துறைகளிலும் பிற்பட்டே நின்றது. சிறிது 'பட்டணக் கரை' யாகஇருக்கும் ஊருக்கும் அதற்கும் வெகு தூரம். இங்கொன்றும் அங்கொன்றுமாக ஏழெட்டு வீடுகள். அவைகள் இருக்கும் சுவடே தெரியாதவாறு சுற்றிலும் பல மரங்களும் நிறைந்த தோப்புக்கள். அவைகள் பெரும்பாலும் கிராமத்துப் பணக்காரர்களுக்குச் சொந்தமானவை. சில கிராமங்களுக்கே உரியதான— மரம் செடி கொடிகளின் நாற்றமும் இல்லாத வாசனையும் இல்லாத ஒரு வகை 'இரண்டும் கெட்டான்' மணம் அந்த கிராமமெங்கும் நிறைந்திருந்தது. கோலமிட்டதைப் போல இரண்டொரு சிற்றோடைகள் அந்தக் கிராமத்தின் குறுக்கு நெடுக்கில் வளைந்து ஓடிக் கொண்டிருந்தன. சதா இடைவிடாது நானா விதக் குரலிசைக்கும் பட்சி ஜாலங்கள் வேறு.

இத்தகைய கிராமத்திலே பள்ளிக்கூடம் அமைக்க ஜனத் தொகை போதாது என்றனர் அரசாங்கத்தார். எனவே, 'பெருந் தனக்காரர்கள்' தங்கள் சந்ததியாரின் படிப்பையும் தங்களின் உல்லாசப் பொழுது போக்கையும் உத்தேசித்து நகரங்களாகப் பார்த்து நடையைக் கட்டினர். எஞ்சிய கிராமத்தார் அதற்காக அஞ்சவில்லை. அவர்களின் பிள்ளைகள் விவசாய காலத்தில் அவர்களுக்கு உதவி செய்யவும், ஆடு மாடுகள் மேய்க்கவும்கூடத் திராணியற்றவர்களா என்ன? பொழுது போக்கிற்குத் தான் 'வினாடிக்கொரு சண்டையும், வீதிக்கொரு காட்சியுமாகத் தங்கள் வாழ்வை வகுத்துக் கொள்கிறார்களே அவர்கள்.

இந்த நிலையில், அந்தக் கிராமவாசிகளின் நல்ல காலம் பக்கத்து ஊர் ஆறுமுக தேசிகர் ஆசிரியர் வேலையிலிருந்து 'ரிடையர்' ஆகி, சொந்த ஊருக்குத் திரும்பி வந்தார். 'ரிடை யர்' ஆன பிறகு கையில் 'நாலு காசு' சேர்த்து வயோதிகத்திலாவது நிம்மதியாக இருக்கக் கூடிய வசதி தான் ஆசிரியருக்குக் கிடையாதே. கிடைத்த 'பிராவிடண்ட் பண்டு' தொகையைக் கொண்டு தாம் வேலையிலிருந்த காலத்தில் வாழ்க்கை நடத்த வாங்கிய கடனில் கொஞ்சப் பகுதியை அடைத்து விட்டு, மிகுதிக் கடனை அடைக்கவும் தொடர்ந்து வாழ்வை நடத்தவும் வேலை தேடி அலைந்தார் பாவம், மனிதன் வாழ்க்கை முழுவதும் துன்பமே அனுபவிப்பதாயிருந்தாலும் மீண்டும் வாழவே ஆசைப்படுகிறான். விளக்கினில் வீழ்ந்து மாய்ந்து கொண்டு இருக்கும் விட்டில் பூச்சி கூட 'பிழைத்தெழுந்தால் இன்னுமொரு விளக்கில் வீழலாமே' என்று எண்ணும் போலும்.

'ஆள் சீண்டானில் பள்ளிக்கூடம் இல்லை.' என்று கேள்விப்பட்ட அவர் அங்கு சென்றார். அவர் வந்த செய்தி தெரிந்து கொண்டதுமே ஊரார் 'இவன் நம்ம பிள்ளைங்களைக் கெடுத்து நம்ம வேலைக்கு உதவாமல் அடிக்கத் தான் வந்திருக்கிறான்.' என்ற தங்கள் அபிப்ராயத்தை ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டனர். சிலர் அவர் காது படவே, "ஏது ,மீசை நரைச்சாலும் இந்தக் கிழவனுக்கு ஆசை நரைக்கல்லியே. வயசு காலத்துலே அக்கடான்னு விழுந்து கிடக்காமே, இனிமே சம்பாரிச்சு யாருக்குக் கோட்டை கட்டப் போறான்?" என்ற ரீதியில் பேசினர்.

இவைகளை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த தேசிகருக்குச் சிரிப்புத் தான் வந்தது. அதுவும் அவர்களின் அறியாமை, அப்பாவித் தன்மை இவைகளுக்காக ஏற்பட்ட அனுதாபத்திலே பிறந்தது. அந்த அனுதாப உணர்ச்சியில் தம் சுகம், குடும்ப நிலை இவை எல்லாவற்றையும் கூட அவர் மறந்துவிட்டார். எப்படியேனும் அந்தக் கிராமத்துக் குழந்தைகளுக்காவது அறிவுச் சுடர் கொளுத்த வேண்டும் என்ற உறுதி அவர் மனதிலே எழுந்தது.

அந்தக் கிராமச் சூழ்நிலை அவரை ஒரு நொடியில் மனிதனாக மாற்றி விட்டது. கல்வியறிவின்மையால் மக்களுக்கு ஏற்படும் அல்லல்களை அவர்களுக்கு எடுத்துக் கூறினார். தாம் கல்வி போதிக்கப் போவதற்கு சம்பளமே வேண்டாமென்றும் கூறினார். முடிவில் தம் கருத்திற்கு அவர்களை இசைய வைத்தார். இப்பொழுது அவர்களின் ஒரே பிரச்னை 'எங்கே பள்ளிக்கூடம் நடத்துவது?' என்பதே.

திண்ணையுடன் கூடிய வீடு உடைய கிராம வாசிகள் கூட 'என் வீடு சத்திரம் இல்லை. உன் வீட்டைத் தான் கொடேன்' என்று ஒருவருக்கொருவர் சச்சரவிடத் தொடங்கினர். கடைசியில் 'ஊரின் மத்தியில் உள்ள கங்காளம்மன் கோயில் திண்ணையில் பள்ளிக்கூடம் நடத்துவது' என்று ஏகமனதாகத் தீர்மானமாயிற்று.

ஆறுமுக தேசிகர் தினசரி தம் ஊரிலிருந்து வந்து அந்தக் குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுத்து வந்தார். அதோடு மட்டுமல்ல. அந்தக் கிராமவசிகளுக்கு வரும் கடிதங்களை அவர்களுக்குப் படித்துச் சொல்வது, அதற்கு பதில் எழுதிக் கொடுப்பது போன்ற வேலைகளையும் ஏற்றுக் கொண்டார்.

கங்காளம்மனை குல தெய்வமாகக் கொண்ட வெளியூர் வாசிகள் 'பூஜை புனஸ்காரம்' அபிஷேகம் என்று சொல்லிக் கொண்டு 'ஆடிக்கொரு முறை, ஆவணிக்கொரு முறை' என்பதைப் போல, எப்பொழுதாவது வருவார்கள், அந்த மாதிரியான சந்தர்ப்பங்களில் வந்திருக்கும் கூட்டமே கோயிலின் இரண்டு திண்ணைகளையும் நிறைத்து விடும். இதை உத்தேசித்து அப்படிப்பட்ட நாட்களில் பாடம் சொல்லிக் கொடுப்பதை நிறுத்தி விடுவார் தேசிகர். அன்று முழுவதும் பையன்களுக்கு 'லீவு.' எனினும் பையன்களுக்கு அன்று உற்சாகமாகப் பொழுது போகாது. அவ்வளவு தூரம் கதை, பாட்டு, விளையாட்டு, வேடிக்கை என்பனவற்றில் எல்லாம் பாடங்களை இணைத்து படிப்பின் சிரமத்தைப் பிள்ளைகள் அறியாதவாறு செய்திருந்தார் அவர். அதிகம் சொல்வானேன். ஒரு நாளைக்கு அவர் பள்ளிக்கூடம் வருவதற்கு நேரமாகி விட்டால் பிள்ளைகள் அவரைத் தேடிக் கொண்டு பாதி வழி சென்று விடுவார்கள்.



ஆறுமுக தேசிகரின் உயர் குணச் சிறப்பு காலப் போக்கில் ஊராருக்குத் தெரிய ஆரம்பித்தது. இப்பொழுது தான் அவர்கள் தங்கள் கையில் கிடைத்த பொருளை இயன்ற அளவு அவருக்குக் கொடுத்து உதவ முன் வந்தனர்.

* * *

உல்லாசக் கேளிக்கைகளை விரும்பி நகரத்தை நாடிச் சென்றிருந்த உள்ளூர் பண்ணையார் முத்துசாமி உடையார் தம் முதுமைப் பருவத்தில் அமைதியான கிராம வாழ்க்கையை விரும்பி ஊர் திரும்பினார்.

அந்த நாட்களிலேயே— அதாவது முத்துசாமி உடையாரின் தந்தை பெரியண்ண உடையார் உயிருடன் இருக்கும் பொழுதே அவருக்குப் பயப்படாதவர்களுக்குக் கூட முத்துசாமி உடையாரைக் கண்டால் 'சிம்ம சொப்பனம்.' அவர் பெயரைக் கேட்டாலே அழுத பிள்ளை வாய் மூடும். வாயை மூடிக் கொண்டிருக்கும் பிள்ளை அழ ஆரம்பிக்கும். தெருவோடு நடப்பவர்கள் கூட அவர் வீட்டு வாசல் வரும் பொழுது, விரித்துப் பிடித்திருக்கும் குடையை மடக்கி, கக்கத்திலும் கால் செருப்பைக் கையிலுமாக மாற்றிக் கொள்ளுவார்கள். இல்லாவிட்டால் சின்ன உடையாரின் 'ஆக்கினை' க்குத் தப்ப முடியாது.

'கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது' என்பார்கள். சின்ன உடையார் வளர்ந்து வயோதிகம் அடைந்து விட்டாலும் அவர் குணம் மாறவில்லை.

ஊருக்கு வந்த கொஞ்ச நாட்களுக்குப் பின்தான், யாரோ ஒரு ஆசிரியர் வந்து தம் ஊர்க் குழந்தைகளுக்குக் கல்வி போதிப்பதாக உடையாருக்குத் தெரிந்தது. 'தாம் ஊருக்கு வந்து இத்தனை நாட்கள் ஆகியும், இதுவரையில் ஒரு முறை கூட அவர் தம்மை வந்து பார்க்கவில்லையே' என்ற ஆத்திரம் வேறு உடையாருக்கு. அதன் விளைவாக கிராமவாசிகளின் நடை உடை பாவனைகள்கூட முன்போல் இல்லாமல் மாறியிருப்பதாக அவர் கண்களுக்குத் தோன்ற ஆரம்பித்தன.

அவர் 'சந்தேகத்தை வலுப்படுத்துவதைப்போல ஒரு சந்தர்ப்பமும் ஏற்பட்டது. ஒருநாள் உடையார் சில ஆட்களைக் கூப்பிட்டு வரச் செய்தார். இந்த வருஷம் தம் பண்ணையில் வேலை செய்ய சில ஆட்களுடன், பண்ணை மாடுகளை மேய்க்கவும் தாம் சேர்க்கப் போகும் 'மாட்டுக் கிடை' யைக் கவனித்துக் கொள்ளவும் சில சிறுவர்களும் " வேண்டுமென்று கூறினார். அந்த ஆட்கள் தங்கள் பையன்கள் படித்து வருவதால்தங்களில்சிலரே அந்த வேலைகளைச் செய்வதாகச் சொன்னார்கள். உடனே உடையாருக்கு 'மூக்கின்மேல்' கோபம் வந்தது. (இல்லை:" அந்த ஆட்களின்மேல் கோபம் வந்தது:) "என்னிடம் மறுத்துப் பேச உங்களுக்கு எப்படியடா துணிவு வந்தது" என்றார். "எல்லாம் அந்த வாத்திப் பயமவனால் வந்தது தானே:" என்று உறுமினார். உடனே ஆளை அனுப்பி ஆசிரியர் ஆறுமுக தேசிகரை அழைத்து வரச் செய்தார்.

"என்ன வாத்தியாரே, ஒண்ட வந்த பிடாரி ஊர்ப் பிடாரியை வெருட்டுற கதையாயிருக்கே உம்ம பாடு...."

உடையார் திடீரென்று இப்படிப் பேசுவதன் காரணம் தெரியாது தேசிகர் மௌனமாக நின்றார். பயத்தால் அவர் நெஞ்சு படபடத்தது.

"என்னய்யா, ஊமைக் கோட்டான் மாதிரி நிக்கிறீமே. செய்யறத்தையெல்லாம் செஞ்சுட்டு, ஏதேனும் வேசம் கீசம் போடுறீமோ?"

தேசிகர் பயத்தால் உடல் வியர்க்க வாய் தடுமாற பேச ஆரம்பித்தார்: "நான்....அப்படி...ஒண்ணும். .."

அவர் முடிப்பதற்குள் உடையார் குறுக்கிட்டார். "இந்தாய்யா, நான் உன் கிட்டேருந்து பதிலை எதிர் பார்க்கவில்லை. அபிஷேகம், ஆராதனை இன்னு 'நாலுபேரு' கூடுற கோவில் வாசல்லே பள்ளிக்கூடம் நடத்துறேன் பேர் வழின்னு ஊரைக் கூட்டி வச்சுக்கிட்டு வம்பு அடிக்கிறதும் கடிதாசி எழுதிக் கொடுக்கிறதும் பார்க்க சகிக்கல்லே. அதோடே மட்டுமா? படிப்புச் சொல்லித் தரேன் இங்கிற சாக்கில் 'ஊரில் யாரும் பண்ணை வேலைக்கு போவக்கூடாது' இன்னு சொல்லியிருக்கிறீராமே? .... நாளையிலிருந்து பள்ளிக்கூடம் நடத்துறேன்னு சொல்லிக்கிட்டு இந்த ஊரில் காலெடுத்து வைக்கக்கூடாது. இந்த ஊரு முன்னேத்தமடைய என்ன செய்ய வேணும் முன்னு எங்களுக்குத் தெரியும் .... நானு சொல்லுறது புரியுதா வாத்தியாரே?" என்றார். அவர் பேச்சில் தீயின் வெம்மை வீசியது.

அவரைப் பற்றி முன்னமே கேள்விப் பட்டிருந்த தேசிகருக்கு, பதில் சொல்ல தைரியம் வரவில்லை. மேலும் அவர் தான் பதிலையே விரும்பவில்லையே. எனவே சரி என்பதற்கு அடையாளமாகத் தலையை ஆட்டி விட்டு அங்கிருந்து வேகமாக வெளியேறினார் தேசிகர்

* * *

பல நாட்களுக்குப் பிறகு ஒரு நாள். வெய்யில் அனலாகக் காய்ந்து கொண்டிருந்தது. ஆறுமுக தேசிகருக்கு 'ஆள் சீண்டான்' வழியாக வேற்றூர் ஒன்றுக்குப் போக நேர்ந்தது. அவர் கையில் ஒரு கிழிந்த குடை. ஆள் சீண்டான் எல்லையை அடைந்த பொழுதே 'மந்தை வெளி' யில் ஒரு 'மாட்டுக் கிடை' இருப்பதை அவர் கண்டார். ஏதோ ஒரு பாட்டை 'உச்ச ஸ்தாயி' யில் பாடிக் கொண்டு மரத்தின் நிழலில் உட்கார்ந்திருந்தான் ஒரு பையன். அவன் தான் கிடையைக் கவனித்துக் கொள்பவன் என்பது அவன் கையிலிருந்த மூங்கில் கழியால் தெரிந்தது. யதேச்சையாக தேசிகர் வரும் திசை


## மூன்று வருடத்திற்குள் மெட்ரிகுலேஷன் தேறலாம்.

முதலாவதாக ஆங்கில ஆரம்ப எழுத்து முதல் தொடங்கி, நான்காம்பாரத்திற்கு ஒப்பான ஆங்கில அறிவுபெற ஒருவருடம்.

இரண்டாவதாக ஆங்கிலமும், மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குப் படிக்கவேண்டிய விஷயங்களின் ஆரம்பப் பாடங்களும் நிறைவேற்ற ஒரு வருடம்

மூன்றுவதாக மதராஸ் மெட்ரிகுலேஷன் பரீக்ஷைக்குத் தேவையுள்ள பாடங்களை முழுதும் நிறைவேற்ற ஒரு வருடம்.

இவ்வாறு இன்று ஆங்கில எழுத்துக்கள்கூடத் தெரியாத ஒருவருக்கு மூன்று வருடத்திற்குள் மதராஸ் மெட்ரிகுலேஷன் தேறலாம். பின் இண்டர்மீடியற்று, பி. ஏ., முதலிய உயர்ந்த பரீக்ஷைகளும் விண்ணப்பஞ் செய்வோர், தங்கள் கல்வி, வயது முதலியவை காட்டி கூடுதல் விவரத்திற்கு 4. அணு ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும்.

**கேம்பிரிட்ஜ் காலேஜ், (S.M) கைதமுக்கு, திருவனந்தபுரம்.**

N. B:—S. S. L. C. தேறி கல்லூரிப் படிப்பிற்கு சௌகரியமற்றிருப்பவர்க்கு. பிரைவற்றுகவே Intermediate தேறலாம். முழு விவரத்திற்கு 6 அணு ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும்.




யில் தன் பார்வையைச் செலுத்திய அவன் எழுந்து நின்று கொண்டு, "வாத்தியாரய்யா. வாத்தியாரய்யா. குடையைமடக்கிடுங்க. காளை புதிசு. அதோடே, குடையைக் கண்டா வெறிச்சிக் கிட்டு மேலே வந்து விளுவும். அண்ணங் கூட சாப்பிடப் போயாச்சு. அதுக்குத் தான் இது அடங்கும்." என்று பதற்றமான குரலில் கத்தினான்.

தேசிகர் குடையை மடக்கிவிட்டு தானும் வெயிலில் வந்த களைப்பு ஆற மரத்து நிழலில் ஒதுங்கிக் கொண்டார். பிறகு அவனைப் பார்த்துக் கேட்டார்:

"ஏண்டா தம்பி, வெயிலுக்காக ஒரு மனிசன் குடை பிடிச்சுக்கிறதைக் கண்டு இன்னொரு மனிசன் தான் வெறிக்கிறான். இந்த மாடும் ஏன் வெறிக்கிறது? அதுக்குத் தான் அறிவு இல்லியே."

பையனுக்கு அவர் கேட்ட கேள்வியின் உட்பொருள் புரிந்ததோ என்னவோ? அவன் சொன்னான்:

"என்ன வாத்தியாரய்யா, நானு சொல்லுறதிலே நம்பிக்கை இல்லியா? இது நாட்டுக் காளையில்லே. காங்கேயத்திலேருந்து உடையார் ஐயா பண்ணைக்கி வந்திருக்கிது. வந்த அன்னைக்கு ஐயாவையே தொரத்திக்கிச்சு." அவன் 'ஐயாவையே' என்று உச்சரித்த பொழுது 'அவர் சர்வ வல்லமையும் உள்ளவர்' என்ற பாவம் அதில் தொனித்தது. மறுபடியும் பையன் தொடர்ந்தான்.

"ஆமா, ஏன் வாத்தியாரய்யா நீங்க ரொம்ப நாளாப் பள்ளிக்கூடத்துக்கு வல்லே?..... நீங்க இனிமேப் பாடம் சொல்லிக் கொடுக்க வர மாட்டீங்கன்னு தெரிஞ்சு தான் நானு உடையார் பண்ணையிலே வேலைக்கி சேந்துட்டேன். இப்போ மாசம் கலம் நெல்லு எனக்குத் தரேன்னுசொல்லியிருக்கிறாங்க. (இதை சொல்லும் பொழுது அவன் குரலில் மகிழ்ச்சி நிரம்பியது.)"

தேசிகர் அந்தப் பையன் முகத்தை ஏறிட்டு நன்றாக நிதானித்துப் பார்த்தார். சந்தேகமில்லை. அவன், திண்ணைப் பள்ளிக்கூடத்தில் அவரிடம் படித்த பையன்களில் ஒருவன் தான். 'தான் ஏன் பாடம் சொல்லித் தர வரவில்லை என்பதை அவன் புரிந்து கொள்ளும்படி எப்படி சொல்வது?' என்று நினைத்தவராய், "அது கெடக் கட்டும் தம்பி, உங்க ஊரில் என்னமோ பாட்டுச் சத்தம் கேக்குதே என்ன விசயம்?" என்று அவனை நோக்கிக் கேட்டார். உள்ளபடி அப்பொழுது ஆள் சீண்டானிலிருந்து 'ஒலி பெருக்கி' மூலம் பாட்டுச் சப்தம் கேட்கத் தான் செய்தது.

"அதுவா, போன வருசம் கூட வந்திச்சே ஒரு காரு, அதிலே கூட 'கிராம சீர்திருத்த பிரசார வண்டி' இன்னு எழுதியிருக்குமே, அது வந்திருக்கிது. இன்னைக்குக் கருக்கல்லே தான் வந்திச்சு. எங்க உடையார் ஐயா கூட அந்த வண்டிக்குள்ளார நின்னுக்கிட்டு 'கிராமப் புள்ளேங்க எல்லாம் நல்லாப் படிக்கணும்' இன்னு மெதுவாத் தான் பேசினாரு. அடேயப்பா. எம்மாம் பெரிசா சத்தம் கேட்டிச்சுத் தெரியுமா?" என்று சொன்னான் பையன். கிராமத்தினின் வெகுளி உள்ளமும், அறியாமையும் அவன் பேச்சில் பிரதிபலித்தன.

தேசிகர் ஒரு முறை பையனைப் பரிதாபமாகப் பார்த்தார். பிறகு மெதுவாக நடக்க ஆரம்பித்தார்.

பையன் பாதியில் நிறுத்திக் கொண்ட— யாரோ பாடித் தான் கேட்ட அந்தப் பாட்டைத் தொடர்ந்து பாட ஆரம்பித்தான்: ".....பணமில்லார் நடைப் பிணமே, அவர் குணமும் குலமும் வீணே....."

காற்றோடு கலந்து இழைந்து, பாட்டின் அந்த அடிகள் தேசிகரின் காதுகளில் விழுந்தன. அதிலே லயித்து அவர் சிறிது நேரம் நின்றார். அவர் மனசிலே ஒரு வினா எழுந்தது: 'யார் நடைப் பிணம்? பணம் இல்லாதவனா, குணம் இல்லாதவனா?'

அவரிடமிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு வெளிப்பட்டது. மீண்டும் தம் வழியே அவர் நடக்கத் தொடங்கினார்.

---

அர்சோவிநாசனம்

★

இரத்த மூலம் முதலிய நவ மூல ரோகங்களுக்கும் நிகரற்றது. மலத்தை லகுவாய் வெளியாக்கும் மூல வாய்வு நீங்கும்.

விலை ரூ. 2—8—0.

விவரமான காட்லாக் இனம்.

மலையாள மெடிகல் ஹால் (REGD)

188 வக்கீல் புது தெரு, மதுரை.




OFFICE OF THE RE
8 JUL 1951
MADRAS



# சுதேசமித்திரன் வாரப்பதிப்பு பொருளடக்கம்

☆


| | | பக்கம் |
|---|---|---|
| ஞானோதயம் | ர. வேங்கடரத்னம் | 5 |
| பிச்சைக்காரர்கள் | மகரம் | 8 |
| அணையா விளக்கு (தொடர்கதை) | ஆர்வி | 11 |
| மனப் புயல் | ரதிதாசன் | 15 |
| உள்ளமும் உயிரும்— | கோமதி ஸ்வாமிநாதன் | 18 |
| சுதாரஸமணிகள் | கனல் | 23 |
| உங்கள் கால பலன் | "ராவ்" | 28 |
| பொய்ப் படுதா | குங்குமம் | 32 |
| சிறுவர் பகுதி | எஸ். ரங்கராஜன் | 35 |
| தேர்த்தட்டு வார்த்தை | வாரன் | 39 |
| சதுரங்க ஆட்டம் | கணபதி | 41 |
| நேற்றும் நாளையும் | கே. பி. கேசவமேனன் | 43 |
| ஹிந்தி பாடங்கள் | பண்டிட்ஜீ | 45 |
| கலாமண்டபம் | | 47 |


"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன அனைத்தும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவ அல்ல.


வாழிய செந்தமிழ் — சுதேசமித்திரன் வாரப்பதிப்பு — வாழ்க நற்றமிழர்

Vol XXII] கர௵ ஆனி மீ 3உ ★ 1951-௵ ஜூன் மீ 17உ No. 20


## உப்பு உற்பத்தி

உப்பு விநியோகப் பொறுப்பை இனி மாகாண சர்க்காரே மேற்கொள்ளக் கூடுமென்று மத்திய உதவி மந்திரியொருவர் அறிவித்தார். உப்பு வரி நீக்கப்பட்டும், அதன் பலன் மக்களுக்கு கிட்டவில்லையென்பது அவர் கூறும் காரணம். இவ்வரி நீங்க இந்நாட்டில் நடந்துள்ள போராட்டம் நெடுநாளையது. குறிப்பாகக் காந்திஜீ ஏழை ஜனங்களின் உணவில் இன்றியமையாத இனமான இப்பண்டத்தின் மீதிருந்த தீர்வை நீங்குவதில் தனிப்பட்ட அக்கரை காட்டி வந்தது அனைவருக்கும் தெரியும். இறுதியாக சர்க்கார் இக்கிளர்ச்சிக்குப் பணிந்து அத்தீர்வையை அடியோடு ரத்து செய்யவேண்டியதாயிற்று. இதன் மூலம் அவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் பத்து கோடி ரூபாய்க்கதிகம். ஆனால் இந்தத் தீர்வையை நீக்கியும், இதன் பலன் முழுவதும் மக்களுக்குக் கிடைக்க உப்பு வியாபாரிகள் இடம் தர வில்லை. இவர்கள் அனைவருமே அனாவசியமான தரகர்களென்றோ, கொள்ளைலாப வெறியர்களென்றோ சொல்லுவதற்கில்லை. எனினும் உப்பின் தற்போதைய விலையில் உற்பத்திக் கிரயம், அதை மார்கெட்டுக்குக் கொண்டு சேர்ப்பதற்கான செலவு, இவ்விரண்டையும் தள்ளி விட்டுப் பார்த்தால் எஞ்சியுள்ள பகுதி நியாயமான லாப வரம்பைவிட அதிகமென்றே சொல்ல வேண்டும். இந்த வித்தியாசம் மற்ற மாகாணங்களில் மிக்க அதிகமாயிருப்பதாகத் தெரிகிறது.

இம்மாகாணம் பற்றிய வரை, இங்கு கொள்ளை லாபத்துக்கு அதிகமாக இடமிருந்து வருவதாகப் புகார் செய்ய முடியாது. தீர்வை நீங்கு முன் இங்கு உப்பு விலை படியொன்றுக்கு இரண்டணா முதல் இரண்டரையணா வரையிலிருந்தது. இப்போதுபடி ஓரணாவுக்குக் கிடைக்கிறது. எனவே, தீர்வை நீங்கியதன் பலனில் ஒரு கணிசமான அளவு மக்களுக்குக் கிடைத்து வருவது தெளிவு. எனினும் மாகாண சர்க்காரே விநியோகப்பொறுப்பை எடுத்துக் கொண்டால், தற்போது பல தரகர்களுக்கு அவசியமில்லாமல் போகலாம். அந்த அளவுக்கு உப்பு இன்னும் மலிவாக ஜனங்களுக்குக் கிடைக்கக் கூடும். மேலும் இந்த ஏற்பாட்டின் கீழ் சர்காரிடம் எப்போதும் கை வசத்தில் ஒரு கணிசமான அளவு உப்பு இருந்து வரும். ஆதலின் இத் துறையில் அளவுக்கதிகமான லாபமடிக்கும் துர்புத்தி எந்த சந்தர்ப்பத்திலும் வர்த்தகர்களுக்கு ஏற்படாதென்பது திண்ணம்.

உப்பு ஆலோசனைக் கமிட்டியில் பேசிய மேற்குறித்த உதவிப் பிரதம மந்திரி இந்நாட்டில் உப்பு உற்பத்தியின் தரம், அளவு இரண்டையும் மேற்கொண்டு பெருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். சுமார் மூவாயிரம் மைல் நீளமுள்ள கடற்கரையோரமும், தேவையான சூரிய வெப்பமும் வாய்க்கப் பெற்ற இந்நாட்டில், நமக்கு வேண்டிய உப்பு மட்டுமல்ல, கிழக்கிந்திய நாடுகளின் தேவை முழுதும் பூர்த்தியாவதற்கான அளவு உற்பத்தி செய்ய முடியும். எனினும் சென்ற பல ஆண்டுகளாக அயல் நாடுகளிலிருந்து நாம் பெருவாரியாக உப்பு வரவழைத்து வந்திருப்பது ஒரு சாதாரண வெட்கக் கேடல்ல. 1948 – 1949 ஆண்டுகள் ஒவ்வொன்றிலும் ஒன்றேகால் கோடிமணங்கு உப்பு இறக்குமதியாயிருக்கிறது. 1950 – ல் இவ்விறக்குமதி லட்சம் மணங்காகக் குறைந்திருப்பது ஆறுதலளிக்கக் கூடிய விஷயம். இவ்வாண்டு சிறிதும் இறக்குமதிக்கு அவசியமிராதென்றே எண்ணுகிறோம். ஆனால் இத்துறையில் சுய தேவை பூர்த்தியுடன் நாம் திருப்தியடைந்து விடுவதற்கில்லை. உற்பத்தியை மேற் கொண்டு பெருக்கி சுற்றியுள்ள நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலும் நாம் கவனம் திருப்ப வேண்டும். இதற்கு உப்பின் தரத்தை விசேஷமாக அபிவிருத்தி செய்வது அவசியமென்பது சொல்லத் தேவையல்லை. உள் நாட்டுத் தொழில்கள் சிலவற்றிற்கும் உயர் தர உப்பு இன்றியமையாதது. எனவே, உப்பு உற்பத்தியாளர் உற்பத்தியின் அளவை மட்டுமின்றி தரத்தையும் பெருக்குவதில் இனி விசேஷ கவனம் செலுத்துவரென்று எதிர்பார்க்கிறோம்.



அமெரிக்கக் கிராமாந்திரப் பிரதேசங்களிலுள்ளவர்களுக்கு இலவசமாகப் புத்தகங்களை எடுத்துச் சென்று வழங்கி உதவிபுரிய ஒரு லைப்ரரி இருக்கிறது. அத்தகைய புத்தகசாலையைச் சேர்ந்த ஒருவர் வீட்டை விட்டு வெளியே புறப்பட்டுச் செல்லும் சிறுவர்களுக்கு அவர்கள் புறப்படு முன் புத்தகங்களை ஒரு ஸ்திரீ வழங்குகிருர்.



அரிஸோனுவில் இம்மாதிரியான கார்களில் குழந்தைகளுக்கும், முதியவர்களுக்கும் புத்தகங்கள் எடுத்துச் செல்லப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன.

# காலைதயம்

ர.வேங்கடரத்னம்

“இன்றையப் பொழுதைத் தாண்டி விட்டால் போதும் நோயாளி பிழைத்து விட்டதாகச் சொல்லிவிடலாம் இன்று இராப்பொழுது நல்லபடியாய்க் கழிந்து விட்டால், போதும் அப்புறம் கவலையில்லை.”

இவ்வாறு வேறு யாரால் கூறமுடியும்?

நோயாளிக்குச் சிகிச்சை செய்த வந்த டாக்டருடைய வாக்குதான் இச் சொற்கள் கேட்டுவிட்டு பக்கத்தில் இருந்தோர் அனைவரும் தலைமேல் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டனர் டாக்டரும் தன் வழியே பறந்துபோய் விட்டார்.

நோயாளியின் மனைவி அமுதவல்லி டாக்டர் சொல்லைக் கேட்டு மனம் ஒடிந்து போயினள். அவளுக்கு ஆரம்பத்திலிருந்தே டாக்டர்மீது நம்பிக்கை ஓரளவு மட்டில்தான் இருந்தது. அந்நம்பிக்கை இப்போதும் அதே அளவிற்கு அவளிடம் குடி கொண்டிருந்தது. முருகன் அருள் இருக்கும்வரை ஒரு கேடும் வராது என்பது அவளது துணிபு. நம்பிக்கை மோசம் செய்யும் வழக்கம் தன் ஆசை தெய்வத்தினிடம் கிடையாது என்ற திட நம்பிக்கையில் அவள் முழுப் பாரத்தையும் அவன்மீது போட்டிருந்தாள்

கஷடம்தான் விசுவரூபம், எடுத்து பிரம்மாண்டமாய் வந்திருந்ததே ஒழிய அவள் அதைத் தாங்க போதிய வயதுகூட வந்தவள் அல்ல. கலியாணம்கூட இப்போதுதான் ஓரிரு ஆண்டுகள் முன்னே முடிந்திருந்தது. புருஷனோடு வாழவந்து இரண்டாண்டுகள்கூட முடியவில்லை அதற்குள் ஒருநாள் திடீரென்று படுத்துவிட்டான் அமுதவல்லியின் ஆசைக்கணவன்.

இதைத்தான் அக்கம்பக்கத்தவர்கள் அதற்குள் இவ்வளவு பெரியசோதனை வரவேண்டாம்! என்று திருப்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருந்தனர்.

டாக்டர் வார்த்தைகளைக் கேட்டுவிட்டுத்தன் வழக்கப்படி அமுதவல்லி ஆலயம் நோக்கிக் கிளம்பினுள். முருகனுக்கு எதிரே கூப்பி விழுந்து கும்பிட்டாள்: அவளுக்குத் திருப்தியில்லை அடுத்து இரிந்த வள்ளி தேவியின் சன்னதிக்குச் சென்ருள் அவளையறியாமலேயே அலாதியுணர்ச்சி பீறிட்டுக் கொண்டு வந்துவிட்டது.

“அம்மா, உன் கணவர் மறந்தாலும் நீ கைவிட்டுவிடாதே. உன்னைத்தான் நம்பியிருக்கிறேன். இன்றிராப் பொழுதுதான் அவருக்கு கண்டம் இருக்கிறதாம் டாக்டர் சொல்லிவிட்டார் நீ என்னை கட்டாற்றில் தவிக்க விட்டுவிடாதேயம்மா, பெண்ணுக்குப் பெண் என்ற முறையில் அந்தரங்கமாக உன்னிடம் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன். உன் கணவர் விட்டாலும் நீ என்னைப் புறக்கணித்து விடமாட்டாய் என்று நம்புகிறேன் அவர் உயிரை எப்படியாவது காப்பாற்றிக் கொடுத்துவிடம்மா. உனக்கு முருகனுடைய உயிர் எப்படியோ எனக்கு அவ்வளவு மதிப்பு வாய்ந்த பொருள் என் கணவரது உயிர், உன்னைப்போல ஒரு பெண் அம்மா கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன், மறந்துவிடாதே”

அமுதவல்லிஎன்றும் போல கையில் திரு நீற்றை எடுத்துக் கொண்டு விடை பெற்றுக் கொண்டாள்.

“ஆமாம். முன்னதாகவே உன்னிடம் சொல்லி விட்டேன். அம்மா” என்று கூறிவிட்டு. அவள் வீட்டிற்கு நடை எடுத்துவைத்தாள்.

“உன் குணத்திற்கு இப்பேர்ப்பட்ட சோதனை வேண்டவே வேண்டாம். என்ன பண்ணுகிறது?’ என்று ஒரு கிழவி அங்கலாய்த்தாள்.

“வாடியம்மா வா நன்ருய் வேண்டி கொண்டு வந்தாயா? உன் பக்திக்கும் உனக்கிருக்கும் நம்பிக்கைக்கும் தெய்வம் இப்படிக் கண்ணை மூடிக்கொண்டிருக்க வேண்டாம். அப்படியும் உன் நம்பிக்கை குறையாமல் இருக்கிறதே அதைச் சொல்லு”—நோயாளியின் உடல் நிலை இரண்டு நாள் முன் தொட்டு மோசமானதிலிருந்து தந்தி கொடுத்து எங்கிருந்தோ வந்திருந்த வயோதிகஸ்திரீ யொருத்தியின் வார்த்தைகள் இவை.

இவற்றைக் கேட்கவே அமுதவல்லிக்குப் பிடிக்க வில்லை. ஒரு நாளும் தேவி துரோகம் செய்ய மாட்டாள். அதுவும். தான் இவ்வளவு தூரம் வசால்லி வந்த பிறகு ஒரு கேடும் வராது என்று அவள் தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். வள்ளி தேவியின் பிரசன்ன முகம் அவள் கண் எதிரே தோன்றி மறைந்தது. அவள் முகமும் பிரசன்னமாகியது. அவள், கையில் இருந்த தெய்வக் சாம்பலைக் கணவன் நெற்றியில் இட்டாள்

அருகில் இருந்தோர் அவளையே வெறித்துப் பார்த்தனர்

பாத சரம கலீர் கலீர் என்றொலிக்க திக்கைக் கிழித்துக் கொண்டு தேவி சென்று வகாண்டிருந்தாள். அவளது கண்கள் நாயகனைத் துழாவிக்கொண்டிருந்தன. எந்தக் குன்றின் மீது அமர்ந்திருக்கிரோ என்ற பரபரப்புடன் வள்ளி தேடினுள் தூரத்தே மலைச் சாரல் ஒன்றில் மயில் தோகை தெரிந்தது. தேவியின் பரபரம்பும் சற்றே தணிந்தது. மயிலுக் கெதிரே குன்று தோருடும் குள்றக்குடியோன் குன்றம் ஒன்றின் மேல் அமர்ந்திருந்தான். தொடையில் சார்த்தியிருந்த வேலின் இலை எட்டியிருந்தே பளபளத்தது

வள்ளி பின்புறமாகச் சென்று நின்ருள்.

‘என்ன யோசனையோ?” என்ற அவளது கேள்வி கேட்டு திடுக்குற்றுத் திரும்பினுன் கந்தவேள்.

“உங்கள் பக்தன் நிலைமை தெரியுமா?

தேவியின் கேள்விக்குத் தலையை அசைத்தான் குமரன்

தெரிந்துமா, இங்கே வந்து மயிலின் ஆட்டத்தைப் பார்த்திக் கொண்டிருக்கிறீர்கள்?

“என்ன செய்யச் சொல்கிருய்?”

“உங்களுக்குத் தெரியாததா?”

“தெரிய வில்லையே..’

“ஓஹோ அதனுல் தானு சாது போல இத்தன்னந்தனிக் குன்றின் மேல் வந்தமர்ந்தீர்கள்?’

அண்டம் அதிர வேலினை குலுக்கிக் கொண்டு எழுந்தான் முருகன்

‘கிளம்பி விட்டீர்களா? மிகவும் நல்லது நான் வேண்டி வந்தது இவ்வளவு தான்!

“எவ்வளவு தான்?”

‘நீங்களே தாள் காப்பாற்றக் கிளம்பி விட்டீர்களே!’ வேறென்ன வேண்டும் எனக்கு?’

வள்ளி நாயகன் திகைத்தான்.

என்ன செய்வது?” திகைப்போடு தெறித்து வந்ததிக் கேள்வி

“பின்னே உட்காருங்கள்” என்று இழுத்து அமர்த்தினுள் வள்ளி

“அந்தப் பெண்ணைக் கைவிட்டு விடலாமா? சொல்லுங்கள் உங்கள் சன்னிதானத்தில் வந்து அழாக்குறையாக வேண்டிக் கொண்டுவிட்டு நம்பிக்கையோடு சென்றிருக்கிருள்”

“யார் தான் வேண்டிக் கொள்வதில்லை?”

“எங்கே, இன்னொரு தரம் என்னைப் பார்த்துக் கூறுங்கள் என்று வள்ளி. நாயகனின் முகத்தைத் தன் புறம் திருப்பினுள்.

“அவளது பக்தியும் மற்றவர்களது தரத்தைச் சேர்ந்தது தான் என்கிறீர்களா? அப்படியானுல், வைத்தியன்



கையை விரித்து விட்டதும், சரணு கதியென்று அலறிக் கொண்டு தஞ்சம் புகும் பக்தர்களைப் போன்றவள் தான் அந்த அமுதவல்லியும், என்று குறிப்பிடுகிறீர்களா?

''இல்லை''

''பின்னே?''

''நாம் என்ன செய்ய முடியும்? நீயே சொல்லு''

''உங்களை அவள் அவ்வளவு தூரம் நம்பிக் கொண்டிருப்பதற்கு நல்ல டதில் இது! நீங்கள் இப்படியிருப்பீர்கள் என்று தெரிந்து கொண்டுதான், அந்த புத்திசாலிப் பெண் உங்களை நம்பியிருந்தால் போதாது ஒன்றும் கடவாதென்று, என்னிடம் மன்றுடிக் கேட்டுக் கொண்டு சென்றிருக்கிருள். அத்தோடுகூட நிறுத்திக் கொள்ள வில்லை; உங்கள் வாடை என் மீது அடிக்காமல் இருக்க வேண்டுமே என்ற பயத்தில், பெண்ணுக்குப் பெண் என்ற முறையில் சொல்லுகிறேன் அந்தரங்கமாய்க் கேட்டுக் கொள்கிறேன் என்றெல்லாம் கெஞ்சிக் கூறினள். எனக்கு நீங்கள் எப்படியோ, அதுபோல அவளுக்கு அவள் புருஷன் என்று வேறு மன்றுடினள் அவளும் தான் வெறெப்படி இரங்குவாள்?''

பெண்ணுக்குப் பெண் என்று அவள் சொன்னதும், இதோ என்று அபயம் அளித்துவிட்டு, இங்கே ஓடி வந்தாயாக்கும் அப்படித்தானே?''

''ஆமாம் நீங்கள் சிறிதுநேரம் முன்னர் செய்த காரியம் தானே அது?'

கந்தன் ஆசைக்கண்களுடன் [illegible] இயை நோக்கினன்.

'நீங்கள் தப்பிக்கொண்டு விடுவீர்கள். அவளுடைய புருஷன் இறந்து விட்டால், என் தலைதான் உருளும் நீயும் கைவிட்டு விட்டாயே, தாயே உன்னிடம் அவ்வளவு தூரம் சொல்லி விட்டுச் சென்றேனே உன்னை நம்பியிருந்தவளுக்கு நல்ல மரியாதை இது என்று அந்தப் பெண் என்முகத்தில் இடித்துச் சொல்லிக் காட்ட வேண்டும் என்கிறீர்களா!,,

அழுத்தமாக நான் அப்படிச் சொல்லவில்லை,, என்ற பதில் வந்தது

''அப்படியானல். நீங்கள் அமுதவல்லியின் கணவனை எப்படியாவது காக்க வேண்டும் எனக் கூறி, வள்ளி அவனது கரத்தை அழுந்தப் பற்றினள் கந்தன் தென்திசையை நோக்கி கல்லைப் போல அமர்ந்து விட்டான்,

''நீங்கள் என்ன தான் செய்யப் போகிறீர்கள்? ;என்று வள்ளி அவனுடலைக் குலுக்கினள்.

'கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். மாட்டேன் என்று என்னைப் பார்த்துச் சொல்லி விடுங்கள் சென்று விடுகிறேன்'' என்று காலைப்பற்றினுள் வள்ளி.

குமாரக் கடவுளின் கண்கள் சுழன்றன. 'சரி. நான் செல்கிறேன். இன்றிரவு ஏதேனும் நிகழ்ந்து விட்டால், அவள் உங்களையும் வெறுமனே விட்டு விட மாட்டாள் அதுமட்டும் நினைவிருக்கட்டும் நாளைக்கு அவ்வளவு பேர் எதிரே வந்து உங்கள் சன்னதியில் உங்களையே படக்கப்போகிருள், பாருங்கள் நம்பியவளுக்கு நல்ல மரியாதை இது என்று ஏசிக் காட்டுவாள் பாருங்கள் உங்கள் விபூதிக்கு என்ன சக்தி மயனக் கோட்டாள். சந்தி சிரித்துப் போகும் பாருங்கள்,,

ஊஹூம் முருகன் அசையவேயில்லை

''நீங்கள் சலன மற்றிருப்பதன் பொருள் புரிகிறது. ஆமாம், அவள் என்னைத் தானே ஏசிக் காட்டுவாள்? உங்களுக்கு கென்ன வந்தது அம்மா, போதும் உன் அருள் என்று ஏசிக் காட்டட்டும், ஏன், சேர்ந்துகொண்டு நீங்களும் சிரியுங்களேன். இன்னும் பத்துபேரைக், கூட்டிக் கொண்டு, சிரிக்க வாருங்களேன்.

வள்ளியின் கண்ணோரங்களில் நீர் துளித்து நின்றது மயில் இளம்பியது கண்ணீரும் வற்றியது.

'சற்றேறவில்,,

இக்கட்டளை கேட்டு யம தர்மன் முருகன் எதிரே நின்றுன். அவன் எங்கோ அவசரமாய்ச் சென்று கொண்டிருந்தான். திடீரென குமரன் எதிர்ப்பட்டது அவனைத் திகைப்பில் ஆழ்ந்து விட்டது கையிலிந்த பாசக் கயிற்றைத் தன் கழுத்தில் மீது சுருட்டிப் போட்டுக் கொண்டு, கை வாய்ப் புதைத்து நின்றுன்,

'குமார தேவ, என்ன கட்டளை.

''எங்கே சென்று கொண்டிருந்தாய்'

இரண்டு மூன்றிடங்களில் வேலை இருக்கிறது. மூன்று உயிர்களை இன்று கொண்டு வந்து சேர்க்கவேண்டும் இப்போதே மணி ஆறு ஆகப்போகிறது ஆறரை மணிக்கு முதல் உயிரை முடித்து விடவேண்டும், அடுத்தது எட்டு மணிக்கு, கடைசி உயிர் பத்தரை மணிவரை தான் இருக்க வேண்டியது இம் மூன்று இடங்களிலும் முடித்துக்கொண்டு வந்து விடலாம் எனக் கிளம்பினேன்.''

யமன் குறிப்பிட்ட மூன்றும் உயிர் தான் அமுதவல்லியின் கணவனுடையது என்பது குமரனுக்குத் தெரிந்தது. பத்தரை மணிக்குள் ஆவன செய்தாக வேண்டுமே என்ற துடிப்பு ஓர்புறம் பெரிதாய்க்கொண்டிருந்தது.

''கடைசியெனக் குறிப்பிட்டாயே, அவ்வுயிரை விட்டு விட முடியாதா? இன்றே தீர்த்து விட வேண்டுமா?,,

''தாங்கள் என்ன. பரிகசிக்கிறீர்களா?''

வேலினை அகிரும்படிக்கு துக்கிக் கொண்டே, முருகன் ''உண்மையாய்த்



தான் கேட்கிறேன்'' என்று மொழிந்தான். யமன் கையைப் பிசைந்தான்

''முடியுமா. முடியாதா? சொல்லு, இரண்டில் ஒன்றுதான் எனக்கு வேண்டும்

''நான் என்ன செய்ய முடியும்?''

எனக்குவேண்டியது அவ்வளவுதான்

''ஐயன் கோபம் கொள்ளலாகாது''

''கோபமேயில்லை''

'தப்பினேன்! கிருஷ்டிகர்த்தா எழுதிவிட்ட எழுத்து வழி செல்பவன் நான். பிரம்மலிபி அந்த உயிருக்கு. இன்றிரவுப் பத்தரை மணி கடைசி மூச்செல்கிறது நான் அதுசொல்படிச் செல்பவன். செல்லத்தவறினல்; பிரம்மதேவனை மீறியவனுவேன்''

நல்லபடியாய் போய்ச் சேரப்பாநீ

யமன் அடுத்த க்ஷணம் தன் வாகனத்தில் வெகு தூரம்சென்றிருந்தான்.

முருகன் பிரம்மதேவனின் எதிரே சென்று நின்றுன்

'வணக்கம்!''

''யாரது?'' என்று நிமிர்ந்தார் கிருஷ்டி கர்த்தா அவரது கண்கள் வியப்பில் அகல விரிந்தன.

பறந்து வந்த படபடப்புடன் உள்ளத்துத் துடிதுடிப்பும் சேர்ந்து கொண்டிருந்தது.

கையில் வருவாகிக் கொண்டிருந்த சிருஷ்டியை இடையில் நிறுத்தி விட்டு பிரமன் கந்தனை நோக்கினர்.

''தாங்கள் சுமார் இருபது இருபத்திரண்டு ஆண்டுகள் முன் சிருஷ்டித்த உயிர் ஒன்றின் கடைசி நாள் இது. இரவு பத்தரை மணி தான் அவ்வுயிரின் கடைசிப் போது தீர்ந்தது அத்துடன் வாழ்வு... ''என்று சிவகுமாரன் கூறுகையிலேயே, 'ஆமாம் நினைவிருக்கிறது'' என்று சரத்தை அசைத்தார் நான் முகன்

''அவ்வுயிரைக்காக்க வேண்டும். இது தங்களால்தான் முடியும்செயல். தாங்கள் கை விட்டு விடலாகாது மன்றுடிக் கேட்டுக் கொள்கிறேன்'' என்று வடிவேலன் இரங்கினன்.

பிரம்மனது நான்கு முகங்களிலும் குறு நகைக்கீற்று படர்ந்தோடி மறைந்தது.

'நான படைப்பவன். காப்பது நான் அல்ல உன் அம்மான் திருமாலினிடம் சென்று கேட்டுப்பார். என் கருமம் படைப்பு தான் காத்தருளுவது நானல்லவே.''

பிரம்மனது பதில் குமரனை மறுகணமே அவ்விடத்தை விட்டுக் கிளப்பியது.

பாற்கடலின் நடுவே பள்ளி கொண்டிருந்த பரந்தாமனிடம் முருகன் சென்றுன் மாமனின் பிரசன்ன முகம் கண்டு ஆசையோடு அணுகினன் வேலவன்.

வேலின் ஓசை எதுவுமின்றி மெதுவாய் அதை வைத்து நீலத்திரு மேனியனுக்கு அஞ்சலி செலுத்தினன். மாமனின் புருவங்கள் உயரே எழும்பின முருகனுடைய மயிலைப் பார்த்து முறைத்துக்கொண்டிருந்தது ஆயிரந்தலைநாகம்.

''தங்கள் தயவு நாடிவந்தேன்.''

''நன்றாய்த் தெரிகிறது.'

''பூலோகத்தில் ஒரு ஜீவன் துடித்துக்கொண்டிருக்கிறது அதன் கடிவாளம் தங்கள் கையில் உள்ளது. அவ்வுயிர் இன்று சாகவேண்டியதென்று விதிக்கப்பட்டுள்ளது. தாங்கள்தாம் அதைக் காத்தருளவேண்டும்.'

''என்ன இது?'' என்று மால் நிமிர்ந்தமர்ந்தார்.

''ஆமாம், தாங்கள் மறுக்கலாகாது. அவ்வுயிரைக் காப்பாற்றியே தீர வேண்டும்.''

''ஆணை இட்டுவிடுவாய்போல் இருக்கிறதே''

''இல்லை; மன்றுடிக் கேட்கிறேன்.''

''குமரா நீ இடம் மாறிவந்து கேட்கிருயே.''

குமரன் விழித்தான். இலக்குமி மருகன், மணளன் இருவரையும் மாறி மாறிப் பார்த்தான்.

''நான் காப்பாற்றுவதோடு சரி. அழிப்பது நான் அல்ல என்பது உனக்குத் தெரியுமே.''

''தாங்கள் அவ்வுயிரைக் காத்தருள வேண்டும் என்று கேட்கத்தானே வந்திருக்கிறேன்? அழிப்பதைப்பற்றிய பேச்சே இல்லையே.'

''நான் காக்கவேண்டியது இன்றிரவு வரைதான். அதற்கப்புறம் என் பொறுப்பு தீர்ந்துவிடுகிறது. 'அழிக்கும் தெய்வம் இருக்கிருரே உன் தந்தை, அவரிடம் சென்று கேள். அவ்வுயிரை அவர் அழித்தலாகாது என்று. அவரிடம் உயிர்ப்பிச்சை வாங்கு.''

குமரன் முகத்தில் சிறு சோர்வுக்குறி தோன்றியது. அவன் கிளம்பியதும் ''தப்பினேன் மருமகனிடமிருந்து ஒருவழியாய்' என்று பெருமூச்செறிந்து கொண்டு பழையபடி பரந்தாமன் பாம்பின்மேல் சாய்ந்தான்.

பிரம்மனும் மாமனும் கைவிட்டு விட்ட பின்னர், தந்தையா இணங்கி விடப்போகிருர்?

அரைகுறை நம்பிக்கையோடு, தந்தையின் எதிரே சென்று நின்றுன் சிவகுமாரன். முழு விவரத்தையும் பூதியணி முண்டனிடம் எடுத்துரைத்தான்

'நியாயமான கோரிக்கை'' என்று சிவபெருமான் குறிப்பிடக் கேட்டதும் வள்ளிநாயகனுக்கு நம்பிக்கைசுரந்தது

''தாங்கள்தாம் அந்த ஜீவனைக் காக்கவேண்டும்.''

''காப்பது நான் அல்லவே.''

'மன்னிக்கவும், தாங்கள் காக்க வேண்டாம். அழிக்காதிருக்கவேண்டும்'

பெருமானது நெற்றி சுருங்கியது.

''அவர்கள் அனைவரும் உன்னைத் தட்டிக்கழிக்கமுயன்றுர்கள். உன்தொல்லை விட்டால் போதும் என்ற எண்ணத்தில், உன்னை என்னிடம் அனுப்பி விட்டனர் ஆனல், நான் உண்மையைக் கூறிவிடுகிறேன்,''

சிவகுமாரன் முகத்தைச் சுளித்துக் கொண்டான். தன் கோரிக்கை நிறைவேறப் போவதில்லை. வேறு ஏதோ உபதேசம் செய்து, தன்னைத் தந்தை சமாதானப்படுத்தி விடப் போகிருர் என்பது ஞானச் செல்வனுக்கு நன்ருய்த் தெரிந்தது

''நீயே ஞானக் குழந்தை தானே? உனக்குத் தெரியாததா? சற்றே சிந்தித்துப் பார், வல்லமை அவ்வளவும் பொருந்தியிருந்தும், நாமும் நியதியுடன் இணங்கிச் செல்ல வேண்டியவர்கள். விதித்திருப்பதற்கு, எதிர்த்துச் செல்வதில்லை; நாமும் கட்டுப்பட்டே செல்பவர்கள்.''

'விளங்கிய' தென்றுன் ஞானச் செல்வன்.

''உயிர் ஊட்டுவதற்குத்தானே எங்களை நாடி வந்தாய்? வேண்டாமே! அந்தப் பெண்ணுக்கு ஞானத்தை ஊட்டேன் அது உனக்கு எளிதாயிற்றே''

முருகன் வள்ளியினிடம் வந்து விவரமாக அவ்வளவும் கூறினுன்.

''சரி, செய்யுங்கள்'' என்றுள் வள்ளி பழைய உற்சாகம் எல்லாம் இழந்த குரலில். முருகன் அமுதவல்லியை நோக்கித்தன் ஞானப்பார்வையைச் செலுத்தினுன்.

முந்திய இரவு பத்தரை மணிக்கே அமுதவல்லி கணவனைப் பறி கொடுத்து விட்டாள்.

உற்றுர் உறவினர் அனைவரும் கூடியிருந்தனர். அவர்கள் அமுதவல்லிக்குத் தம் அனுதாபம் தெரிவிக்கும் முறையில் பேசிக்கொண்டிருந்தனர்.

''இந்தப் பெண்ணுக்கு இந்த வயசில் இவ்வளவு பெரிய சோதனை வந்திருக்க வேண்டாம்.

'அந்த தெய்வமும் இவளை இப்படி நம்பிக்கைத் துரோகம் செய்திருக்க வேண்டாம் இவள் வைத்திருந்த நம்பிக்கை இப்படி அவலமாக வேண்டாம்.''

''அதைச் சொல்லு நன்ருய் அந்தப் பாழும் தெய்வம் இப்படிக் கண் திறவாமல் இருந்திருக்க வேண்டாம்''

''கலி காலத்து தெய்வம் தானே? அதற்குச் சக்தி தான் இருக்கிறதோ, இல்லையோ?'

அமுதவல்லி இவ்வளவையும் கேட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கு இச் சொற்கள் நாராசமாய் ஒலித்தன. இவற்றிற்கு அவள் மனதிற்குள் பதில் சொல்லிக்கொண்டாள்

''இவர்கள் வாய் ஏன்தான் இப்படியெல்லாம் பேசுகிறதோ தெரியவில்லை. தெய்வம் என்ன பண்ணும்? எனக்குக் கெடுதல் பண்ணவேண்டும் என்று தெய்வத்திற்கு ஏதாவது ஆசையோ, என்ன? இப்படி என்னைப் போல வேண்டிக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் உயிர்ப்பிச்சை தந்தால், உலகம் உருப்பட்டாற்போல் தான்! பாவம், அந்த தெய்வம் மாட்டிக்கொண்டு முழிக்கிறது இவர்களிடம்''

# பிச்சைக்காரர்கள்

'மகரம்'

சமீப காலமாக எந்தப் பத்திரிகையைப் புரட்டிப் பார்த்தாலும் அதில் "ஆசிரியருக்குக் கடிதங்கள்" என்ற பகுதியில் ஒரே ஒரு விஷயம் அதிகமாக அடிபட்டு வருவதைப் பார்க்கலாம். சீதை காட்டுக்குச் சென்ற போது மாமியுடன் சென்றாளா? அல்லது ஒரு டஜன் டிரங்க் பெட்டிகளில் டெம்பிள் பார்டர் புடவைகளும், டிஷ்யூ சாரிகளும், கொரநாட்டு, காஞ்சீபுரம் பட்டுப் புடவைகளும், பனாரஸ், கராச்சி ஸில்குகளும் எடுத்துச் சென்றாளா? என்ற விவாதம் நடந்ததே அதைவிட: ஜீரோ என்ற ஆங்கிலப் பதத்துக்குச் சரியான தமிழ் பதம் சுன்னமா,, சுழியா, கோழி முட்டையா, குண்டலமா, பூஜ்யமா, இன்மையா என்ற விவாதம் நடந்ததே அதைவிட அதிக காரஸாரமாக இந்த விஷயம் விவாதிக்கப்பட்டு வருகிறது. கோடை வந்ததும் நாய்களை நடுத் தெருவில் மடக்கி ஒரு வண்டியில் ஏற்றி அப்புறப்படுத்துகிறார்களே அப்படி பிச்சைக்காரர்களை அதிகாரிகள் கண்காணா இடத்துக்குக் கொண்டு போய்விட வேண்டுமென்கிறார் ஒரு தர்மப் பிரபு. பிச்சைக்காரர்கள் இருந்தால் தான் நம்மிடையே புண்ணியம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஆவல் பெருகும் என்கிறார் ஒரு புண்ணியவான். "பிச்சைக்காரர்கள் பராமரிப்புக்காக ஒரு அகில இந்திய பிச்சைக்காரர்கள் நிதி என்று ஒன்றை ஆரம்பித்தோ அல்லது பிச்சைக்காரர்கள் வரி என்று ஒன்றை விதித்தோ நிலைமையைச் சமாளிக்க வேண்டுமென்கிறார் ஒரு வருங்கால நிதி மந்திரி: விஷயம் கேவலம் பிச்சை சம்பந்தப்பட்டதேயானாலும் அப்படியொன்றும் அல்ப சொல்பமானது அல்ல அது என்பது இதிலிருந்து தெரிகிறது.

சினிமா கொட்டகையின் முன்பும், பஸ் ஸ்டாப்புகளிலும், க்யூவில் காத்து நிற்கும் நமக்குத் தான் இந்தப் பிச்சைக்காரர்களின் தீனமான குரல் எரிச்சலை உண்டாக்குகிறது. ஆனால், சுவர்க்க வாசலின் முன்பு க்யூவில் நின்றிருந்த நம் முன்னோர்களுக்குப் பிச்சைக்காரர்கள் ஒவ்வொருவரும் அவர்களைத் தேவ லோகத்துக்குச் சீக்கிரம் அழைத்துச் செல்ல வந்த தேவ தூதர்கள் போல தோன்றி இருக்கிறார்கள். "ஐயம் இட்டு உண்," என்பதைத் தாரக மந்திரமாக அவர்கள் ஜபித்து வந்திருக்க வேண்டும். ஆனால், இந்த ஐயம் இடுவதின் நன்மையைப் பற்றி ஐயம் கொண்டோரும் அப்பொழுது இருந்திருக்க வேண்டும். அவர்கள் கிளப்பின எதிர் சுலோகம் தான் "ஏற்பது இகழ்ச்சி" என நினைக்கிறேன்.

வேதங்களை நினைத்ததும் பிரம்மாவின் முகங்களும், யாகத்தை நினைத்ததும், மகாவிஷ்ணுவின் திவ்ய மங்கள விக்கிரகமும், ஞாபகம் வரும் நமக்கு. சிவ பெருமானை ஞாபகப்படுத்த இந்த பிச்சைக்காரர்களே போதும். பிச்சைக்காசு அவர். பிச்சைக்கு ஆண்டியும் அவரே: கையில் ஒட்டிக் கொண்ட பிரும்ம கபாலம் நீங்குவதற்காக அவர் ஒவ்வோரிடமாக பிச்சை வாங்கிக் கொண்டே வந்து மகா விஷ்ணுவிடம் பிச்சை பெற்று ஓடி நீங்கின கதையில் கவிஞர் பிள்ளைப் பெருமாள் ஐயங்காருக்குப் பெரிய ஈடுபாடு.

"செங்கையால் இரந்தவர் கபாலம்
யார் அகற்றினார்" என்று அவர் பாட ஆரம்பித்துவிட்டால் மற்றைய கவிகள் அவரிடம் பிச்சை வாங்க வேண்டியது தான் போங்கள்:

"அன்னம் அறியாத," பரமசிவம் பயின்ற அருங்கலையான பிச்சை எடுப்பதைக் கேவலம் நரர்களாகிய நாம் பயிலுவது சற்று சிரமம் தான். ஏற்பது இகழ்ச்சி என்றவர்கள் கூட ஏற்பது எளிது என்று சொல்லவில்லை. இரப்பது சுலபமல்ல. இறப்பது கூட சுலபமாகத் தோன்றலாம் இரப்பதைவிட என்பர் விஷயமறிந்த வட்டாரத்தினர். இரக்க அஞ்சி இறக்கும் பட்டினியாளர்களைப் பற்றிப் பத்திரிகைகளில் பத்தி பத்தியாக நாம் படித்து வருகின்றோமல்லவா?

பாத நாட்டியத்தை விரதமாகச் சாதகமாக அப்பியசிக்கும் ஒரு நடன கலா விநோதினியால் கூட பிச்சை எடுக்க விரும்பும் ஒருவன் முகத்தில் இருக்கக் கூடிய பாவங்களை அப்படியே பிரதிபலிக்க முடியாது. உங்களுக்கு சந்தேகம் இருந்தால் இந்தப் பாட்டைப் பாருங்கள்.

"பல்லெலாந் தெரியக் காட்டிப்
பருவல் முகத்தில் கூட்டிச்
சொல்லெலாம் சொல்லில் நாட்டித்
துணைக்கரம் விரித்து நீட்டி
மல்லெலாம் அகல ஓட்டி
மானம் என்பதனை வீட்டி
இல்லெலாம் இரப்பது... ...ற."

பாத நாட்டியத்துடன் உட்டியாணா போன்ற ஆசனமும், கூடச் சில சர்க்கஸ் வித்தைகளும் செய்து காட்டினால் தான் சரியானபடி பாவ பூர்வமான பிச்சையை வெற்றிகரமாக எடுக்க முடியும் என்பதை இந்தப் பாட்டு எடுத்துக் காட்டுகிறது என்றால் அது மிகையாகாது.

சிவ பெருமானிடம் ஈடுபாடுள்ள அவருடைய பக்தர்களாகிய (மகா விஷ்ணு பக்தர்களானாலும் ஒன்றே- விஷ்ணு பலிடம் காதல் பிச்சை எடுத்தவர் இல்லையா) நமக்கு இந்த யாசக புத்தி இரத்தத்திலேயே கலந்து போயிருக்கிறது என்னலாம். பிரும்மசாரிகள் பிச்சை எடுத்து உண்ண வேண்டுமென்ற ஒரு நியதியை ஏற்படுத்தி பூணூல் கல்யாணத்தன்று "பவதி பிக்ஷாம் தேஹி" என்ற மந்திரத்தைப் பகிரங்கமாக பிரும்மோபதேசமாகச் செய்கிறார்கள்.

அதற்குப் பிறகு பள்ளிக் கூடத்தில் உபாத்தியாயர்களிடம் மார்க்கு பிச்சை பெற்று வகுப்புகளில் தேறுகிறோம். பிறகு அரசாங்கம் தரும் வகுப்பு வாரி உத்தியோகப் பிச்சையை ஏற்று அவர்கள் தரும் பிச்சைக் காசாகிய பஞ்சப் படி, பட்டினிப் படி., தானப்படி, தாத்திரப் படி எல்லாம் தன்னுள் கொண்ட சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு போய் மனைவியிடம் கொடுத்துவிட்டுப் பிறகு அந்தப் பரதேவதை நம்முடைய மாதச் செலவுகளுக்கென்று படியளக்கும் பிச்சையிலும் பிச்சைக் காசைப் பெற்றுத் திருப்தியடைகிறோம். (இந்தப் பிச்சையிலும் பிச்சை காசிலிருந்து தான் நாம் தினமும் இந்தப் பிச்சைத் தொழிலாளிகளுக்குப் பிச்சை போடுவதில்லை என்று சிலர் குறைபடுகிறார்கள்).

உத்தியோகத்தில் மேல் அதிகாரிகளுக்குத் தாஸானுதாஸர்களாகஇருந்து அவர்கள் முகம் கோணாமல் அவர்கள் நகம் அழுக்காகாமல் பார்த்துக் கொண்டு கடைசியில் அவர்கள் தரும் பிச்சைக் காசான மூன்று ரூபாய் (இரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை:) சம்பள உயர்வை(?) ப் பெற்றுப் புளகாங்கிதமடைகிறோம். ஆனால், நம்மை யாராவது பிச்சைக்காரர்கள் என்று அழைக்கத் துணிவார்களா? ஊழியர்கள், உத்தியோகஸ்தர்கள் சிப்பந்திகள் என்ற கௌரவமான பெயரைப் போர்த்துக் கொண்டு நாம் பிச்சை எடுப்பது மற்றவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது?





ஆம். பிச்சையில் கௌரவப் பிச்சை இருக்கிறது. இந்தப் பிச்சை எடுப்போர் சாமி: காலணா (இப்பொழுதெல்லாம் காலணா யார் கேட்கிறார்கள்? நாலணா என்று திருத்திப் படியுங்கள் என்கிறார் ஆசிரியர்) கொடுங்கள் என்று கேட்க மாட்டார்கள். இவர்களில் சிலர் பெண்ணுக்கு இந்த வைகாசியிலேயே கல்யாணம் செய்து பார்க்கப் போகிறவர்கள், சிலர் பிள்ளைக்கு அடுத்த வாரமே உபநயனம் செய்பவர்கள், சிலர் திருப்பதி போவதற்கு வேண்டிக் கொண்டவர்கள், சிலர் குக்குடபுரம் கோவில் மதில் ஜீர்ணோத்தாரண கைங்கர்ய நிதி வசூல் செய்பவர்கள், சிலர் பாகிஸ்தானில் பத்து கோடி ரூபாயை பறிதவிக்க விட்டுவிட்டு உங்களிடம் கேவலம் ஒரு கப் சாயாவுக்காக சலாம் போடுபவர்கள், சிலர் ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து அப்பொழுது தான் டிஸ்சார்ஜ் ஆகி சொந்த ஊருக்கு (அந்த ஊர் திருநெல்வேலி ஜில்லாவில் தான் அனேகமாகஇருக்கும்) ப் போக பணம் இல்லாதவர்கள், சிலர், பிரஸவ ஆஸ்பத்திரியில் வேறு யாரையோ 'அட்மிட்' செய்ய டாக்ஸிக்குப் பணம் கேட்பவர்கள் என்று பல உதாரணங்கள் காட்டலாம்.

இப்படி பிச்சை எடுப்போர் பல விதமாக இருப்பதனால் தான் "ஐயம் இட்டு உண்" என்ற சட்டத்துக்குப் "பாத்திரமறிந்து பிச்சை இடு" என்ற திருத்தத்தை நம் முன்னோர்கள் கொண்டு வந்து நிறைவேற்றியும் இருக்கிறார்கள். ஒருவன் ஒரு பையனுக்கு காலணா கொடுத்தானாம். அந்தப் பையன் பிச்சைக்கார தொழிலாளி இல்லையாம். ஆகையால், அவன், அந்தக் காலணாவுக்கு ஒரு தூண்டில் முள் வாங்கி, மீன்பிடிக்கும் தொழிலைத் தொடங்கினானாம். அந்த மீன்களைக் கொன்ற பாவம் காலணா பிச்சை இட்டவனைப் பற்றிக் கொண்டதாம்.

அப்பழுக்கு இல்லாதபடி நாய் வேஷம் போட்டவன் குரைப்பது போல, வேஷப் பொருத்தமாக சில சில பிச்சைக்காரர்களாலேயே பிச்சை எடுக்க முடிகிறது. "சாமி: நான் நொண்டி. இரண்டு காலும் இல்லாதவன். காலணா போடுங்கள்:" என்று சொல்லிக் கொண்டே திருப்பதி மலை மீது பாய்ந்து பாய்ந்து ஏறி, உங்களை வழி மடக்கும் பிச்சைக்காரர்களைப் பார்த்திருப்பீர்கள். அன்று ஒரு 'குருட்டுப்' பிச்சைக்காரனை மவுண்ட் ரோடு க்யூவில் நான் பார்த்தேன். அவன் நடந்து கொண்டே பிச்சை எடுத்த விதம் இது தான். "ஐயாமாரே இரண்டு கண்ணும் இல்லாதவன் காலணா போடுங்கள் ஸார்" (மன்னிக்கவும்– ஓரணா போடுங்கள் என்று இருக்க வேண்டும்) "அம்மா: இந்தக் குருட்டு ஏழையைக் கண் திறந்து பாருங்களேன்" "ஓ பாட்டியம்மா ஓங்களுக்கு கூட கண் இல்லையா?" "க்யா ஸாப் முஜே ஏக் அணா தீஜியே:" "ஐயா தொரை: ப்ளீஸ் கிவ் ஒன் அணா டு ப்ளைண்ட் பெக்கர்:" "செட்டி காரு நேனு குட்டி வாடண்டி ஒக அணா இச்சி போண்டி:" என்று அந்தக் குருட்டுப் பிச்சைக்காரன் க்யூவில் தனக்கு எதிரே நிற்கும் ஒவ்வொருவரையும் தனியாகவும், சரியாகவும் விளித்துப் பிச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான். இவர்கள் எல்லாம் நாய் வேஷம் போட்டு சரியாகக் குரைக்கத் தெரியாதவர்கள்.

சில பிச்சைக்காரர்களுக்கு அனாவசியமான கோபம் வந்து விடுவதுண்டு. அவர்களை யாரும் காக்க வைக்கக் கூடாதாம். துர்வாஸ மகா முனி சகுந்தலையின் ஆசிரம வாசலில் பிச்சைக்காக (இதைத் தான் சற்று கௌரவமாக பிக்ஷை என்கிறது) காத்து கிடக்க மனமில்லாமல் சகுந்தலையை சபித்துவிட்டுப் போய்விட்டார். கணவன் சேவையில் கருத்தாய் இருந்த அந்தப் பதிவிரதையை "ஏன் இத்தனை நாழி?" என்று விழித்துப் பார்த்தானாம் கொங்கணவன் என்னும் பசிமிக்க தபசி;

பிச்சை எடுப்பவர்களுக்குப் பொறுமையே பூஷணமாக இருக்க வேண்டும் என்பதை சாவித்திரி நிரூபித்து இருக்கிறாள். யம தர்மனிடம். தன்னுடைய கணவனுடைய உயிர்ப் பிச்சை கேட்கத் துணிந்த அவள் பொறுமையைக் கடைப் பிடிக்காமல் இருந்தால் கடைசியில் அந்த யமப் பயலை அவன் வார்த்தையிலேயே மாட்ட வைத்து சத்தியவானுடைய உயிரைக் கிட்டத்தட்ட அதிகாரப் பிச்சையாகப் பெற்று வந்திருக்க முடியுமா?

எல்லாரும் பிச்சை எடுக்கலாம். ஆனால், எல்லாரும் பிச்சை போட முடியாது. வீட்டு எஜமானர் உத்தரவு இல்லாமல் பிச்சை போட முடியுமா? வீட்டுக்கு முதலாளி எச்சல் கையால் காக்காய் ஓட்டாதவராக இருந்தால்



'புதுப்பத்திரிகையொண்ணு ஆரம்பிக்கப் போறேன், நீங்க ஆயுள் சந்தாதாரராக சேரணும்''

"பத்திரிகை ஆயுளா? என் ஆயுளா?"

அவர் வீட்டில் வேறு யாராவது தப்பித் தவறி பிச்சை போட்டுவிட்டால் அன்று அந்த வீடே அமர்க்களப்படும். இதே மாதிரி "பிச்சை இல்லை" என்று சொல்லுவதற்கும் சில அதிகாரிகள் இருக்கிறார்கள். மாட்டுப் பெண் "பிச்சை இல்லை போ" என்று விரட்டிவிட்ட பிச்சைக்காரனை மாமியார் "இங்கு வா" என்று அழைத்தாளாம். பிச்சைக்காரன் கீழ்க் கோர்ட் உத்தரவை மேல் கோர்ட் மாற்றிவிடும் என்ற ஆவலில் மறுபடி வீட்டுக்கு வாசலில் வந்து நின்று "அம்மா பிச்சை" என்றானாம். "இல்லை என்று சொல்லுவதற்கு அவள் யார்? இப்பொழுது நான் சொல்கிறேன் 'பிச்சை இல்லை' என்று இப்பொழுது நீ போ" என்றாளாம் மாமியார் அம்மாள்!

நம்முடைய பாரத நாடு பிச்சை எடுப்பதைப் பெருமையாகவே கருதி வந்திருக்கிறது. சங்கரரும், புத்தரும் இந்தக் கலையைப் பிரமாதமாக வளர்த்துப் பரவச் செய்திருக்கிறார்கள். தியாகராஜ சுவாமிகளின் உஞ்ச விருத்தி கீர்த்தனங்களை அவர் இராமபிரானிடம் காதல் பசி மேலோங்கப் பாடின உருக்கமான கீர்த்தனங்களை அவர் வயிற்றுப் பசியும் கூடினவராக இல்லாமல் இருந்தால் பாடி இருக்க முடியாது என்று எண்ணுகிறவர்கள் பலர் இருக்கிறார்கள். இந்தப் பரம்பரையையொட்டி தான் நாமும் பலரிடம் பல விதமான



டாக்டர்:—என்ன உங்களைக் கண்ணுலே காண்றதேயில்லே! அடிக்கடி இங்கே வந்துண்டிருங்கோ ஸார்!

பிச்சையையின்னும் கேட்டு வருகிறோம். ஆங்கில ஆட்சி நடந்த போது அமெரிக்கா முதலிய நாடுகளிடம் சோற்றுப் பிச்சை கேட்கிறோம். நமது மா பெரும் தலைவர்கள் எல்லாம் நாளைக்கு வரப் போகும் தேர்தலின் போது நம்மிடம் வோட்டுப் பிச்சைக்கு வரப் போகிறார்கள்:

நாமும் சினிமாக்களில் வரும் பாட்டுகள் எல்லாவற்றையும்விட— கதாநாயகனும் கதாநாயகியும் சொந்தக் குரலில் பாடியுள்ள துவந்த கீதத்தைவிட அந்தப் படத்தில் இரவல் குரலில் பாடியுள்ள பிச்சைக்காரனின் பாட்டையே நாம் அதிகம் விரும்புகிறோம். இந்தப் பாட்டை மீண்டும் ரஸிக்க இரவல் டிக்கெட் கிடைக்குமா என்று யாசிக்கிறோம்.

வலது கை தருவது இடது கைக்குத் தெரியக் கூடாது என்று சொல்லுவார்கள். ஒருபிரமுகர் ஒரு பிச்சைக்கார விடுதிக்கு அளித்த ஒரு லக்ஷ ரூபாய் நன்கொடைச் செக்கில் கை எழுத்து போடும் பொழுது செக் புஸ்தகத்தை இடது கையால் பிடித்துக் கொள்ளாமல் (இடது கைக்குத் தெரியக் கூடாது பாருங்கள்.) கை எழுத்து போட்டாராம். இதன் விளைவு செக்கில் கை எழுத்து கோணலாக விழுந்து செக்கே நிராகரிக்கப்பட்டுவிட்டதாம்.

நிற்க, பிச்சையை ஏற்பதற்கு எல்லோரும் தயாராக ஆனால் பிச்சை இடுவதற்கு யாரும் தயாராக இல்லாத நிலைமை மாறி, பிச்சை இடுவதற்கு எல்லோரும் யோக்யதை பெற்று ஆனால், அந்தப் பிச்சையை வாங்கிக் கொள்ளுவதற்கு யாரும் இல்லாத நிலைமை நம் நாட்டில் சீக்கிரம் ஏற்பட வேண்டும். ஆண்டவனிடம் அருள் பிச்சையையும் அறிஞர்களிடம் அறிவுப் பிச்சையையும் ஏற்பதைத் தவிர வேறு பிச்சைகளை நாம் பகிஷ்கரிக்க வேண்டும். இது தான் நம் எல்லோருடைய இச்சையாக இருத்தல் அவசியம்.




கோபு: டேய் கிட்டு! மானேஜர் என்னத்திற்கடா கோபித்துக்கொண்டார்?
கிட்டு: நான் கொடுத்த 'ஸ்டேட்மெண்ட்'டிலே தப்பிருந்ததடா, அதற்குத்தான், என்னைத் தூங்குமூஞ்சி என்றுகூட சொன்னார். தூக்கம் என்னையறியாமலேயே வந்துவிடுகிறது. என்ன செய்கிறது என்றுதான் தெரியவில்லை.
கோபு: அட அப்பாவி! இதுவா பிரமாதம். நீதான் பார்த்துக்கொண்டு வருகிறாயே. சரியாக மூன்று மணிக்கு நான் 'டீ' சாப்பிடுவது வழக்கமாச்சே, அதுதான் என் சோம்பலைப்போக்கி, சுறுசுறுப்புடன் வேலை செய்ய உதவுகிறது. நீயும்தான் நாளையிலிருந்து 'டீ' சாப்பிட்டுப்பாரு. எல்லாம் சரியாகிவிடும்.

'டீ' என்றால் என்ன? அதுதான் சிக்கனமானதும், களைப்படைந்த உடம்புக்கு ஊக்கத்தையும், தளர்ந்த மனதிற்கு உற்சாகத்தையும் மீட்டுக் கொடுக்க ஒப்பற்றதும், சுலபமாக தயாரிக்கக்கூடியதும், எங்கும் கிடைப்பதுமான தேசியபானம். ஒரு கோப்பை 'டீ' சாப்பிட்டுப்பாருங்கள் அப்பொழுதே அதன் குண விசேஷங்களை உணர்வீர்கள்.



சென்ட்ரல் டீ போர்டாரால் வெளியிடப்பட்டது.




# அணையா விளக்கு

## இதுவரையில் நடந்தவை

உறுதியும் திட சித்தமும், உள்ளவன் சந்தானம். அவனுடைய சிறு வயசிலேயே அவன் தந்தை காலமாகிவிட்டார். அதனால் அவனுடைய மாமா நிலபுலன்களைப் பக்கத்திலுள்ள சிவக்கிராமத்தில் மேற்பார்வை பார்த்து வந்தார். சந்தானத்தின் தாய் காவேரியம்மாள் ஓர் அப்பாவி எதற்கும் அண்ணாவிடம் அவளுக்கு அசையாத நம்பிக்கை. சந்தானம் ஊரும் உலகமும் ஒப்புக் கொள்ளாத முறையில் பாப்பா என்ற பெண்ணிடம் அன்பு கொண்டிருந்தான். அவர்கள் ஒருவரும் அறியாமல் சிவ நகரத்திலுள்ள பொய் சொல்லா பிள்ளையார் கோவிலில் மாலை நேரங்களில் சந்திப்பார்கள். கல்யாணி என்ற எதிர் வீட்டுப் பெண் கல்மிஷமற்ற மனத்துடன் அவனுக்கும், பாப்பாவுக்கும் உள்ள தூய நட்பு ஓங்கி வளர உதவி புரிந்து வந்தாள்

சந்தானம் அப்போது காலேஜில் படித்து வந்தான். சிறு வயது முதலே அவனுடன் சிறிதும் வேற்றுமையின்றி, மாறுதலின்றி அந்நியோந்நியமாய்ப் பழகி வருபவன் சிவு. சிவு இப்பொழுது தனியாக நின்று தன் தந்தையின் வியாபாரத்தை ஏற்று நடத்தத் தொடங்கியிருந்தான். பாப்பாவின் உறவு பற்றி அவனுக்கு எல்லாம் தெரியும். இந்த உறவை அவன் மனமார ஒப்புக் கொள்ளாத போதிலும் சந்தானத்தின் மனசு புண்படும்படி ஊரில் எந்த விவகாரம், வம்பளப்பு நடந்தாலும் அந்தச் சமயங்களில் அவன் எதையும் தியாகம் செய்து அவனுக்காக எந்த இன்னலையும் எதிர்த்து நிற்க முன் வந்துவிடுவான்.

நடேச ஐயர் தம் மனைவியின் தூண்டுதலால் நாளடைவில் தம் மருமகன் சந்தானத்தின் சொத்துக்களைச் சிறுகச் சிறுக உறிஞ்சிக் கொண்டிருந்தார். பணமாகவும், பொருளாகவும் எடுத்துத் தன் மனைவிக்கும், மூன்று பெண்களுக்கும் நகையாகவும், நட்டுகளாகவும் செய்து போட்டுச் சுக வாழ்வு வாழ்ந்து வந்தார், தங்கம் என்ற அவருடைய மூத்த பெண்ணுக்குக் கல்யாண வயசு வந்துவிட்டது. அவளைச் சந்தானத்துக்கே கல்யாணத்தைச் செய்து வைத்து அவனுடைய சொத்துக்களுக்கு உண்மை எஜமானனாகிவிட அவர் திட்டம் போட்டு அதன்படி நடந்தும் வந்தார்.

சந்தானமும், சிவுவும் ஒரு தடவை கிராமத்துக்குச் சென்ற போது இதைத் தெரிந்து கொண்டார்கள். ஊரில் நடேச ஐயருடைய கெடுபிடியால் அவருக்கு எதிரான சூழ்நிலையே நிலவி வந்தது. சந்தானத்துக்கு இப்பொழுது காலேஜ் படிப்பு முடிந்துவிட்டதால் அவனே வந்து நேரிடத் தன் சொந்த விவகாரங்களைக் கவனித்தால்தேவலை என்று பக்கிரிசாமி போன்ற பண்ணைக் காரியஸ்தர்கள் கருதினார்கள்.

சிவ நகரத்துக்கு ஒரு புதிய தாசில்தார் வந்திருந்தார். அவர் சந்தானத்தோடு கூடப் படித்த பட்டாபி என்ற சிநேகிதனுடைய மாமனார். அவர் வந்தது முதல் சந்தானத்துக்கு ஊரில் பெரிய மனிதர்களின் சகவாசமும், பெரிய இடங்களில் பழகும் சந்தர்ப்பங்களும் கிடைத்தன. பாப்பாவுக்கும், அவனுக்கும் உள்ள தொடர்பை ஊரில் கேவலமாகப் பேசி வந்தவர்கள் அவனை இப்பொழுது கண்டபடி தூற்ற முடியவில்லை. சந்தானத்தின் சமூகத்தாரும், பாப்பாவின் சமூகத்தாரும் அவர்களைப் பகிஷ்கரித்தது போல் கண்டித்து வந்தனர்.

ஊரில் வஸந்தோத்ஸவம் வந்தது. சந்தானம் கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு தன்னை ஒருவராலும் அசைக்க முடியாது என்பதைக் காட்டிக் கொண்டான். பெரிய வித்வான்களின் சிநேகமும், ஊரிலுள்ள பெரிய மனிதர்களின் நட்பும், தன் சொந்தக் காரியங்களில் ஒரு ஜாக்கிரதையும், உறுதியும் அவனுக்கு ஏற்பட்டுவிட்டன. பாப்பாவுக்கு ஓர் இரண்டுங் கெட்டானான தகப்பன் அருணாசலம். அவனைத் தூண்டி பாப்பாவுக்கு வேறு கல்யாணம் செய்து வைத்துவிட நடந்த முயற்சி சிவுவின் முயற்சியால் தோல்வியுற்றுவிட்டது. பாப்பாவும், சந்தானமும் இந்தக் காலங்களில் நெருங்கிப் பழகி வந்தார்கள். காவேரியம்மாளுக்கும் மற்றவர்களுக்கும் இவர்களுடைய உறவில் தலையிட்டுத் தடை செய்ய இடம் கிடைக்கவில்லை. பையனுடைய மனசு புண்படும்படி பேசும் சுபாவம் காவேரியம்மாளுக்கு இல்லை.

சந்தானம் கிராமத்துக்குச் சென்று தன் நிலங்களைத் தானே கவனிக்கத் திட்டம் போட்டான். எந்தக் காரணத்தை முன்னிட்டும் நடேச ஐயருடைய பெண்ணை மணந்து கொள்வதில்லையென்றும், அவருடைய சூழ்ச்சிக்கு இடம் கொடுப்பதில்லை என்றும் உறுதி பூண்டான். கிராமத்தைச் சீர்திருத்த சொக்கலிங்க முதலியார் என்ற ஒரு மிராசுதார் அவனுக்கு உதவிகரமாக இருந்தார். இது நடேச ஐயருக்குப் பிடிக்கவில்லை. சந்தானத்தின் மனப்பாங்கை ஊகித்துக் கொண்ட அவர் சிவுவின் தந்தை மூலமாகவும், தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள ஏற்பாடு செய்தார். இதற்கிடையில் அருணாசலம், அதாவது பாப்பாவின் தகப்பன், அடிக்கடி சந்தானத்தைப் பணத்துக்கு நச்சரித்து வந்தான். பணம் கொடுக்காவிட்டால் அவன் தாறுமாறாக நடந்து கொள்வான் போலிருந்தது. சந்தானத்தின் கௌரவத்துக்கு ஹானி விளைவிப்பான் என்றும் தோன்றியது. இதையும் சிவு சூழ்ச்சி செய்து சமாளித்துவிட்டான்.

எல்லாம் ஒரு மாதிரியாக முடியவே சந்தானம் கிராமத்துக்குப் போனான். அங்கு நிலவிய ஊழல்களையெல்லாம் களைந்தான். நடேச ஐயரிடமிருந்து சன்னம் சன்னமாக எல்லா அதிகாரங்களையும் பிடுங்கிக் கொண்டு அவருக்கும் தன் பண்ணைக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லாமல் செய்துவிட்டான்.

வரவு செலவுகள் அவன் கைக்கு வந்துவிட்டன. தோப்புத் துரவுகளை அவனே நேரில் குத்தகைக்கு விட்டான். புதுக் கட்டிடம் ஒன்று கட்டி முடித்தான். அதற்குக் கிருகப் பிரவேசம் என்றும், கச்சேரி, நாட்டியம் என்றும் பிரமாத ஏற்பாடுகள் செய்தான். பாப்பாவை வரவழைத்தான். ஆனால், யாராலும் அவர்களைப் பற்றி அவதூறாகப் பேச முடியவில்லை. கணவனும்மனைவியுமாகஅவர்களைசாஸதிரசம்மதத்துடன் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் வேறு எவ்வித உறவை கொண்டும் மற்றவர்களால் எண்ண முடியாமல்இருந்தது. பாப்பா அவனுடன் கிராமத்தில் பகிரங்கமாகத் தங்கியிருந்தாள். நிரந்தரமாகவே அவள் வசிப்பதற்கு வசதியும், வாய்ப்பும் உண்டாகிவிட்டன. அவர்களுடைய லட்சியம் கனிந்த உறவின் எதிராக யாரும் பொய்மையும், பொறாமையும் கொண்டு நிற்க முடியவில்லை. அந்தக் கனல் தகதகவென்று கனிந்து கொண்டிருந்தது.

நடேச ஐயர் வெளியில் தலை காட்ட முடியாமல் வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்தார். கிருகப் பிரவேசம் எல்லாருடைய நிலைமையுமே ஒரு புரட்டுப் புரட்டிவிட்டது. அதனால் அதிக அனுகூலமடைந்தவன் சந்தானம் தான்.

# இரண்டாம் பாகம்

எங்கும் இன்பம் சூழ்ந்திருந்தது.

மழைக் கால ஆரம்பத்தில் கிராமத்தில் எங்கே பார்த்தாலும் ஒரே பசுங் காடாக இருந்தது. கம்மென்ற இளம் பயிர்களின் மணமும், குளிர்ச்சியும் பரவிக் கிடந்தன. கிராம ஜனங்களின் மனசிலே நம்பிக்கையின் ஆனந்த உணர்ச்சி நிலவியது. கால் நடைகள் பசுமை மண்டிய புற்களைத் தின்று நிகுநிகுவென்று நின்றன. மலர்கள் பூத்துச் சொரிந்து கிடந்தன. வாய்க்காலும், வரப்பும் நீரால் வழிந்து கொண்டிருந்தன. குளத்திலே மடையான்களும், கொக்குகளும் வெகு சுறுசுறுப்பாக இருந்தன. நாற்றுக்குக் களை பிடுங்கி, நடவு நட்ட சேரிப் பெண்டிர் எல்லாம் காலை நீட்டிப் போட்டுக் கொண்டு மக்களின் மழலை கேட்டுக் கொண்டிருந்தனர். சில மங்கைகள் மணாளனின் முகம் நோக்கி மகிழ்ந்து கொண்டிருந்தனர். தலையில் ஈறெடுத்தனர். இதம் பேசி ஊடி நின்றனர். கோடையிலெல்லாம் எங்கே இருந்தன என்று தெரியாத நண்டும், நத்தைகளும் வயலிலும், குட்டையிலும் மண்டிக் கிடந்தன. சேரிச் சிறுவர்கள் வரப்பில் உட்கார்ந்து குச்சியில் நூலைக் கட்டி நண்டுகளைப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். வெள்ளெலிகள் புற்களைத் தின்றுவிட்டுத் துள்ளி மறைந்தன. நீர் பாம்புகள் தண்ணீரில் வளைவாகக் கோடு போட்டுக் கொண்டே சீறிச் சென்றன. சேம்புகள் இளங் காற்றில் தளதளவென்று தலையாட்டின. மஞ்சள் மசேரென்று கருகப் பூ உதிர்ந்து காய் கட்ட ஆரம்பித்தது. வாழையும், வெற்றிலையும், வற்றாத பயனை வழங்கின. தோப்புக்கருகே வரும்போதே சோவென்று எதிர் கொண்டழைத்தது சவுக்கு. 'டட, டர்ர்... ங்... டட டமார்' என்று மூங்கிற் புதர்கள் வேய்ங்குழலூதின.

எங்கும் இன்பமே இனிமையைப் பொழிந்து கொண்டு இருந்தது.

மத்தியில் குறுவை அறுவடையின்போது கிராமமே சுறுசுறுப்பாய் இருந்தது. களத்து மேட்டிலும் வயல் வெளிகளிலும் வேலை செய்த ஆட்களுக்கு இள மங்கையர் இடையிலும், தலையிலும் கலயத்தில் ஆகாரம் சுமந்து சென்றதே ஒரு தனிக்காட்சி. பழுத்து முதிர்ந்த கதிர்களை 'சரக் சரக்'கென்று அறுத்து, அடுக்கிக்கொண்டே போன கைகள், காய்த்துக் கட்டித் தட்டிப்போய் விட்டதைக் கண்ட அந்தக் கன்னிகளின் கண்களிலே துளிர்த்த கண்ணீர், ஆனந்தக் கண்ணீரா, ஆற்றாமைக் கண்ணீரா? அங்காடி விற்ற பெண்களும் கையில் பிரம்பும், குடையும் தலையில் முண்டாசும் கட்டிக் கொண்டு நிற்கும் நாட்டாமைக்காரர்களும் ஊர் வம்பு அளந்து கொண்டு 'அவன் அப்படி இவன் இப்படி' என்று வேடிக்கையும் விளையாட்டுமாய் தற்பெருமை கலந்த சுய புராணத்துடன் பேசிக் கொண்டிருந்தார்கள். 'அட்வான்ஸ்' கொடுத்த நெல் வியாபாரிகள் களத்து மேட்டை வந்து பார்த்துவிட்டுப் போனார்கள். கண்டு முதல் திருப்திகரமாய் இருந்தும் திருப்தியைக் காட்டிக் கொள்ளாமல் முகத்தைக் கடுகடுவென்று வைத்துக் கொண்ட பண்ணை முதலாளிகள் வெயில் தணிந்ததும் வந்து போய்க் கொண்டு இருந்தார்கள்.

இப்படி எங்கும் ஒரே சுறுசுறுப்பு மயமாய் இருந்தது. சாயங்காலமாகிவிட்டால் போதும். மதகடியில் இருந்த பொன்னையன் செட்டிக் கடையில் கூட்டம் எள் போட்டால் எள் விழாது. நெல்லை அளந்து வாங்கிக் கேட்கும் சாமான்களைக் கொடுப்பதற்குள் முழியே பிதுங்கிப் போய்விடும். இருந்தாலும் பொன்னையன் செட்டியின் மூன்றாவது பையன் சிங்கார வேலு அக்கப் போர் அளப்புக்குப் பேர் போனவன். ஙை, ஙை என்று பல்லை இளித்தபடி பேசிக் கொண்டே கொடுத்த பணம் தெரியாமல் பாக்கித் தர வேண்டியது தெரியாமல் இளம் பெண்களைப் பார்த்துப் பேசிக் கொண்டே இருப்பான்.



"புலவையிலே தழை ஒண்ணு தாச் சொல்லுங்க ஆண்டே" என்று கூப்பாடு போடுவான் காத்தான் சாம்பான்.

"இவருக்கு அவசரம்டா வாத்துக்குவி காட்டியும்" என்பான் சிங்கார வேலு.

"அரை புட்டி சீமெண்ணெய் தாச் சொல்லுங்க. என்னாங்க நான் இனிமே துணை கூடப் போயிடுச்சு, எப்போ கார் கோட்டத்துலே விழுந்து ஊட்டுக்குப் போறது?" என்பாள் செவத்தான் மகள்.

"இந்தா இந்தா, கோட்டவுத்துலே விழுந்து உன்னை யார் போகச் சொன்னது? நல்லா ஜோரா நடந்து போவியா?" என்பான் சிங்கார வேலு.



செவத்தான் மகளுடைய பெயர் என்னவென்று ஒருவருக்கும் தெரியாது. ஆனால், அவள் பார்ப்பதற்கு எவ்வளவு ஜோர்ராக இருப்பாள் என்பது மட்டும் எல்லாருக்கும் தெரியும். கிராமத்தின் இனிமையெல்லாம் பட்டிக்காட்டின் பளபளப்பு எல்லாம் இளங் கீரையின் தளதளப்புப் போல செழுமையாக செழித்திருக்கும். தலையைக் கிறுகிறுக்க வைக்கும் தன் கிராமீய அழகைப் பற்றிய உணர்வே சிறிதும் இல்லாமல் அவள் நாச்சம் கூச்சமின்றி கலகலவென்று நகைப்பாள். அசாத்திய துணிச்சலுடன் கன்னத்தில் அறைவது போலப் பேசுவாள். அவள் பேசினாலும் செல்லும். வேறு ஒருத்தி அதைப் பார்த்துவிட்டு அதே மாதிரி பேசத் தொடங்கினால், பல்லைக் காட்டிக் கொண்டு நின்றவர்கள் சீறி விழத் தொடங்கி விடுவார்கள்.



"பச்சைப் புள்ளே கணக்கா சிரிப்பும் விளையாட்டுமா த்தான் இருக்குது புள்ளே. பாக்கி சில்லரையைக் கொடுங்க" என்பாள் பிடாரியம்மா. செவத்தான் மகளிடம் அவன் சிராடுவதில் அவளுக்குப் பாதி எரிச்சல்.

"ஏது சில்லரை?"

"ஏதா? பாருங்களேன்– முளவா ஒரு பணம், பூண்டு வீசு ரூபாய், பொளவு பாக்கு மூணு காசு, என்னாங்க ஆச்சு?"

"செட்டியாரே, நாழியாவுதுங்க. மழை வேறே இருட்டிக்கிட்டு வருது" என்று நடுவில் சத்தம் போடுவான் முருகப் பண்டாரம்.

"உனக்கு என்ன வேணும்?"

"கணக்கைப் பார்த்து காசை வாங்கிக் கிட்டுப் போவச் சொன்னால்ல தேவலாம்."

"சரி. காசை எடு"

இப்படி அறுவடை காலத்தின் பரபரப்பு எங்கும் நிலவியது.

கடையிலும், களத்து மேட்டிலும், தெருவிலும், வீட்டிலும் எல்லாரும் சுறுசுறுப்பாய் இருந்தார்கள். அவரவர்கள் வேலை அவரவர்களுக்குத் தலைக்கு மேலே இருந்தது.

எந்த வருஷத்தையும்விட இந்த வருஷத்துக் குறுவை நெல் மகசூல் இரட்டிப்பாக இருந்தது சந்தானத்துக்கு. நடேச ஐயருக்கு இது தெரிந்ததும் மனசு பற்றிக் கொண்டு எரிந்தது.

மழை காலத்தில் சந்தானம் பெரும் பகுதியைச் சிவ நகரத்திலேயே கழிக்க வேண்டியிருந்தது. நடேச ஐயர் காலத்தில் தீராமல் கிடந்த சில வழக்குகள் எல்லாம் கோர்ட் மூலம் வசூலாக வேண்டியிருந்தன. கிராமத்திலிருந்து அன்றாடம் ஆட்கள் கூலி, தசு கூலி, கொடுக்கல், வாங்கல் கணக்குகள் எல்லாம் எழுதி அவன் பார்வைக்கு வரும். அவனே வெள்ளிக்கிழமை மாலை புறப்பட்டுப்போய் வழக்கமாக திங்கள்கிழமை திரும்பிவிடுவான். அந்த இரண்டு நாள்களிலும் அவன் செய்ய வேண்டிய காரியங்களைப் பற்றி விவாதித்து, யோசனையும் சொல்லிவிட்டுத் திரும்புவான். எல்லாம் சிக்கலின்றியும், மனசுக்குத் திருப்தியாகவுமே நடந்து வந்தன.

அவன் சிவ நகரத்தில் இருக்க வேண்டியிருந்ததால்பாப்பாவும் இங்கேயே வந்துவிட்டாள். சந்தானம் கூட, "ஒரு விதத் தொந்தரவும் இல்லாமல் நீ சௌகரியமாகக் கிராமத்தில்இரு. நான் தான் வாரத்துக்கு ஒரு முறை வர வேண்டியிருக்கிறதே:" என்றான்.

பாப்பாவுக்கு இந்த யோசனை பிடிக்கவில்லை. "நான் மட்டும் தனியாகக் கொட்டு கொட்டு என்று எப்படி உட்கார்ந்திருப்பது? பேச்சுத் துணைக்கு ஆளில்லை. நீங்கள் வைத்திருக்கும் புஸ்தகங்களை எவ்வளவு நேரம் தான் படிப்பது? கல்யாணி மாதிரி யாராவது இருந்தால் தேவலை. அவளை அவள் அப்பா அனுப்பச் சம்மதிக்க மாட்டார். நீங்கள் அங்கு இருக்கும் போது நானும் வந்துவிடுகிறேன். என் பாட்டிக்கும் ஒரு ஆறுதலாக இருக்கும். நீங்கள் வரும் போது நானும் கூடவே வந்துவிடுகிறேன்" என்றான்.

"வேண்டுமானால் நானே கல்யாணியின் அப்பாவிடம் பேசிப் பார்க்கட்டுமா?" என்றான் சந்தானம்.

"ஐயையோ, வேண்டவே வேண்டாம். அதுவும் என்னோடு வந்து இருக்கும்படிக் கேட்பதைவிட வேறு வெட்கக் கேடு ஒன்றுமே வேண்டியதில்லை."

சந்தானத்துக்கும் அவள் கருத்து புரிந்தது. பேசாமல் போய்விட்டான். "எப்படியும் இதற்கு ஏதாவது செய்தாக வேண்டும்" என்று மட்டும் தனக்குள் சொல்லிக் கொண்டான்.

மனிதனுடைய மன நிம்மதிக்கான அமைதி அவனுக்கு வீட்டில் மட்டும் கிடைப்பதில்லை என்ற உண்மை அவனுக்கு இப்போது தான் தெரிந்தது. வெளியிலும் அவன் நாலு பேருடன் சகஜமாய், சௌஜன்யமாய் பழக வேண்டியிருந்தது. அவன் வீட்டில் சந்தோஷமாய் இருந்துவிட்டால் மட்டும் எப்படிப் போதும்? அவன் வெளி உலகில் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறதே. பணம் இருந்துவிட்டால் எதையும் சாதித்துவிடலாம் என்ற பேச்சு அனுபவ ரீதியில் அவ்வளவு உண்மை பொருந்தியதாக இல்லை. நல்லவர்களுடைய சகவாசத்தையும், பெரியவர்களுடைய ஆசியையும் எந்தக் காலத்திலும் பணத்தினால் அடைந்துவிட முடியுமா? சந்தானத்துக்கு அவையிரண்டுந்தான் அவசியம் தேவையாகவிருந்தன. மற்றவற்றை அவன் சாதித்ததையெல்லாம் அவன் என்றுமே ஒரு பொருட்டாக மதித்ததில்லை. அவன் அடைய வேண்டியவை மேற்சொன்ன இரண்டுந்தான். அதற்கு என்ன வழியென்பதைதயே அவன் மனம் ஆராய்ந்து கொண்டிருந்தது.

ஊருக்குச் சென்ற போது பாப்பாவை அவன் அழைத்துக் கொண்டு போனான். பாப்பாவுக்கும் அவனுக்கும் உள்ள உறவு பற்றிய எந்த வார்த்தையையும் காவேரியம்மாள் எடுப்பதில்லை. அவர்களுக்குள்ளே நிலவிய நிலை பெரிய விசித்திரமாக இருந்தது. தன் மகனுடைய க்ஷேமத்தை உத்தேசித்து, இந்த மனக் கசப்பைச் சகிப்பது தன் கடமை என்று காவேரியம்மாள் கருதினாள். இன்னும் தெளிவாகச் சொன்னால் அது ஒரு மனக் கசப்பாகக் கூடத் தோன்றவில்லை. தனக்குச் சம்பந்தமில்லாத, தான் என்றுமே கலந்து கொள்ள முடியாத ஒரு விவகாரமாகத் தோன்றியது நடேச ஐயரை விலக்கியது கூட அவளுக்குப் பிடிக்கவில்லை தான். அதே போல ஆனால் அளவில் கொஞ்சம் பெரிய காரியமாக இது இருந்தது. அதனால் இது கொஞ்சம் அதிகமாகவே பிடிக்கவில்லை. ஆயினும் வேறு என்ன செய்வது? இது தலையைக் குனிய வைக்கக் கூடிய விஷயம் தான். இருந்தும் என்ன செய்வது?

பாப்பா நேரில் வராமல் இருக்க வேண்டுமே என்றே அவள் மனசுக்குள் வேண்டிக் கொண்டாள். வந்தால் பேசுவதா, பேசாமல் இருப்பதா? பேசினால் என்ன கேட்பது? பெண் பிள்ளைகள் என்றாலே காவேரியம்மாளுக்கு உயிர். பாப்பாவிடமும் அவள் ஆசையாகத் தான் இருந்தாள். கல்யாணியை போல அவளும் தன் குலத்தில் பிறந்திருந்தால் அவளுக்கு ஆசையாகத் தலையை வாரிப் பின்னிவிட்டு, கூடவே கோயிலுக்கும், குளத்துக்கும் கூட்டிக் கொண்டு போவாள். அப்படி போகும்பொழுதும் பொன்னுப்பாட்டி "காவேரி உன் மாட்டுப் பொண்ணோடி? கிளியாட்டமா ஒரு பொண்ணெ உன் புள்ளைக்குப் புடிச்சிக் கொடுத்துட்டியே" என்று கேட்பாள். ஆகா அந்த வார்த்தைகள் எவ்வளவு பெருமையாக இருக்கும்.: எவ்வளவு ஆனந்தமாக இருக்கும். ஆனால், இன்று வெளியில் தலை காட்டவே முடியவில்லை. எங்கே போனாலும் தலையைக் கவிழ்த்து ஒளிந்து கொண்டு போக வேண்டியிருந்தது. "பிள்ளை சௌக்கியமாயிருக்கானா?" என்று யாராவது கேட்டால், "உம், இருக்கான். என்று சொல்லிவிட்டு அடுத்த வார்த்தை பேச இடங் கொடாமல் ஓடி வர வேண்டியிருந்தது. இந்த நிலையைத் தான் அவளால் சகிக்க முடியவில்லை. இது தான் அவளுக்குப் பிடிக்கவில்லை. இதையே தான் அவள் மனக்கசப்பாக எண்ணினாள். பாப்பாவிடம் என்ன காரணத்தாலோ அவளுக்கு வெறுப்பு ஏற்படுவதற்குப் பதில் அவள் மனசே அறியாதபடி அவளிடம் அனுதாபம் உண்டாகியிருந்தது. இந்த அனுதாபத்தைக் கண்டு அவள் நெஞ்சம் கலங்கியது. "பாப்பாவின் முகத்தில் விழிக்கவே கூடாது:" என்று அவள் தீர்மானமாக எண்ணிக் கொள்வாள். இதற்குக் காரணம் வெறுப்பைவிட பயம் தான் அதிகப் பட்சம் பொறுப்பு என்பதை அவள் மனம் உணர்ந்தேயிருந்தது. யாரிடம் பயம் பாப்பாவிடமா? தன் பிள்ளையிடமா?

பாப்பாவும் வெகு புத்திசாலித்தனமாக நடந்து கொண்டாள். காவேரியம்மாளின் முகத்தில் படும்படி அவள் இந்த நான்கு மாதத்தில் ஒரு நாள் கூட வரவில்லை.

நகரத்துக்கு வந்ததும் அவள் மாலை நேரம் கழிந்த பின்பு தான் வருவாள் முன்பு வஸந்த உத்ஸவத்தின் போது போட்டிருந்த கொட்டகை இப்பொழுது நன்றாகச் சீர்திருத்தப்பட்டிருந்தது. தள வரிசை போட்டு சிமெண்டும் பூசப்பட்டிருந்தது. சிறிய கேட்டும் பூட்டும் போடப்பட்டுப் பந்தோபஸ்தாக இருந்தது. அங்கே தான் அவள் போவாள். வீட்டின் மற்ற எந்தப் பகுதிக்கும் அவள் போவதில்லை. காவேரியம்மாளைப் பார்க்கும்படியான நிலையை அவள் வெகு ஜாக்கிரதையாகத் தவிர்த்து வந்தாள்.

வெள்ளிக் கிழமை சாயங்காலங்களில் வாசலில் வண்டி பூட்டி நிற்கும். சாந்தானம் வாசலில் நின்று கொள்வான். பாப்பா தன் வீட்டிலிருந்து முன்னால் புறப்பட்டு பொய் சொல்லா பிள்ளையார் கோயில் வரையில் போய் நின்று கொள்வாள். அதன் பிறகு வண்டி புறப்படும். அங்கே கோயில் வாசலில் பாப்பாவும் வண்டியில் ஏறிக் கொள்வாள்.

"யாராவது நம்மைக் கவனிக்கிறார்களா?" என்று பாப்பா தலையை நிமிர்த்தாமல் கேட்பாள்.

"கவனிக்கட்டுமே அம்மாவுக்கு எதிர்த்தாற் போல் ஏறிக் கொள்வது என்னமோ வேண்டாம் என்று பார்க்கிறேனேயொழிய வேறு யார் பார்த்தால் என்ன? பார்க்கட்டும். மனசுக்குள் சிரித்துக் கொள்ளட்டும். தொண்டை வலிக்கும் வரையில் வம்புப் பேச்சு பேசட்டும். அதனால் நமக்கு என்ன நஷ்டம்? எவ்வளவு நாளைக்கு இப்படிப் பேசுவார்கள்? அவர்கள் கட்டிய மனைவியைக் கூட்டிக் கொண்டு தெருவில் சேர்ந்து நடப்பதே தகுதியற்றது என்று எண்ணுபவர்கள். ஆனால், நேர்மையற்ற காரியங்களைச் செய்யப் பின் வாங்காதவர்கள்: அவர்களுக்காக நாம் ஏன் பயந்து சாக வேண்டும்? தலையைக் குனிந்து கொள்ள வேண்டும்?" என்பான் சந்தானம்.

"உஸ்...." என்று வண்டிக்காரன் இருக்கும் போது இதென்ன பிரசங்கம் என்று சைகை காட்டுவாள் பாப்பா. சந்தானம் பேச்சை நிறுத்திக் கொள்வான்.

இவ்விதம் சில வாரங்கள் கழிந்தன. அப்போது நவராத்திரி ஆரம்பம். அந்த வெள்ளிக் கிழமை ஊரே மங்களகரமாகக் காட்சியளித்தது. வாசலில் வண்டி வெகு நேரமாகக் கட்டிக் காத்திருந்தும் பாப்பா வீட்டைவிட்டுப் புறப்பட்டபாடாயில்லை. சந்தானத்தின் மனசு ஏனோ படபடத்தது. 'ஏன் பாப்பா கிளம்பவில்லை? பொழுது சாய்ந்துவிட்டதே:" என்று துடித்தான். உடனே வண்டிக்காரனைக் கூப்பிட்டு "டேய் அந்த வீட்டுக்குப் போய் அம்மாவை உடனே புறப்பட சொல்லு" என்று சொல்லியனுப்பினான்.

வண்டிக்காரன் போய் திரும்பி வந்தான். அவன் பயந்து கொண்டே, "அம்மாவுக்குக் காய்ச்சல் அடிக்குது" என்றான். சந்தானத்துக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

(தொடரும்)





# மணிப்புயல்

'ரதிதர்சன்'

மாலை ஆறு மணி. கொக்கிரகுளம் பஸ் ஸ்டாண்டில் வடிவேல் பிள்ளை கையில் குடையுடனும் டிபன் பாத்திரத்துடனும் பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருந்தார். ஒரு பஸ் வந்தது. அந்த பஸ்ஸிலும் இடமில்லை. ஸ்டாண்டில் நிற்காமலேயே போய்விட்டது. இரண்டு பஸ்களாகக் காத்துக்கொண்டு இருந்துவிட்டு மூன்றாவது பஸ்ஸிலும் இடம் இல்லாமல் போகவே வடிவேல் பிள்ளைக்குச் சீ என்று வந்தது. அலுத்துப்போய் அருகே போட்டிருந்த சிமெண்டு பெஞ்சியில் போய் உட்கார்ந்தார். பஸ் ஸ்டாண்டில் ஏகக்கூட்டம் சேர்ந்து விட்டது. இந்தக் கூட்டத்தில் முந்தியடித்துக் கொண்டுபோய் எப்படி ஏறப்போகிறோம் என்பது வடிவேல் பிள்ளைக்குப் பெரும் பிரச்னையாகவே தோன்றியது.

அவர் காலை ஒன்பது மணிக்கு வீட்டை விட்டுக் கிளம்பியவர். இப்போது சாயங்காலம் மணி ஆறு. இத்தனை நேரமும் ஆபீஸ் பைல்களுடன் உழன்றுவிட்டு வந்ததினால் ஏற்பட்டிருந்த களைப்புடன் பஸ்ஸும் கிடைக்காமல் போகவே அவர் மனது கவலையால் துவண்டது. இந்த கொக்கிரகுளம் சர்க்கார் காரியாலயத்தில் அவரும் இருபத்தைந்து வருஷமாக வேலைசெய்து வருகிறார். ஒரு நாள் ஆவது சற்று நேரத்துடன் வீட்டுக்கு போனார், குசாலாகப் பொழுதைப் போக்கினார் என்பது அவர் வாழ்நாளிலேயே நிகழ்ந்ததில்லை. என்றும் இதே தொந்திரவுதான், சஞ்சலம்தான். எப்படியோ நாட்கள் கழிந்து கொண்டிருந்தன.

தன்னைப் போலவே பஸ்ஸுக்காக காத்திருப்பவர்கள் மீது பார்வையைச் செலுத்தினார் வடிவேலு. அவர்களில் ஒரு இளைஞன் விரைத்தாற் போல நின்றுகொண்டு சுருள் சுருளாக சிகரெட் புகையை விட்டுக்கொண்டிருந்தான். நன்றாக இஸ்திரி போடப்பட்ட அவனுடைய முழு நிஜார் அவனுடைய தோற்றத்தைத் தூக்கிக் காண்பித்தது. அவனுக்கு வயது இருபத்தெட்டு அல்லது ஓரிரண்டு கூடக்குறைய இருக்கலாம். அவன் கண்களிலே வாலிபத்தின் இயற்கையான மிடுக்கும் தன்னம்பிக்கையும் தென்பட்டன. அவன் அருகே இருந்த யுவதி ஒருத்தியும் அடிக்கடி பேசிக் கொண்டிருந்தாள். அவர்கள் பேசிக்கொண்டிருந்த முறையிலிருந்து அவர்கள் கணவன் மனைவியாக இருக்கலாம் என அவர் யூகித்தார். அவள் இளஞ் சிவப்பு நிற "வாயில் ஸாரி" உடுத்திக் கொண்டிருந்தாள். அவர்களுக்குள் பேசுவதற்கு என்னதான் விஷயமிருக்குமோ, நின்று கொண்டிருந்த பத்து நிமிஷமும் இருவரும் ஓய்ச்சலில்லாமல் பேசிக்கொண்டிருந்தனர்.

"அட அப்படி என்ன இருக்கும் பேச?"

"ஊம், இது என்ன கேள்வி, இதன் இன்பம், காதலருக்குத் தெரியும். உமக்கென்ன சும்மா இரும்." இப்படியாக தனக்குள்ளேயே கேள்வி பதில்களைக் கொண்டு வடிவேல் பிள்ளையும் அவர் உள் மனமும் வாதித்துக் கொண்டனர்.

ஒரு வழியாக திருநெல்வேலி டவுன் போகும் பஸ் வந்தது. முந்தியடித்துக் கொண்டு பஸ்ஸுக்குள் ஏறிவிட்டார் வடிவேலு. ஏறியபின் சுற்று முற்றும் பார்த்தார். பின்னாலேயே ஏறி பஸ்ஸுக்குள் வந்து கொண்டிருந்த அந்த வாலிபன் தனக்கும் பஸ் கிடைத்த வெற்றியின் மகிழ்ச்சியால் புன்முறுவல் செய்துகொண்டே வந்தான். அவனுக்குப் பின்னால் — அவள் — அவன் மனைவி வந்து கொண்டிருந்தாள்.

வடிவேல் பிள்ளை டிரைவருக்குப் பின்னால் நீளவாக்கில் உள்ள சீட்டில் முதலாவதாக உட்கார்ந்து கொண்டார். பஸ் புறப்பட்டது. வாலிபனும் யுவதியும் எதிரே இருந்த சீட்டில் உட்கார்ந்தார்கள்.

பஸ் புறப்பட்டு காற்று சற்று வீசவே ஒரு சுகந்தம் அந்த வாலிப தம்பதிகளின் உடையிலிருந்து வீசியது. நல்ல செண்ட் போட்டுக்கொண்டிருப்பார்கள் போலிருந்தது. இந்தப் பரிமளம் வடிவேல் பிள்ளையின் உணர்வு நரம்புகளைக் கிளறிவிட்டது.

மீண்டும் ஒரு முறை அந்த சதிபதிகளைப் பார்த்தார். அவன் அதிகம் சிவப்பு என்று சொல்லும்படி இராவிட்டாலும் நல்ல அழகி. அவளுடைய கருங் கூந்தல் பின்னல் அவள் அணிந்திருந்த தூய வெள்ளை ரவிக்கையின் மேல் புரண்டு கொண்டிருந்தது. வெற்றிலையின் செம்மையால் அவள் உதடுகள் அழகு பெற்றிருந்தன. அடிக்கடி அவள் கணவன் அவளைப் பார்த்துப் புன்னகை செய்வான். அவள் நாணத்தால் தலை குனிவாள். அவள் இதழ்க்கடையில் தோன்றும் புன்னகையால் அவள் கன்னம் குழிவுறும்.

இந்த இனிய காட்சியை வடிவேலுப் பிள்ளை ஓரக்கண்களால் பார்த்து ரசித்துக்கொண்டிருந்தார். தற்செயலாகத் தன் பார்வையை வேறு பக்கம் திருப்பினார். டிரைவருக்கு வலப்புறத்தில் பின்னால் வரும் கார்களைக் காட்ட வைத்திருக்கும் வட்டக் கண்ணாடியில் அவர் பிம்பம் தெரிந்தது. தலையெல்லாம் சாம்பல் பூசனிக்காயைப் போல ஒரே வெள்ளையாக நரைத்திருந்தது. அவருடைய ஒட்டு மீசை பல் துலக்கும் பிரஷ்ஷைப் போன்று வெளுத்துக் கோரமாக இருந்தது. முகத்தில் சுருங்கல் கோடுகள். எண்ணெ வழியும் முகம். அவருக்குச் சகிக்க வில்லை அந்தக் காட்சி. அவர் அடிக்கடி கண்ணாடி பார்த்துத் தன் தோற்றத்தைச் சரி செய்து கொள்ளும் வழக்கத்தை விட்டு ரொம்ப வருஷங்களாயிற்று. எங்காவது தற்செயலாக காப்பி ஹோட்டல், ஷேவிங் சலூன் இந்த மாதிரி இடங்களில் பார்த்தால் தான் பார்த்தது.

மீண்டும் ஒரு முறை மோட்டாரில் உள்ள கண்ணாடியில் பார்த்தார். ரஸ்தாவின் ஓரங்களில் இருந்த மரங்கள் முதலியவற்றின் பிம்பங்கள் அதில் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. அதைப்போலவே அவருடைய மனக் கண்ணாடியிலும் சென்று போன சம்பவங்களின் பிம்பங்கள் வந்து நிழலாடின.

* * *

அவரும் நல்ல வாலிபமாக இருந்த காலம் உண்டு. கட்டு மஸ்தான தேகத்துடன் தலையில் அடர்ந்த கட்டுக் குடுமியும் சந்தனப் பொட்டுமாக அவர்



வீட்டை விட்டுப் புறப்படுவது பார்க்கக் கவர்ச்சிகரமாக இருக்கும். உடம்பிலே நல்ல வலு. இதெல்லாம் ரொம்ப வருஷத்துக்கு முன்னே. அப்போதெல்லாம் "மூத்தாள்" சிவகாமி இருந்தாள். அவளும்தானென்ன? பசக்க பசக்க மஞ்சளைப் பூசிக்கொண்டு மகாலட்சுமி மாதிரி இருப்பாள். இருபது அல்லது இருபத்திரெண்டு வருடங்களாக அவளும் அவருமாகக் குடும்பத்தை நடத்தி வந்தார்கள். ஒரு நாள் ஒரு பொழுதுகூட சச்சரவு, சண்டை இருந்ததில்லை. கடைசி வரையும் குழந்தை குட்டி ஒன்றும் இல்லாமலேயே போய்ச் சேர்ந்தாள். அவருடைய மறைவு வடிவேல் பிள்ளையின் மனதில் பெரும் புண்ணை உண்டாக்கிவிட்டது. திரும்பவும் கலியாணம் செய்து கொள்ளுவதில்லை என்று முடிவு செய்திருந்தார். ஆனால், அவருக்கு நெருங்கியவர்கள் கற்பகத்தை இரண்டாம் தாரமாக கல்யாணம் செய்து வைத்தார்கள். அவரும் கிடக்கட்டுமே என்று தாலியைக் கட்டி வைத்தார். வடிவேலு பிள்ளைக்கு வயது நாற்பத்தொன்பதோ ஐம்பதோ நடக்கிறது.

பஸ் இடையில் ஒரு இடத்தில் நின்றது. பிரயாணம் செய்து கொண்டிருந்த இளம் தம்பதிகள் ஏது ஏதையோ பேசிக்கொண்டு சிரித்தனர். வடிவேல் பிள்ளை மனதில் 'கெதக்' என்றது. "ஒரு வேளை "நான் ஒரு இளம் பெண்ணைக் கலியாணம் செய்து கொண்டதைக் கேலி செய்கிறார்களோ?" என்று அவர் மனதுக்குள் தோன்றியது.

• • •

"சே, இருக்காது. அதெப்படி இவர்களுக்குத் தெரியும்."

"நம்மைப் பற்றி இந்தப் பெண் என்ன நினைப்பாள்?"

"என்ன நினைப்பாள். ஏதோ ஒரு கிழம் உட்கார்ந்திருக்கிறது என்று நினைப்பாள்."

"பின் கற்பகமும் இப்படித்தானே நினைப்பாள்?"

"ஆமாம், சந்தேகமென்ன, இப்படித் தான், ஆனால் நல்லவளாகையால் வெளியே சொல்லமாட்டாள்."

இப்படியாக அவருக்குள்ளே உள் மனத்தில் வாதப் பிரதிவாதம் அவரை புரட்டி எடுத்துக்கொண்டிருந்தது. ஒரு மட்டிக்கும் அவருடைய பஸ் பிரயாணம் முடிவடைந்தது. அவர் இறங்க வேண்டிய இடத்தில் இறங்கினார். பின்னால் அந்தப் பெண்ணின் சிரிப் பொலி மணியோசையைப் போலக் கேட்டது. தன்னைப் பரிகசித்துத் தான் சிரிக்கிறாள் என்று எண்ணிக் கொண்டார் வடிவேல் பிள்ளை.

மனம் சஞ்சரித்துக் கொண்டிருந்தது. வாழ்க்கையிலே தான் செய்த தவறை இன்றுதான் உணர்ந்தார். பொங்கும் இளமை படைத்த கற்பகத்தை அவருடைய வாழ்க்கையின் தேய்பிறையில் கலியாணம் செய்து கொண்டது தவறு என்று நினைத்தார்.

சிந்தனையிலேயே, எங்கும் நிற்காமல் நேரே வீட்டுக்குச் சென்றார். கதவு தாளிடப்படாமல் லேசாகச் சற்றே மூடி இருந்தது. நடுங்கும் கைகளினால் அதைத் தள்ளினார். அவர் எதிரே கண்ட காட்சி, அய்யோ, இதென்ன? கற்பகம் பின் கட்டில் கொல்லைக் கதவருகே நின்று கொண்டிருந்தாள். தன்னைக் கண்டதும் அவள் முகம் பயத்தால் வெளுத்தது. கதவுக்கு அப்புறம் நின்று அவளோடு பேசிக்கொண்டிருந்த வெள்ளைச் சட்டை அணிந்திருந்த ஆணுருவம் சரேலென்று மறைந்தது.

இதைக் கவனித்துக் கொண்டே வந்த வடிவேல் பிள்ளை நிலைப் படியைக் கவனிக்க வில்லை. 'படீரெ' ன்று தலையில் ஒரு அடி. பலமாக முட்டிக்கொண்டு விட்டார். கண்களில் நட்சத்திரங்கள் மின்னி மறைந்தன. தலையை அமுக்கியவாறே தரையில் உட்கார்ந்துவிட்டார். கற்பகம் ஓடோடியும் வந்து அவரைத் தாங்கிப் பிடித்தாள். இருவரும் வாய் பேசவில்லை. அவரை ஒரு கட்டிலில் அமர்த்தினாள். அதிர்ச்சி நீங்கச் சற்று நேரம் ஆயிற்று. வலி சற்று குறைந்ததும் ஆபீஸ் உடைகளைக் கழட்டினார். கற்பகம் அவற்றை வாங்கிச் சுவரிலிருந்த ஆணியில் மாட்டினாள்.

வடிவேல் பிள்ளையின் மனத்தில் ஒரு எரிமலை நெருப்பைக் கக்குவது போல உணர்ச்சி பொங்கிக் கொண்டிருந்தது. பஸ்ஸிலே கண்ட காட்சியையும் வீட்டிலே கண்ட காட்சியையும் அவர் மனம் இணைத்துப் பின்னிக் கொண்டிருந்தது. வாலிபத்தின் உணர்ச்சிக்கு கற்பகம் அடிமையாகிவிட்டாள் என்று எண்ணினார். பருவத்துக்கு இயற்கையான மனபேதங்களை அடக்கிக்கொள்ள அவளால் முடியவில்லை. அதற்கு அவளைக் குற்றம் சொல்வதா? அவள் சுடர் விடும் இளமையும் தன் வயோதிகமும் நெருப்பும் காயும் போலே அவர் மனத்தின் முன்னே தோற்றமளித்தது. ஆம் அவளுடைய இளமை அவரைப் பொசுக்கியதை எத்தனையோ முறை உணர்ந்திருக்கிறார்,





"முப்பது வயசு ஆறதுங்கிறேளே? நீங்க ஏன் இன்னும் கல்யாணம் பண்ணிக்கல்லே?"

"என் அண்ணாவுக்கு இன்னும் கல்யாணம் ஆகல்லே"

"ஏன்?"

"அவனோடே அண்ணாவுக்கு இன்னும் கல்யாணம் ஆகல்லே!"

---

கற்பகம் காப்பி தயார் செய்யப் போயிருந்தவள் கையில் காப்பித் தம்ளருடன் வந்து எதிரில் நின்றாள். அவளுடைய முகத்தை ஒரு முறை ஆழ்ந்து நோக்கினார். தெளிந்த நீரோடையைப்போன்று களங்கமற்று இருந்தது அவள் முகம்.

"என்ன, ரொம்ப வலிக்கிறதோ?" என்று கேட்டாள்.

"இல்லை" என்று தலையை அசைத்தார்.

உண்மையில் அவர் தலையில் பட்ட அடியைவிட மனதில் பட்ட அடியின் வேதனை அவருக்குத் தாங்க முடியவில்லை. நெஞ்சிலே எங்கோ ஓரிடத்தில் சுரீர் சுரீர் என்று வலிப்பது போன்று உணர்ந்தார். எப்படியாவது அவளைக் கேட்டுத் தெரிந்துகொண்டு விடுவது என்று தீர்மானித்து "அப்போ பேசிக்கொண்டிருந்தாயே அது யார்?" என்றார் நாக்குளற.

"தம்பி வேலாயுதம். பத்து ரூபா வேணுமின்னுது. இப்போ கையிலே காசு இல்லைன்னு போகச் சொன்னேன். நீங்க கண்டாக் கோவிப்பீங்கன்னு கொல்லை வழியாப் போயிட்டான்" என்று நிதானமாகப் பதிலளித்தாள். என்றாலும் இந்தக் கேள்வியின் கருத்து அவள் மனத்தில் 'சுருக்'கென்று தைத்தது. பொங்கிவரும் கோபத்தைச் சமாளித்துக்கொண்டு இடத்தை விட்டு நகர்ந்தாள். இந்தக் கேள்வியின் மூலம் அவள் பெண்மைக்கு ஏற்பட்ட அவமானம் அவள் மனத்தைத் தைத்தது. கட்டிலில் போய்ப் படுத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதாள். அவளுடைய வாழ்க்கை அணைந்துபோன விளக்குப் போன்றிருந்ததற்குக் கூட அவள் கவலைப்பட்டு ஓய்ந்தாயிற்று. தனக்கு விதித்தது இவ்வளவுதான் என்று தன் மனதைத் தானே தேற்றிக்கொண்டு வாழ் நாளைக் கழித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய இளமையைக்கூட கடவுளுக்கே அர்ப்பணிப்பதுபோல விரதம், பூசை, நோன்புகளில் ஈடுபட்டுக் காலம் கழித்து வந்தாள். இந்த சமயத்தில் இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்டதும் நெஞ்சு வெடித்துவிடும் போலிருந்தது அவருக்கு. அழுது தலையணை நனைந்தது.

வடிவேல்பிள்ளைக்கு ஏன் இந்தக் கேள்வியைக் கேட்டோம் என்று ஆயிற்று. கேட்காவிட்டாலும் அவர் மனது கேட்காது. கேட்டதனாலும் அவள் மனது புண்பட்டுவிட்டாளே என்று அவருடைய மனது கலங்கி கொண்டிருந்தது. அவள் பதில் சொன்ன பிறகு மனத்திலிருந்த பெரும் பாரம் குறைந்ததுபோல் தோன்றியது. அந்த பதிலை அவரும் ஒப்புக் கொண்டார். அவளுடைய தம்பி வேலாயுதத்தின் சாயல் தான் தெரிந்தது. ஆனால் ஏற்கனவே அவர் மனத்தில் ஏற்பட்டிருந்த குழப்பத்தில் புத்தியே தடுமாறிவிட்டது. வேலாயுதம் வேலையின்றி அலைந்து கொண்டிருந்தான். அடிக்கடி அக்காவிடம் பணம் கேட்க வருவான். அதற்காக அநேகமுறை கோபித்துக் கொண்டிருக்கிறார். தான் ஆபிசிலிருந்து வரும் நேரமாகையால் பார்த்தால் கோபித்துக்கொண்டு விடுவேனோ என்று கொல்லை வழியாக வந்திருக்கிறான். கற்பகத்தின் பதிலை எழுத்துக்கு எழுத்து ஒப்புக்கொண்டார் வடிவேலு.

கொஞ்சநேரம் கழித்து "கற்பகம் வரியா கோவிலுக்குப் போயிட்டு வருவோம்" என்று அவளைத் தாஜா செய்தார். அவள் தன்னை சமாளித்துக் கொண்டு புறப்படுவதற்கு ஒரு மணி நேரம் ஆயிற்று.

கோவில் வாசலில் இருந்த கடையில் "மல்லிகைப்பூ என்ன விலை" என்று கேட்டார் வடிவேலு. "மூணணாங்க நாறு. புள்ளையார் சதுர்த்தி கிராக்கி" என்றான் கடைக்காரன்.

"சரி இருநூறு குடு" என்று எட்டணா நாணயத்தைப் பலகைமேல் வைத்தார்.

அவன் தந்த பாக்கி சில்லரையைப் பையில் போட்டுக்கொண்டு புஷ்பப் பொட்டளத்தை வாங்கி கற்பகம் கையில் கொடுத்தார்.

"இம்பிட்டு என்னத்துக்கு" என்றாள் கற்பகம். "சும்மா வச்சுக்க தலை நிறைய இருக்கட்டும்" என்றார் வடிவேலு. கோவிலுக்குள்ளே போக இருவரும் திரும்பினர்.

"களுக்" கென்று சிரிப்பொலி கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார் வடிவேலு. பஸ்ஸிலே கண்ட யுவனும் யுவதியும் போய்க் கொண்டிருந்தனர். கற்பகம் அவர்களைப் பார்த்தாள்.

"யாரு இவங்க? உங்களுக்குத் தெரிந்த வங்களா?" என்றாள் கற்பகம். தங்களைப் பார்த்து அவர்கள் ஏளனம் செய்வதுபோல கற்பகமும் நினைத்தாள். வடிவேலுவும் நினைத்தார்.

சமாளித்துக்கொண்டு "ஆமா, தெரிஞ்சவங்கதான்" என்று பதில் சொன்னார்.

இந்த பதிலை நம்பியதற்கான அறிகுறி எதுவும் கற்பகத்தின் முகத்தில் தோன்றவில்லை. நீண்ட பெருமூச் செறிந்துவிட்டு அவரைப் பின் தொடர்ந்தாள்.

ஓய்ந்த புயல் மீண்டும் அவர்கள் மனங்களில் வீச ஆரம்பித்தது.

---




"ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை"

1 மண்டலம் (48) பூஜை செய்தும், ஆயுள் பூராவும் பலன் தரும் வெள்ளி ரக்ஷை ரூ. 43—12—0.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள் தங்கள் கோரிக்கைகளை எழுதி ரூ 5-12-0 மணியார்டர் செய்யவும் மீதி தொகை வெள்ளி விளம்பரம் தபால்செலவிற்குமாக நவைமீதி ரூ 38-ம் ரக்ஷை அணிந்த 108 நாளைக்குள் பலன் அடைந்து அனுப்பி வைக்கவும்.

N. B: (1) ஆர்டர் கிடைத்த 9-ம் நாள் ரக்ஷை பிரஸாதத்துடன் அனுப்பப்படும். (2) வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்புத் தொகை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பவும். (3) V.P கிடையாது (4) அதர்மர்களும் நாஸ்திகர்களும் தடுக்கப்படுகிறார்கள்

கோட்டமருதூர் ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜியோதிஷ ஆபீஸ்

அரகண்டநல்லூர் P. O. (S. A. Dt)

# உள்ளமும் உயிரும்

## —கோமதி ஸ்வாமிநாதன்—

பகல் சுமார் பதினொரு மணி இருக்கும். வெப்பத்தின் கொடுமை தாங்க முடியாததாக இருந்தது. சுமார் பத்து மைல்கள் சாலையில் சைக்கிள் ஓட்டி வந்த எனக்கு, அங்கு ரோட்டின் ஓரத்தில் இருந்த அரசமரமும் குளத்தங்கரையும், சிறிது நேரம் தங்கி இளைப்பாறிப் போகவேண்டுமென்ற சபலத்தை உண்டாக்கின. கிராமம் ரஸ்தாவைவிட்டு அதிக தூரம் தள்ளியிருக்கவேண்டும். ஆள் நடமாட்டத்தையே காணோம். குளத்திலும் படிக்கட்டுகளிலும் மனித அரவமே இல்லை. வெயிலின் உக்கிரகத்தினால் ஜனங்களெல்லாம் காலையிலேயே ஸ்நானம் செய்துவிட்டுப் போயிருக்கவேண்டும் என்று எண்ணிக்கொண்டேன்.

சைக்கிளை மரத்தடியில் சார்த்திவிட்டு குளத்திற்குள் இறங்கினேன். அரச மரம் படிக்கட்டுகளின் அருகேயே இருந்ததாலும், அதன் பெரிய கிளை ஒன்று தனிவாக குளத்திற்குள்ளாக அந்தப் படிக்கட்டிற்குமேலே நீட்டிக்கொண்டிருந்ததாலும் அந்தப் படித்துறை ஜிலு ஜிலுவென்றிருந்தது. கை கால்களைக் கழுவிக்கொண்டு ஜலத்தை இரண்டு கைகளாலும் வாரிக் குடித்தேன். கரைக்கு வந்து நிழலடர்ந்த அந்த மரத்தடியில் துண்டை விரித்துப் போட்டுக்கொண்டு படுத்தேன். படுத்ததுதான் தாமதம்! தூக்கம் கண்களைச் சுழற்றியது. சைக்கிளைப் பூட்டியிருக்கிறோம் என்ற தைரியத்தில் தூங்கியும் விட்டேன்.

## 2

எவ்வளவு நேரம் அப்படித் தூங்கியிருப்பேனோ தெரியாது. தூக்கத்திலிருந்து விடுபட்டதுபோன்ற ஓர்வித உணர்ச்சி ஏற்பட்டது. ஆனால் கண்களை விழிக்க முடியவில்லை. யாரோ வெகு சமீபத்தில் பேசுவதுபோல் கேட்டது. வார்த்தைகளும் காதில் விழுந்தன. ஆனால் பேசுபவர் இந்தப் பக்கம் இருக்கிறார் என்று திரும்பிப் பார்க்க முயன்றபோது, உடம்பை அசைக்க முடியவே இல்லை. மார்பில் யாரோ பாறாங்கல்லை வைத்திருப்பதுபோல் இருந்தது. கண்களைத் திறக்க முடியவில்லை! கால் அங்குல தூரம் நகரும் சக்தியும் இல்லை. ஆனால் காதுகளில் மாத்திரம் அந்தப் பேச்சொலி வெகு தெளிவாக விழுந்துகொண்டிருந்தது. இந்த விசித்திர நிலையில் வெகுநேரம் கிடந்துவிட்டேன்.

## 3

'நான் ஒரு கிழட்டு அரச மரம்! இந்தக் குளத்தின் கரையில் நூற்றிருபது வருஷங்களாக உட்கார்ந்திருக்கிறேன். என்ன? அரசமரம் எங்காவது பேசுமா என்று ஆச்சரியப்படுகிறாயா? நீ ஆச்சரியப்படுவதில் அர்த்தம் இல்லாமலில்லை! நான் இதுவரை பேசியதில்லைதான்! நான் இதுவரை பார்த்திருப்பதையும் கேட்டதையும் பற்றி நூறு கோடி வருஷத்திற்குக் கூடப் பேசிக்கொண்டிருக்கலாம். ஆனால் நான் பிறரைப்பற்றி வம்பு பேசி ஆனந்தப்படுவதில் ஆர்வம் கொண்டவனல்ல! பிறர் பேசுவதற்கு உன் செவிகளைக் கொடு. ஆனால் பிறர் செவிகளில் உன் பேச்சைப் புகுத்தாதே என்ற கொள்கையைக் கடைப்பிடிப்பவன் நான். இதையெல்லாம் எதற்குச் சொல்லவந்தேன் என்றால் எனக்கும் பேசத்தெரியும் என்பதைக் குறிப்பிடுவதற்காகத்தான். நானும் என் வாழ்நாட்களை வாயைத் திறக்காமலேயே கழித்துவிடலாமென்றுதான் நம்பியிருந்தேன். ஆனால் சமீபத்தில் நடந்த சம்பவம் ஒன்று என் வாயைத் திறக்கச் செய்துவிட்டது. நான் உற்சாகத்தினால் பேசவரவில்லை. ஊர் வம்பிற்கு ஆசைப்பட்டும் பேசவில்லை. உணர்ச்சி வசப்பட்டு உள்ளத்தில் தேங்கிநிற்கும் சோகத்தைப் பிழிந்து வெளியேற்ற முடியுமா என்று பார்க்கத்தான் பேசுகிறேன். தினசரி ஆயிரம் பேர் குளத்திற்கு குளிக்க வருகிறார்கள்! அவர்களில் பாதிப்பேர் என்னை சுற்றவும் சுற்றுகிறார்கள். ஆனால் அவர்களில் ஒருத்திதான் என்பேரில் அந்தரங்கப் பிரியம் வைத்திருந்தாள். கடந்த பதினைந்து வருஷங்களாக ஒவ்வொருநாளும் என்னுடன் அளவளாவிய ஓர் ஆப்த சிநேகிதி—ஒரே விநாடியில், என் கண்முன்னாலேயே இந்தக் குளத்தில் உயிரைவிட்டாள். பாவி! நான் பார்த்துக்கொண்டிருந்தேன்! என்னால் அவள் உயிரைப் பாதுகாக்க முடியவில்லை. மரம்போல் நிற்கிறான் என்று மானிடர்கள் சொல்கிறார்களே! அது அந்த சந்தர்ப்பத்தில் எனக்கு மிகவும் பொருந்தியிருந்தது... நான் சொல்வது உனக்கு சரியாகப் புரியவில்லை போலிருக்கிறது. பிரேமாவின் கதையை ஆரம்பத்திலிருந்தே சொல்கிறேன் கேள்! அவளை நீ கோழை என்று சொல்லலாம்! அல்லது வாழத் தெரியாதவள் என்று கூறலாம்! ஆனால் நான் அதெல்லாம் சொல்லத் தயாரில்லை! அபாக்யவதி கானல் நீரைக் காதலென்று நினைத்து ஏமாந்த துரதிருஷ்டசாலி' என்பேன்.

## 4

இந்த ரஸ்தாவில் கிழக்கே நூறு கெஜம் போனதும் வலது பக்கமாக ஒரு பாதை பிரிந்துபோகும். அந்தக் கிளைப்பாதையில் அரை பர்லாங் போனதும் சோலையூர் கிராமம் குறுக்கிடும். சோலையூர் பெயருக்கேற்ப சோலைகள் நிறைந்த ஊர். எங்கு பார்த்தாலும் பச்சை மரங்கள் தென்னந்தோப்புகள் நந்தவனங்கள் நிறைந்த செழிப்பான கிராமம். சுமார் முன்னூறு குடித்தனக்காரர்கள் இருக்கிறார்கள்.

கோடி வீட்டு ராமசாமி என்றால் சோலையூரில் எல்லோருக்கும் தெரியும். குழந்தைகளுக்குக் குறிப்பாகத் தெரியும். மார்கழி மாதத்தில் தனுர் பூஜை செய்து சர்க்கரைப் பொங்கலும், தயிர் சாதமுமாக, குழந்தைகளின் கையைப் பிடித்து கிள்ளினாற்போல் வைக்காமல் கைகொள்ளாமல் கொடுப்பார். நவராத்திரியின்போதும் அந்த ஊர் குழந்தைகளுக்குக் கொண்டாட்டம்தான். வாய் கொள்ளாமல் சுண்டல் அகப்படும் ராமசாமிக்கு செல்வத்தைவிட தெய்வபக்தி அதிகமாக இருந்தது. தெய்வ பக்தியைவிட குழந்தைகளிடம் அன்பு நிறைய இருந்தது. அதனால்தானோ என்னவோ ஆண்டவன் பொறுமைப் பட்டுக்கொண்டு அவருக்கு வெகு நாட்கள்வரை புத்திர பாக்கியத்தை கொடுக்கவில்லை. அவரும் அவர் மனைவியும் நம்பிக்கை தவறாமல் என்னைச் சுற்றினார்கள்.

கடைசியில் பகவான் கண் திறந்து பார்த்தார். அதன் விளைவாக அவர்களுக்கு பிரேமா பிறந்தாள். ஈச்வரியே தங்களிடம் வந்து





சேர்ந்திருக்கிறாள் என்று குதூகலித்தார்கள் அந்த தம்பதிகள். குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. வருஷத்திற்கொருதடவை நெல்விற்று வரும் பணத்தைக் கொண்டு புதுப்புது நகைகள் செய்து போட்டு குழந்தையின் அழகை ரசித்தார்கள். பார்த்தவர்களெல்லாம் பிரேமை கொள்ளும்படி இருந்த அந்தக் குழந்தைக்கு பிரேமா என்ற பெயர் வெகு பொறுத்தமாகத்தான் அமைந்திருந்தது.

குழந்தை பிறந்த குதூகலத்தில் ராமசாமியும் அவர் மனைவியும் ஆண்டவனையோ அல்லது இந்த கிழட்டு அரச மரத்தையோ மறந்துவிடவில்லை அவர்கள் இருவருடனும் தன் குஞ்சுக்கால்கள் தேய குழந்தை பிரேமாகூட சில சமயங்களில் என்னைச் சுற்றுவாள், அந்த குழந்தை மீது என்னையறியாமலேயே ஓர் வித பாசம் பிறந்தது. அதைப் பார்க்கும்போதெல்லம் எனக்கு புளகாங்கிதமேற்பட்டது. அதன் மழலை மொழிகளைக் கேட்டபோது எனக்கு புல்லரித்தது ஐந்துவயதுக் குழந்தைக்கு இந்த குளக்கரை மீதும் என் மீதும் ஓர்வித அன்பு இருந்ததாகவே உணர்ந்தேன்.

காலம் உருண்டோடிக் கொண்டிருந்தது. கொட்டாப்புளி வாத்தியார் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் எழுதிப் படிக்கப் போதுமான அறிவைப் பெற்றுக் கொண்டு தன் கல்வியை வீட்டிலேயே வளர்க்கத் தொடங்கினாள் இன்னும் சிலவருஷங்கள் சென்றன. பிரேமா முற்றிலும் மலர்ந்த புஷ்பமானாள். அவள் முகத்தில் இப்போது குழந்தைக் குறும்புகளைக் காணோம். அதற்குப் பதிலாக பருவக் கவர்ச்சித்துதம்பி நின்றது. நாணம் கலந்த அவள் பார்வையும் வேகம் மிகுந்த அவள் நடையும் அவளை ஓர் அப்ஸரஸ் போலாக்கியிருந்தன. பகவானே! என் குழந்தைக்கு ஏற்ற கணவனாகக்கிட்ட வேண்டும் என்று அவள் தயார் பார்வதி அடிக்கடி வேண்டிக் கொள்வாள். ராமசாமியும் மும்முரமாக வரன்வேட்டையில் ஈடுபட்டார். இந்த வருஷத்தில் எப்படியும் கல்யாணம் நடத்திவிடுவது என்று தீர்மானித்தார். பிரேமாவின் வனப்பைக் கண்டு குழந்தையிலிருந்து கிழவிவரை பொறாமைப்படாதவர்கள் இல்லை.

களங்கமற்றிருந்த அந்தப் பெண்ணின் உள்ளத்தில் காதல் புயல் எப்படி வீச ஆரம்பித்தது என்று இப்போது கூட எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது அன்று ஒரு நாள் காலையில் பிரேமாவும் அவள் தாயாரும் இந்தக்குளத்திற்குக் குளிக்கவந்தார்கள். ஜலத்தில் இறங்கியவாறு ஆடைகளைக் கழற்ற முயன்ற பிரேமா அசைப்பில் வடக்குப் பக்கமாகத் திரும்பிப்பார்த்தாள் என்கிளை தழைந்து போகிறதல்லவா? அதன் அடியில ஒரு சுந்தரமான வாலிபன் அவளை விழுங்கியவாறு பார்த்துக் கொண்டே பல் தேய்க்க முயன்று கொண்டிருந்தான் பிரேமாவிற்கு உடம்பு ஒரேயடியாய் நடுங்கியது கிராமத்தில் எத்தனையோ வாலிபர்கள் அப்படிப்பார்ப்பதை அவள் கவனித்திருக்கிறாள் ஆனால் அப்போதெல்லாம் அவள் நடுங்கியதில்லை. அவர்கள் பார்வைகளிலெல்லாம் இல்லாத ஓர் விசேஷக் கவர்ச்சி இந்த படித்துறை வாலிபனின் பார்வையில் இருந்ததுபோல் தோன்றியது அவளுக்கு தலையைக் குனிந்து கொண்டாள் அவளுக்கு ஒன்றுமே ஓடவில்லை. தலை சுற்றுவது போல் ஓர் உணர்ச்சி இன்னமும் அவன் அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தானா அல்லது பார்வையை வேறு திசையில் திருப்பிவிட்டானா என்று தெரிந்து கொள்ள விவரிக்க முடியாத ஆவல் அவள் உள்ளத்திலே எழுந்தது. தலையை மெதுவாகத் தூக்கிப் பார்த்தாள். இப்போது அந்த வாலிபன் பல்தேய்ப்பதை நிறுத்திவிட்டு முன்னைவிடத் தீவிரமாக அவளையே பார்த்துக் கொண்டிருந்தான், அவ்வளவுதான் பாவம் அந்தப்பேதைப் பெண்ணின் இதயம் படபட வென்று அடித்துக்கொள்ள ஆரம்பித்தது. தலையை மறுபடியும் குனிந்து கொண்டாள். எந்தப் பக்கத்திலிருந்தும், அந்த வாலிபன் தன்னையே நோக்கிக் கொண்டிருப்பது போல் ஓர்வித பிரமை ஏற்பட்டது. செய்வதறியாமல் சிலைபோல் நின்றாள் "ஏண்டி பிரேமா! என்ன தூங்கி வழிகிறாய்? என்ற பார்வதி அம்மாளின் வார்த்தைகள் அவளை விழிப்படையச் செய்தன ஏதோ ஸ்வப்பனத்தில் நடப்பதுபோல் மடமட வென்று ஸ்நானம் செய்து விட்டுக் கரையேறினாள். பிறகு தன் தாயாருடன் வழக்கம்போல் என்னைச் சுற்றி வந்தாள், ஆனால் வழக்கம் போல் அவள் மனம் என்மேல் லயித்திருக்கவில்லை. அது குழம்பிப் போய் கிடந்தது. அவள் கண்களோ, நீரில் குதித்து நீந்திக் கொண்டிருந்த வாலிபன்மீது பதிந்திருந்தது பிரேமாவின் உள்ளத்தில் இனிவேறுயாருக்கும் இடம் கிடைக்காது என்று நான் புரிந்துகொண்டேன் காதல், காதல், என்கிறீர்களே! அந்தக் காதல் அவளிடம் தன் கைவரிசையைக் காண்பிக்க ஆரம்பித்துவிட்டது ஆனால் எனக்கென்னவோ அந்த வாலிபனைப்பற்றி அவ்வளவு நல்ல அபிப்பிராயமில்லை,

அவன் எம். ஏ. பாஸ் செய்துவிட்டு ஏதோ கலாசாலையில் தாவரபாட போதகராக இருந்தான். பிரம்மசாரிதான்! நாகரீகத்தில் திளைத்தவன் தாவர ஆராய்ச்சிக்காக சோலையூரில் சில நாட்கள் தங்கிப்போக வந்திருந்தான். பெண்களை வசீகரிக்கும் சக்தி அவனிடம் இருந்தது ஆனால் எனக்கென்னவோ அவன் முகத்தழகிற்கும் அகத்தழகிற்கும் சம்பந்தமேயில்லை என்றுதான் தோன்றியது! இதை நான் எப்படி பிரேமாவிற்கு தெரிவிக்க முடியும்?

அடுத்த இரண்டு மூன்று நாட்களும் அவள் குளிக்கவரும் நேரத்திற்கு அந்தப் பையன் பல் துலக்க வந்து சேர்ந்தான். பரஸ்பரம் இரண்டொரு தடவை கூடவே பார்த்துக்கொண்டார்கள். பிரேமாவின் முகத்தில் குதூகலம் ததும்பியதுபோல் காணப்பட்டது. சியாமளா தண்டகம் சொல்லிக்கொண்டு என்னை வலம்வரும் அந்தச் சிறுமி சினிமா மூலம் பிரபலமான ஒரு காதல் பாட்டை முணுமுணுத்துக்கொண்டு என்னைச் சுற்றினாள். எனக்கு மூர்ச்சையாய்விடும் போலிருந்தது, அதைவிட வேடிக்கை என்னவென்றால் என் இலைகளைப் பிய்த்து குறுக்கே எத்தனை நரம்பு. நெடுகில் எத்தனை நரம்பு என்று எண்ணி ஆராய்ச்சி செய்யும் அந்த தாவர சாஸ்திரிகூட என்னைச் சுற்ற ஆரம்பித்தான். எங்கேயாவது அவன் அவளைப் பார்த்துக்கொண்டே என்மேல் மோதி காயமடைந்துவிடக்கூடாதே என்று பயந்தேன்! என்னால் நகர்ந்து போகமுடியுமா என்ன?

மறுநாள் பிரேமா மாத்திரம்தான் குளிக்க வந்தாள். அவள் தாயாரைக் காணோம். ஆனால் துணைக்காக அவள் தெருப்பெண் ஒருத்தி—ஆறுவயது நிரம்பிய குழந்தையைக் கூட்டி வந்திருந்தாள்.

குளத்தில் இறங்கி இரண்டு முழுக்குப் போட்டாள். தாவர வாலிபன் வழக்கமான இடத்தில் உட்கார்ந்திருந்தான். அவன் பார்வை தன்மேல் பதிந்திருக்கிறதா என்று கடைக்கண்ணால் கவனித்தாள். அவனுக்குத்தான் அந்த வேளையில் வேறுவேலையில்லையே! சூது வாது கள்ளம் கபடற்ற கிராமாந்திரப் பெண் என்று நான் யாரை நம்பியிருந்தேனோ அவள் அந்த விநாடியில் ஒரு பலே வேலை செய்தாள்! திடீரென்று கால் தவறி விட்டவள்போல் ஆழத்தில் நழுவி விழுந்தாள் "ஐயோ ஐயோ! என்று கத்தியவாறு இரண்டு வாய் ஜலம் குடித்தாள்.

இதைவிட இக்கட்டான கட்டங்களிலிருந்தெல்லாம் கதாநாயகிகள் காப்பாற்றப்படும் கதைகளை வாசித்திருக்கும் அந்தக் கல்லூரி ஆசிரியர் இந்த சந்தர்ப்பத்தைக் கை நழுவவிடுவாரா என்ன? வில்லிலிருந்து விடுபட்ட அம்பு போல "குபுக்" என்று ஜலத்தில் பாய்ந்தான் ஒரே எட்டில் பிரேமா முழுகிக் கொண்டிருந்த இடத்தை அடைந்தான். ஒரு கையால் அவளை அப்படியே தண்ணீருக்கு மேல் தூக்கிக் கொண்டுவந்து கரை சேர்த்தான். அப்போதுதான் மூர்ச்சை தெளிந்தவள்போல் கண்களை விழித்தாள் அந்தப் போக்கிரிப்பெண். நான் மாத்திரம் அப்போது சிரித்திருந்தால் இந்த அண்டமே அதிரும்படி சிரித்திருப்பேன். ஏன் தெரியுமா? மீன்குட்டி போல் நீந்தி இந்தக் குளத்தை இரண்டாக்கும் அவள், குளத்தில் விழுந்தவள்போல் நடித்து அந்த வாலிபனை ஏமாற்றிவிட்டாளே என்பதற்காகத்தான்!

"நான் பயந்துவிட்டேன்! எங்காவது அடிபட்டுவிட்டதோ! குளத்தில் பாறைகள் இருக்கின்றன என்றான்" அவன் அவள் கண்களைப் பார்த்துக்கொண்டே.

"இல்லை! இல்லை! கால் தவறிவிட்டது!" என்றாள் அவள் ஒரு புன்சிரிப்பை வீசிக்கொண்டே.

அப்புறம் சொல்வதற்கு என்ன இருக்கிறது? அவள் தந்திரம் பலித்தது. அவர்கள் காதல் விதை பத்து நாட்களுக்குள்ளாகவே முளைத்து திருமணம் என்ற விருக்ஷமாகியது! ராமசாமி ஐயருக்கு ஒரு காலேஜ் புரொபசர் மாப்பிள்ளையாக வந்ததுபற்றி பிரமாத பெருமை! ஆனால் அது அல்ப சந்தோஷமாகப் போகும் என்று அவர் நினைத்தாரா? அல்லது காதல் குழியில் குளத்தில் விழுந்ததுபோல் நடித்து காதலன் ஸ்பர்சத்தைப் பெற நினைத்த பிரேமா நிரந்தரமாகவே குளத்தில் விழுந்து மடிய நேரிடும் என்றுதான் நினைத்திருப்பாளா?...... என்ன திகைக்கிறாய்? வாஸ்தவம்தான்! ஸ்ரீமதி பிரேமா சுந்தரராமன்—ராமசாமியின் செல்வப்புதல்வி—இல்லற வாழ்க்கை இன்பத்தை இரண்டு வருஷங்கள்கூட பூரா அனுபவிக்காமல் தன் மனக்கவலைக்கு மருந்தை இந்தக் குளத்திலே போன வாரம் கண்டுபிடித்தாள். இந்தத்தடவை அவள் விளையாட்டிற்கு முழுகவில்லை! வினையாகவே முழுகினாள்! நான் பார்த்துக்கொண்டிருந்தேன் பாவி!

கல்யாணமான உடனேயே கையோடு பிரேமாவை அழைத்துக்கொண்டு சென்னைக்குப் புறப்பட்டான் சுந்தரராமன் ராமசாமி தன் சக்திக்கு மீறியே செலவழித்தார் பெண்ணிற்கு இரண்டாயிரம் ரூபாய் பெறுமான நகைகள் பண்ணிப் போட்டிருந்தார் வரதட்சிணையாக இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தார்

முதல் ஒரு வாரம் வரை பிரேமாவிற்கு சென்னை வாழ்க்கை ஸ்வர்க்கலோகம் போலிருந்தது நாளாக நாளாக சுந்தரராமனின் ஸ்வபாவத்தில் இனிமை குறைந்துகொண்டே வந்தது மானேமயிலே! என்று சொல்லிக்கொண்டிருந்தவன் 'மடக்கழுதை! மண்டு முண்டம் என்றெல்லாம் சொல்ல ஆரம்பித்தான் திடீரென்று ஒருநாள் பிரேமா, உன் நான்கு வடச் சங்கிலியை இரண்டு நாட்கள் கொடு. என் நண்பன் பெண்ணிற்குக் கல்யாணம். கல்யாணம் முடிந்ததும் வாங்




சேலம்
மூன்று தாமரை
பீடிகளை உபயோகித்து
சந்தோஷமடையுங்கள்
Estd 1920
Rgd. No. 2221
Prop. S
கோட்டை சேலம் S I R



கித்தருகிறேன் என்று சொல்லி சங்கிலியை வாங்கிக்கொண்டு போனான். இரண்டு நாட்கள், இரண்டு வாரங்கள் ஆயின! பிரேமா மெதுவாக அதைப் பற்றிப்பேச்சை எடுத்தாள். "அற்பப் பிணமே என் நண்பன் அயோக்யனில்லை நாளையே கொண்டு வந்து எறிந்து விடுவான்" என்றான் கோபத்துடன் சுந்தரராமன். இரண்டு வாரங்கள் இரண்டு மாதங்களாகின. அந்த சங்கிலி ஒரு நாள் குதிரை ரேஸில் குதிரைகளைத் துரத்திக் கொண்டு ஓடிவிட்டது என்று பிரேமாவிற்குத் தெரியாது.

பிறகு நாளடைவில் சுந்தர ராமன் முரட்டுத்தனமாகவே நடந்துகொள்ள ஆரம்பித்தான். தாவர ஆராய்ச்சிக்கான சாதனங்கள் வாங்க வேண்டுமென்ற பொய்களைச் சொல்லிக்கொண்டு அவள் நகைகள் பூராவையும் பறித்தான். தகப்பனுருக்கு எழுதி பணம் வரவழைக்கச் செய்தான். ராமசாமியும் நிறைய கடன் வாங்கி மாப்பிள்ளையை திருப்தி செய்ய பணம் அனுப்பிவித்தார். அந்த பணத்தைக் கொண்டு தன் மாப்பிள்ளை, ஓர் நடத்தை கெட்ட பாடகியுடன், இன்ப ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கிறானென்று அவருக்குத் தெரியாது.

## 8

"பிரேமா! நீ இன்று சாயங்காலம் சோலையூருக்குக் கிளம்பத் தயாராக இரு" என்றான் திடீரென்று சுந்தரராமன் ஒரு நாள். பிரேமாவிற்குத் தூக்கிவாரிப்போட்டது. "ஊருக்கா? இப்போது எதற்கு?" என்றாள் தயங்கியவாறு அவள்.

"காரணமாகத்தான்! எனக்கு அமெரிக்கா போய்வர பதினாயிரம் ரூபாய் உடனே தேவை! உடனே உன் அப்பாவிடம் கேட்டு அந்தப் பணத்தை வாங்கிக்கொண்டு வர வேண்டும்! தெரிந்ததா? பிறகு திருப்பிக் கொடுத்துவிடுவேன்! கடனாகத்தான்" என்றான் அலக்ஷியமாக.

அப்பாவிடம் இப்போது ஆயிரம் தம்பிடிகூட இருக்காது! பாவம் இரண்டு மூன்று வருஷங்களாகவே விளைச்சல் இல்லை எல்லா நிலங்களுமே அடமானத்தில் தான் இருக்கின்றது" என்றாள் துக்கம் ததும்ப.

"சீ மூதேவி! தரித்திரப் பிணமே! "என்று படாரென்று ஒரு அறை வைத்தான் அவள் கன்னத்தில். அவன் முகத்தில் மிருகவெறி தாண்டவமாடியது! சரேலென அங்கவஸ்திரத்தை எடுத்துப் போட்டுக்கொண்டு வெளியே கிளம்பினான்.

அவன் புறப்பட்ட அவசரத்தில் அவன் சட்டைப் பையிலிருந்து ஒரு கடிதம் விழுந்தது அதை அவன் கவனிக்காமல் போய்விட்டான். பிரேமா அதை எடுத்துப்பார்த்தாள், அப்படியே திகைத்துப் போனாள்

'என் அன்பரே! நெக்லேஸ் நெக்லேஸ் என்று ஒரு மாதமாகக் கோட்டுக் கொண்டிருக்கிறேன்! வரும் வழியைக் காணோம். அன்று நாம் கடையில் பார்த்தது பதினாயிரம் ரூபாய்க்கு மிகவும் மலிவு அதை எப்படியாவது வாங்க ஏற்பாடு செய்யுங்கள் இந்த வாரம் ரேஸிற்குப் போக வேண்டாமா?

உங்கள் கல்யாணி





"வாடாப்பா நாணு! பக்கத்துத்தெரு கல்யாணத்துக்கு வந்தாயா? முகூர்த்தம் ஆயுடுத்தோல்லியோ? சரி உள்ளே வா, சாப்பிடலாம்!"

## 9

அந்தக் கடிதத்தின் வாசகமும், கன்னத்தில் விழுந்த அறை உணர்ச்சியும் அவளை அந்த வினாடியிலேயே புது மனுஷியாக்கிவிட்டன. காதல் காதல் என்று ஏதற்காக ஏங்கினாளோ அது வெறும் கானல் நீராக ஆய்விட்டதென்றறிந்தாள். ஆலகால விஷத்திற்குக் கூட அற்புதமாக அழகு செய்து அமிர்தமென்று நம்பச் செய்யலாமென்று கண்டுகொண்டாள். யாருடைய அழகிற்காக அவள் ஏங்கித் தவித்தாளோ அதை இன்று அவள் அடியோடு வெறுத்தாள். கணவன் மேல் வெறுப்பு ஏற்பட்ட பிறகுதான் உயிர் வாழ்வதில் பிரயோஜனமில்லையென்றும் நிச்சயித்தாள். அன்று மாலை ரயிலுக்கே சுந்தரராமன் வீட்டிற்குத் திரும்பி வருவதற்குள் ஊருக்கு கிளம்பியும் விட்டாள்.

திடீரென்று மறுநாள் காலையில் அவளை என்னருகில் கண்டபோது எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவள் பிரேமரதாளோ என்ற சந்தேகமும் ஏற்பட்டது. அவள் முகத்திலிருந்த பொலிவு பளபளப்பு எல்லாம் எங்கோ போயிருந்தன. முகத்தில் ஓரே சோகம் பொங்கி வழிந்தது.

அசோக வனசீதையைத்தான் அவள் நினைவுறுத்தினாள். என்னைச் சுற்றிக் கொண்டே தன் மனதிலிருந்ததையெல்லாம் கொட்டித் தீர்த்தாள். காதலின் வெறியை அவள் முதத்தில் இரண்டு வருஷத்திற்கு முன் பார்த்த நான் அன்று வெறுப்பின் வெறியையும் கண்டேன். கொஞ்சம் காற்றை வீசித்தான் நான் அவளுக்கு ஆறுதல் அளிக்க முடிந்தது.

மறுநாள் காலையில் அவள் வெகு நேரம் கழித்து தனியாக வந்தாள். குளிக்காமலேயே என்னை வலம் வந்தாள் எனக்கு வியப்பாக இருந்தது. இன்றுதான் என் வாழ்வில் கடைசி நாள் விருப்பு வெறுப்புகளின் எல்லைகளுக்கு அப்பால் போகிறேன்! எந்தப் படித்துறையில் நான் யாருக்காக என் உள்ளத்தைப் பறிகொடுத்தேனோ அதே படித்துறையில் என் உயிரையே பறிகொடுக்கிறேன்! என்று சொல்லிக் கொண்டே குபுக் என்று தண்ணீரில் பாய்ந்து விட்டாள். குளத்தில் அப்போது ஈசாக்காய் இல்லை அவளுக்கு நீந்தத் தெரியுமல்லவா? அந்த உணர்ச்சி உதவி செய்து விடக்கூடாதென்று முன்னேற்பாடாக கல் ஒன்றை தன்புடவை தலைப்பில் சேர்த்துக்கட்டிக் கொண்டாள் இப்போது அவளை வீராவேசத்துடன் பாய்ந்து காப்பாற்ற யாருமில்லை! அன்று புன்சிரிப்பால் அவள் மனதைக்கவர்ந்த அத்தக் கிராதகன் இன்று அவளை வாழ்க்கையில் புறமுதுகு காட்டி ஓட வைத்துவிட்டான்!...அவள் கோழையல்ல! அவள் மனது விஷப்பட்டு விட்டது கணவன் வெறுத்து உயிர் வாழ்வது குல ஸ்திரீகளுக்கு அழகில்லை. வாழ்வை முடித்துக்கொள்வதுதான் வழியென்று தீர்மானித்தாள். அதன்படி செய்தே தீர்த்தாள் பேதைப்பெண்! காதல் சேதல் என்ற சேற்றில் சிக்காமல் இருந்தால் அவள் வாழ்க்கையில் தானாகவே காதல் அரும்பியிருக்கலாம்! பாவம்! துரதிருஷ்டசாலி!"

## 10

திடுக்கிட்டு விழித்துக் கொண்டேன் யாரோ வயோதிகர் என்னை தட்டி எழுப்பிக் கொண்டிருந்தார். "தம்பி! இந்த உச்சி வேளையிலே இங்கே படுக்கக்கூடாதப்பா! இந்த குளத்திலே கொஞ்சநாளைக்கு முன்னாலே யாரோ ஒரு பெண்பிள்ளை விளுந்திட்டா! அதன் நடமாட்டம் இருக்கு! நீ எளுந்திருத்து ஊருக்குள்ளே போய் சிரமபரிகாரம் பண்ணிக் கொள்!" என்றதும் கண்ணைத்துடைத்துக் கொண்டு எழுந்திருந்தேன் நான் கண்ட கனவைப் பற்றி பெரியவரிடம் சொல்லி மேலும் அவர் அனுதாபத்தைப் பெற நான் விரும்பவில்லை. ஆனால் என் அகக்கண்கள் முன்னால் மாத்திரம் அந்த அரசமரம் கதை சொல்வது போன்ற பிரமை அகலாமலேயே இருந்தது.




நித்தம் நித்தம் நிலைக்கண்ணாடிமுன் நீண்டநேரம் நின்று முகத்தில் விதவிதமான பவுடர்களையெல்லாம் பூசிக்கொண்டு கூந்தலை எவ்வளவோ விதமாக சிங்காரம் செய்துகொண்டும் ஏதோ ஒரு குறை தோன்றத்தான் செய்கிறது.

கடைசியில் ஐடெக்ஸ் (EYETEX) கண்மையை உங்கள் கண்களில் தீட்டிக் கொண்டதும் தான் உங்கள் வதனம் கவர்ச்சிதரும்.

ஐடெக்ஸ் கண் மை உங்கள் கண்களுக்கு குருகுருப்பான பார்வையையும் முகத்திற்கு கவர்ச்சியையும் அளிக்கிறது. ஐடெக்ஸ் ரஸாயன முறைப்படி தயாரிக்கப்பட்டது கண் எரிச்சல் அற்றது. இது நாகரிக நங்கையர்க்கும் குழந்தைகளுக்கும் இன்றியமையாதது.

மருளுதலுடன்கூடிய மீன்விழிபோன்ற கண்களுக்கு ஐடெக்ஸ் கண் மையும், கூன் பிறை போன்ற ரஞ்சிதமான சோலையும் களையும் கூடியநெற்றிக்கு பிந்தி குங்குமம் வாசனை சாந்தும், கருமேகம் போன்ற இருண்டு சுருண்டு அடர்ந்து வளரும் கூந்தலுக்கு ஜபாகுடானிக் ஹேர் ஆயிலும் உபயோகித்து வந்தால் — பூரண சந்திர வதனம் போன்ற மிருதுவான மேனியுடன் விளங்குவீர்கள்.

இவைகள் எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும் மட்டமான போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்.

தயாரித்து விநியோகிப்பவர்கள் :—

அரவிந் லாபரட்டரீஸ்

ஆற்காட் ரோடு — மதராஸ்-11





## 25

## வாழ்க்கைப் படகு

★

ஜீவநதியின் மெல்லிய உடலின் மீது அந்தப் படகு பலமுறை சலனத்தைத் தாண்டிவிட்டிருக்கிறது. ஆனால் அந்த அஃறிணைப் பொருளுக்கு உணர்ச்சி ஏதும் கிடையாது. அதன் மீது அமர்ந்திருக்கும் ஆன்மாக்களுக்குள்ளே தான் ஒரு போராட்டம். அன்புப் போராட்டம், ஆனந்தப் போராட்டம், துயரப் போராட்டம் எல்லாம்தான் அவ்வான்மாக்களைச் சுற்றிப் படம் விரித்து ஆடியிருக்கின்றன.

படைப்பின் சிகரமான மனித ஜீவன்கள் அவர்கள். பகுத்தறிவைப் பெற்றிருக்கும் புண்ணிய ஜீவன்கள் அவர்கள். ஆனால் அவர்களுடைய பகுத்தறிவுதான் அவர்களின் வாழ்வுக்குச் சாவு மணி அடித்துக் கொண்டே அவர்களைப் பின் தொடர்ந்து வருகிறதே, ஆனந்தமான நாட்கள் எல்லாம் எங்கே போய் ஒளிந்து விட்டனவோ, தேனும் பாலும் கலந்தாற் போல இனிப்பு மயமாக இருந்த இன்ப நாட்கள் எந்தப் படுகுழியில் போய் மறைந்து விட்டனவோ?

இதற்குமுன் எவ்வளவோ முறை அவர்கள் அந்தப் படகில் ஏறிச் சென்றிருக்கிறார்கள். இன்னும் சொல்லுகிறார்கள். ஆனால் அந்த நாட்களுக்கும் இன்றைய நாளுக்கும் எத்தனை வித்தியாசம், முதல் நாள் நடந்த விஷயங்களை நினைக்கவே அவர்களால் முடியவில்லை. நினைத்தால் ஆறிய புண்ணைக் கீறுவது போலவும் வெந்த புண்ணில் வேலை விடுவது போலவும் தான் இருக்கும். ஆம், அத்தகைய நிலைதான் முதல் நாள் நடந்து விட்டிருந்தது.

ஆயினும் அவனால் அதை நினைக்க முடியாமலும் இருக்க முடியவில்லை. இருதலைக் கொள்ளி எறும்பு போல அவன் துடிக்கலானான். அந்தத் துடிப்பை அந்தப் பெண் ஜீவன் தன்னால் முடிந்தமட்டும் சமனம் செய்யத்தான் செய்தது. ஆயினும் அவளுடைய சக்திக்கு மீறிய துடிப்பையே அவன் அப்போது அடைந்திருந்தான்.

திடீரென்று அவனுடைய கை துடுப்பை இயக்குவதிலிருந்து சற்றே தன்னை விடுவித்துக் கொண்டது. அப்பொழுது அவள் ஒருத்தியே துடுப்பை இயக்கிப் படகை ஓட்டினாள். படகு சிறிது மாறுதலுக்குள்ளாகிப் பிறகு நேரான கதியில் ஓடியது.

அவன் சொன்னான்:— "சந்திரா, இனி என்னை நீதான் இயக்கிச் செல்ல வேண்டும். எனக்குச் சுயபலம் இனி மேல் கிடையாது".

சந்திரா அவனைக் கூர்ந்து நோக்கினாள். அந்த நோக்கம் ஆழ்ந்த உட்பொருளை அவனுக்குக் காட்டாமல் இல்லை. அவனும் அதைப் புரிந்து கொள்ளவே செய்தான்.

"எனக்கு இனி நீதான் சகலமும். என்னைப் படைத்த கடவுள் இன்று முதல் என்னைக் காக்கும் பொறுப்பை உன் மீது தான் சுமத்தியிருக்கிறார் சந்திரா"

"அதை நான் களிப்போடு ஏற்றுக் கொண்டு விட்டேன். உங்களுக்கு என்ன கவலை?" என்பதுபோல் அவள் அவனைப் பார்த்தாள்.

"எனக்கு நேற்று நடந்ததை நினைத்தால் இன்னும் பயமாயிருக்கிறது சந்திரா?"

"தாங்கள் ஓர் உண்மையான வீராக இருப்பதால்தான் இதற்குப் பயப்படுகிறீர்கள், கோழைகளுக்குச் சத்தியத்தைக் கண்டு பயம் ஏது? கொடியவர்களுக்குத்தான் பாபம் கரும்பாயிற்றே தாங்கள் மகா மானி. அதனால்தான் பயப்படுகிறீர்கள். ஆனால் எனக்காக அந்தப் பயத்தை இனியேனும் விட்டு விடுங்கள் ..."

"சந்திரா, நீ எப்படியோ சொல்லி விடுகிறாய். ஆனால், இந்நேரம் உன் தந்தையின் கதி என்ன ஆகியிருக்குமோ?"

சந்திரா சிறிதும் முகத்தில் பாவத்தைக் காட்டாமல் பதில் கூறினாள்.

"ஆமாம். அது அவர் விதிப்படிதானே நடக்கும்? உங்களாலோ, என்னாலோ என்ன செய்ய முடியும்? அப்படிப் பார்த்தால், உங்கள் தாய் தந்தையர்கள் இருவரும் என்ன நிலையில் இருப்பார்கள் இந்த வேளையில்? எனக்கென்னவோ உங்களுடைய பெற்றோரின் நிலையை நினைத்தால் தான் கவலையாயிருக்கிறது."

"என் மனம் உன் குடும்பத்தைக் கண்டு இரங்குவது போல், உன் மனம் என் குடும்பத்தைப் பற்றி நினைக்கிறது. இதுவே உண்மையான பிரேமைக்கு அறிகுறி தான். ஆனால், இந்த உலகத்தில் பிரேமைக்குத் தான். உண்மையான மரியாதை தரப்படுவதில்லையே."

"உலகம் இன்று நமக்கு அளிக்கத் தவறிய மரியாதையை இனி வருங் காலத்திலும் அளிக்காது என்பது என்ன நிச்சயம்?"

"ஆனாலும் என் தந்தை இவ்வளவு பிடிவாதமாயிருந்திருக்கக் கூடாது."

"என் தந்தை அவரை அப்படி அவமரியாதையாகப் பேசியிருக்கவும் கூடாது."

"சந்திரா, அவர் அப்படி என்ன பேசி விட்டார். பெண்ணைப் பெற்ற ஒரு தகப்பன் எதைச் செய்ய வேண்டுமோ அதைத் தானே செய்தார். அதற்காக என் தந்தை அவருக்குக் காராக்ரஹவாஸத்தையா அளிப்பது?"

"உலகத்தில் நியாயா நியாயங்கள் எல்லாம் மாறுபட்டுவிட்டன. இதில் குறுக்கிட்டுப் பேச எனக்குத் தெரியாது ஆனால், தாங்கள் அரச குமாரர். தங்களுக்கே தெரிந்திருக்க முடியும்."

மனோகரன் மேலும் பேச விரும்பவில்லை. காரணம், எண்ணங்கள் கோடிக்கணக்காய் பெருகி, நெஞ்சில் இடம் இன்றி ஹிம்ஸை செய்து, அவனை வதை செய்து கொண்டிருந்தன.

படகு ஒன்றும் உணராதபடி சென்று கொண்டேயிருந்தது.

அப்போது திடீரென்று நதிக் கரையில் ஒரு பெருங் கூட்டம் கூடி வருவது மனோகரன் கண்ணுக்குப் புலப்பட்டது. அவனுடைய கை அவசர அவசரமாகத் துடுப்பை இயக்கத் தொடங்கியது. சந்திராவும் மனோகரன் குறிப்பறிந்து வேகமாகத் துடுப்பை இயக்கினாள்.

ஆனால், கூட்டம் தொப்பென்று தண்ணீரில் குதித்தது. உயிரிலே ஆசையில்லாத மக்களாகச் சேர்ந்து கூடிய கூட்டமாகவே அது இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பெருஞ் சுழல்களும், அதிக ஆழமும் பொருந்திய

அந்த நதி வெள்ளத்தில் அவர்கள் குதித்திருக்க மாட்டார்கள். மனோகரன் மிரண்டான். படகு ஓட்டும் வேகம் சிறிது சிறிதாகத் தடைப்பட்டது. துடுப்பைக் கையிலிருந்து விடுத்துக் கூட்டத்தை நோக்கினான்.

"சந்திரா. அவர்கள் நெருங்கிவிட்டார்கள். இனி எனக்கும் உனக்கும் அடுத்த ஜன்மாவில் தான் சம்பந்தம் ஏற்பட முடியும். கடைசி முறையாக உன் கைகளைக் கொடு." என்று கூறி அவள் கைகளைத் தன் கண்களில் ஒத்திக் கொண்டு, தண்ணீரில் குதிக்க முற்பட்டான் மனோகரன்.

சந்திரா, "வேண்டாம். வேண்டாம். தாங்கள் ஏன் குதிக்க வேண்டும்? அவர்கள் உங்களை என்ன செய்துவிடுவார்கள்?" என்று கூறி அவன் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

"இல்லை. உனக்குத் தெரியாது உண்மை. நான் கொலைகாரன். எனக்கு இனி இந்த உலகத்தில் வாழ வழியில்லை. ஒன்று தூக்கு மேடையில் சாக வேண்டும். அல்லது இந்த நதி வெள்ளத்தில் மடிய வேண்டும்."

"நன்றாக இருக்கிறது உங்கள் பேச்சு. நீங்கள் கொன்றது உண்மை தான். ஆயினும் தன்னைக் கொல்ல வந்த பசுவையும் கொல்லலாம் என்று நீதி சாஸ்திரம் கூறவில்லையா? உங்கள் வாழ்வை அழிக்க முற்பட்டவனை நீங்கள் கொன்றது பாபமா? உங்கள் உயிர் போயிருந்தால் என் வாழ்வும் அல்லவா போயிருக்கும், ஆக, இரண்டு உயிர்களின் வாழ்வுக்காக ஓர் உயிரைக் கொல்வது கொடுமையாகாது"

"இல்லை நீ சொல்லும் நீதி இந்த உலகத்தில் இல்லை, இதை விசாரணை செய்யும் யோக்கியதையுடைய வர்களும் இந்த உலகத்தில் இல்லை, ஆதலால் என்னை நீ விட்டுவிடு"

"அப்படியானால் நானும் சாகத்தான் வேண்டும், எனக்கும் அந்தச் சாவிலே பங்குண்டு எனக்காகத்தானே நீங்கள் அவனைக் கொன்றீர்கள்"

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது தண்ணீரில் குதித்த கூட்டம் அருகில் நெருங்கி வந்து கொண்டிருந்தது.

மனோகரன் அவள் கையை உதறி விட்டுத் தான்மட்டுமே தண்ணீரில் குதிக்க முனைந்தான். அவளோ அவன் கையை விடவில்லை.

அவன் அவள் சாவதை விரும்பவில்லை. தனியாகத் தான் சாகவோ அவள் விடுபவளாகத் தெரியவில்லை. கடைசியில் அவன் விழவே, அவனுடன் அவளும் தண்ணீரில் விழுந்தாள்.

அதேசமயத்தில் அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவன் மிகவும் நெருங்கி வந்து விட்டபடியால் இருவரையும் தூக்கிப் படகில் போட்டான். படகைத் தள்ளியது கூட்டம். மயக்கம் நீங்காத நிலையில் மனோகரனும், சந்திராவும் கரைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்.

கூட்டத்தைச் சேர்ந்தவர்களுள் ஒருவன், "இவர்கள் இருவரையும் உடனே அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போ "என்றான். தயாராக இருந்த பல்லக்கில் இரண்டு பேர்களையும் தூக்கி வைத்தார்கள். அதி வேகமாகப் பல்லக்குசெல்லத் தொடங்கியது.

* * *

மனோகரன் அந்த நாட்டின் இளவரசன். சந்திரா ஒரு சாதாரண குடிசைப் பெண். இயற்கை அழகான ஓர் உடலை எளிய சூழ் நிலையில் சிருஷ்டித்து விட்டிருந்தது. ஆனாலும் அதைப் புரிந்து கொண்டுவிட்ட அரசகுமாரன் அந்த அழகை அநுபவிக்க விரும்பினான்.

சந்திராவின் மீது தூய பிரேமை அவனுக்கு ஏற்பட்டிருந்தது. சந்திராவுக்கும் அவன் மீது அவ்வண்ணமே பிரேமை உண்டாகியிருந்தது. அரச குடும்பத்துக்கும், எளிய குடிசைக் குடும்பத்துக்கும் தொடர்பு ஏற்பட்டது இயற்கைக்கு முரண்தான் என்றாலும் அது ஓர் அபூர்வ சம்பவமாக ஏற்பட்டது என்னவோ உண்மைதான்.

மனோகரன் அரசனின் ஒரே பிள்ளை அரசன் வக்ரதந்தன் மகா முரடன்,தான் வைத்ததே திட்டமாகக் கருதுபவன், அவன் மனைவி மகா உத்தமி. அவளுக்கு அரசன் என்றால் ஸிம்மஸ்வப்பனம்,, ஆதலால் மகனின் மீது அவளுக்குள்ள பாசம், புருஷனிடமிருக்கும் பயத்திற்குக் கட்டுப் பட்டதுதான் அவளால் ஏதும் செய்ய முடியாது. மனோகரனின் மனத்தை மாற்ற அவள் செய்த யத்தனம் பலிக்கவில்லை. அரசரே சாம, தான, பேத, தண்ட உபாயங்கள் நான்கினாலும் மகனைத் திருத்த முற்பட்டுப் பலிக்காமல் கடைசியில், பெண்ணின் தந்தையிடம் கூறினான்.

"இந்த நாட்டை விட்டுப் போய்விடு. உன் மகளுக்கு ஜீவனாம்சம் தரச் செய்கிறேன்." என்றான் மன்னன்.

"அரசர் என்றால் ஒரு நியாயம். ஆண்டி என்றால் ஒரு நியாயமா? என் மகளின் கற்பைக் களங்கப்படுத்தி விட்டானே உங்கள் மகன். அதற்கு என்ன சொல்லுகிறீர்கள்." என்றான் சந்திராவின் தகப்பன்.

"நடந்தது நடந்துவிட்டது. இது ராஜ ஆக்ஞை. உனக்குத் தேசப் பிரஷ்டம் விதித்திருக்கிறேன்." என்று மன்னன் கூறவே, சந்திராவின் தகப்பன் "தர்மம் இல்லையா? தெய்வம் இல்லையா, நீங்களோ அரசர். நீங்களா மன்னன்." என்று கூவவே, மன்னன் சிறையில் தள்ளி விட்டான் அவனை. விட்டான் அவனை.

இந்தச் செய்தி மனோகரன் செவிக்கு எட்டியது. உடனே சிறைக் கூடத்துக்கு சென்றான், அரசனின் உத்தரவுப்படி கடுங் காவல் புரிந்து கொண்டிருந்தான் ஒரு காவலாளன்.

அவனுடைய கடமை சிறைக் கூடத்திலிருக்கும் எவரையும் வெளியே செல்லாமல் பாதுகாக்க வேண்டியது. இதை மனோகரனும் அறிவான். ஆயினும் தன்னுடைய பிரேமைக்குப் பாத்திரமான சந்திராவின் தகப்பன் இம்மாதிரி சிறை வாஸத்தை அநுபவிப்பது அவன் மனத்திற்குக் கஷ்டத்தைக் கொடுத்து. அதனால் காவலாளைக் கேட்டான், அவனை வெளியே அனுப்பும்படி. காவலாள் மறுத்தான். ஆத்திரம் மீறவே அவனை அடித்துக் குற்றுயிராய்க் கிடத்தி விட்டுச் சந்திராவின் தப்பனுடன் வெளியேறினான்.

இதற்குள் இன்னொரு காவலாள் வந்து அரச குமாரனை வழிமறித்தான். அவன் வெறுங் காவலாள் அல்ல. சந்திராவின் வாழ்வைக் கொள்ளை கொள்ள விரும்பியிருந்த சேனாதிபதி ஜகவீரன் தான். அவன் சிறைக் கூடத்திலிருக்கும் சந்திராவின் தகப்பனைக் காப்பாற்றும் நிமித்தமே அங்கு வந்தவன். சந்திராவை அவன் தனக்கு அளித்தால் அவளைக் காப்பாற்றி விடலாம் என்பது அவன் உத்தேசம்.

அழகு யாரைத்தான் கவராது? ஜகவீரன் சந்திராவைப்பற்றிக் கனவு கண் கொண்டிருந்தான். அரச குமாரனும் சந்தாராவும் ஆனந்தமாகச் சுற்றித்திரிவதைக் கண்டு பொறாமை கொண்டான். தனக்குக் கிட்ட வேண்டிய தேன் கனியை இன்னொருவனுக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறதே என்று பொருமினான். அதனால் அரசரிடம் இதைச் சாதுரியமாகத் தெரிவித்துச் சந்திராவின் தந்தையை சிறையில் அடைக்கும் அளவுக்கு மன்னனைத் தூண்டிவிட்டான்.

அவன் கண்களில் சந்திராவின் தகப்பனை மீட்டுச் செல்லும் மனோகரன் தென்படவே ஆத்திரம் எள்ளும் கொள்ளுமாய் வெடித்தது.

"இவனை நீ யார் விடுவிப்பது? என்றான் ஜகவீரன். நீ யார் அதைக் கேட்பது? என்றான் மனோகரன். அவ்வளவு தான், கத்தி கத்தியுடன் மோதியது.

பயங்கரமான ஆரவாரம் மூண்டது. கடைசியில் ஜகவீரன் உயிரைக் காற்றிலே பறந்து போகச் செய்தான் மனோகரன்.

அதுவரை வேறு ஏதும் கவனியாதவன் பக்கத்தே சந்திராவின் தந்தையைக் காணாமல், அவர் இல்லத்திற்குப் போயிருப்பார் என்று எண்ணி அங்கிருந்து ஓடினான்.

ஆனால் அந்த இல்லம் அப்பொழுது எரிந்து கொண்டிருந்தது. எவரையும் காண முடியவில்லை, யார் அதைக் கொளுத்தி விட்டார்கள் என்பதும் மனோகரனுக்குத் தெரியவில்லை.



"சந்திரா, சந்திரா" என்று கூவி தேடினான். நல்ல வேளையாக அவனுக்கு அது ஞாபகத்திற்கு வந்தது. சந்திராவை நதிக்கரையில் இரவு நேரத்தில் அன்று சந்திப்பதாகக் கூறியிருந்தான் ஆகவே நேராக ஓடினான் ஜீலநதிக் கரைக்கு.

அவள் அங்கே காத்திருந்தாள். அவன் போனதும் அவள் அவனை அன்புடன் வரவேற்றாள்.

"உன் வீடு போய்விட்டது" என்றான் மனோகரன்.

"என் வீடு எங்கே போய்விடும்? நான் தங்கும் கோயில் தங்கள் உள்ளம் மாறிவிட்டதா?" என்றாள்.

"உள்ளத்தைச் சொல்லவில்லை. உள்ளம் ஒரு நாளும் சிதையாது. உன் குடிசையை யாரோ எரிய விட்டிருக்கிறார்கள்."

"யார் செய்தவேலை என்பது எனக்குத் தெரியும் மனோகர், எல்லாம் ஜகவீரனின் ஒற்றர்களாகத்தான் இருக்கும் ஆனாலும் அந்தக் குடிசை போனால் என்ன இருந்தால் என்ன,"

"சரி – நான் ஒரு கொடிய தவறுசெய்து விட்டேன். எனக்குப் பயமாயிருக்கிறது. நாம் இப்போதே போய் விட வேண்டும் ...."

"சரி,...."

"எங்கே போவது, எப்படிப் போவது என்று நீ கேட்க வில்லையே"

"ஏன் திக்கில்லாத வனாந்திரத்திற்குப் போவோம், நம்முடைய ப்ரேம மழையைப் பொழிந்து அங்கே பசுஞ் சோலை களைச் சிருஷ்டிப்போம். இருக்கவே இருக்கிறது படகு.

உடனே இருவரும் படகில் ஏறிக் கொண்டார்கள். "உன் தந்தையைக் காப்பாற்றி விட்டேன்" என்றான் மனோகரன்.

"அப்படியானால் நான் தாய் ஒருத்தியை மட்டும்தான் இழந்தேன் என்று சொல்லுங்கள்."

"ஆ. உன் தாயை யார் கொன்றார்கள்?"

"நம்முடைய பிரேமைத் தீ தான் பொசுக்கி விட்டது. நாம் இருவரும் பிரிந்தால் தான் அன்னை வாழ முடியும் என்ற நிலை ஏற்பட்டு விட்டது, காரணம். ஜகவீரனின் தூண்டுதல், கடைசியில் தாய் தன்னையே இன்று கொன்று கொண்டு விட்டாள்"

"நீ சொல்வது ஒன்றும் புரியவில்லையே."

"ஆம். தாய் என் வாழ்வைப் பலி கொடுக்க விரும்பினாள். நான் ஏற்கவில்லை. இன்று மாலை ஜகவீரன் என்னைக் கற்பழிக்க முற்பட்டான். வீராவேசத்துடன் அவனை எதிர்த்தேன். இந்த இக்கட்டான நிலையில் யாரோ ஒற்றன் அங்கே புகுந்து வீடு நாலா புறமும் எரிகிறது என்றான். ஓடினான் ஜகவீரன் ஒன்றும் தெரியாதவன் போல். நானும் ஓடினேன். அன்னையும் ஓடினாள். ஆனால், அன்னை தீயில் விழுந்து கருகிவிட்டாள். நான் ஒருத்தியே இங்கு தப்பி வந்தேன்."

"பாவம். உன்னை அருமையாகப் பெற்றவள்."

"விதியினிடத்தில் நம்முடைய சீற்றம் பலிக்குமா. அது சரி. தாங்கள் யாரையாவது கொன்றீர்களா?"

"ஆம். என்னைக் கொல்ல முற்பட்டான் ஜகவீரன். அவனைக் கொன்று விட்டேன் நான்."

"ஆகா. நம்முடைய பிரேம தேவதைக்குச் சரியான பலி கொடுத்தீர்கள்."

"கொடுத்த பலி மகிமை வாய்ந்தது தான். ஆனால், நம் உயிரையும் நம்முடைய பிரேம தேவதை பலி கேட்டு விடப் போகிறாளே என்று அஞ்சுகிறேன்."

"ஊஹூம். நம் காதல் நம்மை வளர்க்கவே முற்படும். அதில் சிறிதும் சந்தேகம் இல்லை. இந்த ஜீவ நதியின் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன். ஊழிக் காலம் மூண்டாலும் உள்ள நிலை நமக்கு மாறாது."

"நீ பேசுவது இளமையின் போதையால்....." "இல்லை. அன்பின் ஆவேசத்தால் சொல்கிறேன்" "அதன் படி நடந்தால் எனக்குச் சந்தோஷந்தான், அதற்கு மாறாக என்னைப் பலி கேட்கும் காளிதேவியாக அந்தப் பிரேம தேவதை விளங்கினால் .."

"என்னையும் சேர்த்துக்கொண்டு அவள் கூப்பிடும் உலகத்திற்குச் சென்றுவிடுவது. ."

"நீ நல்ல அறிவாளி"

"தாங்கள் தியாகியும் கூட."

"உன்னைவிடவா நான் அதிகத் தியாகம் செய்திருக்கிறேன். தாயை இழந்தாய் தந்தையைப் பிரிந்தாய், சமயத்தில் என்னைப் பிரியவும் தயாராயிருக்கிறாய்,....."

"என்ன சொன்னீர்கள் உங்களைப் பிரியவா தயாராய் இருக்கிறேன்? ஒரு நாளும் இல்லை, வாழ்ந்தால் உங்களுடன் சேர்ந்து வாழ்வேன். இல்லையேல் மடிவேன். ...."



"வேண்டாம், எல்லாம் எனக்குத் தெரியும்."

"பரிகாஸமா?"

"சாகும்போது யார் பரிகாஸம் செய்வார்கள்"

"என்ன அப சகுனம் போல் பேசுகிறீர்கள்"

"அசுப காரியங்கள் நடக்குமோ என்ற எண்ணத்தால் என் மனம் பேசுகிறது."

"நல்ல மனம். நல்ல பேச்சு...."

படகு நகர்ந்து கொண்டே இருந்தது. சூரியனும் மெல்ல உதிக்கலானான். இதற்கிடையில் தான் அந்தக் கூட்டம் அங்கே குதித்து வந்தது. – தூக்கிச் சென்றது.

* * *

மனோகரன் மூர்ச்சை தெளிந்தான். அவனை இரண்டு ஆட்கள் தனியே அழைத்துச் சென்றார்கள்.

சந்திராவும் மூர்ச்சை தெளிந்தாள் அவளையும் இரண்டு ஆட்கள் அழைத்துச் சென்றார்கள்.

மன்னன் சந்திராவிடம் வந்தான்.

"இந்த தேசம் சாமானியமானதில்லை. மனோகரன் இந்தத் தேசத்து வருங் கால அரசன். அவனை எங்கே கொண்டு போகத் துணிந்தாய். உன்னை சிரச் சேதம் செய்தால் என்ன?" என்றான்.

"ஆறிலும் சாவு. நூறிலும் சாவு. மேலும் என் காதலருக்காகச் சாக நான் தயாராயிருக்கிறேன். அப்படியே செய்துவிடுங்கள்." என்றாள் சந்திரா.

"வேண்டாம் உன்னைக் கொலை செய்ய விரும்பவில்லை; நீ இந்த நாட்டை விட்டுப் போய்விடு."

"ஊஹூம். அவர் உத்தரவின்றி இந்த உடல் நகராது. உயிரை வேண்டுமானாலும் தாங்கள் அகற்றி விடலாம்." என்றாள் சந்திரா.

மன்னன் ஏதோ முடிவுக்கு வந்தவனாய் அங்கிருந்து நகர்ந்தான். மகனிடம் சென்றான்.

"சேனாதிபதி செத்துவிட்டான் என்று பெருமை கொள்ளாதே.அவனைக் கொன்ற உன்னை என் நீதி சும்மா விடப் போவதில்லை.." என்று உக்ரமாக மகனிடம் பேசினான் மன்னன்.

"நான் அவனைக் கொன்றதற்காகத் தாங்கள் என்னைக் கொல்லப் போகிறீர்களா? தாராளமாய் கொல்லுங்கள். என்னுடன் சேர்த்துச் சந்திராவையும் கொன்று விடுங்கள். இல்லையென்றால் அவள் தற்கொலை செய்து கொண்டு விடுவாள்."

மன்னன் கடைசியாகக் கேட்டான்.

"அவளை மறந்துவிடு. உன்னைக் காப்பாற்றுவேன்."

"அது ஒரு நாளும் இல்லை."

"அப்படியானால் நீ உயிர் வாழப் போவதும் இல்லை." என்றான் மன்னன்.

"சந்தோஷம்." என்றான் மனோகரன்

* * *

அன்று இரவு வெகு நேரம் வரை மன்னன் தூங்கவில்லை. அப்படியும் இப்படியுமாகப் புரண்டு கொண்டு இருந்தான்.

திடீரென்று அவன் மனத்தின் முன் சேனாதிபதியின் ஆவி பேசியது.

"என்னைக் கொன்றுவிட்டான் என்பதற்காக உங்கள் மகனைக் கொன்று விடாதீர்கள். ஆனால், சந்திராவை அவனுக்கு மணம் செய்து வைக்காதீர்கள்."

உடனே மன்னன் எழுந்திருந்தான். நேராகச் சென்றான் சந்திராவிடம். ஒரு சூழ்ச்சி அவன் மூளையில் உதித்தது.

"இப்பொழுது உன் காதலன் எங்கு இருக்கிறான் தெரியுமா?" சந்திராவை நோக்கிக் கேட்டான்.

"எங்கே இருக்கிறார்?" என்றாள் சந்திரா.

"வானத்தில். இருக்கிறான். அந்தரத்தில் தொங்குகிறான். இனி நீ ஒருத்தி தான் தனியாக இந்த உலகத்தில் வாழ வேண்டும். என் மகனைக் கொன்ற என் மனம் உன்னைக் கொல்ல முற்படவில்லை. போய்விடு. பெண் என்று இரங்குகிறது ...."

"அப்படியா: அவரைக் கொன்று விட்டீர்களா?" சந்திரா அலறினாள்.

"தாங்களும் ஒரு தந்தை தானா? உங்கள் பிள்ளை நினைத்திருந்தால் உங்களைக் கொன்று என்னை என்றோ அடைந்திருப்பாரே. அவர் அவ்விதம் ஏன் செய்யவில்லை தெரியுமா? கடமைக்கும், சத்தியத்துக்கும் அவர் மரியாதை அளிப்பவர். என்னை நன்றாகப் புரிந்து கொண்டவர் அவர். அதனால் என்னை ஒரு நாளும் கைவிட மாட்டார் அவர். அதற்கு மார்க்கம் மரணம் தான் என்பது அவர் கொண்ட முடிவு. அதை நீங்களே செய்து விட்டீர்கள் என்னையும் இதோ இந்தக் கத்தியால் கொன்றுவிடுங்கள். ஏன் விழிக்கிறீர்கள்? குத்துங்கள் கொல்லுங்கள்." என்றாள் சந்திரா. அவளுடைய முகத்தில் ரௌத்ராகாரம் தாண்டவமாடியது.

மனிதன் எப்பொழுதுமே ஸ்திர புத்தியில் இருப்பதில்லை. விதி ஒன்று சமயத்தில் குறுக்கிட்டுப் புத்தியைக் கலக்கிவிடுகிறது.

மன்னன் ,சந்திராவின் மொழிகளைக் கேட்டதும் அயர்ந்து போனான். இந்த இருவருடைய ஐக்கியத்தைப் பிளக்கத் தனக்கு சக்தி கிடையாது என்று தோன்றியது அவனுக்கு.

அடுத்த நொடி நேரத்தில் தன் அங்கிகளைக் கிழித்தெறிந்து கொண்டான். கிரீடத்தைக் கீழே வீசினான்.



ஹொமா (யு. எஸ்.) என்ற இடத்திலுள்ள டெர்ரிபோன் வாசக சாலையின் தோற்றம். கிராமாந்திரங்களிலுள்ளவர்கள் பயன்பெறுவதற்காக இங்கிருந்து தான் லாரி லாரியாகப் புத்தகங்களை அனுப்புகிறார்கள்.



மேற்படி புத்தகசாலையில் படிக்கப் புத்தகம் வாங்கிச் செல்லும் சிறுமியொருத்தியைப்பார்க்கவும். தமக்கு வேண்டிய புத்தகங்களைக் குழந்தைகளே இங்கு பொறுக்கிக்கொள்ளலாம்.

"சந்திரா. நீ வாழப் பிறந்தவள் தான். என் மகன் சாகவில்லை. அவனுடன் நீ வாழ்ந்து கொண்டிரு. நான் போகிறேன்..." என்று பிதற்றியவன் ஓட்டம் ஓட்டமாக ஓடினான். காட்டுப் பிரதேசத்தை நோக்கி.

* * *

மறு நாள் சந்திராவும், மனோகரனும் வனத்தில் ஒரு விருக்ஷத்தின் அடியில் சந்நியாசிக் கோலத்தில் மன்னன் அமர்ந்திருப்பதைக் கண்டார்கள். வணங்கினார்கள்.

சந்நியாசி ஆசி கூறினார்.

---



# பால் பருகும் பறவைகள்!



அட்டை போட்டு மூடிவைத்த பால் டப்ளரை தன் மூக்கு அலகினால் கொத்தி ஏடையும் பாலையும் பார்க்கும் பறவை இரண்டின் படங்களையும் மேலே பாருங்கள் வீட்டுக்காரர் வந்து பாலை எடுத்துக் கொள்ளுமுன் எத்தித்திருடுவதில் இவற்றைப்போன்ற பறவைகள் கைதேர்ந்தவை. வலப்புறத்தில் அட்டையைக்கொத்திஏட்டைத்தின்றுவிட்டு பாலைப்பருக யத்தனிக்கும் பறவை; அட்டையைக் கொத்தி அப்புறப்படுத்தும் பறவையை அடுத்தபடியாகப் பார்க்கலாம்.

அட்டையை அலகினால் கொத்தி ஓட்டை போடுவதில் முனைந்துள்ள பறவை. புழுவைத் தின்று வாழும் பறவைகள் பால் பருகும் அளவுக்கு வந்திருப்பதை மிஸ்டர் வி. எல். பிரீஸ் என்ற ஆங்கிலேயர் கண்டுபிடித்தார்.



# உங்கள் காலபலன்

—ராவ்

## மேஷ ராசி

**அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய**

இம்மாதம் மேஷ ராசிக்காரர்களுடைய விவகாரங்களில் மனோகரமான சக்திகள் ஒளி வீசுகின்றன. நடவாமல் நின்று போயிருக்கும் முக்கியமான காரியங்கள் முடிவடையும். பண விஷயத்தில் அபிவிருத்தி ஏற்படும். ஏழ்மை நிலையிலுள்ள சிலர் மட்டும் கையொப்பமிட்டுப் பணம் கடன் வாங்க நேரும். ஆனால், பிறருக்குக் கடன் கொடுப்பதோ, கடன் வாங்குவதற்கு உதவியாயிருப்பதோ கூடாது. இந்த சமயத்தில் ஒரு பிரயாணம் நேரும். நண்பர்கள், உறவினர்கள் இவர்களிடமிருந்தெல்லாம் பரஸ்பர உதவி பெறலாம். முதல் பகுதியில் இவர்களிடையே அபிப்பிராய பேதமும் உண்டாகக் கூடும். முதற் பகுதியில் மட்டும் வீட்டின் பேரில் முதலீடு செய்வதாயிருந்தால் செய்யலாம். புதல்வர்களில் ஒருவர் முன்னுக்கு வந்து மகிழ்ச்சியைக் கொடுக்கலாம். கடிதப் போக்கு வரத்துக்கு இது உதவிகரமான மாதம். புதிய புத்தகங்களை எழுத நினைக்கும் ஆசிரியர்களுடைய புத்தி செழிப்புற்று விளங்கும். சகோதரர்களிடம் ஒருவரிடம் சிரத்தை கொள்ள நேரும்.

உத்தியோகத்தில் ஏதாவது ஆதாயமுண்டு. கடிதப் போக்குவரத்து வேலை அதிகரிக்கும். முதலாளிகளாயிருப்பவர்களைக் காட்டிலும் ஊழியர்களாயிருப்பவர்களுக்கு இம்மாதம் சிறந்து விளங்கும். ஆபீஸில் ஏதாவது ஒரு முக்கியமான கடிதம் குறித்து கோளாறு ஏற்பட்டு இதனால் கவலைப் படும்படி நேரலாம்.

வியாபாரிகளுக்கு முதல் பகுதி நல்லது. எதிர் கால வியாபாரத்தை முன்னிட்டு இவர்கள் செய்யும் கடிதப் போக்குவரத்து பலன் தருவதாயிருக்கும். வரும் கால வர்த்தகம் குறித்து பேச்சு வார்த்தை நடத்தி ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதற்கும், தாற்காலிகமாகக் கூட்டாகச் சேர்வதற்கும், உடனடியாகப் பணத்தைப் போடும்படியாகயில்லாத திட்டங்களைச் சிந்தித்துப் பார்ப்பதற்கும் இம்மாதம் ஏற்றது.

ஜூன் 17 19 21 24 26 27 30 ஜூலை 2 5 6 8 13 16 தேதிகள் இவர்களுக்கு அதிருஷ்டமானவை.

## விருஷப ராசி

**கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய**

இம்மாதம் இந்த ராசிக்காரர்களுடைய அனுபவங்கள் பலதரப்பட்டதாயிருக்கும். செவ்வாயின் நிலை காரணமாகச் சொந்த விவகாரங்களெல்லாம் கெடுபிடியான கிரக சக்திக்குட்பட்டிருக்கும். குடும்பத்தில் சயன சுகமிராது. அல்லது குடும்ப வாழ்க்கை செவ்வையாக அமைந்திராது. ஜூன் கடைசி வாரம் முதல் இரண்டாவது வீட்டிலுள்ள பாபக்கிரகங்கள் காரணமாக பண விஷயங்களில் உதவி கிட்டாது. அசௌகரியங்கள் ஏற்படும்படியாயுமிருக்கும். கடும் சொற்களை உபயோகிப்பதால் குடும்பத்திலும், பண விஷயங்களிலும் கசப்பான நிலைமை ஏற்படும். ஜூன் 29, 30-ந் தேதிகளில் இவ்விஷயத்தில் அதிகமான கவலைகள் ஏற்படும். எனவே இந்த சமயத்தில் சண்டை சச்சரவுகள் நேராத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். கண் உபாதை உள்ளவர்கள் இந்தக் கட்டத்தில் அதிகக் கஷ்டப்படுவார்கள். 11-வது இடத்தில் குரு இருப்பதால் கஷ்டங்கள் தணிவுறும். கோர்ட் நடவடிக்கைகள் அடுத்த மாதம் ஒத்திவைக்கப்படலாம். சில இனங்களில் கல்யாணங்களும் நிகழலாம்.

உத்தியோகத் துறையில் ஏதாவது அனுகூலம் கிட்டுவது போல இருக்கும். ஆபீஸில் பெரிய அதிகாரி ஒருவரின் அதிருப்திக்கு ஆளாக நேரும்.

இரண்டாம் பகுதியில் வியாபாரிகளுக்கு நிலைமை தரம். கண் மூடித் தனமான ஸேஷியங்கள் வேண்டாம். இல்லையாயின் ஜூன் கடைசி வாரத்தில் நஷ்டமேற்படக் கூடும்.

ஜூன் 17 19 23 27 28 ஜூலை 2 5 6 8 13 16 தேதிகள் இவர்களுக்கு தரமான தினங்கள்.

## மிதுன ராசி

**மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை புனர்வஸு 3-ம் பாதம் முடிய**

விஷயங்களைத்தெரிந்து கொள்ளவேண்டுமென்றதுடிப்பும், சுறுசுறுப்பாகவிருக்கும் பழக்கமும் சுபாவிகமாகவே உள்ள இந்தராசிக்காரர்களுக்கு இம்மாதத்தில் அனுபவங்கள் பலவாறாக இருக்கும். கவனம் பெறும் விஷயங்களின் மூலகாரணங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்று மறை முகமாய் ஒரு ஆவேச ஆவல் உள்ளூர வேலை செய்து கொண்டிருக்கும் அனேக விதமான மாறுதல் சுற்றிலும் ஏற்பட்டு வரும். ஆனால் இவையெல்லாம் இந்த ராசிக்காரர்களுக்குப் பயன் தருமா என்பது தான் சந்தேகம். பண வசதி உண்டு. ஸேஷியத்தினால் கூட ஆதாயம் வர இடமுண்டு. பயன் எப்படியிருந்த போதிலும் சகல விதத்திலும் இறங்கி செயலாற்றும் உத்வேகமிருந்து வரும். சகோதரருக்கோ அல்லது சகோதரர் மூலமோ உதவி புரியவோ பெறவோ நேரும். புத்தக ஆசிரியர்கள் கற்பனை காதல் கதைகளை எழுத வாட்டமானகாலம். லக்னத்திலுள்ள உஷ்ணமான கிரகங்களினால் இந்த ராசிக்காரர்களுடைய தேகத்தில் சூடு அதிகரிக்கும். ஏற்கெனவேயுள்ள நரம்புத் தளர்ச்சியால் மேற்கொண்டும் ஆரோக்கியம் பலஹீனப்படும். குடும்பத்தில் சந்தோஷமாயிருக்க முடியாது. ஜாகை மாற வேண்டுமென்ற எண்ணம் தீவிரமாயிருக்கும். விவாகமாகாதவர்கள் இந்த சமயத்தில் மணம் புரிவர். பக்கத்திலிருப்பவர்களிடம் சண்டை சச்சரவு வைத்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்ளவும்.



உத்தியோகத்தில் திடீரென்று மாறுதலேற்படலாம். ஒருகால் இது மனதுக்குப் பிடிக்காமல் போகலாம். முன்னைக் காட்டிலும் வேலை கடுமை. கீழ்த்தர சிப்பந்திகள் பிடிவாதமாகவிருப்பர். இவர்கள் ஒத்துழைக்கவும் மாட்டார்கள்.

வியாபாரிகள் தங்கள் நடவடிக்கைகளில் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். ஏமாந்துபோகும்படியாக நேரலாம். வியாபார விஸ்தரிப்புக்கு இம்மாதம் உகந்ததாயில்லை.

ஜூன் 18 19 23 28 ஜூலை 3 5 6 8 9 13 14 16 தேதிகள் இவர்களுக்குச் சிறந்தவை.

## கடக ராசி

**புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம் ஆயில்யம் முடிய**

சென்ற மாதத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் இம்மாதம் கடக ராசிக்காரர்களுக்கு தேக நிலை சுணக்கமாயிருக்கிறதென்றே சொல்லவேண்டும். எனவே முயற்சிகள் தோல்வியுற்று மனம் நொந்துபோகும். 12வது இடத்திலுள்ள கிரகங்களைச் சனி பார்ப்பதால் சரியான மார்க்கத்தில் செல்ல முடியாது. சாத்விகமாகப் போனாலன்றி செய்யும் முயற்சிகள் எதிரிடையாகவே முடியும் எதிரிகள் முளைத்தெழுந்து சங்கடமான நிலைமையை உண்டு பண்ணுவர். செலவு இந்த சமயம் எதிர்பார்த்ததைவிட அதிகமாயிருக்கும். உரிய காலத்தில் மனப்பூர்வமாகச் செய்யும் உதவிகளையெல்லாம் பொருட்படுத்தாது உறவினர்கள் தூற்றிக் கைவிட்டுவிடுவார்கள். கையொப்பமிட்டுஏதாவது பொறுப்பேற்றுக் கொண்டால் அதற்காக வருந்தவே நேரும். பணவிஷயத்தில் இரண்டாம் பகுதி விசேஷம். குடும்பத்தில் சுப வைபவம் நிகழும். குடும்பத்தில் சந்தோஷமாயிருக்க முடியாது. 8வது வீட்டில் ராகு இருப்பதால் ஆரோக்கிய நிலை சுகமாயிராது. ஒரு பிரயாணம் நேரலாம்.

உத்தியோகத்தில் மாற்றமுண்டு. குறைந்தபட்சம் செய்யும் வேலைகளிலாவது மாறுதலிருக்கும். உத்தியோக வாழ்விலும் உவகையிராது. பக்கத்திலுள்ளவர்களோடு தகராறு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும். வியாபாரிகள் இம்மாதம் கஷ்டப்படுவார்கள். வியாபார முன்னேற்றம் தடைப்படும்.

ஜூன் 18 19 21 24 26 28 ஜூலை 1 2 4 6 8 13 16 தேதிகள் இவர்களுக்கு அனுகூலம்.

1951-ம் ஆண்டு ஜூன் மாதம் 16உ முதல் ஜூலை மாதம் 16-ந் தேதி வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ராசியைத் தெரிந்துகொள்ள உதவியாக நட்சத்திரங்களும், பாதங்களும் கூடவே பிரசுரிக்கப் பட்டிருக்கின்றன.

### 1951-ம் ஆண்டு ஜூன் மீ 16-ந் தேதியுள்ள கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| குரு | | புதன் செவ்வாய் | சூரியன் யுரானஸ் |
| ராகு | ராசி | | சுக்கிரன் |
| | | | கேது |
| | | சந்திரன் | சனி நெப்டியூன் |

## ஸிம்ம ராசி

**மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய**

சென்ற மாதத்தைக் காட்டிலும் இப்போது அதிகமான அனுகூல கிரகங்களின் வீட்சிண்யம் இவர்களுக்கு ஏற்பட்டுளது. சொந்த விஷயத்திலும், பிறர் விஷயத்திலும் இம்மாதம் முக்கியம்பெற்றுச் சிறந்து விளங்கும். முதல் பகுதியைவிட இரண்டாம் பகுதி ரொம்ப விசேஷம். முற்றிலும் புதிய தொடர்புகள் ஏற்பட்டு சமூக நலன்கள் விஷயத்தில் விசேஷமான சந்தர்ப்பங்கள் ஏற்படும். அசாதாரணமாக நபர்கள் ஒப்புக்கொள்வர். இதனால் ஆதாயமேற்படும். மணம்புரிந்தவராயின் குடும்பவாழ்வு சந்தோஷகரமாகவும் சௌகரியமாயும் இருக்கும். மனைவி வழியில் ஏதாவது தொடர்புகளிருக்குமாயின் அவ்வழியில் ஒருகால் லாபம்வர ஹேது உண்டு. விவாகமாகாதவர்கள் மணம் புரிய முயற்சி செய்யலாம். முதற்பகுதிக்குப் பிறகு பூர்த்திசெய்யக்கூடிய அனைத்தையும் முடிக்கலாம். இல்லையானால் சற்று தடங்கல்கள் ஏற்படும். இம்மாதத்தின் கடைசி 3 வாரங்களும் பரபரப்பானவை. இக்கால கெடுவுக்குள் விரும்பும் சந்தர்ப்பங்கள் அனைத்தும் ஏற்படுவதாகும். பண்பும், படிப்புமுள்ள நண்பர்கள் ஏற்படுவர்.

உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவால் அந்தஸ்து உயரும். வியாபாரிகள் சுமாராக லாபமடைவர். கூட்டு வியாபாரமும் லாபகரமாகவே இருக்கும் புதிய வியாபார விஸ்தரிப்புத் திட்டத்தில் வெற்றிகரமாக முயற்சி புரியலாம்.

ஜூன் 18 19 23 26 28 ஜூலை 1 2 5 6 8 13 14 16 தேதிகள் இவர்களுக்கு உயர்ந்தவை.

## கன்னியா ராசி

**உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய**

கன்யா ராசிக்காரர்களுக்கு முக்கியமான மாதமிது. அனுகூலம் பயக்கக்கூடிய முக்கிய சம்பவங்கள் நிகழும். நண்பர்களும், உறவினர்களும் ஆதரித்துநிற்பர். பெரிய வட்டாரத்தில் பழகி நண்பர்களாலும், அனுதாபிகளாலும் முன்னணிக்குவர இயலும். பண விஷயத்தில் முதல் பகுதி திருப்திகரமாகவிருக்கும். இருப்பினும் சொந்த விஷயங்களில் வெளிக்குத் தெரியாமல் ஏதாவது ஒரு சக்தி வேலை செய்து கொண்டிருக்கும். யாராவது எதிர்ப்பை உண்டுபண்ணுவார்கள். ஆனால் இதைச் சமாளித்துவிடலாம். இவ்விஷயத்தில் கோபம்

கொண்டு முன்பின் பாராமல் நடந்துகொள்ளாதிருக்க வேண்டும். எந்த நிலைமையிலும் நிதானமிழக்காமலிருக்க வேண்டும். இதனால் அனுகூலமேற்படும். கல்யாணமாகியிருந்தால் இந்த கட்டம் சந்தோஷகரமாயிருக்கும். விவாகமாகாதிருந்தால் திருமணம் நடக்கும். பல்வேறு அலுவல்களை இழுத்துப் போட்டுக்கொள்ளாமல் பார்த்துக்கொள்ளவும். இது வரையில் பாக்கியாக நின்றிருந்த சில மாறுதல்கள் திடீரென்று முன்னெழுந்து நன்மைதரத்தக்க வகையில் உருவடையும். உத்தியோகத்தில் திடீரென்று எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்து திகைப்பையும், கவலையையும் கொடுக்கும். அதிகாரிகளுடனோ, மேல்தர உத்தியோகஸ்தருடனோ சண்டை பூசல்கள் நேராதபடி பார்த்துக்கொள்ளவும்.

வியாபாரிகள் தங்கள் பழைய வாடிக்கைக்காரர்களுடன் தொடர்பைப் புதிப்பித்துக்கொள்ள காலநிலை சரியாயில்லை. வருங்கால வியாபார விஸ்தரிப்புத் திட்டத்துக்கும் சுகமாயில்லை. கூட்டு வியாபாரம் உபாயமான மாறுதலுக்கு உட்படும்.

ஜூன் 18 19 22 23 26 27 28 ஜூலை 1 2 5 6 8 13 14 15 தேதிகள் இவர்களுக்குச் சிரேஷ்டம்.

## துலா ராசி

**சித்திரை, 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய**

இந்த ராசிக்காரர்களுக்கு இம்மாதமுள்ள கிரக நிலைமை சுகமாகவில்லை. முதல் பகுதியில் கொண்டுள்ள நோக்கம் நிறைவேறுவது கடினம். நண்பர்களும், உறவினர்களுமே கஷ்டங்களைச் சமாளிப்பதற்கு உதவியாயிருப்பார்கள் கோர்ட் விவகாரம் ஏதாவதிருந்தால் முதல் பகுதியில் அது வெற்றிபெறாது. ஒத்திவைக்கப்படுவதானால் இரண்டாம் பகுதியில் சமரசமாக முடியும். சகல அம்சங்களிலும் இரண்டாம் பகுதி சுமுகமாயிருக்கும். பண விஷயத்தில் அதிருஷ்டகாமான நடப்பு உண்டு. தூர இடத்துக்குப் பிரயாணம் போகப்போட்டிருந்த திட்டம் ஏமாற்றமாய் முடியும். ஒருகால் இத்திட்டம் இரண்டாம் பகுதியில் நிறைவேறினாலும் நிறைவேறும். இரண்டாம் பகுதியில் ஏதேனும் சுப விசேஷம் நிகழும். நிலத்தின் மீது இம்மாதம் பணம் முதலிடுசெய்ய நேரலாம். பணவிஷயமாகப் பிறர் மீது வியாஜ்யம் தொடருவதைத் தவிர்க்க வேண்டும். கட்டிய பந்து ஒருவரைச் சந்தித்து அவர் மூலமாக லாபமடையக் கூடும். தூரஇடத்திலிருந்து வரும் நல்ல சேதியால் உற்சாகமுறலாம். இன்ஷூரென்ஸ் துறையில் வேலை செய்பவர்களுக்கு இரண்டாம் பகுதி மிக விசேஷம். குமாரர்களில் ஒருவர் விசேஷமான திருப்தியைக் கொடுப்பார்.

உத்தியோகத் துறையில் இரண்டாம் பகுதி அனுகூலகரமாயிருக்கும். திரவிய ஆதாயமோ அல்லது பதவி உயர்வோ உண்டு. வக்கீல்களுக்கு இம்மாதம் நல்ல அதிருஷ்டம். வியாபாரிகளுக்கு இம்மாதம் நன்றாகவிருக்கும். அயல் நாட்டு வர்த்தகத்துக்கு இரண்டாம் பகுதி ரொம்ப விசேஷம்.

ஜூன் 18 19 21 23 27 28 ஜூலை 1 2 6 8 12 13 14 16 தேதிகள் இவர்களுக்குச் சிலாக்கியமானவை.

## விருச்சிக ராசி

**விசாகம் 4-ம் பாதம் முதல், அனுஷம், கேட்டை முடிய**

இம்மாதத்தில் இவர்களுக்கு அநேகம் பிரச்னைகள் எழுமெனத் தோற்றுகிறது. விருச்சிக ராசிக்காரர்களில் அநேகருக்கு பணத்தைப்பெறுவது பற்றியோ, அல்லது குடும்பத் துறையிலுள்ள பண விவகாரங்கள் குறித்தோ விசேஷமாகக் கவனம் செலுத்தும்படி நேரும். குடும்பச் செல்வ நிலையையும் செலவையும் கட்டுப்படுத்தி ஒழுங்குறச் செய்ய நேரிடும். சமீபத்தில் தான் குடும்பத்தில் பாகப் பிரிவினையாகியிருக்குமானால் இரண்டாம் பகுதியில் அது சம்பந்தமான சர்ச்சைகள் ஏற்படக்கூடும். கல்யாணமானவர்களானால் குடும்பத்தில் குழப்ப நிலை உண்டாகும். இதற்குப் பிறகு சௌஜன்ய நிலைமை ஏற்படும். கல்யாணமாகாதவர்கள் அது நிறைவேறும் வரை விசேஷமான கவலைகளை அனுபவிப்பார்கள். கல்யாணத்துக்குப் பிறகு ஏதேனும்இவர்களுக்கு அதிருஷ்டமடிக்கும். தேகாரோக்கியத்தைச் செவ்வையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். இம்மாதத்தில் நரம்புகள் வேலைச்சுமையால் சிரமப்படும். சில இனங்களில் மனைவியின் ஆரோக்கியமும் பாதிக்கப்பட்டிருக்கும். வெளிநாட்டிலுள்ள நண்பர்கள், அல்லது உறவினர்களைப்பற்றி முக்கியமான செய்திகளைச்செவியுறும்படியிருக்கும்.பழைய நண்பர் ஒருவர் மீண்டும் தோன்றுவார். இவரால் கிலேசமும் பொறுப்புமே சுமரும். இந்த சங்கடத்திலிருந்து தப்புவது கடினமென்றாலும் இது போன்ற பொறுப்புக்களை ஏற்காமலிருப்பது நல்லது. நீண்டதொரு சங்கடத்தல் சகோதரரோ அல்லது சகோதரியோ சிக்க நேரும்.

உத்தியோகத்தில் கவலையும், ஏமாற்றமும் ஏற்படும். மேலதிகாரியின் ஆதரவிராது.

முதற் பகுதியில் வியாபாரிகள் சங்கடங்களுக்கு இலக்காகலாம். எதிர்பாராது லாபம் வரவும் இடமுண்டு. கூட்டு வியாபாரம் தப்பு அபிப்ராயத்துக்குட்பட்டு நிற்கும்.

ஜூன் 18 19 22 28 ஜூலை 1 5 6 8 13 14 16 தேதிகள் இவர்களுக்கு உத்தமம்.

## தனுர் ராசி

**மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய**

முன்னேற்றமடைவதற்கு முன்னதாக தாமே தீவிரமாக உழைப்பை ஈடுபடுத்த நேரும் நிலைமையில் இம்மாதப் போக்கிருக்கிறது. உணர்ச்சிமிகுந்துள்ள சந்தர்ப்பங்கள் பலவுண்டு. வெளியிடங்களில் வெகு தீவிரமாகவிருக்க நேரும். சம்பவங்கள் நிகழும் தோரணை கண்டு திகைப்பும் எரிச்சலும் உண்டாகும். தொந்திரவுண்டுபண்ணக்கூடிய சகல விஷயங்களுக்கும் இடமிருக்கும்: ஆனால் அதிருஷ்டவசமாக எதுவும் நிகழாது. சுற்றியுள்ள சகபாடிகள்,உறவினர்கள் இவர்களிடமிருந்து நேரிடையாயும், மறை முகமாயும்எதிர்ப்புகள் இருக்கும். இவ்விஷயத்தில் உஷாராயிருக்க வேண்டும். கல்யாணம் சம்பந்தமாயும், மற்ற சுப நிகழ்ச்சிகள் குறித்தும் சொந்த விவகாரங்கள் முக்கியம் பெறும். சிறிது காலம் வரையில் விவாகப்பிரச்னைக்குக்குந்தகம் ஏற்படும்கல்யாணமானவர்கள் சந்தோஷமாயிருப்பார்கள். புதியதொடர்களை அனுகூலகரமாக ஏற்படுத்திக் கொள்ளலாம். பிரிந்திருந்த தம்பதிகள் ஒன்று சேரும் சமயமிது. அவரவர்கள் திறமைக்கேற்றவாறு குடும்பம், ஆபீஸ் இரண்டிலும் முன்னணிக்கு வரக்கூடும். இரண்டாம் பகுதியில் பணவிவகாரங்கள் பிரகாசமான நிலைமையை அடையும். குமாரர்களில் ஒருவர் எதிர்பார்த்த அளவுக்கு முன்னுக்குவரலாம். உத்தியோகத்தில் ஆதாயமிருக்கும். உயர்தர அந்தஸ்தை அடையலாம். வேலை கடுமை. முன்னைக்காட்டிலும் பொறுப்பும் அதிகமாகும். வியாபாரிகள் முக்கியமாகக் கூட்டு வியாபாரத்தில் சுபிட்சமடைவர். சச்சரவும் அபிப்ராயபேதங்களும் ஏற்படலாம். அதிகமான ஹேஷ்யம் பயன் தராது.

ஜூன் 18 19 21 28 ஜூலை 1 3 5 6 8 10 12 16 தேதிகள் இவர்களுக்குப் பயனுள்ள நாட்கள்.



## மகர ராசி

**உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம் அவிட்டம் 2-ம் பாதம் முடிய**

இவர்களுக்கு 3, 5 இடங்களிலுள்ள கிரகங்கள் மன அமைதியைக் கொடுக்காது. மனம் பாரமாயிருக்கும். ஜூன் கடைசி வாரத்தில் நண்பர்களில் ஒருவரால் கைவிடப்படும்படியாகும். பண விஷயத்தில் முதல் பகுதி பிரகாசகரமாயிருக்கும். இரண்டாம் பகுதியில் பண முடை கடுமை. சிலர் தாற்காலிகமாகக் கை மாற்று வாங்க நேரும். இரண்டாம் பகுதியில் தேக சுகம் திருப்திகரமாயிராது. இம்மாதக் கடைசிப் பகுதியில் உறவினர்களால் உபத்திரவமேற்படும். கோர்ட் நடவடிக்கையுள்ளவர்களுக்கு நிலைமை அதிருஷ்டகரமாயில்லை. பிறரால் விளையக் கூடிய தொல்லைகள், கவலைகள் இவற்றை விலக்கச் சாத்விகமாய் போவது தான் சிறந்த மார்க்கம். இரண்டாம் பகுதியிலிருந்து 6-வது வீட்டிலிருக்கும் கிரகங்கள் காரணமாக விபத்துக்காளாகும் சந்தர்ப்பமும் ஏற்படக் கூடும். குடும்பத்தில் சந்தோஷமிராது. சகோதரர்கள் அல்லது உறவினர்களுடன் உள்ள உறவு சுமுகமாயிராது. கல்யாண முயற்சிகள் அபூர்வமாகவே வெற்றி பெறும்.

உத்தியோகத்தில் திருப்தியிராது. எதிர் பார்த்திருந்த ஆதரவு ஏமாற்றமாக முடியும்.

வியாபாரிகளுக்கு முதல் பகுதி அதிக லாபகரமாயிருக்கும். வியாபாரச் சச்சரவு ஏதாவது ஏற்படலாம். அயல் நாட்டு வியாபாரம் உற்சாகம் தருவதாயிராது.

ஜூன் 18 19 21 26 ஜூலை 1 3 5 6 10 13 16 தேதிகள் இவர்களுக்கு விசேஷமான தினங்கள்.

## கும்ப ராசி

**அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய**

இம்மாதம் கும்ப ராசிக்காரர்கள் அனேகருக்கு வாழ்க்கை பல தரப்பட்ட அனுபவங்களை உண்டு பண்ணுவதாயிருக்கும். சொந்த விவகாரங்கள் ஏதாவது ஒரு விதத்தில் உச்ச நிலையையடையும். குடும்பத்தின் க்ஷேமத்தையொட்டி முக்கியமான முடிவைச் செய்யும்படியாயுமிருக்கும். ஜூன் 3-வது வாரத்துக்குப் பிறகு செவ்வாயின் வீட்சண்யம் ஏற்படுவதால் 'குழந்தைகளின் விவகார நிமித்தம் கடும் செலவுகள் செய்ய நேரும். கட்டிய பந்துக்கள் யாராவது இழிவாகப் பேசுவதற்கு இலக்காக வேண்டி வரும். 5-வது வீட்டிலுள்ள கிரகங்கள் காரணமாக குமாரர்களில் ஒருவரின் க்ஷேமம் குறித்து சந்தோஷமேற்படும். விவாகமாகாதவர்கள் மணமுடித்து நல்லபடியாயிருப்பார்கள். சரிவர அமைந்துள்ள வருமான இனம் தொடருவதுடன், மற்றொரு வருமான இனம் எவ்வளவு தூரம் சொந்த முயற்சி செய்தும் ஒரே சீராகவிராமலிருந்து வரும். குடும்பத்திலுள்ள ஒரு சிறிய நபரினால் புயல் போன்ற நிலைமை ஏற்பட்டு கவலைகள் உண்டாகும். கடுமையான வேலைகளும், அதிகப் பொறுப்புகளும், புதிய ருசிகரமான கடமைகளும் இம்மாதத்தில் ஏற்படும். கட்டிய பந்துக்களைச் சந்திக்கலாம்.

உத்தியோகத்தில் வேலை மாறுதல் உண்டாகலாம். மேலதிகாரிகளின் அபிமானத்துக்குப் பாத்திரமாகலாம். சில இனங்களில் வேறு எஜமானரிடம் சேவை செய்யவும் நேரலாம்.

பெரிய தொகைகளை ஈடுபடுத்தாமலிருந்தால் வியாபாரிகளுக்கு இந்த சமயத்தில் திருப்திகரமான நடப்பு உண்டு. புதிய ஹேஷ்ய பூர்வமான வியாபாரங்களில் முயற்சி செய்யலாம்.

ஜூன் 18 19 21 28 ஜூலை 1 3 5 6 10 13 14 16 தேதிகள் இவர்களுக்கு வசதி தரும் தினங்கள்.

## மீன ராசி

**பூரட்டாதி 4-ம்பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய**

குடும்ப வாழ்க்கை, ஜாகை, கல்யாணம், பணம் இவ்விஷயங்களே இம்மாதம் மீன ராசிக்காரர்களுக்கு முக்கியமான அம்சங்களாகவிருக்கும். வீட்டைப் பற்றி ஏதாவது தகராறு ஏற்படக் கூடும். இதனால் வேறு வீடு மாறும்படி நேரலாம். சில இனங்களில் நிலம் அல்லது வாகனத்தில் பணத்தைப் போட வேண்டி வரும். அதிகச் சூட்டினாலும், வயிற்றுக் கோளாறாலும் ஆரோக்கியம் போதியபடி திருப்திகரமாயிராது. அபூர்வமான நண்பர்களையும், உறவினர்களையும் சந்திக்கக் கூடும். சில நாட்கள் வரையில் மனைவியின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். விவாகமாகாதவர்கள் விவாகம் செய்து கொள்ள இயலும். இரண்டாம் பகுதியில் ஹேஷ்ய பூர்வமாகவுள்ள இனங்களில் அதிருஷ்டமேற்படக் கூடும். நண்பர்களில் ஒருவருடன் தகராறு ஏற்படலாம். புதிதாகச் செய்து கொண்ட சிநேகம் நீடிக்காது.

உத்தயோகத்தில் அபிவிருத்திகரமான சிறிய மாறுதல் இருக்கும். வேலையும், பொறுப்பும் அதிகரிக்கும். சகபாடிகளுடன் தகராறு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும்.

வியாபாரிகளுக்குத் தங்கள் வியாபாரத்தில் பலமான மாறுதல்களைச் செய்யும்படியாயிருக்கும். முன்னேற்றத்தில் தடைக்குப் பின் தடையாக வந்து கொண்டிருக்கும்.

ஜூன் 18 19 21 28 ஜூலை 1 2 3 5 6 8 13 14 16 தேதிகள் இவர்களுக்கு சௌகரியமான நாட்கள்.

★

**விவரங்களுக்கு ஸ்டாம்போ, கார்டோ அனுப்ப வேண்டும்.**

**ஸ்ரீ பி. வி. ராவ்**

**நெ. 5, வாசுதேவபுரம், ஐஸ்ஹவுஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை, 5.**

# பொய்ப்பதுமை

'குங்குமம்'

## 7

ஒருவனுக்குக் காலம் நல்லதாக இருந்துவிட்டால் அவன் தவறுதலாக விஷத்தை உட்கொண்டுவிட்டால் கூட அந்த விஷம் அமிர்தமாக மாறிவிடும். அவன் கை தவறி எதையாவது கீழே போட்டுவிட்டால் கூட அது உடையாமல் அப்படியே இருக்கும். நாலு பேரெதிரில் கன்னா, பின்னா என்று எதையாவது உளறி வைத்தால் கூட பக்கத்திலிருப்பவர்கள் அதில் உயர் ரகமான ஹாஸ்ய ரஸம் பொதிந்து கிடப்பதாகக் கூறி அந்த ஹாஸ்யத்தை விளக்கி, அவனுடைய மேதா விலாஸத்தைப் போற்றிப் புகழ்வார்கள். திடீரென்று அவசரமான செலவு ஒன்று எதிர் பாராமல் வந்து சேரும். மாதக் கடைசி. கையில் காலணா என்றால் காலணா இராது. அவசரத்துக்கு உதவி செய்கிறவர்களிடமிருந்தெல்லாம் ஏற்கெனவே கடன் வாங்கி அவர்கள் சொன்ன தவணை கடந்து அவர்கள் முகத்திலேயே முழிக்கக்கூடாத நிலைமை ஏற்பட்டிருக்கும். இப்படிப்பட்ட நிலைமையில் என்ன செய்வதென்று தெரியாமல் சிந்தித்துக் கொண்டிருக்கையில், திடீரென்று ஒரு உறவினரோ, நண்பரோ வருவார்: 'கையில் கொஞ்சம் பணம் அதிகமாக இருக்கிறது. நான் போகிற இடத்தில் வீணாகச் செலவழிந்துவிடும். அல்லது அங்கே என் மருமான் ஒருவன் இருக்கிறான். பணத்தைக் கண்ணால் பார்த்துவிட்டால் விட மாட்டான். அதற்குச் செலவு இருக்கிறதோ இல்லையோ, அதைத் தன் பர்ஸில் வாங்கி வைத்த பிறகு தான் அவனுக்குத் தூக்கம் வரும். நாளைக்கே கொடுத்துவிடுகிறேன் என்பான். நாளைக்கு இல்லாவிட்டால் போகிறது. பத்து வருஷங்கள் கழித்தாவது கொடுத்த பணம் வந்தால் போதும் என்றாகிவிடும். ஆகையால், உன்னிடம் கொடுக்கிறேன். நான் திரும்பி வர ஒரு மாதம் பிடிக்கும். அப்பொழுது வாங்கிக் கொள்ளுகிறேன். 'இந்தா பிடி' என்று வலுக்கட்டாயமாகக் கொடுத்துவிட்டுப் போவார்.

'சபாவில் நல்ல கச்சேரி இன்றைக்கு. எப்படியாவது போய்த் தான் ஆக வேண்டும். சாயந்திரம் கொஞ்சம் சீக்கிரமாக வந்து விடுங்கள்.' என்று மனைவி, கணவன் ஆபீஸிற்கு புறப்படும் சமயத்தில் ஒரு 'வெடி குண்டை' வீசி எறிவாள்.

'நன்றாகச் சொன்னாய். கையில் காலணா ஏது? அதெல்லாம் இன்று முடியாது.' என்று காலி பர்ஸை வைத்துக் கொண்டிருக்கும் கணவன் பதில் சொல்ல வாயெடுப்பான். அப்பொழுது தான், அந்த சபாவின் அங்கத்தினரான எதிர் வீட்டு நண்பர் அங்கே வந்து 'இன்று மத்தியானம் திருப்பதிக்குப் போகிறோம். இன்று சபாவில் நல்ல கச்சேரி. இரண்டு டிக்கெட் வீணாகப் போகிறது. நீங்கள் யாராவது போங்களேன்' என்று இரண்டு டிக்கெட்டை வீடேறி வந்து கொடுத்துச் செல்வார். இதெல்லாம் நல்ல காலத்தின் லட்சணம்.

இதுவே காலம் கெட்டதாக இருந்துவிட்டால் அமிர்தம் விஷமாகிவிடும். அதாவது வைத்தியத்துக்குச் சென்ற விடத்தில் கம்பவுண்டர் கவனப் பிசகாக கிரமமாகக் கொடுக்க வேண்டியதற்குப் பதிலாக வேறு ஏதாவது ஒரு மிக்சரைக் கொடுத்துவிடுவார். அதைக் குடித்துவிட்டு தலை வலி போய் நீரு வலி வந்து அனர்த்தம் ஏற்பட்டுவிடும். நாலு பேரெதிரில் நம்முடைய சாதுரியத்தை எல்லாம் உபயோகப்படுத்தி வெகு அழகாகப் பேசுவதாக எண்ணிக் கொண்டு பேசுவோம். ஆனால், அந்த சந்தர்ப்பத்துக்கு அது பொருத்தம் இல்லாமல் சர்ச்சைக்குரிய விஷயமாக மாறிப் பெரும் சண்டையில் வந்து முடியும். ஏதோ ஒரு காரியத்தை உத்தேசித்து கேட்கக் கூடாத இடமெல்லாம் போய் கேட்டு கஷ்டப்பட்டு பணத்தை வாங்கிக் கொண்டு வந்து வைப்போம். திடீரென்று அத்தியாவசியமான ஒரு செலவு வந்து குதித்து, 'இந்தப் பணம் அதற்குச் செலவழிந்து விடும்' அல்லது கொஞ்ச நாள் கழித்து, அதாவது நமக்கு செளகரியம் ஏற்பட்ட போது கொடுத்தால் வாங்கிக் கொள்ளக் கூடிய ஒரு கடன் காரருக்குத் திடீரென்று பெரிய செலவு ஒன்று வந்து நாம் பணத்தைக் கொடுத்தாக வேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிடும், நமக்கு மிகவும் நெருக்கடியான சமயத்தில்.

சபாவில் கச்சேரி நடக்கப் போகிற விஷயத்தை இரண்டு வாரத்துக்கு முன்பே பத்திரிகையில் விளம்பரம் மூலம் தெரிந்து கொண்டு, அதற்குப் போவதற்கான ஏற்பாட்டைச் செய்து முடித்திருப்பார்கள். சொல்லி வைத்த மாதிரி கச்சேரி அன்று தான் சகோதரனின் குடும்பமோ, சகோதரியின் குடும்பமோ வந்து சேரும். அவர்களை விட்டுவிட்டுப் போவதென்றால் நன்றாக இருக்குமா? ஆகையால், திருடன் கையில் தேள் கொட்டிய மாதிரி கச்சேரி பற்றிய பிரஸ்தாபமே செய்யாமல் இருந்துவிட வேண்டி வந்துவிடும். இதெல்லாம் கெட்ட காலத்தின் லட்சணங்கள்.

அன்று காலையில் எழுந்திருந்த போது எந்த 'புண்யாத்மாவின்' முகத்தில் விழித்தேனோ தெரியவில்லை. அன்று நடைபெற்ற காரியங்கள் ஒவ்வொன்றும் இரண்டாவதாகச் சொல்லப்பட்ட திணுசில் தான் இருந்தது.

முதல் நாளிரவு ஓர் சினிமாவுக்குப் போய்விட்டு வந்த அலுப்பு, காலையில் வழக்கத்துக்கு விரோதமாகக் கொஞ்சம் தூங்கிவிட்டேன்.

கீதாவை அனுப்பி, ஏதோ அவசரமாக ஒரு பத்து ரூபாய் என்னிடம் வாங்கிவரச் சொல்லியிருக்கிறார் என் கணவர். ஆமாம். நான் என்று இந்த வீட்டுக்கு வந்தேனோ அன்றே பொக்கிஷமெல்லாம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டது. பொக்கிஷத்தை என்னிடம் ஒப்படைத்து விட்டு அவ்வப்பொழுது என்னிடமிருந்து செலவுக்கான காரணத்தைச் சொல்லி பணத்தை வாங்கி செலவழிப்பதில் 'அவருக்கு' (என் கணவருக்கு) ஒரு திருப்தி.

நல்ல தூக்கம்.

'சித்தி: சித்தி:' என்று கூப்பிட்டாள் கீதா என் காதண்டை வந்து,

"உம்..." என்று சிறிது உடம்பை அசைத்தேன்.

'அப்பா உன்னைக் கேட்டு அவசரமாக ஒரு பத்து ரூபாய் வாங்கிக் கொண்டு வரச் சொன்னார்.' என்றாள்.





'அப்பப்பா: போறும் போறும் என்னிடம் பணத்தைக் கொடுத்துவிட்டு இருபத்திநாலு மணி நேரமும் என் பிராணனை வாங்குவது: எனக்குத் தூக்கம் கண்ணைத் திறக்கவே முடியவில்லை. இந்தா போய் உன் அப்பாவினிடம் கொடுத்து அவரையே எடுத்துக் கொள்ளச் சொல்லு.' என்று தலையணையின் கீழ் வைத்திருந்த சாவிக் கொத்தை வீசி எறிந்தேன். வீசி எறிந்ததோடு மாத்திரம் நிற்கவில்லை. 'ஏண்டி கீதா, உனக்கு என்ன வயசாகிறது? ஒன்றும் தெரியாத சிறு குழந்தையா? அலுப்புடன் தூங்கிக்கொண்டிருக்கிறாள். இப்பொழுது எழுப்பக் கூடாது என்று தெரிய வேண்டாமோ?' என்று கீதாவைச் சிறிது கடிந்து கொண்டேன்.

குழந்தை தானே: அது அவரிடம் போய் என்ன சொல்லிற்றோ என்னவோ தெரியவில்லை.

அன்று மத்தியானம் இப்படி பேச்சுவாக்கில் 'குழந்தையை என்ன சொன்னீர்கள்?' என்றாள் வேலைக்காரி.

'நான் ஒன்றும் சொல்லவில்லையே, ஏன்? என்ன சமாசாரம்?' என்றேன்.

எனக்கு இந்த சம்பவம் ஞாபகத்துக்கு வரவில்லை.

'ஒன்றுமில்லை. அது அய்யாவிடம் காலையில் கேவிக் கேவி அழுது கொண்டிருந்தது அழாதே அம்மா, அழாதே. நான் விசாரிக்கிறேன்' என்றார்கள் அய்யா. 'இனி எது வேண்டுமானாலும் சித்தியினிடம் நீங்களே போய் வாங்கிக் கொள்ளுங்கள். நான் போய்க் கேட்க மாட்டேன். அன்று கூட இப்படித்தான் கொலுவுக்குப் பொம்மை வாங்க சித்தியினிடம் பணம் வாங்கிக் கொள்ளச் சொன்னீர்கள் போய்க் கேட்டதற்கு 'இருக்கிற பொம்மையை வைத்துக் கொண்டு கொலு வைத்தால் போறும்.' என்று சொல்லிவிட்டாள். இது மாத்திரமில்லை. நான் எது கேட்டாலும் 'சள்ளு சள்ளென்று' விழுகிறாள். என்று சொல்லிவிட்டுக் கேவிக் கேவி அழுதது குழந்தை. அதன் கண்களைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டே, போடி பைத்தியமே: அழாதே. நான் விசாரிக்கிறேன். இதோ நான் பணம் கொடுக்கிறேன். உனக்கு எத்தனை பொம்மை வேண்டுமானாலும் வாங்கிக் கொள்.' என்று குழந்தையைச் சமாதானம் செய்து கொண்டிருந்தார். அதற்காக் கேட்டேன்' என்றாள் வேலைக்காரி.

இதேதடா சனியன். தூக்க மயக்கத்தில் எதையோ சொல்லி வைத்து அது இப்படி விபரீதமாய் வந்து முடிந்ததே என்று நினைத்துக் கொண்டு 'அதெல்லாம் ஒன்றுமில்லை' என்று காலையில் நடைபெற்ற சமாசாரத்தைச் சொன்னேன்.

'உம்: இதற்கா அப்படி அமர்க்களப் படுத்திவிட்டது. நன்றாக இருக்கிறது: என்னமோ ஏதோ என்றல்லவோ பயந்துவிட்டேன்.' என்று சொல்லிவிட்டு, 'ஆனால், பின்னொடு சின்ன அம்மா அப்படி யெல்லாம் ஒன்றும் சொல்ல மாட்டார்களே எதற்காக இப்படிச் சொல்லுகிறது இது என்று நினைத்தேன். ஆனால், கொஞ்ச நாளாய் ஒன்று மாத்திரம் கவனித்து வருகிறேன். அண்டை அயலில் இருப்பவர்கள் அதற்கு ஏதோ கலகம் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இல்லாவிட்டால் அதுவும் தங்கமான குழந்தை. இப்படியெல்லாம் கோள் சொல்லவே சொல்லாதே' என்றாள் வேலைக்காரி.

ஆனால், இன்று காலையில் அவர் முகம் மாத்திரம் வழக்கப்படி இல்லாமல் ஏதோ ஒரு தினுசாக, உற்சாகம் குறைந்து இருந்ததை நான் கவனித்தேன். ஆனால், அது பற்றி அவர் ஒன்றும் சொல்லவில்லை. நானும் ஒன்றும் கேட்கவில்லை. வேலைக்காரி சொன்ன பிறகு பார்த்தால் அவர் முகத்தில் காணப்பட்ட உற்சாகக் குறைவுக்குக் காரணம் விளங்கிவிட்டது.

நான் வேண்டுமென்று நடந்து கொள்ளவில்லை. தூக்க மயக்கத்தில் ஏதோ சொல்லிவிட்டேன். அப்படி ஒன்றும் சொல்லக் கூடாத விஷயமும் இல்லை. உலகத்தில் எங்கும் சகஜம் தான் இது.

பொம்மையைப் பற்றி கீதா ஏதோ 'அவரிடம்' சொன்னதாகச் சொன்னாளே வேலைக்காரி. ஒன்றுமில்லை. வீட்டில் இருக்கும் பொம்மைகளுக்கு கணக்கு வழக்கு இல்லை. தகரத்தினால் செய்த 'ஆடும் குதிரை' ஒன்று வாங்க வேண்டுமென்றாள் கீதா. மரத்தினால் செய்யப்பட்ட 'ஆடும் குதிரைகள்' நான்கு இருக்கிறது வீட்டில். அத்துடன் அதன் விலை நூற்று இருபது ரூபாய் சொன்னான். எதற்காக அவ்வளவு ரூபாய் கொடுத்து வாங்குவது? வேண்டாம். இன்னொரு சமயம் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லிவிட்டேன். இது தான் நடந்த விஷயம். இதில் என்ன தவறு இருக்கிறது: ஒரு வீட்டில் ஒரு குழந்தையினிடம் ஒரு தாய் சகஜமாகச் சொல்லக் கூடிய சமாதானம் தான் இது. இதை என்னமோ ஒரு பெரிய தவறு மாதிரி அந்தப்பெண் தகப்பனாரிடம் போய் சொல்லியிருக்கிறது. அதற்கு அவரும் 'இதில் என்னடி தவறு. அவ்வளவு விலை கொடுத்து இப்பொழுது வாங்க வேண்டாம். இன்னொரு சமயம் வாங்கிக் கொண்டால் போகிறது என்று சொல்லியிருக்கிறாள் வீட்டில் தான் ஒன்றுக்கு நாலு ஆடும் குதிரைகள் இருக்கிறது' என்று பதில் சொல்லி விஷயத்துக்கு அத்துடன் முற்றுப்புள்ளி வைக்காமல், ஏதோ நடக்கக்கூடாத ஒரு பெரிய தவறு நடந்து விட்ட மாதிரி அதை விசாரிப்பதாகச் சொல்லி அனுப்பியிருக்கிறார். எப்படி இருக்கிறது.' வேடிக்கை.: இல்லை. இல்லை. நானும் கொஞ்ச நாளாகக் கவனித்து தான் வருகிறேன். வேலைக்

காரி சொல்கிற மாதிரி அண்டை அயலில் இருப்பவர்கள், அந்தப் பெண்ணிடம் இல்லாத கலக வார்த்தைகளையெல்லாம் சொல்லி அதைக் 'குட்டிச் சுவர்' ஆக்கிக் கொண்டு வருகிறார்கள். அதைக் கேட்டுக் கொண்டு அது இவரிடம் அவ்வப்பொழுது 'சின்ன வார்த்தையும் பெரிய வார்த்தையுமாக' ஏதோ சொல்லிக் கொண்டிருக்கிறது. இவரும் அதை நிஜம் தான் என்று எண்ணிக் கொண்டு மனதிலேயே கஷ்டப்பட்டுக் கொள்கிறார்.

மனதில் கஷ்டப்பட்டுக் கொள்வானேன். என்னிடம் நேரில் விஷயத்தைச் சொன்னால் நான் தகுந்த சமாதானம் சொல்வேனோலியோ? அது கிடையாது. நேரில் கேட்டால் நான் என்ன நினைத்துக் கொண்டு விடுவேனோ என்கிற பயம் அவருக்கு; என்னுடைய கஷ்டம் ஒரு பக்கம் இருக்கட்டும். அவருடைய இந்த தர்ம சங்கடமான நிலைமையை நினைக்கும் போது எனக்கே பரிதாபமாக இருக்கும்.

இது இப்படியாயிற்றா? அன்று மத்தியானம் ஒரு குட்டிச் சம்பவம் ஒன்று நடைபெற்றது.

நான் கணக்கு எழுதிவிட்டு பவுண்டன் பேனாவை மேஜை மேல் வைத்து இருந்தேன். அதை டிராயருக்குள் வைத்துப் பூட்டாமல் அவசரத்தில் ஒரு சிநேகிதியுடன் கடைக்குப் போய்விட்டேன். வந்து பார்த்தால் பேனாவைக் காணோம். வேலைக்காரியைக் கேட்டால் அவளுக்குத் தெரியாதென்று சொல்லிவிட்டாள். சமையற்காரரும் தனக்குத் தெரியாதென்றும் சொல்லிவிட்டார் ஆனால், சமையற்காரரின் குழந்தை நான் கடைக்குப் போயிருந்த சமயம் அங்கே வந்துவிட்டுப் போனதாக வேலைக்காரி சொன்னாள். சரி அது தான் எடுத்துக் கொண்டு போய் விட்டதென்று தீர்மானித்துவிட்டேன். உடனே சமையற்காரரை பயமாகவும், நயமாகவும் கேட்டேன். தனக்கு ஒன்றுமே தெரியாதென்று சொல்லிவிட்டார். அவர் அந்த மாதிரி காரியமெல்லாம் செய்யக் கூடியவரில்லை. யோக்யமானவர் என்பது எனக்குத் தெரியும். இருந்தாலும் மனுஷ்ய சுபாவம் தானே, என்று எண்ணிவிட்டேன். ஆனால், பக்கத்து வீட்டில் தன் சிநேகிதப் பெண் வந்து கேட்டதாம். அதனிடம் கொடுத்துவிட்டு அரை மணிக்கெல்லாம் போனவுடன் வந்து நிற்கிறாள் கீதா.

எனக்கு ரொம்பவும் கஷ்டமாக போய் விட்டது. பாவம், வீணிற்காவது சமையற்காரரிடம் சந்தேகப்பட்டோமே என்று மனது தவியாய் தவித்தது.

'நீ' கொடுப்பதை வேண்டாமென்று சொல்லவில்லை. யாராவது கேட்டால் வீட்டில் பெரியவர்களைக் கேட்டுக் கொண்டு கொடுக்க வேண்டாமா?' என்று கேட்டு விட்டேனாம். முகத்தை இத்தனை பெரிதாக வைத்துக்கொண்டு விட்டாள் கீதா. இது ஒரு தவறு.

இந்த மட்டோடாவது நின்றதா? மாலையில் அவர் வருவதற்கு நேரமாகிறதே. சற்று காற்றோட்டமாக மாடியில் போய் நின்றேன்.

நான் எதிர் வீட்டு மாடியைப் பார்க்கவில்லை. மூன்றாவது வீட்டு வாசலில் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு இளம் தம்பதிகள் இறங்கினார்கள். அவர்கள் இருந்த ஒரு 'டீக்கை' ப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தேன். அவர்கள் வீட்டினுள் சென்றுவிட்டார்கள்.

உடனே எனது பார்வை எதிர் வீட்டு மாடியில் சென்றது. அப்பொழுது கூட 'அவன்' அந்த ஓரத்தில் நின்று கொண்டு என்னைக் கள்ளப் பார்வை பார்த்துக் கொண்டு இருந்ததை நான் கவனிக்கவில்லை. அதாவது மனதில் எவ்வித எண்ணமுமில்லாமல் எதையும் உன்னிப்பாகப் பார்க்காமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

திடீரென்று அந்த ஓரத்தில் 'அவன்' இருந்ததைக் கவனித்துவிட்டேன். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. சே. என்ன முட்டாள்தனம் செய்து விட்டோம் என்று உடனே முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டேன். இனி அங்கே நிற்பது தவறு. கீழே இறங்கிப் போய்விட வேண்டும் என்று நினைத்த போது மாடிப் படியின் பக்கமாக ஏதோ சிறிது ஓசை கேட்டது. திரும்பிப் பார்த்தேன்.

அங்கே என் கணவர் நின்று கொண்டிருக்கிறார்.

என்னை ஆகாயத்துக்கும் பூமிக்கும் தூக்கி வாரிப் போட்டது.

(தொடரும்)


# "எலிக்ஸிர் அஸ்வகந்தா"

★

மஹரிஷிகள் ஆயுர்வேத உதவியால் ஆயுள் பலம், தேக புஷ்டி, ஆரோக்யம், யௌவனம் இவைகளை அனுபவித்து உதவி அருளிய சிறந்த ரத்த விருத்தி லேஹியம் இதுவே. தொடர்ந்து உட்கொள்ள மலபந்தம் நீங்கி, வயிறு, முதுகு, இடுப்புவலிகள் ஒழிந்து நல்ல பசியையும், நித்திரையையும் உண்டுபண்ணும். இல்லற வாழ்க்கையில் இணையில்லா இன்பமளிக்கும் தவிர, இரத்த மூலம், குடல் வாய்வு, குடல் இறக்கம் இவைகளைக் குணப்படுத்தும் வயோதிகரை வாலிபர் என எண்ணச் செய்யும் ஔஷதம் எமது

"எலிக்ஸிர் அஸ்வகந்தாவே"

40 தோலா கொண்ட டின் ரூ. 10 தபால் செலவு பிரத்யேகம்.

★

ஆயுர்வேத வைத்தியர்

T. V. ஜெயராம சாஸ்திரிகள்,

வீரராகவ வைத்தியசாலை,

ஸ்ரீரங்கம். P. O. S. I.



# சினிமாப் படத்திற்கு தேவை

★

ஏப்ரல் மாதம் 10-ம் தேதி முதல் உயர்த்தப்பட்ட திட்டத்தின்படி ரூ 400/- மொத்தமாகவோ, நான்கு தவணைகளிலோ டெபாஸிட் செய்து சினிமாப்படத்தில் நடிக்க விருப்பமுள்ள ஆண், பெண் அனைவரும் அனுபவம் இல்லாவிட்டாலும் ஸ்டாம்புடன் விண்ணப்பித்துக் கொள்ளவும் தவணைகளில் டெபாஸிட் செய்பவர்களுக்கு படத்தில் நடித்து எம்மிடமிருந்து கிடைக்கக் கூடிய ஊதியத்திலிருந்தும் டெபாஸிட் தொகையை பூர்த்தி செய்ய வசதியளிக்கிறோம்.

C. C. ப்ரொடக்ஷன்ஸ்,

ராமனுதபுரம் — கோயமுத்தூர்.



# பாத்ருடுவின் "பால சஞ்சீவினி" (Regd.)

Phone: 84254.

குழந்தைகளின் ஈரல், குலை ஜுரக்கட்டி வியாதிகளைச் சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்று தான் அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாருதீர்கள்.

Dr. பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,

19, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

| கும்பகோணம் கிளை:— | திருச்சி கிளை:— |
| --- | --- |
| 7 சாரங்கபாணி கோவில் கீழ வீதி. | 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்ட். |






தையல்காரன் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தான்.

"மகாராஜாவே, கேளுங்கள். நான் சொல்லப்போகும் நடந்த கதை மிக விசித்திரமானது. இதுவரை பார்த்தோ, கேட்டோ இருக்க முடியாது...." என்று வினோதக் கதையை ஆரம்பித்தான்.

"நான் இருந்த நகரத்திலே ஒரு வியாபாரி வசித்து வந்தான். அந்த வியாபாரிக்கு வயது இருபத்தைந்து தான் இருக்கும். பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருப்பான். அவனுக்கு மிகவும் பெரிய கடை இருந்தது. அதில் தங்கம், வைரம் முதலிய விலை உயர்ந்த பொருள்கள் வியாபாரம் செய்து வந்தான். வைர வியாபாரி ஏழையாகவா இருப்பான்? அந்தப் பணக்காரனை மணக்க எவ்வளவோ அழகிகள் போட்டி போட்டார்கள். ஆனால் ஒரே ஒரு அழகியைத் தான் அவன் தேர்ந்தெடுத்தான். அவள் அழகு மாத்திரமல்ல செல்வத்தையும் நிறையப்படைத்திருந்தாள். அவள் பெயர் புவனசுந்தரி. புவன சுந்தரிக்கும் அந்த வியாபாரிக்கும் கலியாணம் தடபுடலாக நடந்தது. பணக்காரர்கள் கலியாணம் எப்படியிருக்கும் என்று மகாராஜாவுக்கு இந்த ஏழை சொல்லவேண்டியதில்லை வியாபாரியும், அவன் மனைவியும் சந்தோஷமாக காலங் கழித்து வந்தனர்....." என்று கூறுவதற்குள் ராஜா குறுக்கிட்டு. "இவ்வளவுதானே கதை. ஒரு வியாபாரியும், ஒரு பெண்ணும் கலியாணம் செய்து கொள்றது ஆச்சரியமா, பைத்தியக்கார மனுஷா," என்று விழுந்தடித்துச் சிரித்தான். அப்பொழுது கையிலிருந்த செங்கோல் தவறி மந்திரியின் மண்டையில் விழுந்தது. சிறிது கலக்கமாக இருந்த மந்திரி நன்றாகத் தெளிந்தான்.

தையற்காரன் தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தான். மகராஜ் கலியாணத்தோடு கதை முடிந்து விடுமா. கலியாணம் செய்து கொண்ட பிறகுதானே ஒருவனுக்கு துன்பங்களும், வினோத சம்பவங்களும் ஏற்படுகின்றன. இந்த வியாபாரிக்கும் சில கஷ்டங்கள் ஏற்பட்டன. அதுதான் மிக விசித்திரமானது.



வியாபாரிக்கும், புவன சுந்தரிக்கும் விவாகமாகி சுமார் ஒரு வருஷமாகிவிட்டது. தினமும் புவன சுந்தரியைப் பார்த்துக் கொண்டிருந்ததினால் வியாபாரிக்கு அலுத்துப் போய் விட்டது. மற்றொரு அழகியைமணக்கலாம் என்று திட்டம் போட்டான். ஆனால் இவ்விஷயம் புவன சுந்தரிக்குத் தெரிந்தால் கோபித்துக் கொள்ளுவாள் என்ற பயத்தினால் கலியாண திட்டத்தை கைவிட்டு ரகசியமாக தனக்கு வேண்டிய அழகிகளுடன் காலங் கழித்து வந்தான். அதனால் கடையை மறந்தான். வியாபாரம் நாளுக்கு நாள் இளைக்க ஆரம்பித்தது.

புவன சுந்தரிக்கு இதனால் மிகவும் கவலை ஏற்பட்டது. தன் கணவனைச் சரிப்படுத்த எண்ணினாள். அதற்கு விசித்திர உபாயமும் செய்தாள். அந்த வினோதத்தைக் கேட்டால் நீங்களே ஆச்சரியப் படுவீர்கள் மகராஜா.

வியாபாரி அந்த அழகிகளின் வலையில் சிக்கியதிலிருந்து வீட்டுக்கே வருவது கிடையாது. கடையிலிருந்த படியே அழகிகளின் வீட்டுக்குப் போய் விடுவான். சில நாட்கள் கடைக்கே

வரமாட்டான். ஒருநாள் மாலை வியாபாரங்களை முடித்துக் கொண்டு கிளம்பத் தயாரா கையில் ஒரு பெண் அவன் கடைக்கு வந்தாள். அவள் முகம் மெல்லிய கருப்பு வஸ்திரத்தினால் மூடி இருந்தது. அவள் வந்தவுடன் வியாபாரி அவளைப் பார்த்து "என்ன வேண்டும் தங்க



ளுக்கு வைரமா, தங்கமா?"என்று கேட்டான். "எனக்கு விலை உயர்ந்த வைரச் சங்கிலி வேண்டும். இருந்தால் கொடுங்கள்" என்றாள். "இதோ கொடுக்கிறேன். ஒரு நிமிஷம் இருங்கள் "என்று கூறி விட்டு கடையினுள் சென்று மிகவும் அபூர்வமான வைரச் சங்கிலி ஒன்றைக் கொண்டு வந்து அந்தப் பெண்ணின் கையில் கொடுத்தான். அதைவாங்கிக்கொண்ட அந்தப் பெண் தனக்கு சங்கிலி சரியாக இருக்கிறதா என்று பார்ப்பதற்காக எதிரிலிருந்த நிலைக் கண்ணாடி அருகில் சென்று சிறிது முக மூடியை விலக்கி சங்கிலியை தன் கழுத்தில் போட்டுப் பார்த்தாள். அவள் பின்னால் நின்று கொண்டிருந்த வியாபாரி கண்ணாடியில் அவள் உருவத்தை கண்டதும் அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டான். சந்திர பிம்பம் போன்ற அவள் முகமும் நக்ஷத்திரங்கள் போல் ஜ்வலித்துக் கொண்டிருக்கும் வைரச் சங்கிலியும் அவன் உள்ளத்தை திருடிச் சென்று அந்தப் பெண் இருதயத்தில் வைத்துப் பூட்டி விட்டன.

தன் அழகைத் தானே வியந்து கொண்டு மறுபடி முக மூடியைப் போட்டுக் கொண்டு திரும்பி, "ஐயா, நான் இந்தச் சங்கிலியை எடுத்துக் கொள்ளுகிறேன். இதன் விலை என்ன? என்று கேட்டாள் அந்தப் பெண்.

தன் நிலைமையை மறந்து அவள் அழகிலே மயங்கிக் கிடந்த வியாபாரி, "இது விலையற்றது. தங்களுக்காகவே வைத்திருந்தேன். உங்கள் அழகுக்கு நான் செய்யும் வெகுமதி இதுதான் எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் ஒரே ஒரு பிரார்த்தனை "என்று தயக்கத்துடன் கூறினான்.

"எது வேண்டுமானாலும் கேளும் "என்றாள். "உங்களைத் தனியே கண்டு சில விஷயங்கள் பேச அனுமதிக்க வேண்டும் என்றான்.

"அவ்வளவு தானே. இன்றிரவு மேற்குக் கோட்டை வாசலுக்கு வெளியே தெற்குத் திசையிலுள்ள மல்லிகைத் தோட்டத்து மாளிகையில் என்னை சந்திக்கலாம் "என்று கூறி விட்டு உடனே அவ்விடத்தை விட்டு அகன்றாள்.

எப்பொழுது இரவு வரப் போகிறது என்று ஆவலுடன் காத்துக் கொண்டிருந்த அவனுக்கு நகரை இருள் சூழ்ந்து கொண்டவுடன் மிகவும் சந்தோஷத்துடன் கடையை மூடிக்கொண்டு கிளம்பினான். சிறிய தங்கப் பையில் நூறு மோஹராக்களுடன் மல்லிகை மாளிகையை அடைந்தான் அவன் மாளிகையின் வாயிலை அடைந்தவுடன் பல சிறிய பணிப் பெண்கள் குதூகலமாக வரவேற்று உள்ளே அழைத்துச் சென்று நன்றாக அலங்காரம் செய்து நிறைய மதுவைக் கொடுத்தனர். மதுவிலே மதியை இழந்து அவர்களுடன் கூடிக் களித்து சிறிது சிறிது பாட ஆரம்பித்தான். மற்ற பெண்களும் பாட ஆரம்பித்தனர்.

"ராஜாவே ... ராஜாவே ...
மல்லிகை மங்கையின்
ராஜாவே ...
மகிழ்ச்சியுடனே ராஜாவே...
களிக்கலாமே ராஜாவே ....
மலரும் மணமும் போலவே
நீங்கள்
மகிழ்ந்திருக்க வேண்டுமாம்...."

என்று கூறி முடிப்பதற்குள் மல்லிகை மங்கை உள்ளே நுழைந்தாள். பாட்டு நின்றது. வியாபாரியைத் தவிர மற்றவர்கள் மெதுவாக வெளியேறினார்கள். அவன் கொடுத்த வைரச் சங்கிலியை அணிந்திருந்தாள் மல்லிகை மங்கை. அவள் அழகிலே மயங்கி இருந்த அவன் மது மயக்கத்திலே சந்தோஷமாக அன்றிரவைக் கழித்து விட்டு புறப்பட்டான். போகும் பொழுது, மோஹராக்கள் நிறைந்த அந்த தங்கப் பையை அவளிடம் கொடுத்துச் சென்றான்.

மறு நாள் முதல் தினமும் இரவு நேரங்களை மல்லிகை மாளிகையில் கழித்து வந்தான். ஒவ்வொரு இரவும் ஒரு தங்கப் பையில் நூறு மோஹராக்கள் போட்டு எடுத்துச் சென்று மல்லிகை நங்கைக்குக் கொடுத்தான். சுமார் இரண்டு வருஷங்கள் ஓடிச் சென்றன. இரண்டு வருஷங்கள் இரவு நேரங்களில் ஒரு தங்கப் பையும், நூறு மோஹ



ராக்களும் போகவே, வியாபாரம் குன்றியது, கடையை மூடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவன் இரண்டு வருஷங்களாக தன் வீட்

சிறுவர் பகுதி



டைப் பற்றி எண்ணவே இல்லை. பாவம். புவன சுந்தரி என்னதான் செய்கிறாள் என்ற எண்ணமே உண்டாகவில்லை.ஒருநாள் கையில் காசில்,லாமல் போகவே கடையிலும் ஒன்று மில்லாமல் போகவே, கடையை மூடி விட்டு உடுக்க சரியான வஸ்திர மில்லாமல், பரிதாப முகத்துடன் மல்லிகை மாளிகைக்கு வந்து சேர்ந்தான்.

அங்கு அவன் கண்ட காட்சி அவனைத் திடுக்கிட வைத்தது. அங்கு ஈ, காக்கை கிடையாது. நிர்மானுஷ்யமாக, பேய் அடைந்த வீடு போல் கிடந்தது. "நேற்றிரவு வந்த போது குதூகலமாக விளங்கிய மாளிகை இன்று இப்படிப் போய் விட்டதே. என்ன விசித்திரம். நான் பார்த்தது பெண் தேவதையா, அல்லது பேயா, என் பணத்தைப் பறித்துப் பரதேசியாக்கி விட்ட பெண் பேயாக இல்லாது எப்படி இருக்க முடியும். ஐயோ, என் அழகிய மனவியைத் துறந்து அவள் பேச்சைக் கேட்காமல் போனதால் அல்லவா இம்மாதிரி ஆகிவிட்டேன். ஐயோ, புவன சுந்தரி என்ன கஷ்டப் படுகிறாளோ "என்று புலம்பிக் கொண்டே வீடு திரும்பினான்.

வழியில் ஒரே கும்பலாக இருந்தது. அவனால் மேலே போக முடியவில்லை. கூட்டத்தை தள்ளிக் கொண்டு எட்டிப் பார்த்தான். அங்கு நடுவில் ஒருபிச்சைகாரன், "பாபம் செய்யாதிரு மனமே, பாபம் செய்தால் யமன் கொண்டோடிப் போவான்" ... என்று பாடிக் கொண்டிருந்தான். ஜனங்கள் பரவசத்துடன் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது வியாபாரியின் பக்கத்திலிருந்தவன், "திருடன், திருடன்" என்று கூச்சலிட்டான். யாரோ



அவன் பணப் பையைத் திருடி விட்டான். கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. பக்கத்தில் நின்று கொண்டிருந்த வியாபாரியைத் திருடன் என்று நினைத்து அவனைப் பிடித்துக் கொண்டனர். அவன் தான் திருடவில்லை யென்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் ஒருவரும் நம்ப வில்லை. அவ்வூர் நீதிபதியிடம் கொண்டுபோனார்கள் திருடனை சேவகர்களை விட்டு அவனை பரிசோதிக்கச் சொன்னார் நீதிபதி. வியாபாரியின் கஷ்டகாலம் பாருங்கள், எவனோ திருடிப் போட்டு விட்டுப் போன பணப்பை அவன் பையில் இருந்தது. தனக்கும் நடந்ததே தெரியாது என்று சொல்லிப் பார்த்தான் நீதிபதி நம்பவில்லை. அவன் செய்த குற்றத்திற்காக அவன் வலது மணிக்கட்டை வெட்டி விடச் சொன்னார். உத்திரவும் நிறைவேற்றப் பட்டது.

கையை மறைத்துக் கொண்டு தன் வீட்டுக்கு வந்தான். புவன சுந்தரி தன் கணவனைக் கண்டதும் உள்ளன்புடன் வரவேற்றாள். அவள் நடத்தையைக் கண்டதும் தான் செய்த குற்றத்தை உணர்ந்து மிகவும் நொந்து கொண்டான். அந்த உத்தமியுடன் பேசவும் வருத்தப்பட்டான். உணவு செல்லவில்லை, உறக்கம் கொள்ளவில்லை. நெருப்பில் அகப்பட்ட புழுவைப்போல் துடித்தான். நாளுக்கு நாள் க்ஷீணித்துப் போகவே மனைவி அவன் மனக்கவலையைப் பற்றி விசாரித்தாள். முதலில் ஒன்றுமில்லை என்று சொல்லி வந்த அவன் கடைசியில் நடந்ததைச் சொன்னான். "பணத்தை இழந்தேன், கையை இழந்தேன், மானத்தையும் இழந்தேன். நீ தான் காப்பாற்ற வேண்டும்" என்று கண்களில் நீர் தளும்பக் கூறினான்.

"கவலைப் படாதீர்கள். நீங்கள் கொடுத்தபணம் இருக்கிறது. இன்னும் இரண்டு கடை வைக்கலாம்" என்றாள் புவனசுந்தரி.

"பணமா, ஏது பணம்? எப்பொழுது கொடுத்தேன்? நான்தான் இரண்டு வருஷங்களாக வீட்டுக்கு வர வில்லையே" என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

"வாருங்கள், காண்பிக்கிறேன்"



என்று கூறி உள்ளே அழைத்துச் சென்று அங்கு வைத்திருந்த பெரிய பெட்டியைத் திறந்தாள். அதில் அவன் கண்ட காட்சி தன் எதிரில் நிற்பது புவன சுந்தரியா அல்லது மல்லிகை மங்கையா என்ற சந்தேகத்தைக் கிளப்பியது. காரணம் பெட்டியில் மல்லிகை மங்கைக்கு ஒவ்வொரு இரவும் தான் கொடுத்த தங்கப் பைகள் மோஹராக்களுடன் இருந்ததும், அதன் நடுவே, அன்று மாலை அவள் தன் கடைக்கு வந்த போது தான் கொடுத்த விலையற்ற வைரச் சங்கிலியும் இருந்ததும் தான்,

"புவன சுந்தரி, நான் காண்பது கனவா? "என்று கேட்டான்.

"இல்லை, உண்மைதான். தாங்கள் மற்ற அழகிகளின் வலையில் சிக்கி பரதேசி யாகாமல் இருக்கவே தான் இம்மாதிரி செய்தேன்" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள்.

"இன்று முதல் உன்னை மல்லிகை மங்கை என்றே அழைக்கப் போகிறேன். பெண்களுக்கும் அபாரமனா புத்தி உண்டு என்பதை நிரூபித்து விட்டாய்" என்றுகூறி அவனும் சிரித்தான். மறு நாளே ஒரு கடைக்கு இரண்டு கடைகளாக வைத்து விட்டான். வியாபாரம் ஓங்கியது. செல்வம் பெருத்தது சந்தோஷமாகக் காலம் கழித்து வந்தனர் இருவரும். அப்பொழுதெல்லாம் மல்லிகை மங்கை, "ராஜாவே ... ராஜாவே ... மல்லிகை மங்கையின் ராஜாவே ..." என்று பாடிக் காட்டுவாள்.

எப்படி இருக்கிறது பார்த்தீர்களா மகாராஜ்? என்ன வினோதமான பெண் மல்லிகா பார்த்தீர்களா இம்மாதிரி வினோதமான கதையை என்றும் தாங்கள் கேட்டிருக்கவே முடியாது.... என்று சொல்லி முடிப்பதற்குள், சமையல் காரன் குறுக்கிட்டு, "அரசே, இது ஒன்றும் வினோதமல்ல. நான் சொல்லும் கதையைக் கேட்டால் நீங்கள் மிகவும் ஆச்சரியப் படுவீர்கள்" என்று தன்கதையை ஆரம்பித்தான்.







## பிரசுரமான கிருதிகள்

☆

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்க்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:—

காயகசிகாமணி அரியக்குடி
ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாஸய்யரால்
ஸ்வரப்படுத்தப்பட்டவை

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபமாக இல்லை. தனித்தனி தாளாக உள்ளன. ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும். தபால் செலவு பிரத்தியேகம்.

மானேஜர்,
சுதேசமித்திரன் புத்தகசாலை,
மவுண்ட்ரோடு. சென்னை.



## சிறந்த கூந்தல் உணவு



உங்கள் சரீரத்துக்கு நல்ல உணவு அவசியமானது போல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும் உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்களுபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரிஜிஸ்டர்ட்) மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப்போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும். ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள் எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது. எப்பொழுதும் உபயோகியுங்கள்

ஆடோ டில்பஹார் (ரிஜிஸ்டர்ட்)
இணையற்ற வாசனை நீடித்த நறுமணம். தபால் சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் பெறுங்கள்.

Sole Agents—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
293, Jaruma Musjid P. O. Box 2085, Bombay 2.







## 132

## க்ஷேத்திர விவரம்

சரீரத்தை க்ஷேத்திரமென்றும், அதை யறிகின்றவன் க்ஷேத்திரக்ஞன் என்றும், கண்ணன் முதலில் கூறினார். உடனே அடுத்த வாக்கியத்தில் க்ஷேத்திரங்களில் இருக்கின்ற க்ஷேத்திரக்ஞனும் பகவானாகிய தானே என்று முற்கூறியதற்கு மாறுபடுவது போலக் கூறியதை உரையாசிரியர்கள் உபமானங்களையும், உதாரணங்களையும்கொடுத்துப் பொருத்தம் என்று விளக்கியதை முன்னே கண்டோம். கண்ணன் அடுத்த படியாக க்ஷேத்திரம் க்ஷேத்திரக்ஞன் இவற்றின் சொரூபத்தைச் சுருக்கிக் கூறுவதாக வாக்கிளித்தபடி முதலாவதாக க்ஷேத்திரத்தைப் பற்றிய விவரங்களைச் சொல்லத் தொடங்குகிறார்.

போத முனிவர் புகல்வர் பலவகையே
வேதம் விளிதந்தால்
வேறுபட—வோதுமது
வேதாந்த சூத்திரங்கள்
வேறுரைக்கு மேதுவுடன்
மீதார்ந்த நிச்சயந்தான் மிக்கு

(இ-ள்) போத முனிவர் — ஞானிகளான பராசரர் முதலிய ருஷிகள், பலவகையே புகல்வர் — பல வகையாகக் கூறுவர், வேதம் விவிதத்தால் வேறுபட ஓதும் — வேதங்கள் பலவற்றால் பிரத்தியேகமாகச் சொல்லப்படும், அது — அந்த க்ஷேத்திர சொரூபத்தை, ஏதுவுடன் மீது ஆர்ந்த நிச்சயந்தான் மிக்கு ஆதாரங்களுடன் சிறந்ததாய் தெளிவாக நிரூபிப்பதில் மிகுந்ததான, வேதாந்த சூத்திரங்கள்— பிரும்ம சூத்திரங்கள், வேறு உரைக்கும்— பாகுபாடு செய்து கூறும்.

4 3 4 3
ருஷிபிர்பஹுதாகீதம்
3 4 4 2
சந்தோபிர்விவிதை:ப்ருதக்
3 3
ப்ரஹ்மஸூத்ரபதைச்சைவ
3 4
ஹேதுமத்பிர்விநிச்சிதை:

(இ-ள்) ரிஷிபி:— ருஷிகளாலே, பஹுதா—அநேக விதங்களாக, ப்ருதக்—பிரத்தியேகமாய், விவிதை:— பலவிதங்களான, சந்தோபி: — வேதங்களினால் ஹேதுமத்பி:—யுக்திகளோடு கூடிய, விநிச்சிதை:—சந்தேகமில்லாத அர்த்தங்களை ஸ்தாபிக்கின்ற, ப்ரஹ்ம ஸூத்ர பதைச்சைவ— பிரம்ம சூத்திரங்களாலும், கீதம்— சொல்லப் பட்டது

இச்சுலோகத்திற்கு ராமானுஜர் விரிவுரை கூறியுள்ளார். அதன் சாரமாவது:— விஷ்ணு புராணத்தில் 2-ம் அம்சம் 13ம் அத்தியாயத்தில் கூறியவாறு 'அரசனே: இவ்வுடம்பிற்கு நீ யார்? நான் யார்? என்று சிந்தித்துக்கொள்.

வேதங்களாலே, பிரத்தியேகமாயும் பகுவிதமாயும் கூறப்பட்டிருக்கின்றன வென்றால், நான்கு வேதங்களாலும் க்ஷேத்திர க்ஷேத்திரக்ஞ சொரூபம் சொல்லப்பட்டிருக்கின்றது. தைத்திரியோபநிஷத்திலே, ஆத்மாவினின்றும் ஆகாசம், அதனின்றும் வாயு, வாயுவினின்றும் அக்கினி அதினின்றும் ஜலம் அதினின்றும் பிருதிவி, அதினின்றும் பயிர்கள், அவற்றால் அன்னம், அவ்வன்னத்தாலே தேகம் என்று க்ஷேத்திரமாகிய தேகத்தைக் கூறி இந்த தேகத்தைப் பார்க்கிலும் அந்நியனில் உள்ளதைப் பார்க்கிலும் அந்நியனாய் உள்ளவன் பிராணமயன், அவனுக்கும் உள்ளேயுள்ளவன் மனோ மயன் என்று கூறி இவனைப் பார்க்கிலும் உள்ளே யுள்ளவன் விக்ஞான மயன், இவனே க்ஷேத்திரக்ஞன், இவனே ஜீவன், க்ஷேத்திரத்தையும் அதற்கு அந்நியனாகிய ஜீவனையும் பார்க்கிலும் அந்நியன் ஆனந்த மயன், இவனே பரமாத்மா. க்ஷேத்திரக்ஞனைப் பற்றி இவ்வாறு வேதாதிகளில் சொல்லப் பட்டிருக்கின்றது.

சில சூத்திரங்களில் க்ஷேத்திர சொரூபத்தையும், சில சூத்திரங்களில் க்ஷேத்திரக்ஞ சொரூபத்தையும் சில சூத்திரங்களில் க்ஷேத்திர க்ஷேத்திரக்ஞர்களிருவரும் பகவத் சொரூபமே என்றும் வியாஸர் இயற்றிய பிரும்ம சூத்திரத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. அதைக் கருதியே பிரும்ம சூத்திரபதம் என்று சுலோகத்தில் சொல்லப்பட்டது.

கண்ணன் அடுத்தபடியாக முதற் கேள்விக்கு விடை யளிக்கிறார்.

பூதங்கள் பூதாதி
புத்தி பிரகிருதி
ஓதிந்தி யம்பதினொன்
றைம்புலனாந்—நீதில்வரு
மிச்சைசினம் இன்பதுன்ப
மேலுமுடல் சேதனைதா
னிருப்பி தாகும் சுருக்கு

(இ-ள்) பூதங்கள் — (பிருதிவி முதலிய) ஐம் பெரும் பூதங்கள், பூத ஆதி — பூதங்களுக்கு ஆதியான அஹங்காரம், புத்தி — புத்தி எனப்படும் மஹான், பிரகிருதி — அவ்வியக்தம் எனப்படுகின்ற பிரகிருதி, — அவ்வியக்தம் எனப்படுகின்ற பிரகிருதி, ஓது இந்தியம் — சொல்லப்படும் இந்திரியங்கள், பதினொன்று — (கர்மேந்திரியம் ஐந்து, ஞானேந்திரியம் ஐந்து, மனம் ஒன்று, ஆகப்) பதினொன்று, ஐம் புலன் ஐந்து — சிறந்த சப்த ஸ்பரிச முதலிய புலன்கள் ஐந்து, ஈதில் வரும் — இதில் உண்டாகும், இச்சை, சினம், இன்பம், துன்பம் — விருப்பம், கோபம், சுகம், துக்கம், ஏலும் உடல் — பொருந்திய சரீரம், சேதனை இருப்பு இதாகும் — சேதனனுடைய (ஜீவாத்மாவுடைய) சுக, துக்கத்திற்கு ஆதாரமாகும், துச்சு — க்ஷேத்திரம், சுருக்கு — இது க்ஷேத்திர சொரூபத்தின் சுருக்கமாகும்.

4
மஹாபூதாந்யஹங்காரோ
3 3 4
புத்திரவ்யக்த மேவச
3 3
இந்த்ரியாணிதசைகஞ்ச
3 3
பஞ்சேந்த்ரிய கோசரா:
3 2 3 2
இச்சாத்வேஷஸ்ஸுகம் து:கம்
2 4
ஸங்காதச் சேதநாத்ருதீ:
ஏதத்க்ஷேத்ரம் ஸமாஸேந
3
ஸவிகாரமுதாஹ்ருதம்

(இ—ள்) மஹாபூதாநி — ப்ருதிவி முதலிய பஞ்ச பூதங்கள், அஹங்கார: — அஹங்கார தத்துவம், புத்தி: — மகத் தத்துவம், அவ்யக்தமேவச — மூலப் பிரக்ருதியாகிற மாயை, தச இந்த்ரியாணி — ஞான கர்மேந்திரியங்கள் பத்து, ஏகஞ்ச — மனது ஒன்று, பஞ்சச இந்திரிய கோசரா: — இந்திரியங்களுடைய விஷயங்களாகிய சப்த ஸ்பரிச ரூப ரஸ கந்தங்கள் ஐந்து, இச்சா — இச்சை, த்வேஷ: — வெறுப்பு, ஸுகம் — இன்பம், துக்கம் — துன்பம், ஸங்காத: — சரீரம் அல்லது தத்துவக் கூட்டம், சேதநா — ஞானாத்மகமான மனோவிருத்தி, த்ருதி: — தைரியம், ஸவிகாரம் — (இந்திரியம் முதலிய இப்படிப் பட்ட) விகாரங்களோடு கூடின, ஏதத் க்ஷேத்ரம் — இந்த க்ஷேத்ரமானது, ஸமாஸேந — சுருக்கமாக, உதாஹ்ருதம் — சொல்லப்பட்டது.

சங்கர வியாக்யானச் சுருக்கம்: பஞ்ச மகா பூதங்களென்று ஏன் சொல்லப்பட்டது எனில், எல்லாவிதமான விகாரங்களிலும் வியாபித்திருத்தலாலே என்க. இந்திரியங்களுக்குத் தோன்றுவன வற்றை முன்னர்க் கூறுதலால் ஈண்டு இந்திரியங்களுக்குத் தோற்றாத சூட்சும பூதங்களைக் கூறியதாகக் கொள்க. ஏழாம் அத்தியாயத்தில் சுலோகம் நாலில் கூறிய எட்டும் (பூமி, ஜலம், நெருப்பு, காற்று, ஆகாசம், மனம், புத்தி, அகங்காரம்) சங்கற்ப விகற்ப சொரூபமான மனமுள்பட இந்திரியங்கள் பதினொன்றும், விஷயங்கள் ஐந்தும், ஆக 24 தத்துவங்கள் என்று சாங்கியர்களால் சொல்லப்பட்டன.

இச்சை முதல் தைரியம் ஈறாகவுள்ள குணங்களேழும் ஆத்மாவைச் சார்ந்தன வென்று தார்க்கிகர்கள் சொல்லுவதை இங்கு கொள்ளக் கூடாது. சுருதி (வேத) வாக்கியப்படி அவை, மனத்தைச் சார்ந்தன வென்று பகவான் சொன்னதாகவே கொள்ளவேண்டும். ஆனால், இந்த அத்தியாயம் சுலோகம் 2-ல், தேகம் க்ஷேத்திரமாகச் சொல்லப் பட்டிருக்கிறதே எனில், மகாபூதங்கள் முதல் தைரியம் ஈறாகச் சொல்லப் பட்ட ஒவ்வொன்றும் க்ஷேத்திரமே.



எலக்டிரானிக் கண்ட்ரோல் முறையின் உதவியைக்கொண்டு அமெரிக்காவில் இத்தகைய புதிய வெடிகுண்டு தயாரிக்கப்பட்டுளது. வானை நோக்கி அபார வேகத்தில் பாய்ந்து வாயுவைக்கிளப்பும் தன்மை உடைய வெடி இது. சமீபத்தில் அமெரிக்காவில் இது பரீட்சித்துப் பார்க்கப் பட்டது.

அந்த க்ஷேத்திரங்கள் எல்லாம் சேர்ந்த கூட்டம் க்ஷேத்திரமாகச் சொல்லப்படுகின்றது. ஆகவே, தேகம் க்ஷேத்திரம் என்று பொதுவாய்ச் சொல்லப்பட்டது. தேகமே (அல்லது தேகம் மட்டுமே).

ராமாநுஜ வியாக்யானச் சுருக்கம்:— சரீரமே க்ஷேத்திரம், பஞ்ச மஹா பூதங்கள் அகங்கார தத்துவம், மகத் தத்துவம், பிரகிருதி ஆகிய இந்த எட்டாலும் தேக முண்டானபடியால் அவற்றையும் க்ஷேத்திரமென்பது கூடாது. இந்திரியங்கள் பத்தும் விஷயங்கள் ஐந்தும் மனம் ஒன்றுமாகப் பதினாறும், க்ஷேத்திரத்தை ஆசிரயித்திருக் கின்றவைகள். இச்சை, துவேஷம், சுகம், துக்கம் ஆகிய நான்கும் தேகத்தால் உண்டாக்கப் பட்டவைகள். அவை நான்கும் ஆத்மாவைச் சார்ந்தனவே யன்றிதேகத்தைச் சார்ந்தன வல்லவாயினும், ஆத்மா தேகத்தை அடைந்த பின்பே அவ்வாத்மாவுக்கு இச்சை முதலிய குணங்கள் உண்டாகின்றனமையால் தேகத்தைச் சார்ந்தவையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்த அத்தியாயம் சுலோகம் 21ல், இச்சை முதலியன ஆத்மாவைச் சார்ந்தன என்று கூறப் பட்டிருத்தலையும் உணர்க. பஞ்ச மகா பூதாதி தத்துவக் கூட்டங்களாகிய இந்தச் சரீரம், சுவர்க்காதிகளையும் மோட்சத்தையும் அடையும் சேதனமாகிய ஆத்மாவுக்கு ஆதாரமாயிருத்தலால் இந்த ஆதாரத்தின் மூலமாய் ஆத்மா சுக துக்காதிகளை அநுபவிக்கிறான்.

ராகவேந்திரர்: — அவ்யக்தம் — சத்துவ ரஜஸ் தமோ குணங்களின் சேர்க்கையாலாகிய பதார்த்தங்களின் மூலாதாரத்தைக் குறிக்கும்.

ஆக இரண்டு சுலோகத்தால் க்ஷேத்திரம் என்றால் என்ன? என்ற அர்ஜுனன் வினாவிற்கு விடை கூறப் பட்டது.



# சதுரங்க ஆட்டம்

— கணபதி

யானையை உபயோகித்தும் மந்திரியை உபயோகித்தும் செய்யக்கூடிய கடையாட்ட கட்டுகள் சென்ற வாரம் கொடுக்கப்பட்டன அவைகளை நன்கு விளையாடிப் பார்த்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். மேலும், இரண்டு பயிற்சிகள் கொடுக்கப்பட்டிருந்தன. அவைகளை இப்போது கவனிப்போம்,

படம் 1
கறுப்பு



வெள்ளை

(வெள்ளை ஆடவும்)

இதுதான் சென்ற வாரம் கொடுக்கப்பட்ட முதல் பயிற்சி. இங்கு வெள்ளை எதிரியைக் கட்டியாகவேண்டும். கட்டும் முறையாவது பின்வருமாறு:

| வெள்ளை | கறுப்பு |
|---|---|
| 2. ரா—ம 3 | |

முதலில் ராஜா எதிரியினருகில் வருகிறது

| | |
|---|---|
| 1...... | ரா—ச 5 |
| 2. யா—ச 1 ஷா | ரா—ரா 4 |

கறுப்பு தன் ராஜாவை குதிரை நேர் வரிசைக்கு எடுத்துச் சென்றால். அவனுக்கு இடம் குறைந்துவிடும்

3 யா—ச 2 !

இது ஒரு தாமத நகர்த்தலாகும் இனி கறுப்பு ராஜா தன் ம 4க்குச் சென்றால் ராஜா எதிர்த்தல் ஏற்படும். பிறகு வெள்ளை, யானையால் ஷா கொடுத்து கருப்பை மூன்றாம் குறுக்கு வரிசைக்குத் தள்ளுவான் மூல ஆட்டத்தைக் கவனியுங்கள்,

| | |
|---|---|
| 3...... | ரா—ம 4 |
| 4. யா—ச 5 ஷா | ரா—ரா 3 |
| 5. ரா—ரா 4 | |

ராஜா யானைக்கு உதவியாக நகர்த்தப்படுகிறது

| | |
|---|---|
| 5...... | ரா—ம 3 |
| 6. யா—ரா 5 | |

கறுப்பு ராஜாவை 5-ம் குறுக்கு வரிசைக்குக் கீழ் நிறுத்தியிருக்கும் வெள்ளை யானை, இந்த நகர்த்தலிலிருந்து ஒவ்வொரு நேர் வரிசையாய் பிடித்து வரும். 6, யா—ரா 5 என்ற இந்த மூல நகர்த்தலினால் ராஜா நேர் வரிசை (KINGS File) பிடிக்கப் படுகிறது.

| | |
|---|---|
| 6...... | ரா—ச 3 |
| 7. யா—ம 5 | |

மந்திரி நேர் வரிசை பிடிக்கப் படுகிறது.

| | |
|---|---|
| 7...... | ரா—கு 3 |
| 8 ரா—ம 4 | |

ராஜாவின் உதவியின்றி வெள்ளை யானை ம. ச 5க்கு நகர முடியாது. ஆதலால்தான் ராஜா ம 4க்கு வருகிறது.

| | |
|---|---|
| 8...... | ரா—ச 3 |
| 9. ரா—ச 4 | ரா—கு 3 |
| 10 யா—ம ச 5 | |

பழையபடி நேர் வரிசை பிடிக்கப் படுகிறது.

படம் 2
கறுப்பு



வெள்ளை

(வெள்ளை 10 யா—ச 5க்குப்பின்)

| | |
|---|---|
| 10.....: | ரா—யா 3 |

இங்கு கறுப்பு 10...ரா—யா3 என்று வைக்காமல் தன் ராஜாவை கு 2க்கு எடுத்துச் சென்றால் ஆட்டம் இப்படி தொடர்ந்திருக்கும்.

| | |
|---|---|
| [11. ரா—கு5 | ரா—யா2 |
| 12. யா—ச7 ஷா | ரா—யா1 |
| 13 ரா—கு6 | ரா—கு1 |
| 14 யா—ச4 | |

வேறு எந்த தாமத நகர்த்தல் வேண்டுமானாலும் வைக்கலாம்.

| | |
|---|---|
| 14 ...... | ரா—யா1 |
| 15. யா—ச8 கட்டு] | |

மூல ஆட்டத்தை வெள்ளையின் 10-ம் நகர்த்தலில் விட்டு விட்டோம் அல்லவா? அப்பொழுதிருந்த ஆட்ட நிலையை படம்2 காண்பிக்கும். அதன் பிரகாரம் காய்களை அமைத்துக் கொண்டு மூல ஆட்டத்தை கீழ் வருமாறு தொடர்ந்து ஆடவும்.

| | |
|---|---|
| 10. ...... | ரா—யா3 |
| 11 யா—மகு 5 | ரா—யா 2 |
| 12. ரா—ச5 | |

இங்கு 12 யா—யா5 ஷா என்று வைத்தல் மதியீனம் ஏனென்றால், கோடிவரிசையில் ஒதுக்கப்பட்ட ராஜா, குதிரை-வரிசை மூலம் தப்பி விடும்

| | |
|---|---|
| 12. ...... | ரா—யா8 |
| 13 ரா - ச 6 | ரா—யா 2 |
| 14. யா—யா 5 ஷா | ரா—கு 1 |
| 15 யா—யா 1 | ரா—ச 1 |
| 16 யா—யா 8 கட்டு. | |

......

இரண்டாம் பயிற்சியானது படம் 3-ல் காட்டப்பட்டுள்ளது

படம் 3

கறுப்பு



வெள்ளை

(வெள்ளை ஆடவும்)

இங்கு கூட வெள்ளை எதிரியைக் கட்டியாக வேண்டும் கட்டும் விதம் பின்வருமாறு:—

1. ம—ச 5

8-ம் குறுக்கு வரிசையில் கறுப்புராஜா நிறுத்தப்படுகிறது.

1 ...... ரா—ச 8
2. ரா—ம 2

வெள்ளை ராஜாவைக் கொண்டு வருகிறான்.

2...... ரா—ம 8
3. ரா—ம 3 ரா—ச 3

கறுப்பு 8-ம் வரிசையை விட்டு போக ஆசைப்படவில்லை.

4 ரா—ச 4 ரா—ம 8
5 ம—ச 6 ஷா

எதிரியை ஒரு கீழ் வரிசைக்குத் தள்ளுவதால் இது ஒரு நல்ல நகர்த்தலாகும்.

5...... ரா—ம 2
6. ரா—ச 5 ரா—ரா 1

கறுப்பு 6... ரா—ரா 1 என்பதற்குப் பதிலாக 6...ரா—ச 2 என்று வைத்தால் வெள்ளை 7. ம—ரா 7 ஷா என்று வைப்பான். கறுப்பு ராஜா கு 1க்கோ அல்லது ச 1க்கோ சென்றால் 8. ரா—கு 6 என்று வைத்துவிட்டு அடுத்த நகர்த்தலில் கட்டி விடுவான்.

மூல ஆட்டத்தில் கறுப்பு வைத்திருக்கும் நகர்த்தலில் ஒரு சூழ்ச்சியிருக்கிறது இப்பொழுது வெள்ளை இடம் பிடிக்க எண்ணி ரா—ம 6 என்று வைத்தால் ஜெயத்தை கைநழுவ விட்டு விடுவான். ஏன்? ஆட்ட நிறுத்தம் ஏற்பட்டு விட்டது. ஆனால் வெள்ளை இதை கவனித்துவிட்டு என்ன நகர்த்துகிறான் பாருங்கள்.

7. ம—கு 7 !

கறுப்பு ராஜா அடிவரிசையில் நிறுத்தப்பட்டது.

7. ...... ரா—ம 1
8. ரா—ம 6

ஆட்ட நிறுத்த பயம் இப்போது இல்லை ஆகவே வெள்ளை ராஜா எதிர்த்து சலுக்கு வருகிறது

8...... ரா—ச 1
9. ம—ச 7 கட்டு

மந்திரியின் உதவிகொண்டு எதிரியைக் கட்டுவது இப்பொழுது உங்களுக்கு தெரிந்த விஷயம் அல்லவா? கீழ்காணும் கடை ஆட்ட நிலையை உங்கள் காலி அட்டையில் அமைக்கவும்.

படம் 4

கறுப்பு



வெள்ளை

வெள்ளை ஒரு ஆள் அதிகம் பெற்றுள்ளான் ஒரு ஆளை வைத்துக் கொண்டு எதிரியைக் கட்ட முடியாது ஆனால் இந்த ஆளை வெள்ளை, மந்திரியாக மாற்றிக்கொண்டால் பிறகு எதிரியை எளிதில் கட்டிவிடலாம் ஆகவே, வெள்ளை ஆளை 8-ம் குறுக்கு வரிசைக்கு கொண்டுவர முயற்சிப்பான் கறுப்பு ராஜாவும், எதிரிஆள் மந்திரியாக மாறக்கூடிய கட்டமாகிய யா-8 க்கு வர முயற்சிப்பான், வந்து. எதிரி ஆளைக் கைப்பற்ற எத்தனிப்பான், இப்பொழுது எவருடைய யோசனை பலிக்கும் என்று பார்க்கலாம்.

1. ஆ—யா 4

வெள்ளை சீக்கிரமாக ஆளை நகர்த்துகிறான்.

1 ......... ரா—ச 2
2. ஆ—யா 5 ரா—ம 2
3. ஆ—யா 6 ரா—ரா 2
4. ஆ—யா 7 ரா—ச 2
5. ஆ—யா 8 ம

இந்த நகர்த்தலுக்கு அர்த்தம். ஆள் மந்திரியாக மாற்றப்பட்டது என்பதே. வெள்ளை தன் ஆளை யானையாகவும் மாற்றியிருக்கலாம் ஆனால் மந்திரியால் கட்டுவது எளிதல்லவா? மேலும் ஆளை, சகடகவோ அல்லது குதிரையாகவோ வெள்ளை மாற்றிக் கொள்ள மாட்டான். அங்ஙனம் செய்தால் எதிரியை கட்டவே முடியாது இதை ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள்.

5 ... ... ... ... ரா—ரா 8

இனிமேல் கறுப்பு கட்டுப்படுவது திண்ணம். இக்கட்டை நீங்கள் செய்து பார்க்கலாம்,

மீண்டும் படம் 4-க்குச் செல்வோம் வெள்ளை யா 4-க்கு ஆளை தள்ளுவதற்கு முன்பே, மந்திரி பெறுவது திண்ணம் என்று தெரிந்து கொள்ளலாம் எப்படி என்கிறீர்களா? ஆள் மந்திரியாகும் கட்டமாகிய யா 8-க்கு வர வெள்ளை எத்தனை நகர்த்தல்கள் வைக்கவேண்டும் என்று பார்க்க வேண்டும்; ஆள் யா 4, யா 5 யா 6, யா 7 யா 8 என்ற கட்டங்களுக்குப் போகவேண்டுமாதலால் ஆ—யா 4 என்ற நகர்த்தலையும் சேர்த்து ஐந்து நகர்த்தல்கள் வேண்டும். கறுப்புக்கு இவ்வாட்டத்தில் முக்கிய நோக்கம் ஆள் மந்திரியாக மாறுவதை தடுப்பது தான் அல்லவா? அப்படி தடுக்க வேண்டுமானால். வெள்ளை ஆள் யா 8-க்கு நகர்த்தப்பட்டவுடன் அதை கறுப்பு ராஜா கைப்பற்ற வேண்டும் ஆகவே. கறுப்பு ராஜாவும் வெள்ளையின் ரா யா 8-க்கு ஐந்து நகர்த்தல்களில் வந்தால் ஆள் மந்திரியாக மாறும் போது அதைக் கைப்பற்றி விடலாம் ஐந்துக்குக் குறைந்த நகர்த்தல்களில் வந்தால்கூட ஆளைக் கைப்பற்றலாம் ஆனால் ஐந்துக்கு மேற்பட்ட நகர்த்தல்களில் வெள்ளையின் யா 8-க்கு வந்தால் ஆளைக் கைப்பற்ற முடியாது; ஆகவே மந்திரியாக மாறுவதைத் தடுக்க முடியாது. நாம் உதாரணமாக எடுத்துள்ள ஆட்டத்தில் வெள்ளை ஆள் யா 8-க்குவர 5 நகர்த்தல்கள் தேவை என்று பார்த்தோம். அதேமாதிரி கறுப்பு ராஜா வெள்ளையின் யா 8-க்கு வர 6 நகர்த்தல்கள் தேவை (ஏனெனில் ராஜா ச 2, ம 2, ரா 2. ச 2. கு 2 யா என்ற 6 கட்டங்கள் மூலம் வர வேண்டும்.) ஐந்து நகர்த்தல்களை விட மேற்பட்டு விட்டதால் வெள்ளை கட்டாயம் மந்திரி பெறுவான். இவ்விதமும் நகர்த்தல்களை எளிதில் எண்ணி, வெள்ளை தான் மந்திரி பெறுவது திண்ணம் என்று எண்ணி விடுவான்.

படம் 4-ல் வெள்ளை ஆ—யா 4 என்று வைக்காமல் ஆ—யா 8 என்று வைத்தால் இந்த நகர்த்தலையும் சேர்த்து யா 8-க்குச் செல்ல வெள்ளை ஆளுக்கு ஆறு நகர்த்தல்கள் பிடிக்கும் ஆறு நகர்த்தல்களில் கறுப்பு ராஜாவும் வெள்ளையின் யா 8-க்கு வந்து விடுவானாதலால், வெள்ளை ஆள் மந்திரியாக மாறுது கறுப்பு ராஜாவால் கைப்பற்றப்படும், இதை விளையாடிப் பாருங்கள்



# நேற்றும் நாளையும்

— கே. பி. கேசவமேனன் —

ஜப்பானிய சக்ரவர்த்தியின் போர் பிரகடனம்.

1941 டிசம்பர் 8-ந் தேதி அதிகாலையில் யாதொரு முன்னறிவிப்புமின்றி சிங்கப்பூர் பட்டணத்தில் சில முக்கியமான இடங்களில் குண்டுகள் விழுந்தன. அவை வெடிக்கும் போது உண்டான சப்தமும், வெளிச்சமும் பட்டணவாசிகளைத் திடீரென்று எழுப்பின. அது என்னவென்று அறிவதற்குக் கூட பலருக்கு அப்பொழுது முடியவில்லை. பொழுது விடிந்த பிறகு தான் "இங்கிலாந்துக்கும் ஜப்பானுக்கும் இடையில் போர் துவங்கிவிட்டது" என்ற விவரம் தெரிந்தது.

"இங்கிலாந்திற்கும் அமெரிக்காவிற்கும் எதிராக நாம் இப்பொழுது போர் பிரகடனம் செய்கிறோம். தரைப்படையிலும் கடற் படையிலும் உள்ள போர் வீரர்களிடமும் உத்தியோகஸ்திரிடமும் உறுதியோடும், தைரியத்தோடும், போருக்கு ஆயத்தமாக வேண்டுமென்று நாம் கட்டளை பிறப்பித்திருக்கிறோம். சத்தியத்தையும் நல்லெண்ணத்தையும் கைவிடாமல் தத்தம் கடமைகளை நிறைவேற்றவேண்டுமென்று பிரத்தியேகமாக அறிவிக்கிறோம். நமது பிரஜைகள் ஒவ்வொருவரும் அவரவர் செய்ய வேண்டிய கடமைகளைப் பிழையின்றி நடத்திவர வேண்டும். எல்லோரும் ஏகோபித்துப் பிழைகள் ஏதும் செய்யாது ஏகாதிபத்தியத்தின் சகல சக்தியையும் உபயோகித்து இந்தப் போரில் நம்முடைய உத்தேசத்தை நிறை வேற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும்"

இந்தப் பிரகடனத்துடன் ஜப்பானிய சக்கரவர்த்தி போருக்குப் புறப்பட்டார். பிரகடனத்துக்கு முன்பே போர் துவக்கமாய் விட்டது. சிங்கப்பூரில் குண்டு வீசியதும், பெர்ல் ஹார்பரில் அமெரிக்கருடைய போர் கப்பல்களையும் போர்ச் சாதனங்களையும் அழித்ததும் போர்ப் பிரகடனத்துக்குமுன்பே நடந்து விட்டன.

1941 செப்டம்பர் மாதத்தில் பிரெஞ்சு அரசாங்கத்துடன் உண்டான ஒப்பந்தத்தின்படி தங்களுடைய சைனியத்தை இந்தோ-சைனாவில் நிறுத்தி வைப்பதற்கான வசதி ஜப்பானியருக்குக் கிடைத்தது. சீனருடன் போர் புரிய இது அவசியமாக இருக்கிறதென ஜப்பானியர் கூறியிருந்தனர். ஆனால் உண்மையில் அது மலாயாக் காட்டை ஆக்கிரமிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு உபயோகமாக இருந்தது. அங்கிருந்து சயாமிய அதிகாரிகளை வசீகரிப்பதற்கும் ஜப்பானியருக்கு எளிதில் சாத்தியமானது. இவ்வித வசதிகளெல்லாம் கிடைத்த பிறகு போர்ப் பிரகடனம் செய்வதற்குத் தகுந்த தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டு அவர்கள் காத்திருந்தனர். மலாயாவின் பொருளாதாரமும், சிங்கப்பூரின் முக்கியத்துவமும் கண்டு அவைகளின் மீதுகண் வைத்திருந்த ஜப்பானியர் தங்களுடைய எண்ணம் நிறைவேறுவதற்குக் கிடைத்த தருணத்தை வீணே இழப்பார்களா?

ஜப்பானியருடைய உத்தேசத்தை அறிந்தவர்களுக்கு இனி என்ன நடக்கப் போகிறதென்று சிறிதாவது ஊகிக்க முடிந்ததா? ஜப்பானியரின் வரவைத் தடுப்பதற்கு சயாமிய எல்லைப் புறம் முதல் சிங்கப்பூர்வரை அங்கங்கே இந்திய- பிரிட்டிஷ் ஆஸ்திரேலிய சைனியங்கள் காத்து நின்றன. யுத்தம் துவங்கி இரண்டு நாட்கள் கழிவதற்குள் பிரிட்டிஷாருடைய இரண்டு பெரிய சண்டைக் கப்பல்களை (ரிப்பல்ஸ்- பிரின்ஸ்- ஆப்- வேல்ஸ்) குண்டு வீசி ஜப்பானியர் மூழ்கடித்துவிட்டனர். இந்தச் சம்பவம்பிரிட்டிஷாரிடையில் பெரும் மனச்சோர்வை உண்டாக்கிவிட்டது. படைக்கப்பல்களில் இம்மாதிரியான நஷ்டம் இதற்கு முன் பிரிட்டிஷார்களுக்கு நேரிட்டிருந்ததாக தன் ஞாபகத்தில் தோன்றவில்லையென அன்று பிரதம மந்திரியாக இருந்த சர்ச்சில் பார்லிமெண்டில் கூறினார். மலாய் நாட்டு ஆக்கிரமிப்பிற்கு எவ்வளவோ முன்னதாகவே ஜப்பானியர் தமது போர்த்திட்டங்களை மிகுந்த கவனத்துடன் தயார் செய்திருந்தனர். அதைத் தொடர்ந்து முதலில் சில ஜப்பானியர் இந்தோ-சைனாவுக்கு வந்து சேர்ந்தனர். அங்கிருந்து வேகமாக சயாமில் நுழைந்தனர். சீனர் மலாய்க்காரர் வர்த்தகர் இவர்களைப் போல் வேடமணிந்து பல ஜப்பானியர் முன்னதாகவே பல வழியாகவும் மலாயாவில் வந்து சேர்ந்தனர். ஜப்பானியரின் வரவிற்கு அனுகூலமாக வசதிகளை உண்டாக்குவதற்குப் பற்பல வழிகளில் இந்த ஒற்றர்கள் முயற்சித்து வந்தனர்.

1941 டிசம்பர் 8-ம் காலையில் சயாமின் கிழக்குக் கரையில் ஜப்பானியப்படை இறங்கிற்று. இரண்டு தினங்களுக்குள் அவர்கள் மலாய் நாட்டின் எல்லலையை அடைந்தனர். அங்கே பிரிட்டிஷ் படையுடன் போர் துவங்கியது. ஜப்பானியருக்கு இந்தப் படையை எதிர்த்து முன்னேற அதிக நேரம் ஆக வில்லை. ஜப்பானியர் மலாயாவிற்குள் நுழைந்து விட்டனர் என்ற செய்தியைக் கேட்டதும் பொது மக்கள் பதறினர். எங்கும் பீதி பரவிற்று. வெளிக்குக் காட்டாது போயினும் ஒருவித மகிழ்ச்சி சிலருடைய மனதில் உண்டாகாமலில்லை. டிசம்பர் மாதம் 19ம் அவர்கள் பினாங்கைப் பிடித்துக் கொண்டனர். எவ்வித எதிர்ப்பு மின்றி பினாங்கு சரணாகதி யடைந்தது. ஜப்பானியர் பினாங்கு வந்து சேரப் போகிறார்கள் என்று அறிந்தவுடன் வெள்ளைக்காரர்கள் ஆடவரும் பெண்டிரும் பினாங்கை விட்டுச் சிங்கப்பூருக்குப் போய் விட்டார்கள். மற்றவருடைய பாதுகாப்பைப் பற்றி எள்ளளவும் கருதாது பகைவருக்குப் பயந்து இடம் விட்டு ஓடிப்போன பிரிட்டிஷாரின் சுயநலத்தையும், கோழைத்தனத்தையும் கண்ட பொது மக்கள் திகிலடைந்தனர். போர் உச்ச நிலையை யடைந்து விட்டது. அதிகப்படியான சைனியமும், போர்ச் சாதனங்களும் அனுப்ப வேண்டுமென்று மலாயாவிலிருந்து சேனைத்தலைவர்கள் கோரியிருந்த வேண்டு கோட்களுக்குத் திருப்தியளிக்கும் பதில் ஒன்றும் கிடைக்கவில்லை. மறுபடியும் பின் வாங்க வேண்டிய நிர்பந்தமே பிரிட்டிஷ் சேனைகளுக்கு உண்டாயிற்று. ஜப்பானியரின் குதித்தோடிவரும் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு அவர்களால் முடியவில்லை. கிழக்குக் கரை வழியாகவும் மேற்குக் கரை வழியாகவும் இடை வழியாகவும் ஜப்பானியர் நாட்டினுள் முன்னேறினர். போர் துவங்கு முன் தமது ஏற்பாடுகளைப் பற்றியும் படைப் பெருக்கத்தைப் பற்றியும் பறைசாற்றிக் கொண்டிருந்த பிரிட்டிஷாருக்குப் பொது மக்களிடம் சமாதானம் சொல்வதற்கு எவ்வித வழியுமில்லாமல் போய் விட்டது. ஜப்பானியருக்கு இவ்வளவு வேகமாக முன்னேறி வருவதற்கு எப்படி இயன்றது என எல்லோரும் அதிசயித்தனர். அதற்குக் காரணங்கள் பல.

சண்டை துவங்குவதற்கு முன்பே அமெரிக்கருடைய ஏராளமான போர்க் கப்பல்களையும், போர்ச் சாதனங்களையும் பெர்ல் ஹார்பரில் ஜப்பானி

யர் திடீரென்று நாசமாக்கியதைப் பற்றியும், பிரிட்டிஷாரின் இரண்டு படைக் கப்பல்கள் துவக்கத்திலேயே நாசமடைந்ததைப் பற்றியும் இதற்கு முன்பு கூறினோமல்லவா? அதன் பயனாக மிகுந்த யோசனையுடன் முதலில் தீர்மானித்த திட்டங்களை பிரிட்டிஷாருக்கு மாற்ற வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. சயாமியர் சில நாட்களாயினும் ஜப்பானியருடன் போராடுவர் என பிரிட்டிஷார் கருதியிருந்தனர். அந்த எண்ணத்திலும் இடி விழுந்தது. சயாமின் போராட்டம் இரண்டு நாட்கள் கூட நிலை நிற்கவில்லை. ஜப்பானியரின் ஆக்கிரமிப்பு சக்தியும் வேகமும் அவ்வளவிருந்தது. மலாயாவில் உள்ள காடுகளும், ஆறுகளும் கால்வாய்களும், துறைமுகங்களும், நகரங்களும், விமானத் தளங்களும், ஜப்பானியருக்கு நன்கு அறிமுகமானவைகளே. அவைகளைப் பற்றியெல்லாம் அறிவதற்காக ஒற்றர்களை எவ்வளவோ காலத்திற்கு முன்பே அந்தந்த இடங்களுக்குஅனுப்பியிருந்தார்கள். அது மலாயாவில் மட்டுமல்ல. போர்னியோ பிலிப்பைன்ஸ், பர்மா, இந்தோசைனா, ஜாவா, சுமத்ரா, என்றிவ்விதமான பின்னால் பிடிக்கப்பட்ட இடங்களிலெல்லாம் அவர்களுடைய ஐந்தாம் படையினர் கவனமாக வேலை செய்திருந்தனர்.

பிரிட்டிஷாருக்குண்டான மனக் குழப்பத்திற்குக் காரணம் விமானங்களின் குறைவு. நவீன யுத்தத்தில் விமானங்களுக்குப் பெரியதொரு பங்குண்டு. போதுமான விமானங்களில்லாது போருக்குப் புறப்படுவது மடமையாகும். மலாயாவிற்கு அனுப்புவதற்காக வைத்திருந்த விமானங்களை ரஷியாவின் தேவைக்காகக் கொடுக்க நேர்ந்தது. ஜப்பானியரின் ஆக்கிரமிப்பு இவ்வளவு திடீரென்று ஏற்படுமெனத் தாம் நினைக்கவில்லை என்று பிரிட்டிஷார் சமாதானம் கூறினர். பகைவரின் இத்தகைய குறைகளை நுட்பமாக அறிந்திருந்த ஜப்பானியருக்கு தன் நம்பிக்கையுடன் அதி வேகத்தில் முன்னேறிச் செல்ல முடிந்தது.

ஜப்பானியரின் முன்னேற்றத்திலிருந்து ஒரு விஷயம் வெளியாயிற்று. காட்டில் சஞ்சரிப்பதற்கும், ஒளிந்து போர் நடத்துவதற்கும், ஆறு நீந்திக் கடப்பதற்கும் சரீர கஷ்டங்களை சகிப்பதற்கும், உயிர்த் தியாகம் செய்வதற்கும் ஜப்பானியருக் கிணையாக மற்றவர்களுக்கு இயலாதென அவர்களுடைய பகைவர் கூட ஒப்புக் கொள்ள நேர்ந்தது. பிரிட்டிஷாரின் விமானத் தளங்களையும், யுத்த தளவாடங்களையும் கைவசப் படுத்திய ஜப்பானியரின் சக்தியும் பராக்கிரமும் நாள் தோறும் வளர்ந்து வந்தது. அதோடு பிரிட்டிஷாரின் உற்சாகம் குறைந்தது. நிராசை அதிகரித்தது. இனிமேல் கொஞ்சங்கூடத் தாங்க முடியாது என்ற நிலைமையை வந்தெய்தினர். இக் காலத்தினிடையில் மாறுவேட மணிந்த பல ஜப்பானியர் பிரிட்டிஷ் சைனியத்தில் பின்னால் நுழைந்து ஜப்பானியரின் தயை, தாக்ஷிண்யம், இவைகளைப் பற்றிப் பல கதைகளையும் ஜனங்களிடையில் பிரசாரம் செய்யத் தொடங்கினார்கள். அரிசியும் சாமான்களும் அவர்கள் வேண்டிய அளவு ஜனங்களுக்கு இனாமாகக் கொடுக்கிறார்கள், பணமும் மருந்துகளும் ஏராளமாக வினியோகிக்கிறார்கள் என்றும், இது போன்ற ஆதாரமற்ற பல செய்திகளையும் கூறி ஜனங்களை நம்பச்செய்து அவர்களுடைய உதவியையும், ஒத்தாசையையும் பெறுவதற்கான நிலைமையை உண்டாக்கத் தொடங்கினார்கள்.

ஈப்போ, கோலாலம்பூர், செரம்பான், மலாக்கா, மூவார் இவைகளெல்லாம் ஒவ்வொன்றாக ஜப்பானியர் வசமாயின. மூன்று வழிகளில் புறப்பட்டிருந்த ஜப்பானியப் படை ஜனவரி மாதம்31-ந் தேதி ஜோகூரில் வந்து சேர்ந்தது. அன்று அங்கு அவர்களுடைய கொடியை ஏற்றினார்கள். ஐம்பத்தைந்து நாட்களில் 650 மைல்களைக் கடந்து மலாய் நாடு முழுவதையும் அவர்கள் கீழ் அடக்கினார்கள். சிங்கப்பூருக்குப் பின் வாங்குவதல்லாது வேறு வழியில்லை யெனக் கண்டு ஒரு வாரத்திற்கு முன்பே அதற்கான ஏற்பாடுகளைப் பிரிட்டிஷார் செய்யத்தொடங்கியிருந்தனர். சிங்கப்பூருக்கும் ஜோகூருக்குமிடையில் ஒரு பெரிய பாலம் உண்டு. அதை ஜப்பானியர் குண்டுவீசி உடைத்திருப்பார்களே யாயின் பிரிட்டிஷ் படை பெரும் ஆபத்தில் சிக்கிக் கொண்டிருக்கும். ஆனால் அவ்விதம் நிகழவில்லை. கடைசிப் போராட்டத்திற்குத் தயாராக வேண்டுமென்ற நிச்சயத்துடன் அவர்கள் சிங்கப்பூரிலிருந்து கூட பின் வாங்கிக் கொண்டிருந்தனர். இந்தியப் படையும், ஆஸ்திரேலியப் படையும், இராணுவ வண்டிகளும், மோட்டார் வண்டிகளும், டாங்கிகளும், பீரங்கிகளும் ஒன்றன் பின் ஒன்றாக இடைவிடாமல் மூன்று நான்கு நாட்களாக போய்க் கொண்டிருந்தன. அந்தக் காட்சியைக் கண்ட எவரும் எளிதில் மறக்க மாட்டார்கள். காயமடைந்த படை வீரரும், மனம் சோர்ந்த அதிகாரிகளும், வாடிய வதனங்களும், தளர்ந்த உடல்களும் பீதியடைந்து ஓடும் ஜனங்களும் தூரத்திலிருந்து கேட்கும் குண்டுகள் வெடிக்கும் சப்தமும் யுத்தம் சிங்கப்பூரைச் சமீபித்துவிட்டது என்றறிவித்தன.

ஜனவரி 31-ம் தேதி உச்சி நேரத்திற்கு முன்பே பிரிட்டிஷ் சைனியம் முழுவதும் ஜோகூர் பாலத்தைக் கடந்து சிங்கப்பூர் தீவில் வந்து சேர்ந்தது. கடைசியாகக் கடந்து வந்த கூட்டத்தினர் டைனமைட் வைத்து பாலத்தை உடைத்துப் பகைவருக்கு அதை உபயோகப்படுத்த முடியாத நிலைமையிலாக்கி விட்டு சிங்கப்பூர் வந்து சேர்ந்தனர். மலாயா முழுவதும் ஜப்பானியர் கைவசமாகி விட்டது. தடைகளையெல்லாம் பொருட்படுத்தாது முன்னேறி வருகின்ற ஜப்பானியரைத் தடுக்க முடியுமா? மற்ற இடங்களைப் போலத்தான் அல்லவா சிங்கப்பூரின் நிலைமையும்? சிங்கப்பூர் ஒரு பெரிய கடற்படைத் தளமல்லவா? கணக்கற்ற படைகளை அங்கே சேகரித்து வைக்கவில்லையா? சிங்கப்பூரும் ஜப்பானியருக்குக் கீழ்ப் படிந்து விடுமா? யாருக்குத் தெரியும்?

அன்று டோகியோ ரேடியோ மிகுந்த மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் போர்ச் செய்தியை விவரித்தது. "சிங்கப்பூரைக் கைவசமாக்குவதற்கான போர் உடனே துவங்கும். அதில் பகைவரை முறியடிப்போம். ஜப்பானியரின் சக்தியும் கட்டுப்பாடும், போர்ச் சாமர்த்தியமும் எப்படிப்பட்டதென்று அறியும் சந்தர்ப்பம் சிங்கப்பூர் வாசிகளுக்கு உடனே கிடைக்கப் போகிறது என்று டோக்கியோ ரேடியோ அன்று கூறியது இதைக் கேட்டபோது, பயமா ஆறுதலா, சந்தோஷமா, இவைகளில் எது உண்டாயிற்று என்று கூறுவது கடினமே. விவரிக்கவொண்ணாத பற்பல உணர்ச்சிகள் மனதில் தோன்றலாயின. சிங்கப்பூர் போர் எப்பொழுது தொடங்கப் போகிறது? என்னவெல்லாம் நடக்கப் போகிறது? யாரெல்லாம் பிழைத்திருப்பார்கள்? வரப்போகும் நிலைமை எப்படி யிருக்கும்? இவ்வித நினைவுகள் மனதிலிருந்து விலகுவதாயில்லை.

—

நவசக்தி மாத்திரை

ரத்த விருத்தி சதை வளர்ச்சி
யௌவன புஷ்டி
ஆரோக்யம் தரும் அமிருதம்

50 மாத்திரை விலை ரூ. 1-12-0
100 ,, ,, ரூ. 3—0-0

★

தி ஆர்யா பார்மஸி
114, யானைக்கல், மதுரை.

குறிப்பு:— முன் பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கப்பட மாட்டாது






## पाठ-60

### (अ) व्याकरण

## முன் அடைமொழிகள்

(Prefixes)

'நல்லொழுக்கம்', 'இன்சொல்' 'முற்போக்கு', 'பிற்போக்கு' முதலிய சொற்களில் ஒவ்வொன்றையும் இரண்டிரண்டு பகுதிகளாகப் பிரித்து விடலாம். நல்லொழுக்கம் என்பது 'நல்ல', 'ஒழுக்கம்' என்ற இரண்டு சொற்களின் தொகையே. இவ்விரு சொற்களுள் 'ஒழுக்கம்' என்பதே முக்கியமான சொல் அதற்கு அடைமொழியாக விளங்குவதே 'நல்ல' என்ற சொல் 'நல்ல' என்பது ஸாதாரணமாக பெயர் உரிச்சொல் ஆனால் மேற்குறித்த தொகையில் அது நல் என்ற அளவுக்குச் சுருங்கிவிடுகிறது. இந்த நல் என்ற சுருக்கத்துக்கு மட்டும் தனியாக அர்த்தம் எதுவுமில்லை. வேறொரு சொல்லுடன் சேர்ந்து வரும்போதுதான் அதற்கு அர்த்தம் ஏற்படுகிறது.

ஒரு வார்த்தைக்கு முன்பு சேர்ந்து அடைமொழி போன்று வழங்கி வரும் இத்தகைய சொற்சுருக்கத்துக்குத்தான் முன் அடைமொழி என்று பெயர்

இந்த முன் அடைமொழி அதற்குப் பின்பு வரும் முக்ய வார்த்தையின் கருத்தை விரிவுபடுத்தவோ அல்லது வேறுபடுத்தவோ உபயோகப்படும் இதற்கான விதிகள் சட்டதிட்டமாக இல்லை எனினும் சில முக்யமான முன் அடைமொழிகள் மட்டும் கீழே விளக்கப்படுகின்றன கவனித்துக்கொள்ளவும்:—

**1. अ, अन, ना, ला, नि, बे, ग़ैर** முதலிய முன் அடைமொழிகள் இல்லாத ஆகாத அற்ற என்ற எதிர்மறை அர்த்தங்களில் வழங்கும்:

(உ—ம்)

अशुद्ध—சுத்தமில்லாத........(अ-शुद्ध)
असत्य—உண்மையற்றது... (अ-सत्य)
पअढ़—படிக்காத................(अ-पढ़)
अछूत—தொடத் தகாத ......(अ-छूत)
अनजान—அறியாத.........(अन-जान)
नापसंद—பிடிக்காத.........(ना-पसंद)
नालायक़—தகுதியற்ற....(ना-लायक़)
नासमझ—அறிவற்ற........(ना-समझ)
लापता—காணாத, தகவல்தெரியாத...(ला-पता)
लापरवाह—கவலையற்ற, அக்கரையற்ற.(ला-परवाह)
लावारिस—வாரிஸற்ற, கேட்பாரற்ற...(ला-वारिस)
निडर—பயமற்ற..............(नि-डर)
निरोग—நோயற்ற ..............(नि-रोग)
बेईमान—நாணயமற்ற.....(बे-ईमान)
बेहोश—ப்ரஜ்ஞையற்ற........(बे-होश)
ग़ैर-हाज़िर - ஆஜராகாத (absent)
ग़ैर-क़ानूनी —சட்ட விரோதமான (illegal)

**2. हम, सम, स, सह, ब, बा** என்பவை ஒரே 'ஒத்த' ஏற்ற', படி' உடன் முதலிய உடன்பாட்டு அர்த்தங்களில் வழங்கும்:

(உ—ம்)

हमदर्द—அனுதாபமுள்ள, ஒரே உணர்ச்சியுள்ள (हम-दर्द)
हमजात—ஒரே ஜாதியைச் சேர்ந்த (हम-जात)
हमउम्र—ஒரே வயதுள்ள (हम-उम्र
समवेदना-ஒரே உணர்ச்சியுள்ள......(सम-वेदना)
सकुशल—க்ஷேமத்துடன்...(स-कुशल)
सकुटुंब—குடும்பத்துடன்...(स-कुटुंब)
सहपाठी-உடன்படிப்பவன்(सह-पाठी)
सहयोग—கூட்டுறவு.........(सह-योग)
बशौक़—விருப்பத்துடன் மகிழ்ச்சியுடன்.. ब शौक़)
बाक़ायदा—விதிப்படி, முறைப்படி...(बा-क़ायदा)

**3. कु, बद** என்பவை 'கெட்ட 'மட்டமான' என்ற அர்த்தங்களில் வழங்கும்.

(உ—ம்)

कुपुत्र—கெட்ட புத்திரன்......(कु-पुत्र)
कुमार्ग—கெட்ட வழி.........(कु-मार्ग)
कुरूप-மட்டமான அழகுள்ள, விகாரமான......(कु-रूप)
बदबू-மட்டமான மணமுள்ள.(बद-बू)
बदनाम-கெட்டபெயருள்ள(बद-नाम)

**4. सु** என்பது 'நல்ல', அழகுள்ள', 'உயர்ந்த என்ற அர்த்தங்களில் வழங்கும்;

(உ—ம்)

सुशील—சீலமுள்ள, நல்லஒழுக்கமுள்ள...(सु-शील)
सुप्रसिद्ध—மிக ப்ரஸித்தமான......(सु-प्रसिद्ध)
सुनिश्चय—நல்லுறுதி......(सु-निश्चय)

இத்தகைய முன் அடைமொழிகள் ஹிந்தியில் இன்னும் ஏராளமாக இருக்கின்றன. படிக்கும்போது அவ்வப்போது அவற்றைக் கவனித்துக் கொள்ளவேண்டும்.

(आ) कविता

## काल की सीख

दूर गगन में सूर-चंद वे,
देखो, चलते रहते हैं!
"आराम कहाँ जब काम पड़ा?"-
पल-पल वे यह कहते हैं!

काल अनोखा दैवी रथ है!
सूर-चंद उसके पहिए!
घूम निरंतर चलनेवाले,
समझो, वे दोनों पहिए!

बिन घोड़ों के काल भागता
जाता है! देखो, देखो!
रुकना बिलकुल नहीं जानता
काल यही! देखो, देखो!

पंख नहीं हैं उसके कोई;
तो भी कैसे उड़ता है!
पीछे कोई उसे बुलावे;
कभी नहीं वह मुड़ता है!

काल-वेग से होड़ लगाके
अगर न उड़ते जाएँगे,
तो जीवन की तेज़ दौड़ में
हार बड़ी हम खाएँगे!

बिन घोड़ों बिन पंखों के भी
आगे बढ़ना तुम सीखो!
हरदम आगे बढ़ते जाना—
सीख काल की यह सीखो!

### [इ] शब्द-भंडार

काल—(ஆ. பா.) காலம்
सीख—(பெ. பா.) பயம், படிப்பினை
गगन—(ஆ. பா.) ஆகாசம், வானம்.
सूर (सूर्य)—(ஆ. பா.) ஸூரியன்
चंद (चंद्र)—(ஆ. பா.) சந்திரன்.
आराम—(ஆ. பா) ஓய்வு.
पल—(ஆ. பா.) வினாடி.
अनोखा—விசித்திரமான.
दैवी—தைவீகமான (Divine)
रथ—(ஆ. பா.) ரதம்.
पहिया—(ஆ. பா.) சக்கரம், உருளை
घूमना—திரிதல், சுற்றுதல் அலைதல்.
अंतर—(ஆ. பா) இடைவெளி, இடைக்காலம். வித்தியாசம்;
निरंतर—இடை வெளியற்ற, இடைக்காலமில்லாத ஓயாத.
बिन (बिना)—இன்றி, இல்லாத.
रुकना—நிற்றல்.
पंख—(ஆ. பா.) இறகு இறக்கை.
मुड़ना—திரும்புதல்.
वेग—(ஆ. பா.) வேகம்.
होड़—பெ. பா.) போட்டி: होड़ लगाना போட்டியிடுதல்.
दौड़—(பெ. பா.) ஓட்டம்.
हार—(பெ. பா.) தோல்வி: हार खाना தோல்வியடைதல்.
दम—(பெ. பா.) மூச்சு; हरदम எப்பொழுதும்

जय हिंद! जय हिंदी!


காசகுலாந்தகம்

★

சாதாரண இருமலே பயங்கர க்ஷயத்தின் ஆரம்ப அறிகுறி உடன் காசகுலாந்தகம் உபயோகித்தால் இருமல், இளைப்பு, காசம், க்ஷயம் முதலிய எல்லா சுவாச நோய்களையும் நீக்கும்

விலை ரூ. 2—8—0.

விவரமான கேட்லாக் இலவசம்

மலையாள மெடிகல் ஹால்
(REGD.)
189, வக்கீல் புது தெரு.
மதுரை.




## நமது பம்பாய்க் கடிதம்

★

பம்பாயில் சினிமா நக்ஷத்திரங்கள் தங்கள் சொந்தத் தொழிலைத் தவிர, மற்ற பொது கைங்கர்யங்களிலும் ஈடுபட்டு வருகிறார்களென்ற விஷயம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். அடிக்கடி, நடிக, நடிகைகளும், சங்கீத டைரக்டர்களும், பின்னணிப் பாடகர்களும், மேடை மீது ஏறி இனிமையான நாடக, நடன, சங்கீதக் கச்சேரிகளைச் செய்து அனேக தர்ம காரியங்களுக்கு உதவி செய்திருக்கிறார்கள். சமீபத்தில் சினிமா நக்ஷத்திரங்கள் கிரிக்கெட் ஆடி தர்மத்திற்காக பணம் சம்பாதித்திருக்கிறார்கள்.

இத்தோடு இல்லாமல், இவ்வூர் நக்ஷத்திரங்கள் ராஜ நிர்வாக காரியங்களிலும், ஜனங்களுடன் அன்னியோன்யமாக, சில ஆசார விவகாரங்களிலும் பங்கெடுத்துக் கொண்டு வருகிறார்கள். சில நாட்களுக்கு முன்பு தான், உலகத்தில் சாந்தியும், அமைதியும் நிலவுவதற்காக பிரபல நக்ஷத்திரங்கள் ஒரு ஆலோசனைக் கூட்டம் ஒன்றை வெகு விமரிசையாக நடத்தி வந்தார்கள். அவர்களின் மதிப்பு அதிகரித்து வரவர, அவர்களை, இங்கிருக்கும் அனேக சங்கங்களின் திறப்புவிழா, வருஷாந்திரக் கொண்டாட்டம் முதலிய சம்பவங்களின் போது, தலைமை வகிக்கும்படியும், முதன்மையான விருந்தாளியாக இருக்கும்படியும், கேட்டுக் கொள்கிறார்கள்.

சென்ற வாரம், புகழ் பெற்ற ஹாஸ்ய நடிகர் ஸ்ரீ ஓம்பிரகாஷும், நடிகை ஸ்ரீமதி குல்தீப் கௌரும், வர்சோவாவில் நடந்த வர்சோவா சமூக சங்கத்தின் வருஷாந்திர விழாவின் அழைப்பின் பேரில் முக்கிய அதிதிகளாக வந்திருந்தார்கள். அப்பொழுது அவர்களின் முன்னிலையில், சங்கத்தின் ஆண், பெண் மெம்பர்களெல்லோரும் ஒன்று சேர்ந்து, நாடகம், நடனம், பாட்டு, முதலிய கச்சேரிகளை நடத்தினார்கள். நாடகத்திலும், நடனத்திலும் பங்கெடுத்துக் கொண்டவர்களின் கலையை மெச்சி, அவர்களெல்லோரையும் சினிமாவில் திரளாக வந்து சேரும்படி பிரார்த்தனை செய்தார் ஸ்ரீ ஓம்பிரகாஷ்.

நடிகர் ஜெய்ராஜ் சொந்தமாக தயாரித்து வரும் "சாகர்" என்னும் படத்தை முடித்துவிட்டார். இதில் இவர் கதாநாயக பாத்திரத்தில் நடிப்பதுமல்லாமல், டைரக்ஷனும் செய்திருக்கிறார். நர்கிஸ் இதில் கதாநாயகி. துர்கா கோட்டே, கே. என். சிங்கு, டேவிட், வீரா முதலியவர்கள் உதவி பாத்திரங்க



அர்ஜுனின் அடிபட்ட தலைக்கு சசிகலா அழகிய பணிவிடை செய்கிறாள் 'அவாஸ்' என்கிற படத்தில்.

139179



அபிநவசித்ரா தயாரிப்பான சாகுந்தலா'வில் சகுந்தலா அழகிய குடத்தோடு காட்சியளிக்கிறாள்.

ளில் இருக்கிறார்கள். தற்சமயம் இன்னும் மூன்று படங்கள் தயாராகி முடிவடைந்திருக்கின்றன. அவைகள் வெஸ்ட் ஹிந்து பிக்சர்ஸாரின் "சௌதாகர்" ஜி. பி. ப்ரொடக்ஷன்ஸாரின் "சஜ்னா" பிலிம் போர்ஸாரின் "இராதா".

பம்பாயில் இப்பொழுது பிரம்மாண்டமான செட் ஜோடனைகளுடன் மிகவும் உயர் தரமான முறையில் ஒரு படம் தயாராகி வருகிறது. இப்படத்தின் பெயர் "ஷோகியானா" தேச சுதந்திரத்திற்காக பாடுபடும் இரண்டு இளம் காதலர்களின் கதை இதில் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. சுரையா, பிரேம்நாத், பினோ ராதோர் முதலியவர்கள் இதில் நடித்து வருகிறார்கள். ஸ்ரீகிதார் ஷர்மா இதைத் தயாரித்து டைரக்டும் செய்து வருகிறார்.

சென்ற வாரம் தீபக் பிக்சர்ஸாரின் "மாலுமி சின்பாடு" என்னும் படத்தின் முகூர்த்த விழா நடந்தது இதற்கு சினிமா உலகத்திலிருக்கும் எல்லோருமே திரளாக வந்திருந்தார்கள். ஸ்ரீ ரஞ்சன் இதில் கதாநாயகனாக நடிக்கிறார். அவருடைய கதாநாயகி ஸ்ரீமதி நலிம், பகவான், பிரான், ஜயந்து, யசோதரா கட்ஜூ, சாம்சன், அனந்த



'லௌதாகரில் ரேஹனா

பிரபு, நிரூப ராய் முதலியவர்கள் உதவி பாத்திரங்களில் நடித்து வருகிறார்கள். இப்படத்தை ஸ்ரீ நானா பாய் பாட் டைரக்ட் செய்து வருகிறார்.

ஸ்ரீ ரஞ்சன் இப்பொழுது நடித்து வரும் படங்கள் சந்தோஷி ப்ரொடக்ஷன்ஸாரின் "ஷின் ஷிபாவாக்கி பூப்ளா பூ" முன்ஷி ப்ரொடக்ஷன்ஸாரின் "காப்லா" முதல் சொல்லிய படத்தில் நளினி ஜயவந்துடனும் ரஞ்சன் நடித்து வருகிறார். இப்படங்கள் கூடிய சீக்கிரத்தில் முடிவடைந்துவிடும்.

தி. மா. ராமச்சந்திரன்.

## ஜீவன்

ஹம்ஸா பிலிம்ஸாரின் ஆரம்பவிழா சென்ற முதல் தேதி வெகுவிமரிசையாக நடைபெற்றது பிரபல படமுதலாளிகள், தமிழ், தெலுங்கு, நடிகர், நடிகைகள், பத்திராசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். ஆரம்ப விழாவன்றே, அவர்கள் தயாரிக்கும் "ஜீவன்" என்ற சமூகப் படத்திற்கும் பூஜை நடைபெற்றது. தமிழ், தெலுங்கு, ஹிந்தி மூன்று பாஷைகளில் தயாரிக்கப்படுமாம். 'சவுக்கார்' தெலுங்கு படத்தில் நடித்த ஜானகியை தமிழ், தெலுங்கு இரு பாஷைகளில் கதாநாயகியாக நடிக்க ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். தமிழில் கதா நாயகனாக பி. எஸ். கண்ணப்பாவும் தெலுங்கில் கதாநாயகனாக சூரியநாராயணா எம். ஏ. யும் நடிப்பார்கள் டி. மார்கோனி டைரக்ட் செய்வார் ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் படம் எடுக்கப்படும்.